கழக வெளியீடு: அககூ

பதிற்றுப்பத்துச் சொற்பொழிவுகள்

[பேராசிரியர் ஒன்பதின்மர் சொற்பொழிவுகள்]

திருநெல்வேலித்
தென்னிந்திய தமிழ்ச்சங்கத்தின் சார்பில்
சென்னை இராஜாஜி மண்டபத்தில்
11-12-1955-இல்

நிகழ்த்தப்பெற்றவை.

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி :: சென்னை-1.

First Edition: Dec., 1955.

LECTURES ON PATHITRUPPATHTHU

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS

PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS - 1.
Head Office:
24, EAST CAR STREET, THIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1. C. 1220.

பதிப்புரை

தென்னன் தமிழெனப் போற்றப்படும் நம் செந்தமிழ் மொழியில் கடலெனப் பரந்த நூற்செல்வங்கள் பல. அவற்றுள் சங்ககாலத் தண்டமிழ்ப் புலவர்கள் தந்துதவிய பாடல்கள் சொற்செட்டும் கருத்துச்செறிவும் சான்றன. அவற்றுள் சான்றோரால் பண்டுதொட்டுக் கொண்டாடப் பெறுவன பத்துப்பாட்டும் எட்டுத் தொகையுமாகிய அரிய நூற் கருவூலங்கள்.

அவற்றுள் எட்டுத்தொகை நூல்களுள் வயங்கு செந்நாவின் நயங்கொண்ட நல்லிசைப் புலவர்களால் நான்காவதாக 'ஒத்த பதிற்றுப்பத்து' எனப் போற்றப்படும் பொற்பு வாய்ந்தது, இவ் அரிய சீரிய கூரிய செஞ்சொல் வளங்கெழுமிய நூல். இந்நூல் பழங்காலச் சங்கத்தமிழ் நூலாக இருப்பதோடன்றி முடியுடை வேந்தர் மூவர்களுள் சிறந்தவர்களான சேரமன்னர்களின் சிறப்பை விளக்கும் வரலாற்று நூலாகவும் திகழ்கின்றது.

இந்த அரிய நூல், நல்லிசைப் புலமை வல்லுநர்களான பொய்யாகூறும் மெய்ம்மைச் சான்றோர் பதின்மரால் ஒவ்வொருவரும் பப்பத்தாகப் பாராட்டிப் பாடப்பெற்றுத் பத்துச் சேரவேந்தர்களைப் தொகுக்கப்பெற்றனவாகும்.

தமிழ்நாடு செய்த தவக்குறைவால் எந்த சிதைவின்றிக் கிடைப்பதில்லை. அதுபோல இந் நூலும் நூலின் முதற்பத்தும் இறுதிப்பத்தும் கிட்டிற்றில. இடைப்பட்ட இரண்டு முதல் ஒன்பது வரையுள்ள எட்டுப்பத்துக்களே நமக்குக் கிடைத்துள்ளன.

இவற்றை அரிதின் முயன்று தேடி தென்கலைச் செல்வர் உயர்திரு. உ. வே.

உதவிய பெரியார்
சாமிநாதையரவர்

கள் ஆவார். அவர்கட்குத் தமிழகம்
பாராட்டும் கடப்பாடுடையது.

என்றும் நன்றி

6 பதிற்றுப்பத்துச் சொற்பொழிவுகள்

இத்தகைய விழுமிய நூலுக்கு ஏற்கனவே பழைய உரை ஒன்றுளது. அது, கற்றுத்துறைபோய நுண்மாண் நுழைபுலத்தோர்க்கன்றி ஏனையோர்க்குப் பொருள் அறிந்து பயில எளிமையின்றி யிருப்பதறிந்து முன்னர்ச் சித்தாந்த கலாநிதி. திரு. ஔவை. சு. துரைசாமிபிள்ளையவர்களைக்கொண்டு விளக்கவுரை முதலிய பல்வகைக் குறிப்புக்களுடன் எழுதுவித்து எம் கழக வெளியீடாக வெளியிட்டுள்ளோம்.

ஆயினும் நந்தமிழகப் பயன் கருதி சங்க மருவிய சங்க நூல்கள் யாவற்றையும் கற்றாரன்றி மற்றாரும் எளிதின் அறிந்து பயனுறச் சொற்பொழிவு வாயிலாக ஆக்கி உதவின் நலமென்றுணர்ந்து முன்னரேயே தொடர்ந்து பத்துப் பாட்டு நூல்கள் முழுதும், எட்டுத்தொகை நூல்களுள் ஏழு நூல்களையும் அறிஞர்களைக் கொண்டு எழுதுவித்து நூலுரு வாக்கி மாநாடு கூட்டிச் சொற்பொழிவு செய்வித்து வெளி யிட்டுள்ளமை தமிழ்நாடு நன்கு அறிந்ததே.

அவைகளைப்போன்றே இதனையும் சொற்பொழிவு நூலுருவாக்கி, 'பதிற்றுப்பத்துச் சொற்பொழிவுகள்' என்னும் பெயரால் இன்று இந்நூலை வெளியிட்டுள்ளோம். இதனைச் சொற்பொழிவு செய்து தம் அரிய கருத்திரள்களுடன் நூற்சரக்கறையிற் புகுந்து ஆன்ற கருத்துத் தொகுப்புப் பொருள்களைத் திரட்டித் தந்த புலவர் பெருமக்கள் எண் மருக்கும், இம் மாநாட்டுக்குத் தலைமை தாங்கி தலைமைச் சொற்பொழிவாற்றி மாநாட்டை இனிதின் நடத்தியுதவிய செந்தமிழ்க் காவலர், டாக்டர், உயர்திரு. அ. சிதம்பரநாதச் செட்டியாரவர்கட்கும் எம் அகங்கனிந்த நன்றி என்றும் நன்றுரிமையாகுக.

இந் நூலையும் முன் வெளிவந்த சொற்பொழிவு நூல்களையும் நம் தமிழ்நாட்டு நன்மக்கள் வாங்கிக் கற்று வான மளந்த தனைத்தும் அளக்கும் மாண்கலைச் செல்வர்களாய்த் தமிழர் பண்பாட்டுடன் வளம்பல பெறுவார்களென நம்பு கின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உள்ளுறை



செந்தமிழ்க் காவலர், டாக்டர்,

அ. சிதம்பரநாதச் செட்டியார்,

எம.ஏ., பிஎச.டி.

தலைமையுரை

[செந்தமிழ்க்காவலர்
டாக்டர், அ. சிதம்பரநாதச் செட்டியார், எம். ஏ.,]

1. நூல்

பதிற்றுப்பத்து என்பது பத்துப்பத்து என்று பொருள்படும்.* பத்து சேர அரசர்களைப் பற்றிப் பத்துப் புலவர்கள் பாடிய பப்பத்துப் பாடல்களின் தொகுதியே பதிற்றுப்பத்து என்று பெயர்பெற்றது. இது ஒரு தொகைநூல். இதனைத் தொகுத்தாரும் தொகுப்பித்தாரும் இன்னாரென்பது அறியப்படவில்லை. இஃது எட்டுத் தொகை நூல்களுள் ஒன்றாக எண்ணப்பட்டு வருகின்றது. நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு, பரிபாடல், பதிற்றுப்பத்து, புறநானூறு என்ற எட்டுத்தொகை நூல்களுள்ளே பதிற்றுப்பத்தும் புறநானூறும் புறப்பொருள்பற்றிப் பாடப்பட்டுள்ள செய்யுட்களாலான தொகைநூல்கள். இவ்விரு நூல்களும் பழங்காலத் தமிழக மக்களைப்பற்றியும் அரசர்களைப் பற்றியும் அறிந்து கொள்வதற்குப் பெருஞ் சான்றுகளாக இருந்துவருகின்றன. புறநானூற்றிற் காணப்படும் பாடல்கள் கால வரிசைப்படி அமைக்கப்படவில்லையாயினும், பதிற்றுப்பத்திற் காணப்படுஞ் செய்யுட்கள் ஏறத்தாழக் கால முறைபற்றி அமைக்கப்பட்டிருப்பது போற்றுதற்குரிய செய்தி. ஆயினும், இந்நூலின் முதற் பத்தும்

---

* இதனுள், ஓர் இன் சாரியை வருதற்கும், னகரம் றகரம் ஆதற்கும், அவ்வொற்று இரட்டுதற்கும் தொல்காப்பியத்தில் விதிகள் உள.

பத்தாவது பத்தும் இதுகாறும் கிட்டவில்லை. எனவே, எஞ்சிய எட்டுப்பத்துக்கள் மாத்திரம் நமக்குக் கிடைத்துள்ளன. இவற்றை டாக்டர், உ. வே. சாமிநாத ஐயரவர்கள் 1904-ஆம் ஆண்டிலும், திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்கள் 1950-ஆம் ஆண்டிலும், நல்ல முறையில் பதிப்பித்துத் தந்துள்ளார்கள். இந்நூலுக்கு அமைந்ததொரு பழைய உரை உண்டு. அவ்வுரை பொருட் செறிவோடு திட்பமாக எழுதப்பட்டதொன்றாகும். அதனை விரித்தும் விளக்கியும் அழகுபட யாவரும் அறிந்துகொள்ளும் வண்ணம் தந்த பெருமை திரு. ஔவை. துரைசாமிக்கு உரியது. அவ்வெளியீடு சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்து வெளியீடு என்பதும் குறிப்பிடத்தக்கது.

பதிற்றுப்பத்தின் இரண்டாவது பத்தில் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைப்பற்றிக் குமட்டூர்க் கண்ணனாரும், மூன்றாவது பத்தில் பல்யானைச் செல்கெழுகுட்டுவனைப் பற்றிப் பாலைக்கௌதமனாரும், நான்காவது பத்தில் களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரலைப்பற்றிக் காப்பியாற்றுக் காப்பியனாரும், ஐந்தாவது பத்தில் கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனைப்பற்றிப் பரணரும், ஆறாவது பத்தில் ஆடு கோட்பாட்டுச் சேரலாதனைப்பற்றிக் காக்கைபாடினியார் நச்செள்ளையாரும், ஏழாவது பத்தில் செல்வக் கடுங்கோ ஆழியாதனைப்பற்றிக் கபிலரும், எட்டாவது பத்தில் பெருஞ்சேரலிரும்பொறையைப்பற்றி அரிசில்கிழாரும், ஒன்பதாவது பத்தில் குடக்கோ இளஞ்சேரலிரும்பொறையைப்பற்றிப் பெருங்குன்றூர்க் கிழாரும் பாடியுள்ளனர். முதல் பத்து உதியஞ்சேரல் என்பானைப் பற்றியதாக இருத்தல் வேண்டுமெனவும், பத்தாவது பத்து யானைக்கண்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை என்பானைப் பற்றியதாக இருத்தல் வேண்டுமெனவும் சிலர் கருதுகின்றனர். எண்மரைப்பற்றிப் பதிற்றுப்பத்திலிருந்து கிடைக்கும் சான்றுகளைக்கொண்டு பழங்காலச்சேரர் பரம்பரையினரின் ஆட்சி காலஞ்சென்ற திரு. கனகசபைப் பிள்ளையவர்களாலும், திரு. கே. என். சிவராச பிள்ளையவர்களாலும், திரு. கா.

சுப்பிரமணியப் பிள்ளையவர்களாலும் அறுதியிடப்பட்டுக் காட்டப்பட்டிருக்கின்றன. அவர்களுடைய முன்னணி ஆராய்ச்சிகள் பாராட்டுந் தகையன.

இந்நூலின் துணையாக, சேர மன்னர்களுடைய நாட்டு வளம், அந்நாட்டு மக்கள் வாழ்க்கை, அரசர்களுடைய கொடைத்திறன், படைநலம், மனைமாட்சி முதலியவை அறியப்படுகின்றன.

2. நாட்டு வளம்

சேரநாடு பொதுவாகச் சிறந்த வளம்பெற்ற நாடு என்பது அறியப்படுகின்றது. அந்நாட்டில் நெய்தல், குறிஞ்சி, முல்லை, மருதம் ஆகிய நான்கு நிலத்துப்பொருள்களும் ஒருங்கே விளைந்து மலிந்திருந்த செய்தி இரண்டாவது பத்தில் குமட்டூர்க்கண்ணனாரால் கூறப்படுகிறது.

"கடலவும் கல்லவும் யாற்றவும் பிறவும்
வளம்பல நிகழ்தரு நனந்தலை நன்னாட்டு
விழவு அறுபறியா முழவுமிழ் மூதூர்"

என்று சேர நாட்டினைப்பற்றி அவர் கூறுகிறார். கடலில் விளைகின்ற பொருள்களும், மலையில் விளைகின்ற பொருள்களும், ஆற்றில் கிடைக்கக்கூடிய பொருள்களும் அந்நாட்டுப் பொருள்கள் என்பதும், பிறநாட்டுப் பொருள்களும் அந்நாட்டிலே வந்து விலைக்குக் கிடைக்கப்பெற்றன என்பதும் அவரால் "கடலவும் யாற்றவும் பிறவும்" என்ற வகையால் கூறப்படுகின்றன.

இன்னொரு சேரனைப்பற்றிப் பாடிய புலவர் அவன் நாட்டு மகளிர் அவலை எறிந்து உலக்கையை வாழை மரத்தின்கண்ணே சேர்த்தி வைத்துவிட்டு வள்ளைப்பூக்களைப் பறிப்பதற்கு வயலில் இறங்குவார்கள் என்றும், அவ் வயல்கள் பருத்த கதிர்களினால் வளைந்துள்ள தாட்கள் சாய்ந்து கிடக்கும் தன்மையன என்றும் கூறுகிறார். இதனால் அறியப்படுவது நெல்வயல்களில் வள்ளைப் பூக்கள் மலிந்துள்ளன என்பதும், நெல்மணிகள் மலிந்துள்ளன

என்பதும் ஆம். நெல்மணியின் பொறையினைத் தாங்கமாட்டாமல் தாள்கள் வளைந்து கிடக்கின்றன என்பதை "முடந்தைநெல்" என்பதனால் கவிஞர் அந்தப்பகுதி வருமாறு: தெரிவிக்கின்றார்.

"அவலெறிந்த உலக்கை வாழைச் சேர்த்தி
வளைக்கை மகளிர் வள்ளை கொய்யும்
முடந்தை நெல்லின் விளைவயல்" (III, 9: 1-3)

அந்நாட்டில் எல்லாக் காலங்களிலும் கரும்பு விளைக்கப்படுகிறது என்பதும், அறுவடை

செய்யப்படுகின்றன என்பதும் அக் கவிஞரால் கூறப்படுகின்றன.

"காலமன்றியுங் கரும்பறுத்து ஒழியாது" (III, 10: 14) என்று கவிஞர் கூறுகிறார்.

3. மக்கள் வாழ்க்கை

அந்நாட்டு மக்கள் பிறர்க்குரிய பொருளை விழையாதவர்களாகவும், குற்றமில்லாத அறிவுடையவர்களாகவும், செம்மையினின்று வழுவாதவர்களாகவும், அன்பு நெறியைக் கடைப்பிடிப்பவர்களாகவும், பலரொடும் பகுத்துண்டு வாழ்பவர்களாகவும் கூறப்படுகிறார்கள். செயலாற்றாமல் வீணே மூத்துப்போன யாக்கையையும் நோயையும் இல்லாதவர்களாக அவர்கள் வாழ்ந்துவந்தார்கள் எனக் கூறப்படுகிறார்கள். அக்காரணத்தால் அவர்கள் பல விழாக்களையும் கூத்துக்களையும் கொண்டாடுதற்கு வாய்ப்புக்கள் பெற்றிருந்தனர். பதிற்றுப்பத்தில் பலவிடங்களில் குரவைக் கூத்தும், துணங்கைக் கூத்தும் விளங்க உரைக்கப்பட்டிருக்கின்றன. கூத்தாடுமிடத்தில் சுரை நிறைய நெய் சொரிந்து பெரிய திரியிடப்பட்டு நெடுவிளக்கு வைக்கப்பட்டிருக்கும் என்பது,

> "சொரிசுரை கவரு நெய்வழிபு உராலின்
> பாண்டில் விளக்குப் பரூஉச் சுடரழல
> நன்னுதல் விறலியர் ஆடும்"

(V, 7: 5-7)

என்றவிடத்துச் சொல்லப்படுகிறது. மருத நிலத்தில் மகளிர் இரவும் பகலும் தங்களுடைய பசிய அணிகலங் களைக்கூடக் களையாமல் செல்வக் களிப்பினால் விளையாட் டினை விரும்பிக் குரவைக்கூத்து அயர்ந்தார்கள் என்று அரிசில்கிழார் கூறுகின்றார்.

4. கோடை

சேரநாட்டரசர்கள் கொடையாற் சிறந்தவர்கள். செல்வக்கடுங்கோ ஆழியாதன் என்பவன் பெரும் பொருள் களைப் பிறருக்குக் கொடுத்ததற்காக ஒரு நாளும் வருந்த மாட்டான் எனவும், கொடுக்குந்தொறும் மகிழமாட்டான் எனவும், கொடுக்கும் பொழுதெல்லாம் நிரம்பக் கொடுப் பான் எனவும் கூறப்படுகிறான்.

> "ஈத்தது இரங்கான் ஈத்தொறும் மகிழான்
> ஈத்தொறு மாவள்ளியன்" (VII, 1 : 12-13)

என்று சொல்லப்படும் நல்லிசையைக் கேட்டுப் புலவர் அவன்மாட்டு வந்ததாகக் கபிலர் பாடுகிறார். இந்தவிடத் தில், அவன் நிரம்பக் கொடை கொடுத்தலினால் பொருள் செலவாயிற்று என்பதற்காக வருந்தான் என்பதும், இடையறுமல் கொடுத்து வருவதால் வரும் புகழ் நிரம்பு வது காரணமாக மகிழ்ச்சி கொள்ள மாட்டான் என்பதும்

பொதுவாகச் சொல்லப்படுகின்றன. ஆயினும், இதன்கண்ணே ஒரு சிறப்பு இருத்தலைக் காண்டல் கூடும். அவன் பிறருக்கு ஈகின்றான் எனினும், தன்னால் ஈயப்படவேண்டிய நிலையில் சில மக்கள் இருக்கிறார்களே என நினைத்து அவன் வருந்துகிறான் என்ற குறிப்பையும் வைத்துத்தான் கபிலர் ஈத்தொறும் மகிழான் என்றனர்போலும் என்று கருதுகின்றேன்.

பரணர், செங்குட்டுவனைப்பற்றிப் பாடிய பாட்டிலே அவன் பெற்ற பொருள்கள் பெரியன ஆயினவே என்றும், அரியன ஆயினவே என்றும் கருதித் தனக்கே வேண்டும்

என வைத்துக் கொள்ளாமற் பலருக்கும் கொடுப்பான் என்ற செய்தியை,

விருப்பத்தொடு

"பெரிய வாயினும் அமர்கடந்து பெற்ற
அரிய வென்னாது ஓம்பாது வீசி" (V, 4: 3-4) என்றவிடத்திற் கூறுகிறார்.

செங்குட்டுவன் தனக்கு என ஒருவகைச் பரிசிலர்க்கு என வேறொரு வகையான சோறும் சோறும்

சமைக்கு
மாறு பணிக்கின்ற வழக்கம் இல்லையென்பது
மிகவும்
அழகாகக் கூறப்பட்டிருக்கின்றது. "சோறுவேறு என்னு ஊன்றுவை அடிசில்" என்று கூறப்படுவதைக் காண்க (V, 5 : 13).

காக்கைபாடினியார் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைப் பற்றிக் கூறும் இடத்திற் பரிசிலர் வாராராயினும் அவரைத் தேடி வலியச்சென்று அவருக்குப் பரிசில்களை அவன் நல்குவது வழக்கம் என்பதைக் குறிப்பிடுகின்றார்.

பாணர் சிலர் கொடுமணம் என்ற ஊரிலே குயிற்றப் பட்ட நல்ல அருங்கலங்கள் பல பந்தர் முத்துக்களோடு பெறுவார்கள் என்று சொல்லப்படுகிறார்கள். நார்முடிச் சேரலைக் காப்பியாற்றுக் காப்பியனார் என்ற புலவர் "பரி சிலர் வெறுக்கை" என்றும், "பாணர் நாளவை" என்றும் பாடுகிறார்; (IV, 8 : 9). பரிசிலருக்குச் செல்வமாக இருக் கிறவன் அவன் என்பதும், அவனுடைய நாளோலக்கம்

பாணர்களுடைய இசையரங்கமாக இருக்கிறது என்பதும் அவரால் இவ்விடத்துக் கூறப்படுகின்றன. சேர மன்னன் ஒருவன் வரையாது கொடுக்கின்ற தன்மையில் சிறந்தவனாக இருப்பதற்காக அவனை ஆற்றினைக் கடப்பதற்கு உதவுகின்ற வேழக்கரும்பினும் வல்லவன் என்று அரிசில்கிழார் பாடுகிறார். இதன் கருத்து வேழக்கரும்பு ஒருவன் ஆற்றினைக் கடக்கும் வரைதான் பயன்படுகிறது. பிறகு அதனை அவன் விட்டெறிந்து விடுகிறான். அதைப்போலன்றி இச் சேர மன்னன் புலவர்க்கும் புரவலர்க்கும் எப்பொழுதும்

உதவிசெய்பவனாக உள்ளான். ஆதலினால்
னும் வல்லான் எனக் கூறப்படுகிறான்.

அவன் கரும்பி

"ஒய்யு நீர்வழிக் கரும்பினும்
பல்வேற் பொறையன் வல்லனால் அளியே"

(IX, 7: 4-5) என்றவிடத்து இதனைக் காணலாம்.

5. வீரம்

சேரர்கள் கடற்போரில் வல்லவர்கள் என்ற செய்தி பலவிடங்களிலும் சொல்லப்படுகிறது.

"இருமுந்நீர்த் துருத்தியுள்
முரணியோர்த் தலைச்சென்று
கடம்புமுதல் தடிந்த கடுஞ்சின முன்பின்
சேரன்"

(II, 10 : 2-4)

என்று ஒரு சேரமன்னன் புகழப்படுகிறான்.

செங்குட்டுவன்
யொடு தானும் தன்

பகைப்புலத்தோரது கடற்படை
கடற்படைகொண்டு தாக்கி வென்று
சிறந்தவன் என்பதைக் கவிஞர் :

..................."நீர்புக்குக்
கடலொடு உழந்த பனித்துறைப் பரதவ" (V, 8: 3-4) என்றவிடத்துக் குறிப்பிடுகிறார்.

கடலிற் பெரிய காற்றின் அலைகள் செங்குட்டுவன் படை மேற் செல்லமாட்டாமல் தடுத்தபொழுதும் அஞ்சாமல் அப்படை நீர்ப்பரப்பில் சென்று எதிர்ப்பட்ட பகை

யரசர்களை வென்று அழித்துவிட்டன என்பது இவ்விடத்திற் புலப்படுத்தப்படுகிறது. கடலின்கண் படகுகளில் இருந்தவாறே பகைப்புலத்தோர் போர் செய்தனராதலின்,

அவர்களைக் "கடல்" எனவே இவ்விடத்திற் கவிஞர் குறிப்பிடுகின்றார் என்பது அறியத்தக்கது. மரக்கலங்களிற் செல்லுகின்ற செம்படவர்கள்போல மரக்கலங்களிற் சென்று பகைவர்களோடு போர் தொடுத்தமையின்,

செங்குட்டுவனைப் "பரதவன்" என்று கவிஞர்
கருதத்தக்கது.
அழைப்பது

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் ஆரியர் நெருங்கிய பேரிசை இமயம் முதல் தென்திசைக் குமரிவரை பல போர்களில் வென்று யானைமீது இவர்ந்து பலர் புகழச் செல்வத்தோடு செல்லுகின்ற காட்சியை இனிமையொடு காண்பதாகக் குமட்டூர்க்கண்ணனார் பாடுகிறார் :

"வலனுயர் மருப்பிற் பழிதீர் யானைப்
பொலனணி எருத்த மேல்கொண்டு
பொலிந்தநின்
பலர்புகழ் செல்வம் இனிதுகண் டிகுமே
....
....
ஆரியர் துவன்றிய பேரிசை இமயம்
தென்னங் குமரியொடு ஆயிடை
மன்மீக் கூறுநர் மறந்தபக் கடந்தே." (II, 1

: 18-25)

ஐந்தாம் பத்தில் பாடப்படுகிற கடல் பிறக்கோட்டிய குட்டுவன் இமயத்தை வடதிசை எல்லையாகவும் குமரியைத் தென்திசை எல்லையாகவும் கொண்டு அவ்விரு எல்லைகளுக்கும் இடைப்பட்ட அரசர்களைப் பெரும்போரில் தாக்கி அவருடைய நாடுகளின் அழகினை அழித்தமை குறிப்பிடப் படுகிறது :

"கடவுள் நிலைஇய கல்லோங்கு நெடுவரை
வடதிசை எல்லை இமயம் ஆகத்
தென்னங் குமரியொடு ஆயிடை அரசர்
முரசுடைப் பெருஞ்சமம் ததைய ஆர்ப்பெழச்
சொல்பல நாட்டைத் தொல்கவின் அழித்த
போரடு தானைப் பொலந்தார்க் குட்டுவ !" (V, 3 : 6-11)

செங்குட்டுவனுடைய படைவீரர்கள் தம் மார்பில் அம்பு பட்டால் தளராமல் இருப்பார்கள் என்ற செய்திக்குப் பிறர் அம்பு போடப்போடக் கூசாது வாங்கிக் கொள்ளுகின்ற போர்க் கேடயத்தை உவமையாகச் சொல்லுகின்ற வகையினால் அவன் படை நலம் உணர்த்தப்

படுகிறது. "சிலைவிசை அடக்கிய மூரி வெண்தோல் அணிய பண்பிற்றானை" என இப்படை சிறப்பிக்கப்படுகின்றது.

பெருஞ்சேர லிரும்பொறையைப்பற்றி அரிசில்கிழார் பாடியபொழுது அவன் போரில் உயிர்போதலுக்கு அஞ்சாதவன் என்பதையும், அமைதிக் காலங்களிலே இரவலர்களுக்குக் கொடை கொடுத்தலில் தயங்காதவன் என்பதையும், பெரியோரை வழிபட்டுச் சிறியோரைக் காத்தல் செய்பவன் என்பதையும் அழகுபடக் கூறுகிறார் :

> "உயிர்போற் றலையே செருவத் தானே
> கொடைபோற் றலையே யிரவலர் நடுவண்
> பெரியோர்ப் பேணிச் சிறியோரை அளித்தி"
>
> (VIII, 9 : 1-3)

இளஞ்சேரலிரும்பொறையுடைய ஆட்கள் கணக்கில் அடங்காதவர்கள் என்பதைக் கூறக் கருதுகின்ற கவிஞர்
"செற்றோர் கொலக்கொலக் குறையாத் தானை" என்றவிடத்து நயம்படக் குறிப்பிடுகின்றார். பதிற்றுப்பத்தில் காணப்படுகின்ற சிறப்புக்களுள் ஒன்று அந்தந்த அரசர் வென்ற போர்களை அவரவர்களுக்கு உரியனவாகக் கூறி, அவர்தம் முன்னோர் இயற்றிய போர்வென்றிகளை முன்னோர்க்கு உரியனவாகப் பேசுவது என்பது. காட்டாக, குடக்கோ இளஞ் சேரலிரும்பொறையைப் பற்றிப்

பாடிய
பெருங்குன்றூர்க்கிழார் அவனுடைய வெற்றிகளைக் கூறு தற்கு முன்னால், அவனுடைய மூதாதையர்கள் வெற்றி களைப் பற்றிப் பேசி அத்தகையோர் மரபில் வந்தவனே என அழைக்கின்றார்.

"வேந்தரும் வேளிரும் பின்வந்து பணியக்
கொற்றம் எய்திய பெரியோர் மருக."

என்று அவர் அழைத்தமை குறிப்பிடத்தக்கது.

சேர அரசர்களுடைய படையினர்
வீரம்மிக்கவர்
களாய்ப் போரை எதிர்பார்த்தவர்களாய்ப் பகையை அழித் தாலன்றி உண்ணாதவர்களாய் இருந்தார்கள் என்பது இப் புலவரால் மற்றோரிடத்தில் சொல்லப்படுகிறது:

"எயில்எறிந் தல்லது உண்ணேம் என்று
சொல்லி உண்ணாது அடுக்கிய பொழுதுபல
கழிய எயிலெறிந் துண்ணும் நெஞ்சுபுகல் ஊக்கத்தர்."

(VII, 8 : 5-7)

சேருடைய யானைப்படை மிக்க சிறப்பு

வாய்ந்தது

என்பது பல இடங்களிலும் சொல்லப்படுகிறது.

"கார்மழை முழக்கினும் வெளில்பிணி நீவி
நுதலணந்து எழுதரும் தொழில்நவில்
யானை."

என்று கூறிய விடத்தில், மேகம் முழங்கினால் கூட போர் முரசு கேட்டதுபோலக் கருதிக் கட்டவிழ்த்துக்கொண்டு தலைநிமிர்ந்து எழுகின்ற யானைகள் அவையெனக் கூறப் படுகின்றமை காணலாம்.

சேரர்களுடைய மனைவியரது மாண்பு ஆங்காங்குப் பல விடங்களில் உணர்த்தப்படுகின்றது. காட்டாக, இமய வரம்பன் நெடுஞ்சேரலாதனுடைய மனைவி சீற்றம் கொள் ளாது அமைந்த கற்பினை உடையவள் என்பதும், இனிய மென்மை உடையவள் என்பதும், ஊடல் காலத்திலேயும் இனிய சொற்கள் கூறுபவள் என்பதும் கூறப்படுகின்றன:-

"ஆறிய கற்பின் அடங்கிய சாயல்
ஊடினும் இனிய கூறும் இன்னகை
அமிர்துபொதி துவர்வாய் அமர்த்த நோக்கிற்
சுடர்நுதல் அசைநடை உள்ளலும் உரியள்."

(II, 6 : 10-13)

களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலின் மனைவியைப் பற்றிப் பாடிய கவிஞர் அவள் மனைத்திறத்திற்குரிய அறங்கள் பலவற்றைக் கற்றுத் தெளிந்த அறிவும செயலும் உடையவள் என்று கருத்தைப் புலப்படுத்துகின்றார். அரசனை நோக்கி, "நீ ஈந்து இசைபட வாழ்தலால் பண்டு புகழ் படைத்த வண்டன் என்பானை ஒப்பாய்; நின் மனைவியோ அறஞ்சால் கற்பினை உடையவள், விசும்பு வழங்கும் மகளிருள்ளும் சிறந்த செம்மீன் அனையவள்". எனக்

கூறுகின்றார். காக்கைபாடினியார் நச்செள்ளையார் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைப்பற்றிப் பாடும் பாட்டையே "ஆன்றோள் கணவ சான்றோர் புரவல" என்றே தொடங்குகின்றார்.

செல்வக் கடுங்கோ ஆழியாதனைக் கபிலர் பாடுகிற பொழுது "புரையோள் கணவ பூண்கிளர் மார்ப" என்று விளிக்கின்றார் ; (VII, 10 : 16).

இன்னொரு கவிஞர் (பாலைக் கௌதமனார்) அரசனை நோக்கி, "உன் மனைவியொடு ஆயிரக்கணக்கான ஆண்டுகள் வாழ்க" எனக் கூறுகின்றார் என்பது

"வேயுறழ் பணைத்தோள் இவளோடு
ஆயிர வெள்ளம் வாழிய பலவே." (III, 1 : 37-38)

என்பதனால் அறியப்படும். இவை போன்றவற்றிலிருந்து மூனிவருக்குச் சேர மன்னர் அளித்திருந்த உரிமையும் தகுதியும் அறியப்படும்.

6. கவித்திறன்

பதிற்றுப் பத்தில் பல விடங்களில் புலவர்களுடைய கவித்திறன் காணப்படுகின்றது. களங்காய்க்கண்ணி நார் முடிச்சேரல் என்பான் பெயர்பெற்றதற்குக் காரணம் களங்காயினலான தலைமாலையையும் நாரினலான முடியையும் அவன் அணிந்து கொண்டனன் என்பதுபோலும்! அவன் முன்னர்க் கூறிய சபதம் ஒன்றின் காரணமாக, தன் குறிக்கோள் நிறைவேறுங்காறும இவற்றை அணிவேன் என்று முடிவு செய்துகொண்டான் போலும்! அவன் அவ்வாறு அமைத்திருந்த நார்முடியைப்பற்றிக் கூறுகின்ற காப்பியாற்றுக் காப்பியனார் வேல மரத்தின் உலர்ந்த கிளைகளால் சிறந்த பூச்சுத் தொடுத்து வைத்திருக்கின்ற

> காரணத்தால் அசையும் வலையைப் போல் விளங்குகிற இழைகளுடன் கூடிய மணிகள் விளிம்பிலே கோத்துப் பசிய பொன்னல் செய்யப்பட்ட அணிகளை அணிந்து ஒளி செறிந்த முத்து வடம் கோக்கப்பட்ட நார்முடி எனக்

கூறுகிறார். பொன்னால் செய்யப்பட்ட தகடுகொண்டு அமைக்கப்பட்ட கூட்டின்மீது நாரினால் போர்வையைப் போல் பின்னி ஓரங்களிலே மணியை இழைத்து நூலினால் கோக்கப்பட்ட முத்து வடங்கள் தொங்குகின்ற அணியையே இங்கு நார்முடி எனக் கூறுகின்றார்.

சில இடங்களிற் கவிஞர்கள் ஆண்டிருக்கின்ற உவமைகள் பொருளொடு நன்றாகப் பொருந்தி இன்பம் விளைக்கின்ற செய்தியைக் காணுதல் இயலும். இளஞ்சேரலிரும்பொறை என்பானின் இனிய தன்மையைக் காட்ட விரும்புகின்ற கவிஞர் அவனைச் சாந்துவரு வானி நீருக்கு ஒப்பிடுகின்றார். வானி என்பது சேர நாட்டில் உள்ள ஓர் ஆறு. அவ்வாற்றில் மூங்கில் நிலைபெறாத அளவிற்குத் தண்ணீர்ப் பெருக்கு வந்தாலும், மேற் பரப்பில் அமைந்துகிடக்கும் அணிகளையும் சந்தனத்தையும் அஃது உடையது. இத் தகைய ஆற்றினைச் சேரனுக்கு ஒப்பிடுவதன் நோக்கம் சேர னுடைய பகைவர்கள் அவன் எதிரே நிற்கமாட்டார் என் பதைக் காட்டலாகும். தண்ணீர் நிறைந்திருந்தாலும் அணிகள் மேலே தோன்றுகின்றன வென்று கூறுவதால் ஆற்றின் தெளிவு அறியப்படும். மன்னனின் உள்ளத்தெளிவைக்

ஆற்றின் தெளிவு சேர

காட்டுகிறது நிலைக்க

மாட்டாத ஆற்றின் நீரைப்போல நிறைந்த வீரத்தை யுடையவன் அவன் ஆயினும், பாடுகின்றவர்களைக் காணும் பொழுது அன்பும் அருளும் உடையவனாக மாறுகின்றான். சேரநாட்டு ஆறுகள் மரச் செறிவினிடையே ஓடி வருகின்ற காரணத்தால் இயல்பாகக் குளிர்ந்த தன்மையை யுடையன. சந்தனத்தை மலையினின்று அடித்துக்கொண்டு வருவதால் நீரில் மணம் மிகுந்து குளிர்ச்சியும் படிகின்றது. அதைப் போலச் சேர அரசன் வள்ளல்களாகிய தன் முன்னோருடைய மரபில் வருகின்ற காரணத்தால் இனியனாக இருப்பதன்றியும் அறிவுடையவர்களோடு தொடர்பு கொண்ட காரணத்தால் மேன்மேலும் இனியன் ஆகின்றான் என்ற குறிப்புக்களை வைத்து இக் கவிஞர் பாடிய திறமை வியக்கத் தக்கது. அப் பகுதி இது:

"கழைநிலை பெறாஅக் குட்டத் தாயினும்
புனல்பாய் மகளிர் ஆட ஒழிந்த
பொன்செய் பூங்குழை மீமிசைத் தோன்றும்
சாந்துவரு வானி நீரினும்
தீந்தண் சாயலன் மன்ற தானே." (IX, 6 : 9-13)

அரிசில்கிழார் எனும் புலவர் பெருஞ்சேர லிரும் பொறையைப்பற்றிப் பாடும்பொழுது அவனை ஒரு குளவிக்கு ஒப்பிடுகிறார். குளவியினுடைய இயல்பு தனக்கு இன்னல் விளைக்காதவர்களுக்குத் தான் இன்னல் இயற்றுவதில்லை என்பதும், தன் கூட்டைச் சிதைக்கத் தலைப்பட்டோரை வருத்தும் என்பதும் ஆகும் :

"கடுந்தேறு உறுகிளை மொசிந்தன அஞ்சும்
செழுங்கூடு கிளைத்த இளந்துணை மகாஅரின்
அலந்தனர் பெருமநின் உடற்றி யோரே."
(VIII,

1 : 6-8)

இப் பகுதியில் சேரன் ஒரு குளவிக்கூட்டிற்கு பாகவும், அவனுடைய பகைவர்கள் குறும்பு செய்யும்

ஒப்

சிறு

வர்களுக்கு ஒப்பாகவும் கூறப்படுகிறார்கள். குளவிக்கூடு பெரியது என்பது செழுங்கூடு என்றவகையான் சொல்லப் படுகிறது. குளவிகள் வருத்தும் தன்மையுடையன ஆனாலும், தாமே சென்று எவரையும் வருத்துதலில்லை. ஆயினும், எவராவது கூட்டை அழிக்கத்தலைப்பட்டால் அங்ஙனம் அழிக்க முற்படுவோரைச் சூழ்ந்து நன்றாக வருத்தும் இயல்பினையுடையன. அதனால் முதியவர்கள் குளவிக் கூட்டைப் பார்த்தால் கூட்டிற்கு இன்னலிழைக்க நினைக்காமல் நடந்து செல்லுவர். இளஞ்

சிறுவர்களோ அதன் தன்மையையும் வலியையும் அறியாதவர்களாதலால் அதனைக் கிளைக்கத் தலைப்படுவார்கள். அங்ஙனம் கிளைக்கின்ற சிறுவர்கள் அறியாது தவறிழைத்தார்கள் என அவர்களைக்
குளவிகள் விடுதலில்லை. மாறாக, அவர்கள் அலறும்படி மருட்டிக் கொட்டி வருத்திவிடும். சேரனது தன்மையும் குளவியின் இயல்பினை ஒத்தது என்று குறிப்பிடுகின்றார். அதனால் பெறவைப்பது என்னவென்றால், சேரன் தன்

சூழ்ச்சித் துணைவருடனும், கல்வி சான்ற வயவருடனும் எவருக்கும் இன்னல் விளைவிக்காமல் தன் நாட்டிலேயே அமர்ந்து மகிழ்ந்திருப்பது வழக்கம்; ஆயினும் அவன் திறத்தையறியாமல் அவனோடு எதிர்த்துவரத் தலைப்பட்டவர்கள் செழுங்கூட்டினைக் கிளைத்த இளமகார்கள் தப்ப மாட்டாதவராதலைப்போல உய்ந்து திரும்புதல் அரிது என்பது இச் செய்யுட் பகுதியில் கூறப்படுகிறது. இதனை,

“ஏன் உள்ளம் எள்ளிய மடவோன் தெள்ளிதில்
துஞ்சுபுலி இடறிய சிதடன் போல
உய்ந்தனன் பெயர்தலோ அரிதே”

என்று சோழன் நலங்கிள்ளி பாடிய பாட்டாகப்

புறநானூற்றில் காணப்படுவதனோடு ஒப்பிட்டு மகிழுதல் இயலும்.

7. அறவுரை

புலவர்கள் அரசரை நோக்கிப் பல வேளைகளில் அறி வுறுத்தியிருக்கிறார்கள். பல்யானைச் செல்கெழுகுட்டுவனைப் பார்த்துப் பாலைக்கௌதமனார் கோபம், காமம், அளவிறந்த கண்ணோட்டம், அச்சம், பொய்ச்சொல், கழிபேரன்பு, அழிக்கும் மனப்பான்மை, கொடுமை ஆகிய இவை தவிர்க்கத் தக்கன எனக் கூறுகிறார்.

"சினனே காமம் கழிகண் ணோட்டம்
அச்சம் பொய்ச்சொல் அன்புமிக உடைமை
தெறல் கடுமையொடு பிறவும் இவ்வுலகத்து
அறந்தெரி திகிரிக்கு வழியடை யாகும்." (III,

2 : 1-4) என்றவிடத்து இது சொல்லப்படுகிறது. மேலும், பிறர் பிறரை நலியாமல், வேற்றுப்பொருளை வெஃகாமல், மனைவியைப் பிரியாமல், உள்ள பொருளைப் பகுததுண்டு வாழ்தல் வேண்டும் என்பதை அச்செய்யுளில்தானே அவர் வற்புறுத்தக் காண்கிறோம்.

8. சொல்லாட்சி

பதிற்றுப்பத்தில் வழங்கியுள்ள சில சொற்கள் நோக் கத்தக்கன. ஓரிடத்தில், "சவட்டுதல்" என்பது உருவு

அழித்தல் என்ற பொருளில் வந்துள்ளது (IX, 4). இன்னோரிடத்தில் "கற்ப" என்ற சொல் கல்வியை உடையவனே என்ற பொருளில் வந்துள்ளது (V, 3). பிறிதோரிடத்தில் "நெய்த்தோர்" என்ற பழஞ்சொல் குருதி அல்லது இரத்தம் என்ற பொருளில் வழங்கப்பட்டுள்ளது; (III, 10). இச் சொல் தெலுங்கு, கன்னட மொழிகளில் நெத்துரு என இப்பொழுதும் வழங்கப்பெறுகின்றமை பழங்காலத்தில் திராவிடமொழிகளின் ஒருமையைக் காட்டும். அப்பு, பிருதிவி, தேயு, வாயு, ஆகாசம் எனப் பிற்காலத்தவர் வழங்கிய வேற்றுமொழிச் சொற்களுக்கு மாறாகப் பதிற்றுப்பத்தில் நீர், நிலம், தீ, வளி, விசும்பு என்ற தூய சொற்கள் வழங்கப்பட்டிருத்தல் அறியத்தக்கது:

"நீர்நிலம் தீவளி விசும்பொடு ஐந்தும்
அளந்துகடை அறியினும்
அளப்பருங் குரையே."

(III, 4 : 15-16)

நேர்கிழக்கு அல்லது சரியான கிழக்கு என்பதைச் செங்குணக்கு என்ற வகையால் ஒரு கவிஞர் தெரிவிக்கக் காண்கிறோம் (V, 10). ஒருநாள், இருநாள், பலநாள் எனப் புறநானூற்றிற் காணப்படுகின்ற வழக்குகள் போல ஒன்று இரண்டு பல என்றவாறு ஓரிடத்தில் வருவதைக் காண்கிறோம் :

"மழைபெயல் மாறிய கழைதிரங்கு
அத்தம்
ஒன்றிரண் டலபல கழிந்து திண்டேர்
வசையில் நெடுந்தகை காண்குவந்
திசினே"

(V, 1 : 14-16)

என்றவிடத்தில் இதனைக் காணலாம்.

9. சொல்லழகு

பதிற்றுப்பத்தில் வருகின்ற சொல் நடையின் அழகு கண்டு நாம் மகிழ்தல் இயலும்.

"சிதைந்தது மன்ற-நீ சிவந்தனை
நோக்கலின்" (III, 7)

என்கிறார் ஒரு கவிஞர். இன்னொருவர்,

சொற்பொழிவுகள்

" நிலந்திறம் பெயருங் காலை யாகினும்
கிளந்த சொல்நீ பொய்ப்பு அறியலையே
"

என்கிறார். மற்றொருவர்,
" ஈரம் உடைமையின் நீரோர்
அனையை
அளப்பரு மையின் இருவிசும்பு அனையை
கொளக்குறை படாமையின் முந்நீர் அனையை" (IX, 10)

என்கிறார். அன்றியும், அக்கவிஞர்,
" நின்னாள், திங்கள் அனைய வாக,
திங்கள்
ஆண்டோர் அனைய வாக, ஆண்டே
ஊழி அனைய வாக, ஊழி
வெள்ள வரம்பின வாகஎன உள்ளிக்
காண்கு வந்திசின் யானே."

என்று கூறுகிறார். இதனால், "வெள்ளம்" என்பது ஊழியைக் காட்டிலும் பெரியது என்று அறிகிறோம்.

நான்காம் பத்து முழுதும் அந்தாதித்தொடையில் அமைந்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்க செய்தி. முதற்பாட்டு "மாண்டனே பலவே" என்று முடிகின்றவாறே இரண்டாவது பாட்டு மாண்டனே பலவே எனத் தொடங்குகின்றது. ஏனைய பத்துக்களில் அந்தாதித் தொடை காணுதிருப்பவும், காப்பியாற்றுக் காப்பியனுர் பாடிய பத்தில் மாத்திரம் இந்நடை காணப்படுகிறது என்பது குறிப்பிடத் தக்கது.

10. பதிகம்

இந் நூலில், ஒவ்வொரு பத்துப்பாட்டின் இறுதியிற் பதிகம் என்ற தலைப்பில் சில அடிகள் செய்யுளாகவும் சில பகுதிகள் உரைநடையாகவும் காணப்படுகின்றன. இவற்றை இயற்றியோர் இன்னுரென்பது விளங்கவில்லை. ஒவ்வொரு பத்தினையும் பாடிய புலவரே பதிகத்தையும் இயற்றினுர் என்ற கருத்து இந்நாளில் அறிஞர்களால் கொள்ளப்படவில்லை. பதிற்றுப்பத்தின் பாக்களைத் தொகுத்தவர் எவ

ரேனும் ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் பதிகம் என்பதைப் பாடிச் சேர்த்திருத்தல் இயலும் என்பதே இந்நாள் அறிஞர் பலருக்கும் ஒத்த முடிபு. எனினும், பதிகங்கள் சங்ககாலச் சேரர்களுடைய வரலாற்றுண்மையை அறிதற்குப் பெரிதும் பயன்படுகின்றன என்று திரு. சதாசிவப் பண்டாரத்தார் போன்ற அறிஞர்கள் கருதுகின்றார்கள். பதிகத்திற் காணப்படும் சேரர் புகழ் கூறும் மரபையொட்டித்தான் இராசராச சோழன் காலம்முதல் மெய்க் கீர்த்திகள் கல்வெட்டுக்களிற் பொறிக்கும் வழக்கம் தோன்றி யிருத்தல் வேண்டுமென அவர் கருதுகிறார். எனவே, பதிகங்கள் கி. பி. 990-க்கு முன்னால் எழுந்தன / வென்பது அவருடைய கருத்தாகும்.

சில பத்துக்களிற் காணப்படுகின்ற செய்திகளே பதிகத்திலும் வற்புறுத்தப்படுகின்றன. காட்டாக, இரண்டாம் பத்தின் பதிகத்துள் இமயத்தில் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் வில்லினைப் பொறித்து என்பது கூறப்படுகிறது. இப் பத்தின்

ஆண்டான் வேயே
முதற்பாட்டி டான்

இமயத்தை எல்லையாகக் கொண்டு அவன் ஆண் என்று குமட்டூர்க்கண்ணனாரால் கூறப்படுவ தால் பொருத்தம் உண்மை காண்கிறோம். ஏழாம்பத்தினைப் பாடிய கபிலருக்குச் செல்வக்கடுங்கோ ஆழியாதனால் ஊர் கள் பரிசிலாகத் தரப்பட்டன எனப் பதிகம்கூறுகிறது. இச்

செய்தியைப் பெருங்குன்றூர்க்கிழார் ஒன்பதாவது பத்தில் சோழர்கள் தோற்று இட்ட வேலின் பெருக்கத்திற்கு உவமையாகக் கூறுகின்றார். அது வருமாறு :

"உவலை கூராக் கவலையில் நெஞ்சின்
நனவிற் பாடிய நல்லிசைக்
கபிலன் பெற்ற ஊரினும் பலவே" (IX, 5 : 11-13)

ஆயினும், சில பதிகங்களிற் காணப்படுகின்ற செய்திகள் நூலினுள்ளே அமைந்த பாடல்களோடு பொருந்தியன வாகக் காணப்படவில்லை. காட்டாக, ஐந்தாம் பத்தின் இறுதியில் காணப்படும் பதிகத்தில்,

"கடவுள் பத்தினிக் கற்கோள் வேண்டிக்
கானவில் கானங் கணையிற் போகி
ஆரிய அண்ணலை வீட்டி"

என்று வருகிறது. கண்ணகியாகிய கடவுட் பத்தினிக்குக் கல் கொள்ளப்பட்ட செய்தி பாட்டினகத்தே கூறப்படவில்லை. இஃது ஒரு பொருந்தாமைபோலத் தோன்றும். எனினும், இதனைக்கொண்டு ஐந்தாம் பத்திற் பாடப்படுகிறவன் செங்குட்டுவன் அல்லன் என்று கூறிவிடுதல் இயலாது. ஒரு
கொண்டுவந்த

வேளை, செங்குட்டுவன் பத்தினிக்குக் கல்
பிற்பாடு இப்பதிகம் பாடப்பட்டிருத்தல்
இயலும் என்று கொள்ளுதலே தக்கதாகும்.

11. சிலப்பதிகாரமும் பதிற்றுப்பத்தும்

இனி, சிலப்பதிகாரத்திற்கும் பதிற்றுப்பத்திற்கும் உள்ள சில தொடர்புகளைக் காண்போம. ஐந்தாம் பத்திற் பாடப்பட்ட செங்குட்டுவன் மோகூர் மன்னனுடைய வேப்பமரத்தை வெட்டினான் எனக் கூறப்படுகிறான். இதுவே சிலப்பதிகாரத்திலும் நீர்ப்படைக் காதையின்கண் சொல்லப்பட்டிருக்கக் காண்கிறோம் :

"பழையன் காக்கும் குழைபயில் நெடுங்கோட்டு
வேம்புமுதல் தடிந்த ஏந்துவாள் வலத்துப்
போந்தைக் கண்ணிப் பொறைய கேட்டருள்".
(காதை 27: அடிகள் 124-126)

பதிற்றுப்பத்தில்,

"மோகூர் மன்னன் முரசங் கொண்டு
நெடுமொழி பணித்தவன் வேம்புமுதல் தடிந்து"

என்று கூறப்படுவதும்,

"மோகூர்,
கடுஞ்சின விறல்வேம்பு அறுத்த
பெருஞ்சினக் குட்டுவற் கண்டனம் வரற்கே"

என்று கூறப்படுவதும் சிலப்பதிகார அடிகளோடு ஒப்பு நோக்கத் தக்கன.

செங்குட்டுவனுடைய மூதாதையர் ஒருவர் அகப்பா என்ற ஊரை எறிந்தவர் என்று சிலப்பதிகாரத்திற் பேசப் படுகிறார்.

"மிகப்பெருந் தானையொடு இருஞ்செரு வோட்டி
அகப்பா எறிந்த அருந்திறல் ஆயினும்"

என நடுகல் காதையில் (143-144) வருகிறது. இச்செய்தி பதிற்றுப்பத்தில் மூன்றாம பத்தின்கண் கூறப்படுதலையும் காண்கிறோம். அம் மூன்றாம் பத்திற்குரிய பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் பாலைக் கௌதமனார் பாடிய விடத்தில்,

"தண்ணலம் பெருங்கோட்டு அகப்பா எறிந்த
பொன்புனை உழிஞை வெல்போர்க் குட்டுவ" (III, 2: 26-27)

என்று கூறுகின்றார். இதிலிருந்து, ஐந்தாம் பத்திற்கு உரிய குட்டுவன், செங்குட்டுவனாக இருத்தல் இயலும் எனவும், மூன்றாவது பத்திற்கு உரியவனாக அமைந்த பல்யானைச்செலகெழு குட்டுவன், செங்குட்டுவனின் முன்னோருள் ஒருவன் எனவும் கொள்ளுதற்குத் தக்க சான்று பெறுகிறோம். சிலப்பதிகாரத்தில், செங்குட்டுவன் "எழுமுடி மார்பன்" எனப் பேசப்படுகிறான். அஃதாவது, ஏழுமுடியால் செய்யப்பட்ட மாலையை அணிந்தவன் என்பது கருத்து. இஃது ஐந்தாம் பத்துப் பாடலில் (வரி 6) "எழுமுடி மார்பின் எய்திய சேரல்" என வருதலைக் காண்கிறோம். சிலப்பதிகாரத்தில், செங்குட்டுவன் நெடுங்கடலோட்டிய செய்தி,

"நெடுந்தேர்த் தானையொடு இரும்பிற்புறத்து இறுத்துக்
கொடும்போர் கடந்து நெடுங்கட லோட்டி"
(28: 118-119)

என வருவதைப் பார்க்கிறோம். இச் செய்தி பதிற்றுப் பத்தில்,

"கோடுநரல் பௌவம் கலங்க வேலிட்டு
உடைதிரைப் பரப்பின் படுகட லோட்டிய
வெல்புகழ்க் குட்டுவன்"

என வருதலோடு ஒப்புநோக்கத்தக்கது. இவ்வாறு ஒப்புநோக்குழி, சிலப்பதிகாரத்திற் கூறப்படுகின்ற செங்குட்டுவனும் பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பத்தில் ஓதப்படுகின்ற குட்டுவனும் ஒருவனே ஆவன் என்பது பெறப்படும்.

12. முடிவுரை

இதுகாறும் கூறியவாற்றால்,

பதிற்றுப்பத்தின் துணை
யாக ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முற்காலத்தில் வாழ்ந்த தமிழ்வேந்தர்களுள் ஓர் இனத்தவராகிய சேரர்களுடைய நாட்டு வளமும், குடிமக்கள் இயல்பும், அரசர் கொடை வளமும், படை நலமும், மணமாட்சியும் அறியப்படும். அன்றியும், பதிற்றுப்பத்திற் காணப்படுகின்ற

கவியழகும் சில அரிய சொல்வழக்குக்களும் அறியப்படும். சிலப்பதிகாரத்திற்கும் பதிற்றுப்பத்திற்கும் இடையே காணப்படுகின்ற பல்வேறு ஒப்புமைகளினாற் சிலப்பதி

காரத்திற் சொல்லப்படுகின்ற செங்குட்டுவனும், பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பத்திற் பேசப்படுகின்ற குட்டுவனும் ஒருவனே ஆவன் என்பது வற்புறுத்தப்பட்டமை அறிக.


இனி, புலமை சான்ற பேரறிஞர்கள் எண்மர்
தனி
தனித் வர்.

ஒவ்வொரு பத்தினையும் ஆராய்ந்து விரிவுரை
அவற்றைக் கேட்டு இன்புறுவோமாக.

ஆற்று



திருவாளர்,
அ. மு. பரமசிவானந்தம்,
எம்.ஏ., எம்.லிட்.




திருவாளர்,
ந. சஞ்சீவி, எம்.ஏ.



வித்துவான்,
திரு. தணிகை. உலகநாதன்

திருவாளர்,
அ. ச. ஞானசம்பந்தன்,
எம். ஏ.



திருவாளர்,

ந. பெருமாள், எம்.ஏ.





புலவர்,

திரு. முருகவேள், பி.ஓ.எல்.



திருவாளர்,
கு. பரமசிவம்,
பி.ஏ. (ஆனர்சு)

திருவாட்டி,
மேரி. மாசிலாமணி அம்மையார்,
எம.ஏ.



இரண்டாம் பத்து

[திருவாளர் அ. மு. பரமசிவானந்தம், எம். ஏ., எம். லிட்.

அவர்கள்]

1. பழைய எல்லையும், தனித்தமிழ் வேந்தரும்

வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல் உலகம் எனத் தமிழ்நாட்டு எல்லையை அன்று வரை

யறுத்தனர். வடக்கே வேங்கடத்தையும் தெற்கே குமரி யையும் கூறி, மேற்கும் கிழக்கும் கடல்களே எல்லைகளாக அமைந்தன என உரையாசிரியரும் பிறரும் அதற்கு விளக்கமும் தந்தனர். ஆனல், இன்று தமிழ்நாடு அந்த நிலையில் இல்லை. கிழக்கே கடல் எல்லை ஒன்றைத்தவிர மற்றைய மூன்று எல்லைகளும் மாற்றப்பட்டுள்ளன. குமரியும் மேலைக்கடல் எல்லையும் மலையாள நாட்டிலேயும், வேங்கடம் ஆந்திர நாட்டிலேயும் அடங்கிவிட்டன. ஆயினும் அப் பகுதிகளில் தமிழ்ப்பண்பாடும், கலை உணர்வும் இன்னும் மங்கிவிடவில்லை என்பதை அறிய ஒருசார் மகிழ்ச்சி பிறக்கின்றது. குமரிமுனையை நாம் திரும்பப் பெறப்போகிறோம் என்பதில் பெருமகிழ்வு பிறக்கின்றது.

தமிழ் நாட்டின் மேலைப்பகுதியாகிய இன்றைய மலையாள நாட்டிலேதான் இன்றுபேச அமைந்த பதிற்றுப் பத்தின் தலைவர்கள் அனைவருமே வாழ்ந்து வந்தனர். மேலைமலைத் தொடருக்கும் அரபிக்கடலுக்கும் இடையிலுள்ள பகுதியே சேரநாடு என அன்று விளங்கி வந்தது என்பர் ஆராய்ச்சியாளர். இன்றைய கோவை வட்டப் பகுதியாகிய கொங்குநாடும் சிற்சில காலங்களில் சேரர் ஆட்சியில் இருந்து வந்தது.

2. தமிழ் நூற்கள்

இன்று தமிழின் அடிச்சுவடே காணமுடியாத அந்த மலையாள நாட்டிலேதான் அன்று அத்தனைத் தமிழ் இலக்கியங்கள் தோன்றின. 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்' தோன்றிய நாடு அந்த நாடுதானே. பாடிய மன்னனும் அந்நாட்டு மன்னனன்றோ? பதிற்றுப்பத்து அந்நாட்டு அரசர் பரம்பரை வரலாற்றைத்தானே விளக்குகின்றது. இன்னும் பன்னிரண்டாம் நூற்றாண்டு வரை சைவ, வைணவ நூல்களைப் பாடிய சேர மன்னரும், இலக்கணங்கள் எழுதிச் சிறந்தவரும் அந்நாட்டிலே வாழ்ந்தனர் என்பது வரலாற்று உண்மையன்றோ? ஆம்! அத்தகைய தமிழ் வழங்கிய பழம்பெரு நாட்டிலேதான் இன்று தமிழ்மொழி ஆட்சியற்று, வழக்கற்று, விலகி நின்று, தன் சேய் மொழியாம் மலையாளத்துக்கு இடந்தந்து, தனது வாழ்விடத்தின் எல்லையைச் சுருக்கிக்கொண்டது. எனினும் அன்றைய மலைநாட்டு மன்னர் பாடியனவும், அவரைப்பற்றிப் பாடியனவுமாகிய பல பழம் பாடல்கள் நம் முன் நிற்கின்றன. அவற்றுளெல்லாம் சிறந்தது 'பதிற்றுப் பத்து' என்னும் பாடற்றொகுதியேயாகும்.

3. ஒருமரபு—ஆய்வுத் துணை

தமிழ்நாட்டிலே அரசரைப் பாடிய புலவர்கள் பல்லோர். பாடுவித்த புரவலரும் பலராவர். எனினும் ஒரே பரம்பரையில் பிறந்தவரை வரிசைப்படுத்தி இப்பதிற்றுப்பத்தைப் போல் பாடப்பட்ட வேறு இலக்கியம் தமிழ்நாட்டில் கிடையாது. இப் பதிற்றுப்பத்துச் சேரர் பரம்பரையில் தோன்றிய பத்து மன்னர்களைப் பாடிய நூலாகும். பாடிய புலவர்களும் பல திறத்தால் மேம்பட்டவர். ஒவ்வொரு மன்னனைப் பற்றியும் பத்துப்பத்துப் பாடல்கள்பாடி, அவற்றுடன் பதிகத்தையும் அமைத்து அழகிய முறையில் செல்லும் சிறந்த நூல் இது. இப்பத்துத் தொகுதியில் முதலும் இறுதியும் அற்றுவிட்டன போலும். எனினும் முதல் ஈறு அற்ற இறைவன் என்றும் நின்று நிலவுவதுபோன்று,

இந்நூலும், அது பிறந்த நாட்டில் தன் வழக்கற்று வீழ்ந்த போதிலும், தமிழ்நாட்டில் என்றும்
பது உறுதி.
நின்று நிலவும் என்
பதிற்றுப்பத்து அரசர்களைப் பற்றிப் பாடுகின்ற நூலானமையின் அக்கால வரலாற்றைப்பற்றி அறிய இது
ஓரளவு உதவுகின்றது என்னலாம். அக்காலத்தே அரசரைப் பாடிய புலவர்கள், அரசர்தம் ஆடை, அணி, உணவு, வாழ்வு முதலியவற்றை மட்டும் பாடாமல், அக்கால நாட்டு நிலையையே ஒருவாறு பாடுவதால் அவற்றின் மூலம் ஒரு வகையில் நாட்டுவரலாற்றை நம்மால் அறிய முடிகின்றது.

அவற்றுள்ளும், இந்நூல் முழுக்க முழுக்க ஒரு பரம்பரையைப் பற்றியே எழுகின்றமையின் இதில் சேரர் பரம்பரை பற்றியும் அவர்தம் நாட்டு மக்களைப் பற்றியும் பல உண்மைகள் உரைக்கப்பட்டுள்ளன. அவற்றை நூல்வழிக் காண்போம்.

4. ஆய்வுப் பேட்டகங்கள்

நாடு

வரலாறு என்பது ஒரு நாட்டைக் காட்டுவது ஆகும். என்றும் வரலாறு என்றும் கூறும்போது பல வர

லாற்று ஆசிரியர் அவ்வந்நாட்டு மன்னர்களைத்தான் நினைக்கின்றனர். நம்நாட்டில் மட்டுமன்றிப் பிறநாடுகளிலும் வர

லாறு எழுதும் பேராசிரியர்கள் அவ்வாறே அரசர் பரையைப் பற்றிய செய்திகளைக்கூறி அமைகின்றனர்.

பரம்

அது,

அவ்வளவு பொருத்தமானதன்று எனத்

தற்போது உலகம்
உணரத்தொடங்கிவிட்டது. ஆனும் அரசர்பற்றிப் பேசு
(வது மட்டும் வரலாறு அன்று. காலந்தோறும் வாழ்ந்த
மக்கள் பற்றியும், அவர்தம் வாழ்வு, வளம்,
பண்பாடு இன்னபிறவற்றைப் பற்றியும்
விளக்கிப் பேசுவதும் வர
லாற்றில் இடம் பெறவேண்டும் என
உணர்கின்றனர். இந்
நெறியிலே தற்போது சில வரலாற்று நூல்கள்
தொடங்குகின்றன)
வெளிவரத்

சங்ககால இலக்கியங்களும்
அத்தகையனவே. இப்
பதிற்றுப்பத்தும் பிற இலக்கியங்களும் அக்கால
அரசரைப்

பற்றியும், அவர்தம் பரம்பரையைப்பற்றியும் பாடுகின்றன. ஆனால், அந்த ஒரு அளவிலேயே அவை நின்றிருப்பின் இத் துணைக்காலம் அவை வாழ்ந்திருக்கமாட்டா. என்றோ அரசர் வாழ்வை அடுத்து அவற்றின் வாழ்வும் முடிவு பெற்றிருக்கும். ஆனால், அவை அரசரை முன் நிறுத்தி, அவர் காலத்திருந்த தமிழ்நாட்டு நிலை, தமிழ்மக்கள் தம் கலை, வாழ்வு, வாணிபம், பண்பாடு, இலக்கியம் முதலிய பலவற்றையும் நமக்குக் காட்டுகின்றன. அக்கால மக்கள் தம் மலைவாழ்வும் கடல்வளமும் வயல் விளைவும் காட்டுச் செல்வமும் நம் அறிவுக்குப் புலனாகின்றன. நானிலத்தால் நலம்பெருக்கி நாட்டில் வாழ்ந்த மக்கள் தம் உணவும் உடையும் உறையுளும் ஊர்தியும் பிறபொருள்களும் நாமறியக் காட்டுவன அவ்விலக்கியங்க ளன்றோ! அன்று வாழ்ந்த வயிற்றுப் பசியால் வாடிய வறுமைக் குடும்பங்களும், அக் குடும்பநிலையைக் கூறவந்த புலவன் ஏற்றமும், அவன் வாய்ச் சொல்லறிந்து, அவனது வறுமை நீங்கி வாழ வாழ்வளித்த மன்னன் கொடைநிலையும் நமக்கு வரலாற்றுப் பெட்டகங்க ளன்றோ! நாடும் காடும் மலையும் மடுவும் கடந்து சென்று ஆங்காங்கே அமைந்த இயற்கை நலன்களையும் அவ்வந்நில மக்களது தொழில் முதலியவற்றையும் புலவர்கள் காட்டும் போது, அவர்கள் இலக்கியப் புலவர்கள் என்பதை மறந்து, நிலநூல் ஆராய்ச்சியாளர் என நாம் நினைக்கின்றோ மல்லமோ! இன்னும் நீரினின்று நிலத்தேறவும் நிலத்தி னின்று நீர் பரப்பவும பரந்த பலபண்டங்களின் வாணிப வளனைப் புலவர்கள் பாடும்போது அன்றைய தமிழ் நாட்டின் பொருளாதாரநிலை நம்முன் புலப்படுகின்றதே. குற்றம் கடியும் கோன்மையும், தன் தவறு உணரின் தாழ்ந்து வரும் தகைமையும், உற்றார் உறவினர் மற்றார் என்ற வேறுபாடின்றி ஒறுக்கவும் உடன்சேர்த்தணைக்கவும் ஆணை செலுத்தும் அரசநெறியைக் காட்டும் அன்றைய பாடல்கள்

காட்டு நெறிமுறை கோடா நிலையினை நமக்கு விளக்கு கின்றனவே. ஆம்! இவ்வாறு நாட்டின் வரலாற்றையே நமக்குக் காட்டும் நல்ல பெட்டகங்களாகச் சங்க இலக்கியங்கள் இருக்கின்றமையால்தான் அவை இன்றும் வாழ்

கின்றன; என்றும் வாழும் என்பதும் உறுதி. அத்தகைய சிறந்த பெட்டகங்களுள் ஒன்றே இப்பதிற்றுப்பத்து.

5. வாழ்க்கை விளக்கம்

இனி, இப்பதிற்றுப்பத்து, சேரர் வழக்கமாகிய மருமக் கட்டாயத்தை வற்புறுத்தும் ஒருநூல் என்று செய்துள்ளார் பேராசிரியர், சோமசுந்தர

ஆராய்ச்சி பாரதியார் அவர்கள். அவர்தம் ஆராய்ச்சியின் முன்னுரையில் ஆர். வி. கிருஷ்ணஐயர் அவர்கள் மருமக்கட்டாயம்தான் பண்டைத் திராவிடருடையதென்றும், மக்கட்டாயம் (தந்தைவழி)

ஆரியருடைய தென்றும் கூறி, தமிழ்நாட்டில் ஆரியர் பழக்க வழக்கங்கள் நிறைந்து நின்றமைபோன்று மலையாள

நாட்டில் அவை வலுப்பெறவில்லை எனக் காட்டுகின்றனர். இவ்வுண்மையை விளக்குவதுபோன்று இன்றும் தமிழ்நாட்டினரால் கைவிடப்பட்ட பல பழந்தமிழ்ப் பழக்க வழக்கங்களும், சொற்களும், விழாக்களும் மலையாள நாட்டில் நிலைபெற்றுள்ளன. எனவே இப்பதிற்றுப்பத்து,

மக்கள் வாழ்க்கை முறையை விளக்க நிற்கும் களனாக இலங்குகிறது என்னலாம்.

ஒரு நிலைக்

6. காலம்

இனி, இப் பதிற்றுப்பத்தின் காலத்தைச் சற்றே காணலும் நலம்தரும். இதன் காலம் இன்னதெனத் திட்டமாக வரையறுக்க முடியாதென்பர் சிலர். இந் நூலின் ஐந்தாம் பத்திற்கு உரியவனாகிய செங்குட்டுவனை முன்னிறுத்தி ஒருவாறு இதன் காலத்தை வரையறுப்பர் சில ஆராய்ச்சியாளர்கள். செங்குட்டுவன் செய்த கண்ணகி விழாவில்,

“ அருஞ்சிறை நீங்கிய ஆரிய மன்னரும்
பெருஞ்சிறைக் கோட்டம் பிரிந்த மன்னரும்
குடகக் கொங்கரும் மாளுவ வேந்தரும்
கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும்.”

வந்திருந்ததாக அவன் தம்பியாகிய இளங்கோவடிகள் பாடுகின்றார். அக் கடல்சூழ் இலங்கைக் கயவாகுவின் காலத்தை இலங்கைச் சரித நூலாகிய மகாவம்சம் குறிப்பிடுகின்றது. அதைக்கொண்டு செங்குட்டுவன் காலத்தை ஆராய்ச்சியாளர் வரையறுப்பர். கி. பி. முதல் நூற்றாண்டின் கடைசிக்காலமாகவும், இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கமாகவும் இந்நூலின் காலத்தை அந்த ஆராய்ச்சியின் மூலம் வரையறுக்கலாம். கயவாகுவின் காலம் செங்குட்டுவன் காலமாதலாலும் அதற்கு முன்னும் பின்னும் இப் பதிற்றுப்பத்தின் தலைவர்கள் வாழ்ந்திருக்கின்றமையினாலும் காலத்தைக் கணிப்பது அவ்வளவு கடினமன்று.

எனினும் சிலப்பதிகாரத்தை வரலாற்றுக்கு ஒவ்வாத நூலென்றும், அதில் கூறப்பெறும் கதை நடவாத கதையென்றும் கூறுவாரும் உளர். மற்றும் அச் சிலப்பதிகாரக் காலமே எட்டாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டதென வாதிப்பவரும் நாட்டில் இல்லாமல் இல்லை. திருவள்ளுவரையே எட்டாம் நூற்றாண்டு வரையில் பற்றிக்கொண்டுவந்து ஆராய்ச்சி செய்கின்ற பேராசிரியர்களெல்லாம் நாட்டில் இருக்கும்போது இதில் வியப்பில்லையன்றோ? எனினும், பல ஆராய்ச்சி அறிஞர்தம் முடிவு பதிற்றுப்பத்தின் காலம் கி. பி. முதல் இரண்டாம் நூற்றாண்டு என்பதில் ஐயமில்லை.

சங்க காலத்திலே வாழ்ந்த புலவர்கள் தம் காலத்தையும்—ஏன்—பெயரையும் கூடப் பொருட்படுத்தாதவர்கள். அவர்கள் பாடுவதையும் எழுதுவதையும் கடமை என்று கொண்டவர்கள். அவர் தம் பாடலில் பயனில்சொல் காணல் அரிது. அதுபோன்றே அவர் தம் வாழ்வும் பயனற்ற வாழ்வாக இருக்க இடமில்லை. பயனுள்ள பணியாற்றி அவர் தம் வாழ்வுக்கிடையில், தற்புகழ்ச்சியும், அவர் தம காலம் குறிக்கும் நிலையும் இடம்பெறவில்லை. பிற்காலத்திய கல்வெட்டுக்களும், சாசனங்களும், பிற பாடல்களும் பாடுவோர், காலம், பயன் ஆகிய பலவற்றை உட்கொண்டுள்ளன. எனினும் அவை இதுபோன்ற வரலாறுகளுக்குப் பயன்படுகின்றனவே ஒழிய, அன்றைய வாழ்க்கையைப் படம் பிடித்துக்

இரண்டாம் பத்து

காட்டும் வகையில் விளங்கவில்லை என்னலாம். பேர்
வேண்

டாப் பெருபுலவர்கள் பலர் சங்க இலக்கியங்களில் இடம் பெறுவதை அறியாதார் யார்? உற்றுரையும், ஊரையும், பேரையும் வேண்டாத வள்ளுவன் குறள் இன்று உலக நூலாக இல்லையா? அவ் வள்ளுவன் போன்ற ஊரும் பேரும் அறியக்கூடாத வகையில் புலவர் பல்லோர் நம் இலக்கியத்திடையில் வருகின்றனர். அவர்கள் காலம் குறிக்காமையை வைத்துத் தற்கால ஆராய்ச்சியாளர் தம் மனம்போன போக்கில் அவர்தம் காலத்தை வரையறுக்கின்றனர். அவர்தம் கூற்றுக்குச் சான்றாக மகாவம்சம் இரண்டாம் கயவாகு என்ற மற்றொரு அரசனைக் காட்டுகின்றது. திருவள்ளுவரையும், செங்குட்டுவனையும் எட்டாம் நூற்றாண்டிற்குக் கொண்டுவருகிற ஆராய்ச்சியாளர், சேர வரலாற்றை எழுத நினைப்பின் திகைக்க நேரும். எட்டாம் நூற்றாண்டுக்கு முன்னரே தமிழ் நாட்டு இலக்கிய நிலை மாறுபட்டது. பிற நாட்டவராகிய பல்லவர் தமிழ் நாட்டில் ஆதிக்கம் செலுத்தினர். கொல்லம் ஆண்டாகிய மலையாள ஆண்டுத் தொடக்கத்தின் அருகில்வந்துவிடுகின்றனர் அவர்கள். பழைய சேரர் பரம்பரையின் அடிச்சுவடே அற்று, தற்போதைய திருவாங்கூர், கொச்சி அரசர் தம் பரம்பரைகளின் தொடக்கம் தூரத்தே தெரிய ஆரம்பிக்கின்றது. இவைகளை உட்கொண்டால், சேரர் செங்குட்டுவனை எட்

டாம் நூற்றாண்டுக்குக் கொண்டுவருதல் இழுக்கு என்பது புலனாகும். ஆகவே, சேரன் செங்குட்டுவன் பல்லவர் ஆட்சி தமிழ்நாட்டில் கால்கொள்ளத் தொடங்கிய ஐந்தாம் நூற்றாண்டுக்கு முற்பட்டவன் என்பது தேற்றம். அவன் காலத்தில் கயவாகு வாழ்ந்தான் என்பது முடிபாதலாலும, ஐந்தாம் நூற்றாண்டுக்குமுன் ஒரே கயவாகுதான் இலங்கையை ஆண்டான் என்பது அறுதியிடப்பெறுகின்றமையாலும், அவன் காலம் கி. பி. முதல்நூற்றாண்டானதாலும், செங்குட்டுவன் காலமும் அக்காலமே எனத் துணிந்து கூறலாம். எனவே, இப் பதிற்றுப்பத்தின் காலம் கி. பி. முதல், இரண்டாம் நூற்றாண்டுகள் என்பது தேற்றம்.

7. இரண்டாம்பத்து—பதிகம்

இப் பதிற்றுப்பத்தில் இங்கு இன்று எடுத்துக்கொண்ட பகுதி இரண்டாம் பத்தாகும். பேரளவில் அது இரண்டாம் பத்தாக நிற்பினும், இன்றைய நூல்வாழ்வளவில் அதுவே முதல் பகுதியாக இலங்குகின்றது. முதற்பத்து கிடைக்கவில்லையாகவே இது முதலாவதாகப் பேசப்படுவதொன்றாகிவிட்டது. இது சேரர் மன்னருள் சிறந்து விளங்கிய இமய
வரம்பன் நெடுஞ்சேரலாதன் புகழ்பாடும் பத்தாகும், இதைப் பாடியவர் குமட்டூர் கண்ணனார் என்னும் பெரும்புலவராவர். கண்ணனார் என்பது இவரது இயற்பெயராகலாம். குமட்டூர் என்பது இவர்
புலவர் உளர்,

ஊராகலாம். 'கண்ணனார் என்று வேறு ஒரு அவரினின்று வேறுபடுத்தற்கு இவர் இங்ங

னம் வழங்கப்பெற்றார்' என்று சாமிநாத நூலின் பதிப்புரையில் கூறுகின்றனர்.

ஐயர் அவர்கள் தம் இவர் குலம் அந்த ணர்குலம் என்பது இவர் இப்பாடலுக்குப் பரிசாகப் பெற்றது பிரமதாயமாக அமைகின்றமையால் அறியப்படும். பழங்காலத்தில் தமிழ்நாட்டில் பல்வகைத் தானங்கள் வழக் கத்தில் இருந்தன. பிராமணருக்குக் கொடுக்கும் தானம் 'பிரமதாயம்' எனப்படும். இக் கண்ணனார் இந்த இரண் டாம்பத்தால் சேரன் இமயவரம்பனைப்பாடி உம்பற்காட்டு ஐந்நூறு ஊர்களைப் பிரமதாயமாகவும், முப்பத்தெட்டு ஆண்டு தென்னாட்டு வருவாயிற் பாகமும் பெற்றார் என்று இதன் பதிகம் விளக்குகின்றது. எனவே, இவர் அந்தண ராவர். இன்னும் இப் பதிகத்தினால் இவ்வரசனது பல்வேறு செயல்கள் நன்கு விளக்கம்பெறுகின்றன.

பதிகம் நூலுள் கூறப்படும் விரிந்த

பொருளைத் தொகுத்துக் கூறும் ஒன்று என்பது புலவர் கண்ட உண்மை இந்த இரண்டாம்பத்தின் பதிகமும் அவ்வாறே கண்ணனார் பத்துப் பாடல்களுள் பாடிய சேரன் பெருமை யெல்லாம் சில அடிகளில் தொகுத்து விளக்குகின்றது.

அத்துடன் பாடினவர், பாடப்பட்டோர் ஆகியோரின் பெயர்களையும், பாடலுக்குப் பரிசிலாகப் பெற்றனவற்றையும் விளக்குகின்றது. பதிகத்தின் அடிகளாக வரும் பன்

னிரண்டு வரிகளும் நெடுஞ்சேரலாதன் ஆட்சிச் சிறப்பையும், கொடைச் சிறப்பையும் குறித்துக்காட்டுகின்றன. இறுதியாக அப் பெருமன்னன் ஆட்சி செலுத்திய காலத்தையும் குறிக்கின்றது. 'இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் ஐம்பத்தெட்டியாண்டு வீற்றிருந்தான்' என்று அவன் சிறப்பெலாம் கூறி ஆட்சி ஆண்டையும் விளக்கி முடிகின்றது இப்பத்தின் இறுதிப் பதிகம். பதிற்றுப்பத்தின் இத்தகைய பதிகங்கள், அவ்வப் பத்துக்களைப் பாடியவர்களே இயற்றினார்கள் என்று சொல்வதற்கில்லை. மூலப் பகுதிகளில் இல்லாது உரைப்பகுதிகளில் மட்டுமே இவை காணப்படுதலின் பின் யாரோ எழுதியிருக்கவேண்டுமெனக் குறிக்கின்றார் சாமிநாத ஐயர் அவர்கள். எழுதினவர் யாவராயினும் அவர்கள் இச் சேரர் அரசர்களைப் பற்றியும், பாடிய புலவரைப்பற்றியும் நன்கு அறிந்தவராகவே இருக்கவேண்டும் என்பது உறுதி. இப் பதிகங்கள் பின்வந்த பல உரையாசிரியர் தம் மேற்கோள்களாக விளங்குவதினின்று இவற்றின் பழைமையும் பெருமையும் இன்றியமையாமையும் நன்கு விளங்கும்.

8. தாய் தந்தை—மருமக்கட்டாயம்

இப்பதிகத்தையும் இதுபோன்ற பிற பதிகங்களையும் வைத்தே பேராசிரியர் சோமசுந்தர பாரதியார் அவர்கள் மருமக்கட்டாயத்தை வலியுறுத்துகின்றார். இப்பதிகத்தே இமயவரம்பனை 'உதியன் சேரற்கு வெளியன் வேண்மாள் நல்லினி ஈன்ற மகன்' எனக் குறிக்கின்றார் பதிக ஆசிரியர். இக்குறிப்பினைக்கொண்டு உதியன்சேரலாகிய மன்னருக்கு நம் இமயவரம்பன் மருமகனாகவேண்டும் என்று சேரர் தாயமுறையில் பேராசிரியர் வற்புறுத்துகின்றார். வேண்மாள் என்பது அரசன் தேவி என்ற பொருளில் வருவதையும், 'வெளியன்' என்பான் குறுநில மன்னராகிய வேளிர் குலத்தில் ஒருவனாக இருக்கவேண்டுமெனவும் காட்டப்பெறுகின்றது. உதியஞ்சேரலின் உடன்பிறந்தவளாகி வெளியன் என்ற வேளிர்குலத்தவனை மணந்து, அவன் மூலம் இவ் வேண்மாள் நல்லினி என்றவள் ஈன்ற மைந்

தனே நம் பாட்டுடைத் தலைவனாகிய இமயவரம்பன் என்பது பெறப்படும். எனவே, இதன் துணைகொண்டு நோக்கின் நம் சேரன் தந்தை வெளியனாவன்; தாய் சேரர் குடியில் தோன்றிய நல்லினியாவள்.

இரண்டாம் பத்துத் திட்டமாகக் கூறுவிடினும், நான்கு, ஐந்து, எட்டு முதலிய பத்துக்களின் பதிகங்களில் விளக்கமாக மருமக்கட்டாய வழிமுறை கூறியிருப்பது கொண்டே, இரண்டாம்பத்தின் பதிகத்திற்கும் இவர் கொண்ட மருமக்கட்டாய ஆராய்ச்சி பொருந்துவதாகும். வேறு திட்டமான வரையற்ற செய்யப்பெறும் ஆராய்ச்சி மூலம் இதை மறுத்தாலன்றி, இம் மருமக்கட்டாயமுறையே பதிற்றுப்பத்தில் வற்புறுத்தப்பெறும் என்று கொள்ளல் பொருந்துவதாகும். எனவே, இரண்டாம் பத்துக்கு உரிய நம் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் சேரன் குலத்தில் பிறந்த நல்லினிக்கும் வேளிர்குலமன்னனாகிய வெளியனுக்கும் பிறந்து, மருமக்கட்டாயமுறையில் உதியஞ்சேரல் என்ற சேரமன்னனுக்குப்பின் பட்டத்துக்கு வந்தவன் என்று கொள்ளல்வேண்டும்.

இனி, இரண்டாம் பத்தின் பதிகத்தால் இமயவரம்பனைப் பற்றிப் பல குறிப்புக்கள் வெளியாகின்றன. அவன் இமயத்தில் வில்பொறித்ததும், தமிழகம் முழுவதையும் ஆண்டதும், ஆரியரை வணங்கவைத்ததும், யவனரைப் பிணித்து வெற்றி கண்டதும், பகைவர் நாட்டில் வென்றியால்கொண்ட நற்கலன்களை மற்றவருக்கு உதவியதும், பகைவரை வாட வைத்ததும், பாடியவருக்குப் பரிசில் ஈந்ததும் இப் பதிகத்தால் அறியப்படும் உண்மைகளாகும். இச் செயல்கள் பற்றி இரண்டாம்பத்துப் பாடல்களில் விளக்கமான குறிப்புக்கள் வருகின்றன. அவைகளை நூல் வழி நோக்குவோம்.

இனி நூலுக்குச் செல்லுமுன்
பெயரும், துறையும், வண்ணமும்

பாடல்களுக்கமைந்த
தூக்கும் எண்ணத்

இரண்டாம் பத்து

31

தக்கன. பாடல்களை இந்த வகையில் பகுத்துப் பார்த்தவர் மிகச் சிலரே. பாடலுக்குப் பெயரமைத்தமையும் அருகியே காணப்படுகின்றது. பாடற்பண் பரிபாடலில் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். துறை

பலவற்றுள்ளும் அகம் பற்றியும் புறம் பற்றியும் வருவதுண்டு. எனினும் இந்நான்கினையும் தொகுத்து அமைக்கும் ஒரு தனிநிலை இப்பதிற்றுப்பத்திற்கே அமைந்த சிறப்பாகும். இப்பாடல்களின் பெயர்களை அமைத்த திறம் அறிந்து மகிழ்தற்குரியது. ஒவ்வொரு பாட்டிலும் சிறந்த பகுதியை ஆய்ந்து எடுத்து, அதன் அழகிய அமைப்பையும் பொருள் விளக்கத்தையும் போற்றி அத்தொடரையே பாட்டின் பெயராக அமைத்திருப்பது அறிஞருக்கு உவகை ஊட்டுவதொன்றல்லவோ! உதாரணமாகப் பதினொராம் பாட்டில் (நூலின் முதல் பாட்டு) எட்டாவது அடியில் வரும் 'புண்ணுமிழ் குருதி' என்பது அப்பாடலின் பெயராக அமைந்துள்ளது. இதனை விளக்கவந்த பழைய உரையாசிரியர் "'அருநிறந்திறந்த' என முன்வந்த அடைச் சிறப்பானும், 'மணிநிற இருங்கழி நீர்நிறம் பெயர்ந்து, மனுலக் கலவை போல' எனப் பின் வந்த அடைச்சிறப்பானும் இதற்குப், 'புண்ணுமிழ் குருதி' என்று பெயராயிற்று" என விளக்குகின்றார். ஒரு பாட்டின் பெயர் அதன் அமைப்புக்குப் பொருந்துவதாக அமைதலே இயல்பு; அந்த இயற்கைமுறை இப்பதிற்றுப் பத்தின் பெயரமைப்பிலே நன்கு கையாளப்படுகின்றது. இமயவரம்பன் வீரத்திறம் பாட வந்த புலவர் இம்முதற்பாட்டில் அவனை முருகனுக்கு ஒப்பாக்கி, பகைவர் மார்பகம் திறந்து வெற்றிகாணும் வீரத்தை இத்தொடரால் விளக்குகின்றார் என்றால், இதனினும் வேறு சிறந்த பெயரால் அப் பாட்டை எவ்வாறு அழைக்க இயலும்? இதுபோன்றே ஒவ்வொரு பாட்டின் பெயரும் அமைந்திருப்பதைக் காணலாம். மேலும் பாடலின் துறையும் வண்ணமும் தூக்கும் அவ்வப்பாடல்களுக்கு ஏற்ப அமைந்துள்ளன. இந்நூல் புறம்பற்றிப்

பாடப்பட்ட நூலானமையின் துறைகள் புறம்பற்றியன வாக அமைந்துள்ளன. இனி வண்ணமும் தூக்கும் பாட

லின் அமைப்பையும் ஓசையையும் விளக்கவருவனவாகும். இவற்றை ஈண்டு விரிப்பில் பெருகும். சுருங்கக் கூறுமிடத்து, பாட்டின் அமைப்பும், பாடற் பண்பும், ஓசையும், அது விளக்கவரும் பொருளும் துறையும், அதன் பெயரும் ஒவ்வொரு பாடலையும் நன்கு சிறக்கச் செய்கின்றன என்பது அறிந்த உண்மையாகும். இனி நூல்வழிச் சென்று நோக்குவோம்.

10. நூல்—வீரச் சிறப்பு

இரண்டாம் பத்து என்பது பதினொன்றாவது பாடல் தொடங்கி இருபதாவது பாடல் முடிய உள்ள பாடல்களின் தொகுதியாகும. இப் பத்துப் பாடல்களிலே இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனது போர்த்திறன், கொடைநலன், உளப்பாங்கு, பிற சிறப்பியல்புகள் அனைத்தையும் பல்வேறு வகையான் விளக்கிக் காட்டுகின்றார் குமட்டூர்க் கண்ணனார் என்ற பெரும்புலவர். இவர் இப்பாடல்கள் தவிர வேறு பாடல்கள் பாடியதாகக் குறிப்புக்கள் கிடைக்கப்பெறவில்லை. இதுபோன்றே இச் சேரமன்னனும் இப்பாடல்களால் இப்புலவரால் போற்றப்பட்டவனாகவே காண்

கின்றான். இத்துடன் (மாமூலனார் என்ற பெரும்புலவர் அகநானூற்றில் (347) இவன் கடம்பறுத்த நிலையினை உவமை வாயிலாக விளக்கும் ஒரே குறிப்பு மட்டும் சங்க இலக்கியத்தால் பெறப்படுகின்றது. எனவே, இவ்வரசனைப் பற்றி அறிய முற்றும் உதவுவன இப் பத்துப்பாடல்களே யாகும்.)

(முதலாவதாக இமயவரம்பனுடைய வீரம் பற்றிக் கண்ணனார் காட்டிய சிறப்பைக் காண்போம். முதற் பாட்டிலேயே ஆசிரியர் அவனை முருகனோடு ஒப்புப்படுத்தி அவன் கடம்பெறிந்து களிறு ஊர்ந்த சிறப்பினை விளக்குகின்றார். முருகன் கடல் நடுவில் மாவுருவாக நின்ற சூரபதுமனைப் பிளந்து வெற்றிகொண்டு யானைமேல் அமர்ந்து சிறந்தான். இமயவரம்பனும் கடல் நடுவில் கடம்பு தடிந்து வெற்றிகொண்டு களிறு ஊர்ந்து சிறந்தான். இந்த இரண்டு நிலையையும் எண்ணி எண்ணி மன்னனை முருகனோடு

ஒப்புமைப்படுத்தும் சிறப்பு ஆசிரியர் வாக்காலேயே அறிந்து இன்புறத்தக்கதாகும். முதலாவதாக இயற்கை எழில் நிரம்பிய கடலை விளக்கிப் பின் அக்கடல் நடுவில் நின்ற மாமரத்தைக் காட்டி, பின் அம் மரந்தடிந்து களிறு ஊர்ந்த முருகனைக் காட்டி, அவன் போன்ற போரடு தானைச் சேரலாதனைக் காட்டுகின்றார்.

"வரைமருள் புணரி வான்பிசி ருடைய

வளிபாய்ந்து அட்ட துளங்குஇரும் கமம்சூல்
நளியிரும் பரப்பின் மாக்கடல் முன்னி
அணங்குடை அவுணர் ஏமம் புணர்க்கும்
௫. சூருடை முழுமுதல் தடிந்த பேரிசைக்
கடுஞ்சின விறல்வேள் களிறு ஊர்ந் தாங்கு.”

(1,1-6) என்று முருகனை உவமைப்படுத்தும் திறம் அறிந்து மகிழத் தக்கது ஒன்றன்றோ !

முருகனை ஒத்து இவன் மாற்றாரை எவ்வாறு வென்றான் என்பதையும் எண்ணிப் பார்க்கவேண்டும்.

(தனது சிவந்த வேலானது பகைவரை அறுக்க, அவர்தம் மார்புதிறந்த அப்புண் உமிழ்ந்த குருதியானது அருகிலே நீலநிறத்தோடு இருந்த நீரைச் செம்மை நிறமாக மாற்றிக் குங்குமச் சேறாகும் வகையில் பகைவரது அரண்கொன்று அமர்மேம்பட்ட சேரலாதன் இவன் என்பதை,

௭. “செவ்வாய் எஃகம் விலங்குநர் அறுத்த
அருநிறம் திறந்த புண் உமிழ் குருதியின்
மணிநிற இருங்கழி நீர்நிறம் பெயர்ந்து
௧0. மனலக் கலவை போல அரண்கொன்று
முரண்மிகு சிறப்பின் உயர்ந்த ஊக்கலை.”

எனப் பாடுகின்றார் புலவர். இதில் வரும் ‘புண்

உமிழ்
குருதி' என்பதே இப்பாட்டின் பெயராக அமைகின்றது. எனவே, பகைவர் மார்பினைப் பிளக்கும் வெற்றிச் சிறப்பினை மேம்படுத்தும் பாட்டாக இது அமைகின்றதென்பது பொருந்துமன்றோ!

ப. சொ.—3

11. கடம்பெறிதல்—இமயவேற்றி

பின்னர் இவன் கடம்பெறிந்த சிறப்புத்தான் பெரிதாகப் பேசப்படுகின்றது. முதற் பாட்டிலும் பத்தாம் பாட்டிலும் இக் கடம்பை வென்ற சிறப்புக்களை நன்கு காட்டுகின்றார் ஆசிரியர். இவனுக்கு மாற்றார் கடல் நடுவில் உள்ள சிறு தீவுகளில் வாழ்ந்தவர்போலும். அவர்கள் தங்கள் காவன் மரமாகக் கடம்பினைக் கொண்டிருக்கக் கூடும். அவர்மேல் படையெடுத்து, இவன் அக்காவன் மரத்தை வெட்டி, அந்நாட்டைத் தன் அடிப்படுத்தியிருக்கக் கூடும். அச்சிறப்பு, சிறந்தது ஒன்றாகலின் கண்ணனார் அதை எடுத்துக் காட்டுகின்றார். அகம்பாட வந்த மாமூலனார், தலைவனைப் பிரிந்த தலைவி வருந்தும் நிலையில் இக் கடம்பெறிந்து முரசதிர்ந்த காட்சியைக் கொண்டுவந்து நிறுத்துகின்றார். ஊரவர் கவ்வை தனிமையில் இருந்த தலைவியை வருத்துகின்றது. அவள் பிரிவால் வாடுவது ஒரு புறம் இருப்பினும் கவ்வையாகிய பழிச்சொல் வருத்துவது பெரிதாக உள்ளது. அதை வாய்விட்டுத் தன் தோழியிடம் கூறுகின்றாள். மாற்றாரது பழிச் சொல் அத்தகைய நிலையில் அவளுக்கு இன்னல் ஊட்டிற்று? சேரலாதன் சேனையைக் கடல்மேல் செலுத்திக் கடம்பெறிந்து வெற்றி கொண்டு ஆர்த்த முரசம் பகைவர் உள்ளத்தைச் சுட்டது போன்று பழிச் சொல் தன் உள்ளத்தைச் சுட்டது என்கின்றாள். பெரும்புலவராகிய மாமூலனார் இச் சேரலாதன் செருவென்ற சிறப்பினை அகப்பாட்டில் ஓர் உவமை மூலம் இவ்வாறு எடுத்துக்காட்டும் திறம் அறிந்து இன்புறத் தக்கதுதானே !

க. "சால்பெருந் தானைச் சேரலாதன்

மால்கடல் ஓட்டிக் கடம்புஅறுத்து இயற்றிய ௫.
பண்அமை முரசின் கண்அதிர்ந் தன்ன
கவ்வை தூற்றிய வெவ்வாய்ச் சேரி."

(அகம். 347) என்பன அவர் அடிகள். எனவே, சிறப்பு, பெருஞ் சிறப்பாகும்.

சேரலாதன் கடம்பெறிந்த

இரண்டாம் பத்து 35

சேரலாதன் கடம்பெறிந்ததோடன்றி, இமயம் வரையிலும் படையெடுத்து வெற்றி கொண்டுள்ளான். அவன் பெயராகிய 'இமயவரம்பன்' என்பதே அதை வலியுறுத்தும். வடக்கே இமயமும் தெற்கே குமரியும் எல்லையாகக் கொண்ட பரந்த பாரதநாடு முழுவதும் அவன் ஆணைவழி இலங்கிற்று என்பதை,

உ௩. "ஆரியர் துவன்றிய பேரிசை இமயம்
தென்னங் குமரியொடு ஆயிடை
மன்மிக் கூறுநர் மறம்தபக் கடந்து."

ஆண்டான் என அழகுபடக் காட்டுகின்றார் கண்ணனார்.

ஆசிரியர்

12. பகைநாட்டின் முன் பின்நிலை

மேலும் அவன் போர்ச்சிறப்பும் பகை

நாட்டினை

அழிக்கும் ஆற்றலும் நன்கு விளக்கப்பெறுகின்றன. பதின் மூன்றும் பாட்டிலே பகைவர்நாடு இவன் படையெடுப்புக்கு முன் இருந்த நிலையினையும், படையெடுப்புக்குப் பின் அது பாழ்பட்ட வகையினையும் காட்டுகின்றார் ஆசிரியர். பகைநாடு முன் எவ்வாறு இருந்தது? (பகைவர் நாட்டு வயல்களில் ஆட்டுக்கிடைகள் மடக்கியிருந்தனர். நீர்வளமோ ஆரல் மீன்கள் உகளுவதற்கு ஏற்ப நிரம்பியிருந்தது. ஏறுகள் தம்முட் பொருதமையின் உழாமலேயே வயல்கள் சேறுயின. கரும்பின் பாத்தியில் பூத்த நெய்தலானது உணவு தேடி வந்த எருமையை மேல் சென்று கரும்பை அழிக்கவிடாது, தம்மையே தின்னுமாறு தடுத்து நிறுத்து வன போன்று வளமிக்கு ஓங்கிநின்றன. வளம் கண்டு

மகிழ்ந்த துணங்கை ஆடும்
மலர்களைப் பசுக்கள் தின்று

மகளிர் ஆடிவீழ்த்த ஆம்பல்
மகிழ்ந்தன. தழைத்தநெங்

கும், இனிய மருத மரங்களும் நிறைந்ததும்
பொய்கை

சூழ்ந்ததுமாகிய ஊர்கள் நிறைந்த நலம் சேர்ந்த நாடு பகைவருடையது. அத்தகைய நாடு இமயவரம்பனுல் என்னுயிற்று? பாவம்! கழிவிரக்கத்தோடு காட்டுகின்றார் கண்ணனர். அத்தகைய நலம் நிறைந்த நாடு 'கூற்றடு

நின்ற யாக்கைபோல'ப் பொலிவிழந்து, அசைவிழந்து அனைத்தும் இழந்து பாழாயிற்று! அந்நாட்டில் அனைத்தும் அழிய கவைத் தலைப் பேய்மகள் கழுது ஊர்ந்து இலங்கினள். நெருஞ்சி முட்கள் நிறைந்தன. புழுதி பூத்தது. அந்தப் பக்கம் செல்லவே மக்கள் அஞ்சினர். இவ்வாறாய வளமார்ந்த பகைநாடுகளை யெல்லாம் வென்று அவற்றை நிலைகெடச் செய்த வீரன் சேரலாதன் எனப் பலவகையில் ஆசிரியர் விளக்குகின்றார். பதினைந்தாம் பாட்டின் முதல் சில அடிகளில் பகைவர் நாட்டு நிலையினைக் காட்டுகின்றார் அவர். 'அறியாமையின் மறந்து துப்பெதிர்ந்த நின் பகைவர் நாடும் கண்டு வந்திசின்' என்று பகைவர் நாட்டைத் தானே நேரில் கண்டு வந்த வகையினை விளக்குகின்றார். ஆம்! மற்றவர் கண்டார் அவர்வாய்க் கேட்டேன் என்று கூறுவதினும் தானே நேரில் காண்பது எவ்வளவு உறுதிபயக்கத்தக்கது. பத்தொன்பதாம் பாட்டிலே (16-19) பகை நாடுகளில் நல்ல

வரும் பசுக்களும் நீங்கின வென்றும், உழுவார் இன்றி வெளி றிட்ட வயல்களில் கலப்பைகள் கிடந்தன வென்றும், காணுநர் கைபிசைந்து 'அந்தோ' என்ற அவலத்துடன் இரங்கப் பாழ்பட்டன அவை என்றும் கூறுகின்றார். எனவே, இமய வரம்பனை எதிர்க்க மாற்றார் அஞ்சுவர் என்பதும், எதிர்ப்பின் அவர் தம் நாடுகள் எவ்வளவு நல்லனவாயினும் படையெடுப்பால் பாழாகும் என்பதும், அவற்றை அறிந்து

அஞ்சியும் அடிமையாகியும் இமயம் முதல் குமரி வரை உள்ள அரசர்கள் இவன் ஆணையின் கீழ் வாழ்ந்தனர் என்பதும் பெறப்படுகின்றன.

இனி இவன்
மேலே செல்வோம்.

போர்க்களத்திலிருந்த தன்மை கண்டு

13. பாசறை—போரகற்றல்

இவன் இருந்த பாசறையின்
பாடலில் விளக்குகின்றார் ஆசிரியர்.

நிலையினைப் பதிறும்
பகைவர் நாட்டு மதிலை,
'பூண ஐயவி தூக்கிய மதில' என்று
கூறி, அம் மதிலில்
அடைபட்டுக்கிடந்த கதவுகளைத் தாக்கி,
கொம்பு முரிந்து,

கோபத்தோடு மரங்கொல்லும் மழகளிறுகள்

முழுங்கும்

பாசறையில் இவன் இருந்தான் என விளக்குகின்றார்.

பத்தொன்பதாவது பாட்டிலே இவனது போர் விருப்பத்தையும், செங்களத்திலேயே நின்று பகைவரை வாட்ட நினைத்த நிலையினையும், அப் போர்க்களத்தே வீரர் நிற்கும் நிலையினையும், அனைத்தையும் கண்டு அப் போர் வினையில் இவன் கருத்திருத்திய தன்மையினையும் நன்கு காட்டுகின்றார்.

"ஒண்பொறிக் கழற்கால் மாறா வயவர்
திண்பிணி எஃகம் புலியுறை கழிப்பச்
௫. செங்கள விருப்பொடு கூல முற்றிய
உருவச் செந்தினை குருதியொடு தூஉய்
மண்ணுறு முரசம் கண்பெயர்த்து இயவர்
கடிப்புடை வலத்தர் தொடித்தோள் ஓச்ச
வம்புகளை வறியாச் சுற்றமொடு
அம்புதெரிந்து
அவ்வினை மேவலை யாகலின்."
(19, 3-10)

என்பன அவ்வடிகள். இவ்வாறு

போர்க்களத்தையும், அதில் நிற்கும் வீரர் நிலையினையும் அவர்களைக் கண்டு பெரும் போர் விருப்புற்று நிற்கும் இவ்வரசன் நிலையினையும் கூறுகின்ற ஆசிரியர், இவற்றால் அவனது போர் விருப்பத்தை மேலும் தூண்டினார் அல்லர். தமிழ்நாட்டுப் புலவர் மரபே போரைத் தணிக்க வழிகாணும் மரபாகும். போர்க்களத்தே சோழர் இருவர் பொர நின்ற காலத்து 'ஒருவர் தோற்பினும் தோற்பதுன்' குடியே என்ற அறமுரைத்துப் பெரும் போரை நிறுத்திய புலவர் கோவூர்கிழாரை அறியாதார் யார்? இக் குமட்டூர் கண்ணனாரும் இவ்வாறு அவன் வீரத்தையெல்லாம் விளக்கிக் கூறுவது மேலும் அவனுக்குப் போர் விருப்பத்தை உண்டாக்குவதற்காக அன்று. அவ்வாறு போர் செய்து, வேந்தரைப் புறங்கண்டு பகைவர் நாட்டைக் கொண்ட மன்னன் அமைதியுற்று, அரசியொடு வாழ்வாங்கு இல்லற வாழ்வில் வாழ்ந்து, கொடையாளனாய், குடியோம்பும் கொற்றவனாய்ச் சிறக்க வேண்டுமென அறிவுறுத்தவேயாகும்.

14. வேந்தோப்பு—கோடைமடம்

(இப் பெருமன்னனைப் புலவர் நிலம் நீர் வளி விசும்பு என்ற நான்கு பெரும் பூதங்களோடு ஒப்பிடுகின்றார். இது போன்று பஞ்ச பூதங்களோடு பாராளும் மன்னரை உவமைப்படுத்திக் கூறுதல் பண்டை மரபாகும். இவ் வுவமையை விளக்க வரும் உரையாசிரியர்கள், 'பகைவர் பிழை செய்தலைப் பொறுத்தலில் நிலத்தைப் போன்றும், அவர் வழிபடின் அவரை அளித்தலில் நீரைப் போன்றும், சதுரங்க வலியிலும் மனவலியிலும் வளியைப் போன்றும், ஆராய்ச்சியின் விரைவில் விசும்பைப் போன்றும் அவ்வத் தன்மையின் அளத்தற்கு அரியை' என்று உரை கூறிச் செல் கின்றனர். பரந்த நிலமும், ஆழ்ந்தமைந்த நீர்ப்பரப்பும், தடுக்க முடியா ஆற்றல் வாய்ந்த வளியும், இனைத்தென அறிந்து அளவிட முடியா வெளியும் அவ்வவ் வகையில் இவ்வரசனுக்கு உவமையாக் கூறப்படுதலும் பொருத்த முடையதே. இவ்வுவமைகள் மூலம் இவ்வரசனது பிழை பொறுக்கும் பெருந்தன்மையும், கெட்டார்க்குச் சார்பாய்த் தண்ணளிசெய்யும் கருணை மழைப் பண்பும், எதிர்த்தாரை முன் நிற்காது வீசி எறியும் வீரச் சிறப்பும் பரந்து நிரந்த புலமைப் பொலிவும் விளங்குகின்றன வல்லவோ)!

இம் மன்னன் பகைவரைப் பொறுக்கும் உளப்பாங்கைப் புலவர் பதினேழாம் பாட்டில் நன்கு விளக்குகின்றார். பொறுமைக்கு இவனை ஒக்கும் பொருளை எண்ணின் வேறு காணமுடியாது என்கின்றார். பெருந் தவற்றைச் செய்யும் பகைவராயினும் பின் பணிந்து திறை இடுவாராயின் அவரைத் தமராகக் கொள்ளும் பண்பாளன் சேரலாதன் என்பதை,

"புரைவது நினைப்பின் புரைவதோ இன்றே
பெரிய தப்புந ராயினும் பகைவர்
பணிந்து திறைபகரக் கொள்ளுநை."
(17, 1-3)

என்கின்றார். இவ்வாறே அவனுடைய பிற இயல்புகளையும் எண்ணிக்கொண்டே செல்லின் விரியும்.

புலவா இந்த உவமத்தோடு அவனை விட்டு விடவில்லை. அவன் விளக்கத்துக்கு மீன், கோள், திங்கள், ஞாயிறு, தீ ஆகிய ஐந்து ஒளியுள்ள பொருள்களையும் உவமைப்படுத்துகின்றார். எனவே, இவனுடைய புகழ் ஒளிமங்கா வகையில் இந்த ஐந்து பேரொளிகளைப் போன்று என்றும் இந் நில மிசை நிலவும் என்பது உறுதி. இவ் வுவமைகளை அவர் வாக்கிலேயே காணலாம். இதோ அவர் வாக்கு:

"நிலநீர் வளிவிசும்பு என்ற நான்கின்
அளப்பரியையே
நாள்கோள் திங்கள் ஞாயிறு கனைஅழல்
ஐந்து ஒருங்கு புணர்ந்த விளக்கத்து அனையை."

(14, 1-4)

கண்ணனாரின் இவ்வுவமை நயம் எண்ணி எண்ணி மகிழ வேண்டிய ஒன்றாகும். உவமை இலக்கியத்தைச் சிறக்கச் செய்வது என்பதைப் புலவர் பழங்காலத்திருந்தே நன்கு அறிந்திருந்தனர். இக் கண்ணனாரும் இப் பத்துப் பாடல்களில்தான் எத்தனை உவமைகளை எடுத்தாளுகின்றார். முதற் பாடலிலேயே இமயவரம்பனை முருகனோடு உவமைப் படுத்தி அவன் வீரத்தை மேம்படுத்தி விளக்குகின்றார். மேலும் இந்த இரு உவமைகளால் அவன் ஏற்றத்தைப் பல படப் பாராட்டுகின்றான். இன்னும் இவனை அக்குரன் என்பானோடும் ஏற்றப்படுத்திப் பாடுகின்றார்.

அக்குரன் கொடையில் சிறந்தவன் போலும்! அவனை முதலெழு வள்ளல்களுள் ஒருவன் என்பார் சிலர். ஈண்டு பாரதப்போரோடு சார்த்திக் கூறுதலில் 'கன்னன்' என்பாரும் உளர். எவ்வாறாயினும் அவன் கொடை வளத்தால் மடம் பட்டவன் என அறிகின்றோம். நம் மன்னனும் வெறும் வீரனாகமட்டு மின்றிக் கொடை வள்ளலாகவும் இருந்தமையின்,

"போர்தலை மிகுத்த ஈரைம் பதின்மரொடு
துப்புத்துறை போகிய துணிவுடை யாண்மை
அக்குரன் அனைய கைவண் மையையே" (14, 5-7)

என்று பாராட்டுகின்றார் புலவர். நாமும் இச்சேரலாதன் கொடைவளத்தைக் காண்போம்.

கொடைமடம் படும் புரவலர்களைப் புலவர்கள் நாடி வருதல் இயல்பு. நம் சேரலாதனையும் பல புலவர்களும், பாணரும், விறலியரும், பிறரும் நாடிவந்தனர். அவர்கள் வந்த நிலையினையும், அவர்தம் வாட்டத்தை நீக்கி மன்னன் விருந்தளித்த சிறப்பினையும் புலவர் பலவிடங்களில் பாராட்டுகின்றார். நாம் ஒன்றிரண்டு காண்போம்.

சேரலாதன் செல்வமும் புகழும் நெடுந்தூரம் காடும் மலையும் கடந்து சென்றிருக்குமன்றோ! ஒரு புலவன் அவன் புகழைக் கேட்டான். உடனே சுற்றத்தோடு புறப்பட்டு விட்டான். தலைநகர் வருவதற்குமுன் பல காடுமலைகளைக் கடக்கவேண்டும். காட்டுமல்லிகையைச் சுற்றி வட்டமிட்டு இன்னொலி எழுப்பும் வண்டுகளும், அவ்வண்டுகள் சுற்றி வட்டமிடும் களிறுகளும் நிறைந்த காடுடைய மலைகள் பலவற்றை அவர்கள் கடந்து வந்தனர் என்கின்றார் புலவர். சேரன் தலைவாயிலை அடைந்தபோது அங்குவந்த அச் சுற்றம் பசியால் வாடி வருந்துகின்றது. அவர்களைக்கண்டதும் வரவேற்றான் சேரன். அவர் துன்பம் தொலைய வழிகண்டான். முதலில் நல்ல உணவினை அளித்தான். அந்த உணவை எண்ணி எண்ணி, நாக்கில் நீர்சுரக்கும் வகையில் கண்ணனார் பாடுகின்றார்.

"எஃகு போழ்ந்து அறுத்த வால்நிணக் கொழுங்குறை
மைஊன் பெய்த வெண்ணெல் வெண்சோறு
நனை அமை கள்ளின் தேறலொடு மாந்தி."

(12, 16-18)

மகிழுமாறு அவர்களுக்கு உணவிட்டான். அரிவாளால் அறுத்த வெள்ளியநிணத்தோடு கூடிய ஆட்டிறைச்சியை நல்ல வெண்ணெயால் ஆக்கிய சோற்றிலே கலந்த உணவினையும் நல்ல கள்ளின் தெளிவையும் தந்தான் என்கின்றார். அத்துடன் இனிய உடைபலவும் தந்தான். அவர்தம் கந்தையைப் போக்கி, நல்ல பட்டாடையைக் கொடுத்தான்.

பட்டாடை என்ற சிறப்பினை எண்ணிய ஆசிரியர் 'நூலாக் கலிங்கம்' எனப் புகல்கின்றார். அப்புலவனோடு வந்த மகளிருக்கு வெறும் ஆடை மட்டுமா கொடுத்தான்! பெண்கள் உணவினாலும், ஆடையாலும் மட்டும் அமைதியுறமாட்டார்கள் என்பது அன்றும் உண்மையாயிருந்தது போலும். எனவே, அவர்களுக்கு நல்ல ஆபரணங்களையும் கொடுத்தானும் சேரலாதன். இதைப் புலவர்,

"வணர் இரும் கதுப்பின் வாங்கமை மென்தோள்
வசையின் மகளிர் வயங்கிழை அணியக்"

கொடுத்தான் என்று கூறுகின்றார். (12, 22-24)

அவ்வாறு வந்தவரும், பிற சுற்றத்தாரும், அமைச்சர் முதலியோரும் கூடியிருக்கும் அச் சேரலாதனது பெருங் களி மகிழ்வு நுகர்தற்கு இனியது என்று அப்பாடலை முடிக்கின்றார் புலவர்,

கொடுத்தலை அவனது பண்பாகக் காட்டி,

கொடுக்கும்

மூன்றனையும் பதினைந்தாவது பாடலில் விளக்குகின்றார் புலவர். இவ்வுலகத்து வாழ்கின்ற உயிர்களுக்குச் சளைக்காது கொடுத்தும், கோயில்களுக்கெல்லாம் கொள்கலன் உதவியும் திருமாலைப் போன்ற புகழ் பெற்றவன் தன் ஆவன். அச் சிறப்பினை,

பெரிது
சேரலா

‘மண்ணுடை ஞாலத்து மன்னுயிர்க்கு எஞ்சாது
ஈத்துக் கை தண்டாக் கைகடுந் துப்பில்
புரைவயிற் புரைவயிற் பெரிய நல்கி
ஏம மாகிய சீர்கெழு விழவின்
நெடியோன் அன்ன நல்லிசை
ஒடியா மைந்தநின் பண்புபல நயந்தே’

வந்தனன் எனக் கூறுகின்றார்.

பதினெட்டாவது பாட்டிலே அனைத்தினும் சிகரமாக, "மாரிபொய்ப்பினும் சேரலாதன் பொய்யலன் நசையே,"

என்று கூறி அவன் கொடைநலத்தை விளக்குகின்றார் ஆசிரியர். இப்பாடல் முழுதுமே அவன் கொடை வளத்தைத்தான் பாராட்டுகின்றது. 'உண்மின் கள்ளே அடுமின் சோறே' எனத் தொடங்கி, அடுப்புத்தொழிலுக்கு உரியரல்லாத வரிசைமகளிரையும் வந்தார்க்கு உணவு வழங்கச் சோறாக்க அடுப்பை வழங்கப் பணித்து மன்னுயிரழிய மாரி பொய்ப்பினும் இவன் பொய்யான் என்பதைக் கூறி முடிக்கும் இப்பாடலின் இன்பம் பாராட்டற்குரியது. வரிசைக்குரிய கூந்தல் விறலியரையும் அடுப்பு வழங்கப் பணித்த சிறப்பானே இப்பாடலுக்கே 'கூந்தல் விறலியர்' என்ற பெயர் அமைந்துள்ளது. இவ்வாறே பல விடங்களிலும் சேரலாதன் கொடைவளத்தைச் சிறப்பித்துப் பாடுகின்றார் கண்ணனார்.

15. இன்பச்சிறப்பு

தேடி வரும் விருந்து புறந்தரும் செயலே சிறந்த இல்லறத்தானால் ஆகும் செயலன்றோ! சோலாதன் அரசனாயினும், அமர் சென்று வெற்றி கண்டானாயினும், அவன் வந்த வரை வரவேற்றுச் சிறப்பு செய்தவனாயினும் அவன் புகழ் அவனது மனைக்கிழத்தியாலேயே மேலும் சிறப்படைய வேண்டும் என்பதை நன்கு உணர்ந்தவர் கண்ணனார். "புகழ்புரிந்த இல்இல்லோர்க்கு இல்லை, இகழ்வார்முன் ஏறு போற் பீடுநடை" என்பது பொய்யாமொழி யன்றோ! எனவே, (அவனது காதற்சிறப்பையும், அரசியின் ஏற்றத்தையும், அரசியை மறந்து ஒருகால் அமர்மேல் இருந்தாலும், உடன் போர் நிறுத்தி அரசியைக் காணச்செல்ல வேண்டிய வகையினையும் விளக்குகின்றார்)புலவர். அரசினைப் பல சிறப்புக்களால் பாராட்டுகின்ற புலவர் 14-ஆம் பாடலிலே அவனது அரசியின் சிறப்பையும் கூறுகின்றார்.)

"வானுறை மகளிர் நலன்இகல் கொள்ளும்
வயங்குஇழை கரந்த வண்டுபடு கதுப்பின்
ஒடுங்குஈ ரோதிக் கொடுங்குழை கணவ,"

(14,13-15)

என விளிக்கின்றார் புலவர். எனவே அவனுடைய அரசியார், வானுலகமகளிர் அவளுடைய அழகினுக்குத் தாம்தாம் இரண்டாம் பத்து

ஒப்பாவர் என்று போட்டியிடும் வகையில், அழகுமிக்கிருந்தார் என அறிகின்றோம். ‘யாரே அழகுக்கு அழகுசெய்வார் ?’ எனவே, அவளது அழகிய சுருண்ட தலைமயிருக்கு மேலே அணியும் தேவைப்படவில்லை போலும்! அவளது இயற்கை மணம்பெற்ற கூந்தலில் வண்டுகள் மொய்த்தன போலும். அத்தகைய அழகுநலம் வாய்க்கப்பெற்றவள் கணவனே தன் பாட்டுடைத் தலைவன் என்று பாராட்டுவதில்தான் புலவர் எவ்வளவு பெருமை கொள்கின்றார்!

இவ்வாறான அழகு பொருந்திய அரசியார் அடங்கிய கற்பு நலமும் பெற்றவர். தலைவன் சொல் தவறாதவள். ஆற்றியிரு என்ற அளவில் ஆற்றியிருந்தும், மேலும் காலம் நீட்டிக்கின் கணவனை நினைந்து வருந்தவும் பெறுவள். அவனது அகன்ற மார்பில் துயிலும் இன்துயிலை எண்ணி எண்ணிப் படுக்கையின்கண் வருத்தமுறுவாள். அவள் சொற்கள் இனியன. கணவனை விரும்பித்தேடும் கண்கள் அவளுடையன. இந்தச் சிறப்புக்களையெல்லாம் பதினாறும் பாடலில் தொகுத்துக் கூறி, அவளை உடனே சென்று அரசன் அடைய வேண்டும் எனவும் வற்புறுத்துகின்றார்

புலவர்.

"ஆறிய கற்பின் அடங்கிய சாயல்
ஊடினும் இனிய கூறும் இன்னகை
அமிர்துபொதி துவர்வாய் அமர்த்த நோக்கின்
சுடர்நுதல் அசைநடை உள்ளலும் உரியள்
பாயல் உய்யுமோ! ....
....
நின் சாயல் மார்பு நனியலைத் தன்றே." (16, 10-20)

என்று படம் எழுதிக் காட்டுவது போன்று அத் தேவியை உலகுக்குக் காட்டும் புலவர் திறன் போற்றற் குரியதன்றோ!

16. வேண்டல்

இத்தகையை நல் அரசியை விட்டுச் சேரலாதன் அடிக்கடி போர்மேல் செல்வது புலவருக்குப் பிடிக்கவில்லை. 44

பதிற்றுப்பத்துச் சொற்பொழிவுகள்

அவன் அரசியிடம் விரைந்து செல்ல வேண்டுகின்றார் புலவர்.

ஆனால், நேராகச் செல் என்று சொன்னால் ஆணையாகிவிடும். அன்றிச் சேரன் சென்றாலும் போரில் கடமை உணர்ச்சி தவறிக் காதலியை நாடிச்சென்றவன் என்ற குறைபாடும் வந்து சேரும். இவற்றை யெல்லாம் எண்ணிய புலவர் தன் வேண்டுகோளைப்

பரிசில்துறையாக விடுகின்றார். பாசறையில் சென்று அரசனது வெற்றிச் சிறப்பை யெல்லாம்
விளக்கிப் பாடுகின்றார் புலவர். புலவரை நோக்கி 'வேண்டுவது யாது?' என்று கேட்டிருப்பான் சேரன். பரிசில் வேண்டலாகப் புலவர் அரசன் போர் நிறுத்திப் புலம்பும் தலைவியைச் சேர வேண்டும் என்பதையே கேட்கின்றார். புலவர் வேண்டிய பரிசு அதுதான். வேண்டியதைத் தருவதாக வாக்களித்த, மாரிபொய்ப்பினும் தான் பொய்யாச் சேரலாதன், வாக்களித்தபடி நடவாதிருப்பானோ! உடனே அரசியைச் சார்ந்து அவளுக்கு
என்று சொல்லவும் வேண்டுமோ!

மகிழ்வூட்டியிருப்பான் லாம் புலவர்
இக் காட்சிகளை யெல் சிறப்பையும்,

நன்கு விளக்குகின்றார். அரசனது காதற்
அரசியின் ஏற்றத்தையும் பற்றி இத்துணை

போதும் எனக் கருதுகின்றேன். இனி
பாட்டில் சிலவற்றைக்கண்டு முடிப்போம.

அவன் பண்

17. பண்பாடு

சேரலாதன் வென்றியையும், காதலையும் கூறியபுலவர் அவன் செல்வத்தைப் பலவிடங்களில் புகழ்கின்றார்.

> "வலன் உயர் மருப்பில் பழிதீர் யானைப்
> பொலன் அணி எருத்தம் மேல் கொண்டு பொலிந்த நின்
> பலர் புகழ் செல்வம் இனிது கண்டிகும்."
>
> (11, 18-20)

என்று பாடுகின்றார் 'நின்செல்வம் கேட்டொறும் காண்டல் விருப்பு தோன்றுகிறது என்கின்றார். அவனது வெண்கொற்றக்குடை அனைவரையும் வருக வென்று ஏற்றுத் தண்ணளி பொருந்திய நிழல் தருவதாகும் என்று அவன் அனைவரையும் அன்போடு அணைக்கும் பண்பாட்டினைக்

குடையின் மேல் ஏற்றிப் பதினேழாம் பாட்டில் பாராட்டுகின்றார். இனி அவ்வரசனது நாடு எவ்வாறு நலம் பெற்றுச் சிறந்தது என்பதைக் காட்டத்தவறவில்லை புலவர்.

18. நாட்டுநலன்

நாடு என்பது பசியும் பிணியும் பகையும் நீங்கி, வசியும் வளனும் சுரக்கத் தக்கதாக இருக்கவேண்டு மென்பது தமிழர் முடிவு. போர்மேல் சென்ற சேரலாதன் - காதற் சிறப்பில் சிறந்த சேரலாதன்-நாட்டு மக்களின் நல்வாழ்வை மறக்கவில்லை என்பதை நாம் அறிதல் ஏற்புடைத்தன்றோ!

"மழை வேண்டு புலத்து மாரி நிற்ப
நோயொடு பசி இகந்து ஒரீஇப்
பூத்தன்று பெருமநீ காத்த நாடே."

(13, 26-38) என்று அவன் நாட்டைப் பாடுவதில்தான் புலவர் காட்டும் ஆர்வம் எத்தகையது என்பது விளங்குகின்றது. இவ்வடிகளுக்குமுன் அவன் நாட்டின் பல்வேறு சிறப்புக்களையும் தொகுத்துக் கூறுகின்றார். அவன் நாட்டிலே என்றும் விழாக்கள் சிறந்திருந்தன என்றும் கொடியாடும் நெடுமாடங்கள் நிறைந்த நகர் அவனுடையதென்றும் பதினோந்தாம் பாடலில் பாராட்டுகின்றார் புலவர். அவன் பரிசிலர் செல்வமாவான் என்பதைப் ('பரிசிலர் வெறுக்கை') என்று அவனை விளிப்பதினின்றும் புலனாகும். 'நீ புறந்தருதலின் நோய் இகந்து ஒரீஇய, யாணர் நன்னாடு' என்று அவன் காத்தலாலேயே நாட்டில் நோய் முதலிய கொடுமைகள் இல்லை என்கிறார். இத்தகைய நாட்டினைத்தானே வள்ளுவர் தொடங்கி இன்றைய அரசியல் தலைவர்கள்வரை சிறந்த நாடு எனப் பாராட்டுகின்றனர்.

19. குடியோம்பும் சீர்மை—தாய் வாழ்த்து

இத்தனைச் சிறப்புக்களையும் உடைய

சேரன் தன் முன்னோர் வாழ்ந்த வழியைப் பின்பற்றினான் என்று

அவன் குடியே நலம்புரக்கும் நல்ல சேரன்குடி காட்டுகின்றார் புலவர்.
எனக்

“ கடலக வரைப்பின்இப் பொழின்முழு தாண்ட நின்
முன்றிணை முதல்வர் போல நின்றுநீ
கெடாஅ நல்லிசை நிலைஇத்
தவாஅ லியரோஇவ் வுலகமோ டுடனே.” (14, 19 - 23)

என்று
இந்த

அவர்தம் முன்னோர்போல அறம் ஆற்றி நாடுபுரந்து மண் உள்ளளவும் சேரலாதனும் வாழவேண்டும் என்று வாழ்த்துகின்றார் புலவர். ஆம்! அவன் இன்னும் இறக்கவில்லை. நம்மொடு வாழ்கின்றான். நாம் இறப்பினும் அவன் வாழ்வான் என்பது உறுதி.

இவ்வாறு வாழ்த்திய புலவருக்கு, அவனினும் அவன் தாயே போற்றற்கு உரியவள் என்ற உணர்வு பிறக்கின்றது. 'இவனைப் பெறுவதற்கு இவன் தாய் என்ன பேறு செய்தாளோ' என்ற எண்ணம் எழுகின்றது. அத்துடன் தாய் வழிப்பெற்ற அரசன்றோ இது? 'ஆகவே இவனினும் இவள் தாயே சிறப்புடையவள்; இவனை ஈன்ற அவள் வயிறு சிறக்க' என இறுதியாக வாழ்த்துகின்றார் புலவர். தன்னை வேறொரு புலவன் 'நுங்கோ யார்?' என்று கேட்டதாகவும், அதற்குப் பதில் கூறுமுகத்தானும் இறுதிப் பாடலைத் தொடங்குகின்றார் அவர். 'நுங்கோ யார் என வினவின், எங்கோ' இன்னின்ன தன்மை வாய்ந்தவன் எனக் கூறுகின்றார். 'கடம்பு முதல் தடிந்த நெடுஞ்சேரலாதன், அவன் கண்ணி வாழ்வதாக' என வாழ்த்துகின்றார். "மாற்றார் நாட்டிலும் அஞ்சுவளவும் தோல்வியறியாத, கொண்டது முடிக்கும் திண்மையாளன் அவன். கனவினும் பொய்யாப் பெரியன் அவன். பாடியும் ஆடியும் வருவார்க்குக் களிறும், மாவும், பொன்னும், பொருளும் இல்லை என்னாது வாரி வழங்கும் வள்ளல் அவன். பகைவரைக் கொன்ற செருக்கானே அகன்ற மார்பை உடையவன் அவன். யாவர்க்காயினும் கொடைக்கண் அமர்ந்த கோடா நெஞ்சினன் அவன். பல ஆண்டுகள் தொடர்ந்து

மழை பெய்யாது நாட்டு நிலை கெடினும் தன் மக்கள் பசியால் வாடாமல் பாதுகாக்கும் பண்பாளன் அவன்," என்று தன் கோவாகிய இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் ஏற்றத்தைப்பாடி 'அவனை ஈன்ற தாயே வயிறு விளங்குவாளாக' என 20-ஆம் பாடலிலே வாழ்த்தி முடிக்கின்றார் புலவர் குமட்டூர்க் கண்ணனார் :

"நுங்கோ யாரென வினவி னெங்கோ
இருமுந்நீர்த் துருத்தியுள்
முரணியோர்த் தலைச்சென்று
கடம்புமுத றடிந்த கடுஞ்சின முன்பின்
நெடுஞ்சேர லாதன் வாழ்கவவன் கண்ணி
வாய்ப்பறி யலனே வெயிற்றுக ளனைத்தும்
மாற்றோர் தேஎத்து மாறிய வினையே
கண்ணி னுவந்து நெஞ்சவிழ் பறியா
நண்ணார் தேஎத்தும் பொய்ப்பறி யலனே

கனவினும்,
ஒன்னார் தேய வோங்கி நடந்து
படியோர்த் தேய்த்து வடிமணி யிரட்டும்
கடாஅ யானைக் கணநிரை யலற
வியலிரும் பரப்பின் மாநிலங் கடந்து
புலவ ரேத்த வோங்குபுகழ் நிறீஇ
விரியுளை மாவுங் களிறுந் தேரும்
வயிரியர் கண்ணுளர்க் கோம்பாது வீசிக்
கடிமிளைக் குண்டு கிடங்கின்

நெடுமதி னிலைஞாயில்
அம்புடை யாரெயி லுள்ளழித் துண்ட
அடாஅ வடுபுகை யட்டுமலர் மார்பன்
எமர்க்கும் பிறர்க்கும் யாவ ராயினும்
பரிசின் மாக்கள் வல்லா ராயினும்
கொடைக்கட னமர்ந்த கோடா நெஞ்சினன்
மன்னுயி ரழிய யாண்டுபல மாறித்

தண்ணிய லெழிலி தலையா தாயினும்
வயிறுபசி கூர வீயலன்
வயிறுமா சிலீஇயரவ னீன்ற தாயே.

நாமும் அவ்வகையினாலே நம் எழுத்தை முடிப்போம்.

என்றென்றும் நிலைத்த பெயர் விளங்கும் வகையில் போராற்றி வெற்றி கண்டு, புகழ் ஏற்று அறம் புரிந்து, காதல் மனையாளொடு கலந்து வாழ்ந்து, வந்தோர்க்கெல்லாம் வாரி வழங்கி, நாட்டை நாடாகவே நலம் பல பெற்றுச் சிறக்க ஆண்டு, பண்பாடுற்ற பழம்பெரு மன்னனாய் வாழ்ந்த இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் ஈன்ற தாய் வயிறு விளங்குவாளாக

அடி ஒன்றித் தமிழகம்

! அவள் ஈன்ற மைந்தன் வாழ்ந்த
தன் பணியாற்றிச் சிறக்குமாக!

மூன்றும் பத்து

[திரு. ந. சஞ்சீவி எம்.ஏ.,]

1. முன்னுரை

செந்தமிழ்க் காவலராய் விளங்கும் தலைவரவர்களே! தமிழ்ப் பெருமக்களே! வணக்கம்.

சங்கம் மருவிய எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாக விளங்கும் பெருமை சான்றது பதிற்றுப்பத்து. இலக்கியச் சிறப்பும் வரலாற்று மாண்பும் ஒருங்கே பெற்று விளங்கும் இச் சீரிய தொகைநூல் பத்துப்பத்து அகவற்பாக்கள் உள்ள பத்துப் பகுதிகளைத் தன் அகத்தேகொண்டு திகழ்வதால் பதிற்றுப்பத்து என்னும் பெயரைப் பெறலாயிற்று என்பதை எவரும் அறிவர். ஆசிரியப்பாவினால் இயன்ற புறப்பொருள் பற்றிய நூறு செய்யுட்களைத் தன்பால் கொண்டிருப்பினும் ஒவ்வொரு பத்தும் தனித்தனியே ஒவ்வொரு புலவரால் பாடப்பெற்று ஒவ்வொரு பேரரசரைப் பாராட்டுவதனால் இந் நூல் பத்துவேறு பகுதிகளாகியது.

எட்டுத்தொகை நூல்களுள் பல்வகையாலும் தனிச் சிறப்பு வாய்ந்த ஒரு பெருநூல் பதிற்றுப்பத்து என்றால், மிகையாகாது. படைப்புக் காலந்தொட்டு நம் இன்பத் தமிழகத்தில்—தாயகத்தில்—மேம்பட்டுவரும் குடிகள் சேர சோழ பாண்டியர் எனப்படும் மூவேந்தர் குடிகளாகும். 'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு' என்றார் ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியனார். தமிழகத்தைக் கோல் கோடாது ஆட்சிபுரிந்த மூவேந்தருள் முதன்மை படைத்தவர் சேரமன்னரே ஆவர். அவர்களின் பெரும்புகழை முற்றிலும் விரித்துப்பேசும் பெற்றியுடைய சங்கநூல்

பதிற்றுப்பத்தே ஆகும். புறநானூறு போன்ற பிற சங்க நூல்களால் ஒரு சில சேர மன்னர்களைப்பற்றி நாம் அறியக் கூடினும் அச் சேரமன்னர்களின் வரலாற்றையும் சிறப்பை யும் முழுவதும்
விளங்கும் சீர்மை

விரித்துரைக்கும் விழுமிய நூலாக இப் பதிற்றுப்பத்திற்கே உரியதாகும்.

இந்நூலில் அமைந்துள்ள பத்துப் பகுதிகளையும் பாடிய புலவர்கள் பதின்மர். ஒவ்வொரு பத்தும் ஒவ்வொரு சேர வேந்தரைப்பற்றிப் பேசுகிறது. ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் துறை, வண்ணம், தூக்கு, பெயர் என்பவற்றை விளக்கும் குறிப்புக்கள் அமைந்துள்ளன. துறையின் பெயர் பிற தொகை நூல்களில் இருப்பினும் வண்ணம், தூக்கு, பெயர் என்பன அவற்றில் காணப்படவில்லை. பதிற்றுப்பத்தில் உள்ள ஒவ்வொரு பாட்டிலும் பொருளால் சிறப்புடைய தொடர் ஒன்றே அவ்வப்பாட்டின் பெயராக அமைந்திருக்கும அருமை எண்ணி எண்ணி இன்புறற்குரியது. ஒவ்வொரு பத்தின் முடிவிலும் அப்பத்தின் பாட்டுடைத் தலைவன் பெயரும், செயல்களும், அவனைப் பாடினோர் பெயரும், பத்துச் செய்யுட்களின் பெயர்களும், பாடிய புலவர் பெற்ற பரிசிலும், சேர அரசன் ஆண்ட கால அளவும் ஒவ்வொரு பதிகத்தால் குறிப்பிடப்பட்டுள்ளன.

பண்டு சேரநாட்டை ஆண்ட சேரமன்னர் இரு கிளையினராகக் காணப்படுகின்றனர். ஒருவர் உதியன் சேரலாதன் வழியினர். மற்றொருவர் இரும்பொறை வழியினர். இவருள் முன்னவர் வஞ்சியைத் தலைநகராகக்கொண்டு உள்நாட்டுப் பகுதியினையும், பின்னவர் தொண்டியைத் தலைநகராகக்கொண்டு கடற்கரைப்
தனர். இவ்விரு வழியினரும்

பகுதியையும் ஆட்சி புரிந்
தாயத்தினராவர். அவர்க

ளுள் எண்மரைப் பற்றிய வரலாறு இப்பொழுது காணக்கிடைத்துள்ள பதிற்றுப்பத்துப் பாடல்களால்

நாம்

உண
ரப்படுகிற து.
அவருள் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்,
பல்யானைச் செல்கெழுகுட்டுவன்,
களங்காய்க்கண்ணி நார் முடிச்சேரல், கடல்
பிறக்கோட்டிய செங்குட்டுவன், ஆடு கோட்பாட்டுச்

பத்து

கோட்பாட்டுச் சேரலாதன் ஆகிய ஐவரும் உதியன் மரபினர். செல்வக் கடுங்கோவழியாதன் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை,
ஆகிய மூவரும் இரும்பொறை

இளஞ்சேரல் இரும்பொறை
மரபினர் ஆவர்.

2. பல்யானைச் செல்கெழு குட்டுவன்

இவருள் ஒருவராகிய பல்யானைச் செல்கெழுகுட்டுவனே நாம் ஆராய இருக்கும் மூன்றும் பத்திற்குரிய பாட்டுடைத் தலைவன். புகழ் மலிந்த இவன் வரலாற்றுப் பெருமையை மூன்றும்பத்தைப் பாடி அருளிய பாலைக் கௌதமனார் பாடல்களாலும் அவற்றைத் தொடர்ந்து அமைந்துள்ள பதிகத்தாலும் ஒருவாறு நாம் உணர முடிகின்றது.

எண்ணிலடங்காச் சேரவேந்தர்களுள்

வரலாற்றுப்
புகழ் வாய்ந்த முதற்பெரும் வேந்தனாக நமக்குக் காட்சி அளிப்பவன் உதியன் சேரலாதனே ஆவன். பாரதப் போரில் இருதிறப் பெரும்படைகட்கும் அப்போர் முடியும் வரை பெருஞ்சோறு அளித்து அழியாப்புகழ் கொண்ட வேந்தன் இவனே என்று அறிஞர் பாராட்டுவர். அத்தகைய பெரும்புகழ் வாய்ந்த உதியன் சேரலாதனுக்கு வெளியன் வேண்மாள் நல்லினி வாயிலாகப் பிறந்த மக்கள் இருவராவர்.

லாதன்
வன்.

அவருள் மூத்தோன் இமயவரம்பன் நெடுஞ்சேர
லாதன். இளையவன் பல்யானைச் செல்கெழுகுட்டு
வன்.

இச் செய்திகள்,

“மன்னிய பெரும்புகழ் மறுவில் வாய்மொழி
இன்னிசை முரசின் உதியஞ் சேரற்கு
வெளியன் வேண்மாள் நல்லினி ஈன்ற மகன்
... ...
இமைய வரம்பன் நெடுஞ்சேரலாதன்.”

“இமைய வரம்பன் தம்பி அமைவர
... ...
பல்யானைச் செல்கெழு குட்டுவன்.”

எனவரும் பாடற்பகுதிகளால் (பதிற்றுப்பத்து, பதிகம் : 2, 3) இனிது விளங்கும்.

பல்யானைச் செல்கெழுகுட்டுவன் உதியன் மரபின் புகழ் விளங்கத் தோன்றிய முன்னோர்களுள் ஒருவன். நிகரற்ற வீரத்திருவினன்; கொடைவளம் மிக்கவன்; கல்வி கேள்விகளால் சிறந்து மெய்யுணர்வு நிரம்பப் பெற்றவன். இவ் உண்மைகள் யாவும் இவன் புகழ்பாடும் பாலைக் கௌதமனார் பாடல்களாலும் மூன்றும் பத்திற்குரிய பதிகச் செய்யுளாலும், அதைத்தொடர்ந்து அமைந்துள்ள உரைநடைப் பகுதியாலும், பிற சான்றோர் வாக்காலும் தெள்ளிதிற் புலனாகும். போர்க்களத்தில் மாற்றார்க்கு அஞ்சாது முன்னின்று போர் உடற்றிப் பகைவர்தம் கொள்ளற்கரிய அரண்களை அழித்து வெற்றிதரும் விறல் மிக்க யானைகள் பலகொண்ட பெரும்படை உடைமையால் இச் சேரன் 'பல்யானைச் செல்கெழு குட்டுவன்' எனப் போற்றப்பட்டான். இவ்வுண்மையை 'அமர்கோள் நேரி கழ்ந்து ஆரெயில் கடக்கும் பெரும்பல்யானைக் குட்டுவன்' என்ற பதிற்றுப்பத்து அடிகள் வலியுறுத்துகின்றன. பல்யானைச் செல்கெழுகுட்டுவன் என்பதற்குப் 'பல யானைகளாகிய மேகத்தையுடைய குட்டுவன்' என்று பொருள் விரிப்பர் பேராசிரியர் மு. இராகவையங்கார்.[1]

3. பாலைக்கௌதமனார்

பாலைக்கௌதமனார் பல்யானைச் செல்கெழுகுட்டுவனைப் போற்றிப் பாடியுள்ள மூன்றாம்பத்துச் செய்யுட்கள் யாவும் தித்திக்கும் கரும்பனைய சொற்சுவையும் பொருட்சுவையும் மிகுதியாக உடையனவாகும். பாலைக்கௌதமனார் குட்டுவனின் அரசவையில் நெடுங்காலம் இனிது உறைந்து அவன் அன்பையும் ஆற்றலையும் நன்குணர்ந்த பெரியார் என்பது அவர் பாடல்களை உணர்ந்து கற்பார் உள்ளத்திற்குப் புலனாகாமல் போகாது. பழம்பெரும் சேரவேந்தனாகிய பல்யானைச் செல்கெழு குட்டுவனின் பெருவரலாற்றை ஒருவாறேனும் நாம் இன்று உணர்ந்து

1. சேரவேந்தர் செய்யுட்கோவை: முதல்தொகுதி, பக்கம், 10.

இன்பக்களி எய்தத் துணைபுரியும் பாடல்கள் பாலைக்கௌதமனார் பாடல்களே என்று எண்ணும்போது நம் நெஞ்சம் நன்றி உணர்ச்சியால் விம்மிதம் அடைகிறது.

பாலைக்கௌதமனார் சங்க காலச்

தலைசிறந்த பெருமகனார் ஆவர். பழுத்த தமிழ்ப் புலமை பாலிக்கப்பெற்ற அந்நல்லிசைப் புலவர்பெருந்தகை ஒரு சிறிதும் பொருள் நசையிலா உத்தமப் பண்பினராய் வாழ்ந்த தகைமையினை எண்ணுந்தோறும் மெய்சிலிர்க்கின்றது. புலவரைப் போற்றுவதையே வாழ்வின் சிறந்த பயனாகக்கொண்டு விளங்கிய குட்டுவன்பால் கௌதமனார் கேட்ட பரிசில் எது என்பதை மூன்றாம் பத்தின் பதிகத்தைத் தொடர்ந்துள்ள உரைநடைப் பகுதி நமக்கு அறிவிக்கின்றது.

"பாடிப்பெற்ற பரிசில், நீர் வேண்டியது கொண்மின்னென, யானும் என் பார்ப்பனியும் சுவர்க்கம் புகல் வேண்டும் என, பார்ப்பாரிற் பெரியோரைக் கேட்டு ஒன்பது பெருவேள்வி வேட்பிக்க, பத்தாம் பெருவேள்வியிற் பார்ப்பானையும் பார்ப்பனியையும் காணாராயினர்."

இப்பகுதியைப் படிப்பார் நெஞ்சம் கல்லாயினும் அது கனல்பட்ட வெண்ணெயென உருகாதோ? புலன் அழுக்கற்ற அந்தணாளராகிய பாலைக் கௌதமனாரின் வேண்டுகோட்குச் செவிமடுத்தான் சேரவேந்தன். வேண்டுவோர்க்கு வேண்டுமவை வழங்கும் விறலுடையோனாகிய குட்டுவன் புலவர்பெருமானின் வேண்டுகோளை நிறைவேற்றி வைத்தான். இச்செய்தியைப் பழமொழி பாடிய மூன்றுறை அரையனார் குறிப்பாகவும் அதன் உரைகாரர் வெளிப்படையாகவும் கூறியுள்ளார்.

பழைய குடியின் புகழ் விளங்கப் பிறந்த
சேரர் அடிகளும் இவ்வரலாற்றை,

பெருமகனாகிய இளங்கோ

"நான்மறை யாளன் செய்யுள் கொண்டு
மேனிலை யுலகம் விடுத்தோன்." (சிலம்பு, 28:

137-8)

என்று தம் காவியத்துள் பொன்னே போல்
யுள்ளார். மற்றும் உச்சிமேற் புலவர் கொள்

போற்றி
நச்சினார்க்

கினியர், 'இதில் இமயவரம்பன் தம்பி பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் பாலைக் கௌதமனார் துறக்கம் வேண்டினாரென்று குறிப்பு வகையாற் கொள்ளவைத்தலின் இது வஞ்சிப் பொருளில் வந்த பாடாணாயிற்று' (தொல். புறத். 25) என்று வரையும் உரைப்பகுதியும் ஈண்டு கருதற்பாலது. இவ்வாறு உரையாலும் பாட்டாலும் போற்றப்படும் இந்நிகழ்ச்சி இன்னும் மலைநாட்டில் கர்ணபரம்பரைக் கதையாய் சரித்திரமாய் வழங்கி வருகிறதென்பர்.[1]

4. குட்டுவனின் முன்னோர்

இனி, பாலைக்கௌதமனாரின் உள்ளம் கவர்ந்த உத்தமனாகிய பல்யானைச் செல்கெழு குட்டுவனைப்பற்றிச் சிந்திப்போம். குட்டுவனின் முன்னோர் மாசில்லாப் புகழ் வாய்ந்த பெருஞ் சிறப்புடையவராவர். அவர் பெருமையைப் பாலைக் கௌதமனார் போற்றியுள்ள திறம் கற்பார்க்குக் கழிபேருவகை அளிப்பதாகும். 'குட்டுவனின் முன்னோர் தம் குடிமக்கள் தீமை அகற்றி நன்மை புரிந்தும், பிறரை வருத்தாமலும், மற்றவர் பொருளை விரும்பாமலும், குற்றமற்ற அறிவினராய்ச் செவ்விய அறநெறியிலே ஒழுகியும், தம் காதல் மனைவியரைப் பிரியாமல் இல்லறம் நடத்தியும், பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பியும், மூப்பும் பிணியும் இன்றி ஆண்டு பல வாழ்ந்தும், இன்பம் துய்க்கும்படி நெடுங்காலம் ஆட்சிபுரிந்த வலியோர்', என்று வாயாரப் போற்றியுள்ளார் வாய்மை தவறாத சொல்லினராகிய புலவர் பெருமான்.

"தீதுசே ணிகந்து நன்றுமிகப் புரிந்து
கடலுங் கானமும் பலபய முதவப்
பிறர்பிறர் நலியாது வேற்றுப்பொருள் வெஃகாது
மையி லறிவினர் செவ்வி தினடந்துதம்
அமர்துணைப் பிரியாது பாத்துண்டு மாக்கள்
மூத்த யாக்கையொடு பிணியின்று கழிய
ஊழி யுய்த்த வுரவோர்." (பதிற்றுப்பத்து. 22 : 5-11)

---

1. பதிற்றுப்பத்து : டாக்டர். உ. வே. சா. பதிப்பு, (1941)-பக்கம், 18.

5. கோடைவளம்

புகழ் சான்ற பெருமக்கள் கால்வழியிலே தோன்றிய குட்டுவன் அலந்தார்க்கும் இரந்தார்க்கும் 'அருள்மழை பொழியும் தண்முகிலாய் விளங்கினான்; புலவரையும் பாணரையும் போற்றிப் புகழ்கொண்டான். அவன் கொடை வளம் பொய்யா வானமும் கண்டு நாணும் தன்மையதாய்த் திகழ்ந்தது. குட்டுவன்பால் சென்றார் பெறும் விருந்தின் சிறப்பினைப் பாலைக்கௌதமனார் சுவை பொதுளக் கூறும்பெற்றி படிப்பார்க்குப் பேரின்பம் தருவதாகும்.

'குட்டுவனே! சூல்கொண்ட கருமுகில்கூட்டம் கார் காலத்து மழைப் பெயலைப் பெய்யாது மறந்தவழியும் நீ அளிக்கும் பெருவிருந்து வற்றாத வளமுடையது. அரிசி யைக் குற்றிக்குற்றிப் பூண்தேய்ந்த உலக்கையையும், அடைச்சேம்பு போன்ற சோறு சமைக்கும் மடாவினையும், கூரிய வாள்கொண்டு கொத்துதலால் ஊனும் குருதியும் படிந்து சிவந்து தோன்றும் மரக்கட்டையையும் நின் அட்டிற்சாலையில் காண்பார் மதிமருளும். உண்பாரும் தின் பாருமாய் வருவோர் அளவிறந்து இருந்தபோதும் நின் விருந்துவளம்—சோற்றுவளம்—குன்றாத புதுமையினை உடையதாய்ப் பொலிந்தது. இத்தகைய விருந்து வளத் திற்குக் காரணமான நின் செல்வவளம் வாழ்வதாக'— இவ்வாறு குட்டுவனின் கொடைவளத்தை மனமாரப் போற்றி வாழ்த்துகின்றார் சங்கப் புலவர் பாலைக்கௌத மனார்..

"உண்மருந் தின்மரும் வரைகோ ளறியாது
குரைத்தொடி மழுகிய வுலக்கை வயின்றோ
றடைச்சேம் பெழுந்த வாடுறு மடாவின்
எஃகுறச் சிவந்த வூனத் தியாவரும்
கண்டுமதி மருளும் வாடாச் சொன்றி."

* * * *

"பேரா யாணர்த்தால் வாழ்கநின்
வளனே."
(பதிற்றுப்பத்து. 24: 18-22; 30) 56

பதிற்றுப்பத்துச் சொற்பொழிவுகள்

அவரே இன்னும் ஓர் பாடலில் குட்டுவன் தன் நாடெல்லாம் பகைமையற்று வற்கடமுற்ற காலத்திலும் ஓம்பாஈகையுடையனாய் விளங்கும் திறத்தினை வாயாரப் புகழ்ந்துள்ளார். 'இலை உதிர்ந்துபோன உன்னமரத்தின் சிறுசிறு கிளைகளிலே சிள்வீடென்னும் வண்டுகள் ஒலிக்கும் தன்மையான பெருவறங்கூர்ந்த காலம். வயல்களெல்லாம் உலர்ந்து போய்விட்டன. அந்நிலையில் இசைக்கருவிகளைச் சுருக்கிக்கட்டிய பையோடு ஊர் மன்றங்களை அடைந்து ஆங்கே மறுகுகளின் சிறைக்கண்ணே நின்று பாடுவர் கூத்தரும் பாணருமாகிய பரிசிலர்கள். அவர்கள் தம் கடும்பசி நீங்க உண்ண வகை செய்வான் குட்டுவன். பொன்னுபரணங்கள் பலவற்றை அவர்கள் மகிழ்ந்து பூணப் பரிசிலாக அளிப்பான். அவற்றை அழகுற அணிந்த கலைஞர் கூட்டம் 'நெஞ்சு மலி உவகையோடு' ஆடிப்பாடும். அது போழ்து குட்டுவன் சிறிதே நறவுண்டு சிறு மகிழ்ச்சியோடு இருப்பினும் பெரும்விலையினையுடைய அணிகலன்கள் பலவற்றை அகமகிழ்வோடு அள்ளி வழங்குவான்.

"அலந்தலை யுன்னத் தங்கவடு பொருந்திச்
சிதடி கரையப் பெருவறங் கூர்ந்து
நிலம்பை தற்ற புலங்கெடு காலையும்
வாங்குபு தகைத்த கலப்பைய ராங்கண்
மன்றம் போந்து மறுகுசிறை பாடும்
வயிரிய மாக்கள் கடும்பசி நீங்கப்

பொன்செய் புனையிழை யொலிப்பப்
பெரிதுவந்து
நெஞ்சுமலி யுவகைய ருண்டுமலிந் தாடச்
சிறுமகி ழானும் பெருங்கலம் வீசும்

போரடு தானைப் பொலந்தார்க் குட்டுவ !"
(பதிற்றுப்பத்து. 23 : 1-10)

வன
இவ்வாறு கலைஞர் கூட்டம் களிப்புற்று ஆட வேண்டு புரிந்த வள்ளல் குட்டுவன் வெறும் ஈரநெஞ்சினன் அல்லன். உணர்வு வழிப்பட்டபோது ஒன்றுமறியாக் குழந்தைபோல் மிக எளியனும் அவன் இருப்பினும் அறிவு வழிப்பட்டபோது அவன் கூர்த்த மதியையும் இணையில்லா,

மூன்றும் பத்து

ஆற்றலையும் எவராலும் அளந்து காணமுடியாது. இவ் உண்மையினைக் கௌதமனாரே தம் பாடல் ஒன்றில் மிக அழகாகக் குறிப்பிடுகின்றார். 'நிலமும், நீரும், நெருப்பும், காற்றும், விசும்பும் ஆகிய ஐந்தனையும் அளந்து முடிவு காணினும் குட்டுவனது பெருமை அளந்து காணற்கு மிகவும் அரியது' என்பது கௌதமனார் அனுபவத்தால் அறிந்த உண்மை.

"நீர்நிலந் தீவளி விசும்போ டைந்தும்
அளந்துகடை யறியினு மளப்பருங் குரையை."
(பதிற்றுப்பத்து. 24 : 15-16)

இவ்வாறு அளந்து காணற்கு அரிய பெருமையுடையவனாய் விளங்கிய குட்டுவன்—காட்சிக்கு எளியனாய் விளங்கிய கருணைமாமுகில்—தன் செங்கோலால் சேரவள நாட்டை வாழ்வித்த திறம் செஞ்சொற்புலவராகிய கௌதமனார் பாடல்களில் அழகொழுகும் சொல்லோவியங்களாய் அமைந்துள்ளன :

6. செங்கோல் சிறப்பு

குட்டுவனுடைய தலைநகரில் இருபெரு வேள்விகள் நடைபெறுகின்றன. ஒன்று அந்தணர் புரியும் வேத வேள்வி. இன்னொன்று இல்லறத்தார் புரியும் விருந்து வேள்வி. அந்தணர் வேள்வியிலும் ஆவுதிப்புகை எழும்புகின்றது. விருந்தினரைப் போற்றும் ஆட்டுவாணிகர் வீடுகளிலும் நெய்யாவுதிப்புகை கிளம்புகின்றது. அந்தணர் வேதவேள்வியில் எழும் நறும்புகையையும், அன்புமாறாது விருந்தினராய் வருவோரைப் போற்றும் ஆட்டுவாணிகர் தம் மனையில் தாளிதம் செய்து நாடிவந்த விருந்தினர்க்கு நல்லன்போடு படைக்கும் புகை எழுந்த ஊன்சோற்றிலே உருக்கிய நெய்யை ஊற்றும்போது எழும் நெய்யாவுதிப் புகையையும் விானிடை வாழும் தேவர்கள் பெரிதும் விரும்புவர்.

58 பதிற்றுப்பத்துச் சொற்பொழிவுகள்

"உருகெழு மரபிற் கடவுட் பேணியர்
கொண்ட தீயின் சுடரெழு தோறும்
விரும்புமெய் பரந்த பெரும்பெய ராவுதி
வருநர் வரையார் வார வேண்டி
விருந்துகண் மாறா துணீஇய பாசவர்
ஊனத் தழித்த வானிணக் கொழுங்குறை குய்யிடு தோறு
மாறா தார்ப்பக்
கடலொலி கொண்டு செழுநகர் நடுவண்
அடுமை யெழுந்த வடுநெய் யாவுதி

இரண்டுடன் கமழு நாற்றமொடு வானத்து
நிலைபெறு கடவுளும் விழைதகப் பேணி."
(பதிற்றுப்பத்து. 21:

5-15)

'குட்டுவ! இடமகன்ற உன் நாட்டில் மக்கள் பசியும் பிணியும் பகையுமின்றி இனிது வாழுமாறு நீ செங்கோல் செலுத்தும் திறத்தால் விளைவு குன்றுதலில்லை. வெற்றி வீரர்கள் போரில்லாமையால் அம்புவிடும் தொழிலை அறவே மறக்கும்படி ஆயிற்று. கோடை நீடுதலால் மலை அருவி வளமிழந்த பெரிய வறட்காலத்திலும் கரைகடந்து செல்லும் பேர்யாறு தழைகளைச் சூடிக்கொண்டு போர்விரும்பி படையெடுத்து வருவாரைப்போல் பெருக்கெடுத்து வரும். அப்போது அப்பெருக்கினைத் தடுக்க விளைபுலன்களில் உண்டாகும் பூசலல்லது வேறு போர்க்கொடுமை எதுவும் இல்லாத நாடு உன் நாடு. இவற்றால் உன் தேயம் வியக்கத் தக்க செல்வம் கொழிப்பதாய் சிறந்து விளங்குகின்றது.'

"திருவுடைத் தம்ம பெருவிறற் பகைவர்
பைங்கண் யானைப் புணர்நிரை துமிய
உரந்துரந் தெறிந்த கறையடிக் கழற்காற் கடுமா மறவர்
கதழ்தொடை மறப்ப
இளையினிது தந்து விளைவுமுட் டுறாது
புலம்பா வுறையுள் நீதொழி லாற்றலின் விடுநிலக் கரம்பை
விடரளை நிறையக்
கோடை நீடக் குன்றம் புல்லென
அருவி யற்ற பெருவறற் காலையும்

சிவந்துகரை யிழிதரு நனந்தலைப் பேரியாற்றுச் சீருடை
வியன்புலம் வாய்பரந்து மிகீஇயர் உவலை சூடி யுருத்துவரு
மலிர்நிறைச்
செந்நீர்ப் பூச லல்லது
வெம்மை யரிதுநின் னகன்றலை நாடே."
(பதிற்றுப்பத்து : 28)

7. போரும் புகழும்

குட்டுவன் கோலின் தன்மையை இது காறும் கண்டோம். இனி அவன் வேலின் வெம்மையையும் சிறிதே காண்போம்.

பல்யானைச் செல்கெழுகுட்டுவன் களம்பல கண்டவன். கனவிலும் தோல்வியைக் கண்டறியாதவன். அவன் வாழ்வுகண்ட வெற்றிகள் பலப்பல. அவற்றுள் சிறந்தன இரண்டைத் தம் பாடல்களில் குறிப்பிடுகின்றார் பாலைக் கௌதமனார். அவற்றுள்ளும் தலையாய சிறப்பு வாய்ந்ததும்

அவன் உம்பர்க்காட்டை வென்ற வெற்றியே ஆகும். கடல் மலை நாட்டில் உம்பர்க்காடு ஒரு சிறு பகுதி. அதனை வேழக்காடு என்றும் வழங்குவர். அப்பகுதியில் களிறுகள் மிகுதியாகக் காணப்படும். கருக்கொண்டு உணவின்றிக் கிடந்த பெண்புலிக்கு உணவினைக்கொண்டு தருவான் விரும்பி நீண்ட பெரும் கோடுகளையுடைய யானை ஒன்றைக் கொன்று வீழ்த்தியது ஓர் ஆண்புலி. அடியுண்ட களிற்றை அதன் செங்குருதி பரந்த பாறைகளிலெல்லாம் படியுமாறு ஈர்த்துச் சென்றது அப் புலி. தன் அன்புடைய துணைக்கு அதை அளித்து மகிழ்ந்தது. அவ்வெற்றிச் செருக்கால் புல்தரையில் வீழ்ந்து புரண்டது. இத்தகைய கொடுமையுடையது அவ் வேழக்காடு. இதனை அறிந்த யானைகள் அக்கானுறை வாழ்வை வெறுத்து வழியில் கிடக்கும் பலாக்கனிகளைத் தின்றுகொண்டே வெளியேறும்' என்று உம்பர்க்காட்டைத் தாயங்கண்ணனார் தாம்பாடியுள்ள

அகநானூற்றுப் பாடல் ஒன்றில் சித்திரித்துக் காட்டுகிறார்.[1] உம்பர்க்காடு ஐந்நூறு சிற்றூர்களைக் கொண்டதொரு சிறு காடு.[2] தன்னைப் பாடிய குமட்டூர் கண்ணனார்க்கு இமயவரம்பன் நெடுஞ் சேரலாதனால் பிரமதாயமாகக் கொடுக்கப் பெற்ற பெருமை வாய்ந்தது இப்பகுதி. செங்குட்டுவனிடம் இவ் உம்பர்க்காட்டின் வருவாயினைப் பாணர் பரிசிலாகப் பின்னொரு காலத்தே பெற்றார். இவ்வுண்மையை இரண்டாம் பத்தின் பதிகத்தைத் தொடர்ந்துள்ள உரைநடைப் பகுதியாலும் ஐந்தாம் பத்தின் பதிகத்தைத் தொடர்ந்துள்ள உரைநடைப் பகுதியாலும் நன்கு உணரலாம். இவ்வாறு வண்டமிழ்ப் புலவர் பலரும் விரும்பும் வளம் கொழிக்கும் நாடாகிய உம்பர்க்காட்டைத் தன்னதாக்கி அவண் தன் செங்கோலாட்சி நிலவுமாறு செய்தான் பல்யானைச் செல்கெழு குட்டுவன். இவ் உம்பர்க்காட்டில் அகப்பா என்ற இடத்தில் பேரரண் ஒன்று இருந்தது.[3] மாற்றார்க்குச் சிறந்த அரணாக அது விளங்கியமையை அறிந்தான் குட்டுவன். அகப்பாவிலிருந்த அரிய அரண்கள் பல நிகரற்ற பலமுடையனவாக இருந்தன. ஆங்கே இருதிறப்படைகளும் மாறு கொண்டு போரிடுதற்கு வேண்டிய பெரிய செண்டு வெளி இருந்தது. கணையமரம் செறிக்கப்பெற்ற நீள்வாயில்

1. கொடுமு ளீங்கை சூரலொடு மிடைந்த
வான்முகை யிறும்பின் வயவொடு வதிந்த
உண்ணாப் பிணவி னுயக்கந் தீரிய
தடமருப் பியானை வலம்படத் தொலைச்சி
வியலறை சிவப்ப வாங்கி முணங்குநிமிர்ந்து
புலவுப்புலி புரண்ட புல்சாய் சிறுநெறி
பயிலிருங் கானத்து வழங்கல் செல்லாது
பெருங்களிற் றினநிரை கைதொடூஉப் பெயருந்
தீஞ்சுளைப் பலவின் தொழுதி யும்பற்
பெருங்காடு........... .... (அகநானூறு. 357)

2. உம்பர்க்காடு - திருவிதாங்கூர் ராஜ்யத்தின் வடமேற்கிலுள்ள யானைமலைப் பகுதியாம் என்றும், வைக்கத்துள்ள ஒரு வீட்டிற்கு உம்பர்க்காட்டு வீடு என்ற வழக்கு இன்றும் உள்ளது என்றும் கூறுவர். (Cera Kings By K. G. Sesha Aiyar, Page-14.)

3. படம்-பதிற்றுப்பத்து: ஔவை. சு. து. பதிப்புப் பார்க்க.

கள் இருந்தன. ஐயவித்துலாம் போன்ற அரிய இயந்திரப் படைகள் பல இருந்தன. காவற்காடும் ஆழ்ந்து அகன்ற கிடங்குகளும் ஓங்கி உயர்ந்த மதில்களும் காண்பார் கண்களை மருட்டும் தன்மையனவாய் நின்றன. ஒன்னார் அணுகுதற்கு ஒண்ணா அருமையும் பெருமையும் பெற்று விளங்கிய அவ் அரணைக் குட்டுவன் நாற்படையுடனும் சென்று அழித்துக் கைக்கொண்டான். இப் பெருஞ் செயலைப் பாலைக் கௌதமனார் வியந்து பாடுகின்றார்.

"உளைப் பொலிந்த மா
இழைப்பொலிந்த களிறு

வம்புபரந்த தேர்
அமர்க்கெதிர்த்த புகன் மறவ ரொடு
துஞ்சுமரந் துவன்றிய மலரகன் பறந்தலை
ஓங்குநிலை வாயிற் றூங்குபு தகைத்த
வில்விசை மாட்டிய விழுச்சீ ரையவிக்
கடிமிளைக் குண்டு கிடங்கின்
நெடுமதில் நிரைப்பதணத்
தண்ணலம் பெருங்கோட் டகப்பா வெறிந்த
பொன்புனை யுழிஞை வெல்போர்க் குட்டுவ!"
(பதிற்றுப்பத்து: 22: 17-27)

குட்டுவன் அடைநத இப் பெரு வெற்றியினை அவன் வழிவந்த இளங்கோ அடிகளும் தம் காவியத்தில் பொறித் துள்ளார்.

"மிகப்பெருந் தானையோ டிருஞ்செரு வோட்டி
அகப்பா எறிந்த அருந்திறல்." (சிலம்பு, 28 : 143-4)

இவ்வாறு குட்டுவன் அரியபெரிய வெற்றிகள் வதற்குப்
அடை பெரும்பல்

பெருங்காரணமாய் விளங்கியது அவனுடைய யானைப் படையுடைய வரம்பில் தானையின்

சிறப்பேயாகும். குட்டுவனின் பாசறை வன்மைக்கு யாகிய எல்லா நலன்களும் பொருந்தி விளங்கியது.

எல்லை
அப்

பாசறையில் போர் வேட்கையால் பரபரப்பும் துடி துடிப்பும
கொண்ட வீரர் கணக்கற்றவர்களாய்ச் செறிந்துகிடந்தனர்.

அவர்கள் நாண் களைதலில்லாத வில்லை எந்நேரமும் ஏந்தி இருப்பர். அவர்கள் கையினின்றும் அம்பு கணப்போதும் அகலாது. இத்தகைய சினம
கொண்ட மறவரின்—'உட
லெமக்குச் சுமை'யென
கும்போது குட்டுவன்
வியப்பும் உண்டோ?

முனியும் வீரரின்—துணை இருக்
வெற்றிமேல் வெற்றி பெற்றதில்
பாலைக் கௌதமனர் இத்தகைய
படைவீரர்களின் ஆற்றலைப் பாடியிருக்கும் திறம் கற்று மகிழ்தற்கு உரியது.

"வீரவுவேறு கூலமொடு குருதி வேட்ட
மயிர்புதை மாக்கண் கடிய கழற
அமர்கோள் நேரிகந் தாரெயில் கடக்கும்

பெரும்பல் யானைக் குட்டுவன்
வரம்பில் தானை பரவா வூங்கே."
(பதிற்றுப்பத்து, 29 : 11-15)

* * * *

"குலையிழி பறியாச் சாபத்து வயவர்
அம்புகளை வறியாத் தூங்குதுளங் கிருக்கை
இடாஅ வேணி யியலறைக் குருசில்."
(பதிற்றுப்பத்து, 24: 12-14)

பழந்தமிழ் நாட்டில் நாளும் போர்ப்பறை முழங்கிய
வண்ணம் இருந்தது. முடிகெழு வேந்தர் தம்முள் ஒரு சிறிதும் ஒற்றுமைப்பண்பு இலராய் ஒருவரை ஒருவர் எதிர்த்து அழிப்பதற்குரிய அமயம் பார்த்து வாழ்நது வந்தனர். இதனால் சேர சோழ பாண்டியரிடையே ஓயாது போர் நிகழ்ந்தது. சேரர் குடியில் தோன்றிய பல்யானைச் செல்கெழு குட்டுவன் அறிவிலும் ஆற்றலிலும் தன் நேரிலாத் தலைவனாக விளங்கிய தகைமை கண்டு ஏனைய இரு பெரு வேந்தர் நெஞ்சிலும் பொறாமைத் தீ கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்தது, வேளிர் சிலரைத் துணையாகக் கொண்டு அவ் விருபெரு வேந்தரும் குட்டுவனை எதிர்த்தனர்; வஞ்சினம் கூறினர். குட்டுவன் அவர்கள் படைச் செருக்கையும், மனச் செருக்கையும் அழித்தான். அவருக்கு அரணாக அமைந்திருந்த கடல் அரணையும் காட்டரணையும் நொறுக்கி

எறிந்தான். குட்டுவனின் பேராற்றலை அறிந்த பகை மன்னர்கள் அவன் வேலுக்கு அஞ்சி வாழலாயினர். இச் செய்தியினை மூன்றாம் பத்தின் இறுதிப் பாடல் நமக்கு எடுத்துரைக்கின்றது.

"பணைகெழு வேந்தரும் வேளிரும்
ஒன்றுமொழிந்து
கடலவும், காட்டவும் அரண்வலியார் நடுங்க."
(பதிற்றுப்பத்து, 30 : 30-31)

இவ்வாறு வேந்தரும் வேளிரும் அஞ்சி நடுங்கும்
ஆற்றலை உடையவனாயிருந்த சேர வேந்தன் போர்முனைக்குப் புறப்படுங்கால் முரசுறை கடவுட்குப் பலியிட்டு வழிபாடு ஆற்றுவான். காண்பார் அஞ்சத்தக்க அச் செயலைப் பாலைக் கௌதமனார் சுவை ததும்பச் சொல்லோவியமாய் எழுதிக்காட்டுகின்றார்.

சேர வேந்தனின் மயிர்க்கண் முரசம் விண்ணதிர முழங்கும். முரசுறை கடவுட்குப் பலியிட்டு மந்திரம் கூறுவோனாகிய 'உயர்ந்தோன்' எண்டிசையும் அதிர, மறவர் நெஞ்சில் சினத்தீ கிளர்ந்தெழ, மந்திரங்களை முழக்குவான். குருதி கலந்து கள்ளுடனே அவன் படைக்கும் பலியினைத் தீண்ட பெரிய கண்களையுடைய பேயும் அஞ்சும். தெய்வீக ஆற்றல் படைத்த அப் பலியினை எறும்பும் மொய்க்காது. ஆயினும் அப் பலியினைக் கரிய கண்ணுடைய காக்கையும் பருந்தும் இருந்து உண்ணும். (அவ்வாறு அவை உண்ணல் போரில் வெற்றி உண்டாதற்குரிய நிமித்தம் ஆகும்). அந் நிலையில் குட்டுவனின் முரசம் மண் அதிர முழங்கும். அம்

முரசொலி செருப்புகல் மறவரைக் குரலெடுத்துப் பாடும் இசைவிருந்தோடும் பெருஞ் சோற்று விருந்தை உண்ணக் கூவி அழைக்கும்.

> "முரண்மிகு கடுங்குரல் விசும்படை பதிரக்
> கடுஞ்சினங் கடாஅய் முழங்கும் மந்திரத்
> தருந்திறன் மரபிற் கடவுட் பேணியர்
> உயர்ந்தோ னேந்திய வரும்பெறற் பிண்டம்
> கருங்கட் பேய்மகள் கைபுடையூஉ நடுங்க

> நெய்த்தோர் தூஉய நிறைமகி ழிரும்பலி
> எறும்பு மூசா விறும்பூது மரபிற்
> கடுங்கட் காக்கையொடு பருந்திருந் தார
> ஓடாப் பூட்கை யொண்பொறிக் கழற்காற் பெருஞ்சமந்
> ததைந்த செருப்புகன் மறவர் உருமுநில னதிர்க்குங்
> குரலொடு கொளைபுணர்ந்து பெருஞ்சோ றுகுத்தற்
> கெறியும்
> கடுஞ்சின வேந்தேநின் றழங்குகுரன் முரசே."

(பதிற்றுப்பத்து, 30 : 32-44)

8. அழிவால் விளைந்த அவலம்

எமனை ஒத்த வீரர்களையுடைய குட்டுவனின் படை பகைவர் நாட்டில் சீறிப் பாய்ந்தால் அந்நாடுகட்கு நேரும் அழிவு சிறிதாமோ? அவ்வாறு நேர்ந்த அவலக் காட்சிகள் பலவற்றை மூன்றாம்பத்து நம் கண்முன்னே கொண்டு வந்து காட்டுகிறது. குட்டுவன் தன் ஆட்சியின் தொடக்க காலத்தில் அளக்கலாகாப் போர்வெறி கொண்டவனாய் இருந்திருத்தல் வேண்டும். மூன்றாம் பத்திலுள்ள பெரும்பாலான பாடல்கள் அவன் போர் வெற்றியையும் ஆற்றொணாச்சினத்தால் பகைவர் நாட்டிற்கு அவன் விளைத்த இழவினையுமே படம் பிடித்துக் காட்டுகின்றன. குட்டுவன் சினத்தால் விளைந்த பேரழிவினை ஆசிரியர் கௌதமனார் சொற்சித்திரங்களாக்கிக் காட்டுந் திறம் நம் உள்ளத்தை உருக்குகின்றது. சேரவேந்தனின் சினம்கெழுமிய சிவந்த கண்களில் படாதவரையில் அந்நாடுகள் சோலைவனமாயிருந்த காட்சியும் அவன் கோபப்பார்வை பட்டதும் அவை பாலைவனங்களாய் மாறிய பரிதாபக் காட்சியும் கௌதமனார் பாடல்களில் படம்படமாய் விளங்குகின்றன:

'பகைவர் நாடு நீர்வளம் செறிந்த நன்நாடு. எந்நாளிலும் அந்நாட்டில் பெருகிவரும் புதுப்புனலைத் தடுத்து நிறுத்துவோர் பறையறைந்து செய்யும் ஆரவாரமும், நீர்விளையாடுவோர் செய்யும் ஆரவாரமும, பல்வேறு விழாக்களிலே திரண்ட மக்கள் செய்யும் ஆரவாரமும் மிகுதியாக இருக்

கும். வற்றாத வளங்கொழிக்கும் அத்தகைய நாடுகள், குட்டுவ! நின் சினத்திற்கு இலக்கானமையால் ஆங்கே பட்டப்பகலில் குறுநரிகள் ஊளையிடும்; கோட்டான்கள்

கூவும்; அவற்றின் குரலொலிக்கு ஒப்பப் பேய்கள் ஆடும்.

"போர்த்தெறிந்த பறையாற் புனல்செறுக்
குநரும்
நீர்த்தரு பூச லினம்பழிக் குநரும்
ஒலித்தலை விழவின் மலியும் யாணர்
நாடுகெழு தண்பணை சீறினை யாதலிற்
குடதிசை மாய்ந்து குணமுதற் றோன்றிப்
பாயிரு ளகற்றும் பயங்கெழு பண்பின்
ஞாயிறு கோடா நன்பக லமையத்துக்
கவலை வெண்ணரி கூவுமுறை பயிற்றிக்
கழல்கட் கூகைக் குழறுகுரற் பாணிக்
கருங்கட் பேய்மகள் வழங்கும்
பெரும்பா ழாகுமன் னளிய தாமே?"
(பதிற்றுப்பத்து, 22 : 28-38)

* * * *

'பகைவர் நாடு மண்வளமும், மரவளமும், மலர் வள
மும், மக்கள மனவளமும நிறைந்த நாடு. நாளும நீங்காத புது வருவாயையுடைய இடமகன்ற அந்நாடுகள் நின் வலியும் புகழும் அறியா வேந்தரின் பேதைமையால் மக்கள் போக்குவரவற்ற பாலைநிலமாயிற்று; புல் நிறைந்து சிற்றிடமுமின்றி முட்செடிகள் மண்டித் தூர்ந்தன. தமக்கே உரிய பெரிய அழகை எல்லாம் அவை இழந்துநின்றன. நெடுநிலை மாடங்கள் நிறைந்த அவ் ஊர்கள் காட்டுப் பசுக்

கள் தம் ஏறுகளுடன் கூடி உறையும்
குட்டுவ! நின்னைக் காணவிரும்பி வரும்
றைக் கண்டோம்.'
காடுகளாயின.
யாங்கள் அவற்

"நின்னயந்து வருவேங் கண்டனம் புன்மிக்கு
வழங்குந ரற்றென மருங்குகெடத் தூர்ந்து
பெருங்கவி னழிந்த வாற்ற வேறுபுணர்ந்
தண்ணன் மரையா வமர்ந்தினி துறையும்
விண்ணுயர் வைப்பின காடா யினநின்

மைந்துமலி பெரும்புக ழறியார் மலைந்த
போரெதிர் வேந்தர் தாரழிந் தொராலின்."
(பதிற்றுப்பத்து, 23 : 11-17)

*   *   *   *

'குட்டுவ! இடி என ஒலிக்கும் முரசுடன்
வேகமாகப் பறந்தோடும்படி நீ தேரோட்டிய

குதிரைகள்
பகைவரது
அகன்ற நாடுகள் பெரிதும் பாழாயின.
அந்நாட்டில் உன்

குதிரைகள வழங்கிய வயல்களிலே பின்பு கலப்பைகள் உழா ஆயின; உன் மதயானைக கூட்டம மிதித்த வயல்கள பின்பு வளங்காணலை அறியா ஆயின; உன் வீர மறவர்கள் சேர்ந்த மன்றங்கள் கழுதைகளால் உழப்பட்டன; நீ சினந்த அரசனது அரணுள்ள நகரங்கள் பின்பு தமக்குக் காவலர் வைக்கப்படா ஆயின; தீப்பட்டு எரிந்த காட்டுப் பக்கங்கள் ஆண்டலை புட்கள வழங்குமு கடுநெறி உடையன வாகவும, ஆறலைக் கள்வர் பொருகின்ற போரிடங்களாகவும் ஆயின'

"மாவா டியபுலம் நாஞ்சி லாடா
கடாஅஞ் சென்னிய கடுங்கண் யானை
இனம்பரந்த புலம் வளம்பரப் பறியா
நின்படைஞர், சேர்ந்த மன்றங் கழுதை போகி
நீ, உடன்றோர் மன்னெயில் தோட்டி வையா
கடுகா லொற்றலிற் சுடர்சிறந் தருத்துப்
பசும்பிசி ரொள்ளழ லாடிய மருங்கின்
ஆண்டலை வழங்குங் கானுணங்கு கடுநெறி
முனையகன் பெரும்பா ழாக மன்னிய
உருமுறழ்ப் பிரங்கு முரசிற் பெருமலை
வரையிழி யருவியி னொளிறுகொடி நுடங்கக்
கடும்பரிக் கதழ்சிற கைைப்பநீ
நெடுந்தே ரோட்டியபிற ரகன்றலை நாடே."

(பதிற்றுப்பத்து-25)

* * * *

'பகைவர் நாட்டில் ஒருகால் தேர் ஓடிய வயல்கள் அது ஓடிய அளவிலே சேறுகிப் பின் உழுதற்கென்று ஏர்

பரவா ஆயின. பன்றிகள் கிழங்கு உண்ண உழுத கொல்லைப் புனங்கள் அவை உழுத அளவிலே புழுதியாகிப் பின்பு கலப்பை செலுத்தவேண்டாவாயின. மத்துக்கள் ஒலிக்கின்ற மனைகள் அம்மத்தொலி மிகுதியால் இனிய வாத்திய ஒலிகள் ஒலியா ஆயின. இவ்வாறு வளம் செறிந்திருந்தது நின் பகைவர் நாடு. நின் சினத்திற்கு இரையான பின் அவற்றிற்கு இப்பொழுது நேர்ந்துள்ள நிலை மிகவும் இரங்கத்தக்கது. மழை பெய்யாததால் செழிப்பெல்லாம் சிதைந்தது. 'இது காலக்கொடுமை' என்று கண்ணீர் உகுத்துக் கையைப புடைத்தவராய் மெலிந்த நெஞ்சுடன சிறுமை மிக்கனர் மக்கள். அவர்கள் வாழ்ந்த மனைகள் பாழானமையால் பீர்க்கு படர்ந்து கடிய காட்டுவழிகள் ஆயின. முன்பு இந்நாட்டின் வளத்தைக் கண்டறிந்தவர்க்கும் பழைய நிலையை நினைக்குமிடத்துத் துன்பம் பெரிதும் தோன்றும். யானும் அதற்கு நோகின்றேன்'

'தேஎர் பரந்தபுல மேஎர் பரவா
களிறு டியபுல நாஞ்சி லாடா
மத்து ரறியமனை யின்னிய மிமிழா
ஆங்குப், பண்டுநற் கறியுநர் செழுவள
நினைப்பின்

நோகோ யானே நோதக வருமே
பெயன்மழை புரவின் றாகி வெய்துற்று
வலமின் றம்ம காலையது பண்பெனக்
கண்பனி மலிர்நிறை தாங்கிக் கைபுடையூ

மெலிவுடை நெஞ்சினர் சிறுமை கூரப்
பீரிவர் வேலிப் பாழ்மனை நெருஞ்சிக்
காடுறு கடுநெறி யாக மன்னிய
முருகுடன் று கறுத்த கலியழி மூதூர்
உரும்பில் கூற்றத் தன்னநின்
[illegible]
திருந்துதொழில் வயவர் சீறிய

நாடே.”
(பதிற்றுப்பத்து, 26)

* * * *

‘தழை உடையையும் மலர் மாலையையும் அணிந்த வரும் கள்ளுண்டு களித்துக் கூடியிருப்போருமான உழவர்

மகளிர் பறவைகள் வயல்களில் புகுந்து பயிர்கட்குத் தீங்கு புரியாதிருக்கவேண்டித் தெளிந்த குரலோசையால் அவற்றை ஓட்டுவர். ஆனல் தம்மைக்கடிய எழுந்த பெண்கள் ஒலியை இனிய இசை முழக்குவோரின் ஒலிகேட்ட பழக்கத்தாலே பண் ஒலியாகவே கருதிக் கோலமயில்கள் சோலைகளிலே தோகை விரித்தாடும்; சேறுபட்ட வயல்களில்

சிக்கிய வண்டிகளின் வலிய சக்கரங்கள் உருண்டு விரைந்து செல்லும்படி தூண்டி வெருட்ட நல்ல எருதுகள் அளற்றைக் கடப்பதற்காக வருந்திமுயலும் காலத்து, ஓட்டுவோர் இடும் ஆரவாரம் அல்லாமல் போரின் ஆரவாரத்தை என்றும் அறியா பகைவர் நாடுகள். இத்தகைய சீரிய நாடுகளில் விளங்கிய பேரழகு, குட்டுவ! நின் சீற்றத்தால அழிந்து ஒழிந்தது.'

"சிதைந்தது மன்றநீ சிவந்தனை நோக்கலின்
தொடர்ந்த குவளைத் தூநெறி யடைச்சி
அலர்ந்த வாம்ப லகமடி வையர்
சுரியலஞ் சென்னிப் பூஞ்செய் கண்ணி
அரிய லார்கைய ரினிதுகூ டியவர்
துறைநணி மருத மேறித் தெறுமார்
எல்வளை மகளிர் தெள்விளி யிசைப்பிற்
பழனக் காவிற் பசுமயி லாலும்
பொய்கை வாயிற் புனல்பொரு புதவின்
நெய்தன் மரபி னிரைகட் செறுவின்
வல்வா யுருளி கதுமென மண்ட
அள்ளற் பட்டுத் துள்ளுபு துரப்ப
நல்லெருது முயலு மளறுபோகு விழுமத்துச
சாகாட் டாளர் கம்பலை யல்லது
பூச லறியா நன்னாட்
டியாண ரறாஅக் காமரு கவினே."
(பதிற்றுப்பத்து, 27)

மேற்கண்ட
படிக்கும்போது

பாலைக்கௌதமனாரின் பாடல்களைப்
நம் சிந்தனை எங்கெங்கெல்லாமோ செல்

கின்றது. இவ்விருபதாம் நூற்றாண்டிலேயே போர் இன்
னும் தவிர்க்கமுடியாத ஒரு தீமையாகவே நிலைத்து நிற்கி

றது என்றால் ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பு இருந்த சமுதாயம் போரைத் தவிர்த்திருக்கமுடியாது என்பது தெளிவு. என்றாலும் அந்நாளிலேயே போரின் கொடுமையை எண்ணிச் சான்றோர்களின் நெஞ்சம் எவ்வெவ்வாறெல்லாம் குமுறியது என்பதைப் பாலைக் கௌதமனாரின் பாடல்கள் உள்ளங்கை நெல்லிக்கனியென நமக்கு விளக்கி வைக்கின்றன.

“ஆங்குப், பண்டுநற் கறியுநர் செழுவளம் நினைப்பின்
நோகோ யானே நோதக வருமே.”
(பதிற்றுப்பத்து, 26: 4-5)

என்ற சொற்களில் புலவர் பெருமானின் அளவற்ற மனத்
துயரம் புலனாகிறது அன்றோ?
மையை—அழிவால் விளையும்

சீற்றத்தால் விளையும் சிறு

அவலத்தை—இத்தகைய பாடல்களின் வாயிலாக எடுத்துரைத்துக் குட்டுவன் போன்ற நாடாளும் வேந்தன் நெஞ்சை நல்வழிப்படுத்தச் சங்ககாலச் சான்றோர்கள் கருதினர் போலும்! அவ்வாறு காலத்தை ஒட்டிச் சமாதான தூதுவர்களாய் அவர்கள் செய்த சீரிய முயற்சியினைத் தமிழ் நெஞ்சம் படைத்தார் உணர்ந்து போற்றுதல் ஒருதலை.

பாலைக் கௌதமனார் எண்ணிய எண்ணம் திண்மை யுடையது. எனவே அது வீணாகவில்லை. 'போர், போர்' என்று தினவெடுத்துத் திரிந்த தோள்களையுடைய வீர மறவர்களுக்குத் தலைமை தாங்கி ஈரநெஞ்சம் சிறிதுமின்றி எதிரி நாடுகளை உழக்கிய குட்டுவனின் செவிகளில் தண்டமிழ்ச் சான்றோராகிய பாலைக்கௌதமனார் பக்குவமாகக் கூறிவந்த மொழிகள் தக்க பயன் அளித்தன. வீரருள் வீரனாய் வாழ்க்கையைத் தொடங்கிய குட்டுவன் ஞானிகளுள் ஞானியாய்த் தன் வாழ்க்கையை முடிக்க உறுதி பூண்டான். கலிங்கப்போரைக் கண்டு அசோகப் பேரரசரின் நெஞ்சம் அருள்நெறிப்பட்டது போன்று குட்டுவனின் நெஞ்சம் கருணைக் கடலாயிற்று. பல்யானைச் செல்கெழு குட்டுவன் பிறக்கும்பொழுதே 'இமயவரம்பன் தம்பி'

என்ற பெரும் புகழோடு பிறந்தான். தன் தோள் வலியாலும் வாள்வலியாலும் தமிழகத்தின் நிகரில்லாத் தலைவனாய்த் திகழ்ந்தான். [1]நால்வகைப் படைகளையும் நன்கு பேணி வைத்திருந்தான் உம்பர்க்காட்டைத் தன் உடைமையாக்கினான். அகப்பா என்னும் பேரரணை எறிந்து பகல்தீ வேட்டான். கொங்கு நாட்டை வென்றான்; கடுங்கண் மறவராகிய மழவரைத் தன் கருத்துவழி நடப்போராய் ஆக்கிக்கொண்டான்; 'பூழியர் கோவே' என்றும், 'மழவர் மெய்ம்மறை' என்றும், 'ஆகெழு கொங்கர் நாடகப்படுத்த வேல்கெழு தானை வெருவரு தோன்றல்' என்றுப புலவர் பாடும் புகழ் பெற்றான். [2]இவ்வாறு தான் அடைந்த தன் வெற்றிவாழ்வை வியனுலகமெல்லாம் கண்டு போற்றி விளக்குமாறு செயற்கருஞ் செயல் ஒன்று செய்தான். தன் பல்யானைப் பெரும்படையைக் குணகடலுக்கும் குடகடலுக்கும் ஒரேகாலத்தில் அனுப்பி அவ்விருகடல் நீரும் ஒரு பகலிலேயே வருமாறு செய்தான். அவ்வாறு கொண்டு வரப்பட்ட இருகடல் நீரிலும் படிந்து ஆடிப் பெருமையுற்றான். இவ்வாறு குட்டுவன் பெற்ற பெருமையினை,

> "உருகெழு மரபின் அயிரை மண்ணி
> இருகடல் நீரும் ஆடினோன்." (சிலம்பு 28: 145 - 146)

என்று இளங்கோ அடிகள் பெருமிதத்துடன் பாராட்டுகின்றார்.

இங்ஙனம் போரால் விளைந்த புகழின் எல்லையைப் பெருவிழாவாய்க் கொண்டாடிய குட்டுவன் தன் நாட்டு அயிரைமலையில் கோயில் கொண்டுள்ள கொற்றவைத் தெய்வத்தைத் தன் குலத்தார் செய்துவரும் வழிபாடு வழுவாதவகையில் வழிபட்டு மகிழ்ந்தான். இறுதியாக இருபத்தைந்து ஆண்டுகள் போர்மலிந்த—புகழ்மலிந்த—ஆட்சி நடத்திய குட்டுவன் பிறவாப் பெருநெறி காணப் பெருவிழைவு கொண்டான். மண்ணை அடக்கி வாழும்

---

1. பதிற்றுப்பத்து - 22: 17 - 20
2. பதிற்றுப்பத்து - 21 ; 23 ; 24 ; 22 ; 15

வாழ்வினும் மனதை அடக்கி வாழும் வாழ்வே சிறந்த தெனத் தெளிந்தான். மண்ணரசாள்வதிலும் விண்ணரசாள் வதே மேலென விரும்பினுன். உயிர்களை வதைத்து அழித்து ஒழித்து நாசமாக்குவதினும் உற்றநோய் நோன்று உயிர்க்கு உறுகண் செய்யாது தவவாழ்வினை மேற்கொள் வதே சாலச்சிறந்ததென உணர்ந்தான். தன் குலத்தில் தனக்கு முதியாரை மதியோடு ஒத்த தன் தண்ணளியால் தழீஇக் கொண்டு அவர்கட்குத் தன் நாட்டைப் பகுத்துக் கொடுத்தான். ஓங்கு புகழும் உயர்ந்த கேள்வியும் ஒருங்கே படைத்திருந்த தன் ஆசானுகிய நெடும்பாரதாயனுர் காட் டிய ஞான நெறியே செல்ல வைராக்கியம் கொண்டான். துறவு உள்ளம் பூண்டு தன் ஆசிரியரைப் பின் தொடர்ந்து நாடு நீங்கிக் காடுபோந்தான்; வீடுபெற்றுன். வீரருள் வீரனுய் விளங்கிய ஒரு பேரரசனின் வாழ்வு ஞானியருள் ஞானியர் போற்றும் தவவாழ்வாய் முடிந்தது. உணர்ச்சி யும் உருக்கமும் நிறைந்த இவ்வரலாற்றை மூன்றும்பத்தின் பதிகம் அழகுறப் பாடுகிறது'.

"இமைய வரம்பன் தம்பி அமைவர
உம்பற் காட்டைத் தன்கோல் நிறீஇ
அகப்பா எறிந்து பகற்றீ வேட்டு
மதியுறழ் மரபின் முதியரைத் தழீஇக்
கண்ணகன் வைப்பின் மண்வகுத் தீத்துக்
கருங்களிற் றியானைப் புணர்நிரை நீட்டி
இருகடல் நீரும் ஒருபகல் ஆடி
அயிரை பரைஇ ஆற்றல்சால் முன்போடு
ஒடுங்கா நல்லிசை உயர்ந்த கேள்வி

நெடும்பார தாயனார் முந்துறக் காடுபோந்த
பல்யானைச் செல்கெழு குட்டுவனைப்
பாலைக் கௌதமனார்

பாடினார் பத்துப்பாட்டு."
(மூன்றாம்பத்து, பதிகம்)

9. பழந்தமிழக இயற்கை—நிலவளம்

சங்க இலக்கியப் புலவர்கள்
இயற்கையின்பால் கொண்டிருந்த ஈடுபாடு
ஒப்புவமையற்றது. இயற்கை இன்

பத்தை ஐம்புலன்களாலும் ஆரத்துய்த்த அச்சான்றோர்கள் அவ்வின்பத்தைத் தேனினும இனிய தீந்தமிழ்ப் பாடல்களால் வடித்து வைததுள்ளார்கள். அவர்களுள் தலைசிறந்த ஒருவரே பாலைக்கௌதமனார். அவர் பாடியுள்ள பாடல்கள் பழந்தமிழகத்தின் நிலவளத்தை—இயற்கை அன்னை—கானில அரங்கில் ஆடிய அழகுக் கூத்தினை—கவினுற எடுத்துக்காட்டுகின்றன. ஐவகை நிலங்களின் வளங்களையும் அவர் பாடியுள்ள திறன் மகிழ்ந்து போற்றற்குரியது.

மருதம்

நீர்வளம் நிறைந்த பகுதி மருதம். ஆங்கே மருத மரங்கள் தம்பால் பல புள்ளினம் தங்கி ஒலிக்க ஓங்கி நிற்கும். செறிவினையுடைய பெரிய பரப்பிடமாகிய மணல் மலிந்த பெருந்துறைக்கண் விளையாடும் இளமகளிரால் பூவும் தளிரும் பறிக்கப்படுதலால் காஞ்சி மரங்கள் சிதைந்த நிலையில் காட்சி அளிக்கும். முருக்க மரங்கள் தாழ்ந்து பூக்களைச் சொரிதலால் உயர்ந்த நெருப்புப்போலத் தோன்றும அடைகரையில் சங்குகளும் நாரைகளும் செவ்விய வரிகளுடைய நாரையினத்துப் பறவைகளும் திரியும். கழனிக்கு வாயிலாக உள்ள பொய்கையைச் சார்ந்த விளைநிலத்தில் அழல் போலும் பூவினை உடைய தாமரை மலர்ந்திருக்கும். வளையணிந்த விளையாட்டு மகளிர் பறிக்காமையால் தானே மலர்ந்த ஆம்பல் எங்கும் நிறைந்திருக்கும். இத்தகைய காட்சிகள் நிறைந்தது நீங்காத புதுவருவாயுடைய அகன்றலை நாடு.

" மருதிமிழ்ந் தோங்கிய நளியிரும் பரப்பின்
மணல்மலி பெருந்துறைத் ததைந்த காஞ்சியொடு
முருக்குத்தாழ் பெழிலிய நெருப்புறழ்
அடைகரை
நந்து நாரையொடு செவ்வரி உகளும்
கழனி வாயிற் பழனப் படப்பை
அழல்மருள் பூவின் தாமரை வளைமகள்
குறாஅது மலர்ந்த ஆம்பல்
அறாஅ யாணரவர் அகன்றலை நாடே."

(பதிற்றுப்பத்து, 23:
18 - 25)

மருதவள நாட்டில் நீர்வளம் இடையறாமல் இருத்தலின் காலமல்லாத காலத்தும் கரும்பு முற்றிக்கிடக்கும். அதனை அறுத்துக் கொள்வதோடு ஒழியாது அதன் அரிகாலையும் அகழ்ந்து சிதைத்து ஆங்கு மலரும் பலவகைப் பூக்களையும் கொண்டு மக்கள் மலர்விழா எடுப்பர். தேன் சொரிய நின்ற மருத மரங்களை வெள்ளிய நுரையைச் சுமந்து பாய்ந்துவரும் சிவந்த புதுவெள்ளம் அடியோடே சாய்க்கும். அவ்வெள்ளத்தை அணைகோலித் தடுப்பான் வேண்டிக் கனத்த வைக்கோற் புரிகள் கொண்டு மணற்கோட்டைகளைக் கட்டுவர். அவையும் அவ்வெள்ளத்தில் சிதைந்து கரைந்துபோகும். அதுகண்ட மக்கள் முன்னினும் அதிக முயற்சியோடு உயரமும் திண்மையும் பொருந்திய அணைகளை ஆக்கி நீரைத் தடுத்து வென்றி காண்பர். அப்போது அவர்கள் செய்யும் மகிழ்ச்சி ஆரவாரம் மிகப்பெரிதாக விளங்கும். வெள்ளத்தைச் சிறைப்படுத்தி வெற்றியும் மகிழ்ச்சியும் கொண்ட மக்கள் கூட்டம் நாட்டின் மூதூர்க்கண் நிகழும் திருவிழாவிற்குச் சென்று அதனைக் கண்டு மிகுந்த ஆரவாரத்துடன் மீளும்.

“கால மன்றியும் கரும்பறுத் தொழியாது
அரிகா லவித்துப் பலபூ விழவின்
தேம்பாய் மருத முதல்படக் கொன்று
வெண்டலைச் செம்புனல் பரந்துவாய் மிகுக்கும்
பலசூழ் பதப்பர் பரியவெள் ளத்துச்
சிறைகொள் பூசலிற் புகன்ற வாயம்

முழவிமிழ் மூதூர் விழவுக்காணூஉப் பெயரும்
செழும்பல் வைப்பிற் பழனப் பாலும்."
(பதிற்றுப்பத்து, 30: 14 - 21)

முல்லை

வானுற ஓங்கிய மரங்கள் அடர்ந்த காடும் காடு சார்ந்த பகுதியுமாகிய முல்லை நிலத்துக் காடுகளில் பல்வகைப் பூக்களும் உதிர்ந்து வாடிக்கிடக்கும். அக் காடுகள்தாம் பயன்பல அளிக்கும் தன்மையினின்றும் திரிந்து செவ்வரக்கு போன்ற நுண்ணிய மணல் பொருந்திய மட்குன்று

களைக்கொண்டு விளங்கும். ஒள்ளிய நெற்றியையுடைய மகளிர் காலில் செருப்பணிந்து அப் பகுதிகளில் திரிவர்.

"பல்பூஞ் செம்மற் காடுபய மாறி
அரக்கத் தன்ன நுண்மணற் கோடுகொண்டு
ஒண்ணுதல் மகளிர் கழலொடு மறுகும்
விண்ணுயர்ந் தோங்கிய கடற்றவும் பிறவும்."
(பதிற்றுப்பத்து, 30 : 26-29)

குறிஞ்சி

மலையும் மலைசார்ந்த இடமுமாகிய இக் குறிஞ்சி நிலத்தின் அழகை மூன்றாம் பத்தின் இறுதிப் பாடலில் ஆசிரியர் சிறப்பாகப் பாடியுள்ளார். குறிஞ்சி நிலப்பகுதிகளை அடுத்து முல்லைநிலப் பகுதிகளும் உள்ளன. இவ் விரு நிலங்களிலும் வாழ்ந்த மக்கள் வாழ்க்கையும் மனப்பாங்கும் அறிவதற்குப் பேரின்பம் தருவதாகும். காந்தள் பூவால் தொடுக்கப்பட்ட கண்ணியினைத் தலையில் அணிந்து கொலை புரியும் வில்லினைக் கையிலே ஏந்திவரும வேட்டுவர் செவ்விய ஆமாவின் இறைச்சியுடனே காட்டிடத்து வாழும் வலிமை பொருந்திய யானையின் தந்தத்தையும் கொண்டு வருவர்; செல்வச் செழுமை நிறைந்த புன்புலவைப்பில் இருந்த பொன்னுடைக் கடைத்தெருக்களில் புகுவர். ஆங்கே தாம கொண்டுவந்த இறைச்சியையும் தந்ததை யும் கொடுத்துவிட்டு அவற்றிற்கு ஈடாகப் பொன்னைப் பெறுமல வடித்த கள்ளை வாங்கி உண்பர். உயிர்க்கொலை புரியும் வேட்டுவர் உள்ளம் இருந்தவாறு அது!

“ காந்தளங் கண்ணிக கொலைவில் வேட்டுவர்
செங்கோட் டாமா னூனொடு காட்ட
மதனுடை வேழத்து வெண்கோடு கொண்டு
பொன்னுடை நியமத்துப் பிழிநொடை
கொடுக்கும்
குன்றுதலை மணந்த புன்புல வைப்பும்.”
(பதிற்றுப்பத்து, 30 : 9-13)

வில்லும் அம்பும் கொண்டு விலங்குகளை வேட்டை
யாடித்திரியும் பண்பினரே குன்றக் குறவர். அவர்கள்

மனைகளும் எளிய மனைகள்; ஆயினும் அவை அன்பின் உறைவிடங்கள். குறவர் தம் மனைகளை வரகின் வைக்கோலால் வேய்ந்திருப்பர் அவர்கள் தொழில்களுள் முதன்மையானது தினைக்கொல்லையை உழுது பயிர் செய்வதாகும். அவர்களுடைய அன்பகங்களில் மணமிக்க காட்டு மல்லிகை வளர்ந்து கிடக்கும். அன்பு பொங்கும் அவர் இல்லங்களில் நடைபெறும் இல்லறத்தின் சிறப்பு இணையில்லாததாகும். தம் வீட்டிற்கு வரும் விருந்தினர்க்குத் 'தன்னை உண்டாரை வேறெதுவும் உண்ண விரும்பாதவாறு செய்யும் சுவையும் கருப்புக் கட்டியைப் பொடிசெய்து கொழித்தெடுத்த நுண்ணிய பூழிபோலும் தோற்றமும்' உடைய மெல்லிய தினைமாவை ஆர்வத்தோடு வரும் விருந்தினர் அனைவர்க்கும் முறைமுறையாக வேண்டுமட்டும் அளித்து மகிழ்வர்

> "ஏனல் உழவர் வரகுமீ திட்ட
> கான்மிகு குளவிய வன்புசே ரிருக்கை
> மென்றினை நுவணை முறைமுறை பகுக்கும்
> புன்புலந் தழீஇய புறவணி வைப்பும்."
>
> (பதிற்றுப்பத்து,

30 : 22-25) நெய்தல்

அலைமோதும் கடலும் கடல் சார்ந்த பகுதியுமாகிய நெய்தல் ஏனைய நிலங்கட்குச் சிறிதும் இளைக்காத வளம் வாய்த்ததாகும். விளையாடும் மகளிர் பூங்கொத்துக்களை விருப்புடன் கொய்தமையால் சிதறிக்கிடக்கும் ஞாழல் எனப்படும் புலிநகக் கொன்றை மரங்கள் நிறைந்த பெரிய நீர்த்துறைகளை உடையது நெய்தல் நிலம். அங்கே நீல மணியாற் செய்த பாத்திரங்களைப்போன்று கரிய இதழ்களை உடைய நெய்தற் பூக்கள் குளிர்ந்த கழிக்கண் மலர்ந்திருக்கும். அக் கழிகளில் மீன் வட்டமாடி புன்னையின் வெள்ளிய பூங்கொத்துக்கள் செறிந்த கிளைகளிடத்தே நாரை முதலிய பறவைகள் தங்கும். மக்கள் சென்று தங்குதற்குரிய கானற்சோலைகளில் செறிந்த மணல் அடைந்த கரையில் அடம்பங்கொடிகள் வளர்ந்திருக்கும்.

அவற்றை அலைத்துவரும் அலைகளால் ஒதுக்கப்பட்ட சங்குகளின் கூட்டம் அலறியவண்ணம் இருக்கும். வளையலறக் கேட்டு ஓடிப்போந்து அதன் மூத்தை எடுக்க முனைவார் அவ் வளையுடனே எறியப்படும் பவளத்தையும் எளிதில் எடுத்துச் செல்வர். அத்தகைய வளமார்ந்தது நெய்தல் நிலம்.

பழந்தமிழகத்தின் நிலவளத்தை இதுகாறும் பொது வகையாற் கண்டோம். இனி மூன்றும் பத்தில் வேறு காரணங்கட்காகச் சிறப்பாகக் குறிக்கப்பெறும் கொங்கு நாட்டைப்பற்றியும் பூழி நாட்டைப்பற்றியும் பாலைக் கௌதமனார் கூறும் செய்திகளை ஈண்டு அறிதல் பொருத்தமும் பயனும் உடையதாகும்.

கொங்கு நாடு

பல்யானைச் செல்கெழு குட்டுவன் தன் நெஞ்சுரனாலும் படைவலியாலும் வென்ற நாடுகளுள் சிறந்தன கொங்கு நாடும் பூழிநாடும் ஆகும். பண்டை நாளில் மூவேந்தர் போர்நசை தோன்றுவதற்குப் பெருங்காரணமாய் இருந்தது இக் கொங்குநாடு.[1] இந் நாட்டைச் சுற்றிலும் போர் வெறிகொண்ட மறவர் பலர் வாழ்ந்து வந்தனர். இத் தகைய பகுதியைத் தன் குருதிதோய்ந்த வேலின் திறத்தால் வென்று ஆண்டான் குட்டுவன்.[2] அவன் ஆட்சியின் கீழ்ப்பட்ட இந்நாடு வேறு பல்வளமும் உடையதே எனினும் ஆற்று நீர்வளம் அவ்வளவாக இல்லாதது. எனவே கொங்குநாட்டு மக்கள் பெரிதும் கிணறுகளில் ஊறும் ஊற்றுவளத்தையே நம்பி வாழ்ந்தனர். கொங்கு நாட்டின் சிறந்த செல்வங்களுள் ஒன்றாக இருந்தது கால்நடைச் செல்வமே ஆகும். கொங்கு நாடு மேட்டு நிலப்பகுதி.

---

1. Cera Kings : K. G. S. Aiyar, Page, 33-34.

2. குட்டுவன் தான் கைப்பற்றிய இப் பகுதிகளைத் தன் ஆணைக்கு உட்பட்டு கருவூரிலிருந்து ஆளுமாறு கருவூர் ஏறிய ஒள்வாட் கோப்பெருஞ்சேரல் இரும்பொறையை நியமித்தான் என்பர் (Cera Kings : K. G. S. Aiyar, Chap. II, Page, 33-35.)

எனவே அங்கு ஆனிரைகட்கு வேண்டும் நீர் கிடைத்தல் அரிது. அதனால் கொங்கர்கள் கூரிய இரும்புக் கோடரிகளைக்கொண்டு நிலத்தை அகழ்ந்து மிக ஆழ்ந்த கிணறுகளைத் தோண்டுவர். அப் பிள்ளைக் கிணறுகளில் நீண்ட கயிறுகளில் பிணைக்கப்பட்ட சிறிய முகவைகளைக் கட்டிவிட்டு நீர் முகப்பர். கொங்கு நாட்டில் நீர் கிடைத்தல் அருமையால் வேட்கைகொண்டு அலையும் ஆனிரைகள் முகவைகளைக் கண்டவுடனே அவற்றின் குறுமையும் நீர்மையும் நோக்காது மொய்க்கும் அவ்வாறு மொய்ப்பனவற்றுக்குக் கொஙகர் நீர முகந்து உண்பிப்பர். பசுவளமிக்க கொங்கு நாட்டின் நிலை இததகையதாகும்.

“பொன்செய் கணிச்சித் திண்பிணி உடைத்துச்
சிரறுசில ஊறிய நீர்வாய்ப் பத்தற்
கயிறுகுறு முகவை மூயின மொய்க்கும்
ஆகெழு கொங்கர் நாடகப் படுத்த
வேல்கெழு தானை வெருவரு தோன்றல்!”
(பதிற்றுப்பத்து, 22 : 12-16) பூழி நாடு

கொங்கு நாட்டைப்போல் குட்டுவனின் வெற்றிக்கு இலக்கான நாடுகளில் மற்றொன்று பூழிநாடு[1] ஆகும். இந் நாடு கொடுந் தமிழ்நாடு பன்னிரண்டனுள் ஒன்றாகக் கூறப் படும். இது மலபார் மாவட்டத்தில் உள்ள பொன்னானித் தாலுக்காவில் அடங்கியது என்பர். இந் நாடு பண்டு நன்னன் குடியினரால் ஆளப்பட்டு வந்தது என்றும் அந் நாட்டார் அடுத்தார்க்குத் துன்பம் இழைக்கச் சிறிதும் பின்வாங்காத மறவர் மக்கள் என்றும் கூறுவர்.[2]

பூழி நாட்டில் சிறப்புடன் வாழ்ந்த குடியினர் ஆயர் ஆவர். இவர்கள் மிகப்பெரிய ஆனிரைகளையும் கணக்கற்ற களிறுகளையும் கொண்டிருந்தனர். 'செருப்பு' என்னும் மலைக்கு உரியவராய் இருந்தனர். இவர்கள் முல்லைப் பூவா

1. Malabar Manual: Vol. I p. p. 647, 666.
2. Cera Kings: K. G. S. Aiyar, Page 33.

லாய கண்ணியணிந்து ஆனிரைகளைப் புல் நிறைந்த பரந்த வெளிகளில மேய விட்டுவிட்டு, காட்டில் வீழ்ந்துகிடக்கும் மணிகளைப் பொறுக்கிவருவர். மலை வளமும் மணி வளமும்

பசும்புல் வளமும் நிறைந்த பூழிநாடு இத்தன்மையதாகும்.

"முல்லைக் கண்ணிப் பல்லான் கோவலர்
புல்லுடை வியன்புலம் பல்லா பரப்பிக்
கல்லுயர் கடத்திடைக் கதிர்மணி பெறூஉம்
மிதியற் செருப்பிற் பூழியர் கோவே!"
(பதிற்றுப்பத்து, 21 : 20-23)

அயிரைமலை

இனி, ஒரு நாட்டுக்குச் சிறந்த அணிகலன்கள் அரண்கள் என்று ஆன்றோரால்[1] போற்றப்படும் மலை அழகினையும் ஆற்று வளத்தையும் ஆசிரியர் எவ்வாறு போற்றியுள்ளார் என்று நோக்குவோம. சேரநாட்டைச் சேர்ந்த மலைகளுள் அயிரைமலை[2] சிறப்பு வாய்நததாகும. இதனைச் சூழ்ந்த பயந்தழீஇய நாட்டைத் தம் வயமாக்கிக் கோடலை விரும்பிப் போதரும் பகைவேந்தர் போர் செய்து எளிதில் மேல்வாராவாறு குறுக்கே அரண்போல் செங்குத்தாய் நிற்கும் இம்மலை.[3]

வற்றாத வளங்கொழிக்கும் தமிழகத்து ஆறுகளுள் ஒன்று பேரியாறு ஆகும் இவ் வாற்றின் அழகை,

"கோங்கம் வேங்கை தூங்கிணர்க்

கொன்றை

நாகந் திலக நறுங்கா ழார

1. (i) இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணு நாட்டிற் குறுப்பு. (குறள்: 737)

(ii) மணிநீரு மண்ணு மலையு மணிநிழற்
காடு முடைய தரண். (குறள்: 742)

2. (i) இது யானைமலைத் தொடர்களுள் ஒன்று; ஐவர்மலை என்று இக்காலத்து வழங்குவது. சேரவேந்தர் செய்யுட்கோவை பக்கம், X. (ii) Cera Kings: K. G. S. Aiyar, page, 15.

3.

"சீருடைத் தேஎத்த முனைகெட விலங்கிய
நேருயர் நெடுவரை யயிரைப் பொருந."
(பதிற்றுப்பத்து, 21 : 28-29)

முதிர்பூம் பரப்பி னொழுகுபுன லொளித்து
மதுகர ஞிமிறொடு வண்டினம் பாட
நெடியோன் மார்பி லாரம் போன்று
பெருமலை விலங்கிய பேரியாறு......" (சிலப், 25 : 17-22) என்று இளங்கோ அடிகள் புனைந்துரைத்துள்ள திறம் நினைந்து நினைந்து

மகிழ்தற்குரியதாகும். வானம் பொய்ப் பினும் தான் பொய்யா வளம்படைத்த இத்தகைய பேரியாறு பாலைக்கௌதமனார் உள்ளத்தைக் கவராமல் போகுமோ? 'கோடை நீட்டித்ததால் குன்றுகள் பொலிவிழந்து தோன்ற, அருவிகள் பொழியாது வற்றியுலர்ந்த பெரிய வறட்சிக் காலத்தும் கரையளவு உயர்ந்து நீர் பெருகி வழிந்து இழியும அகன்ற இடத்தையுடைய பேரியாறு' என்னுங் கருத்தமைய பாடுகின்றார் புலவர்.[1]

10. தெய்வங்கள்

இயற்கை வளங்களால் செழிப்புற்று விளங்கும் ஒரு நாட்டின் மக்களைப் பசியும் பிணியும் பகையும் தீண்டுவது அரிது. அமைதி அரசோச்சும் நாட்டில் உயர்ந்த நாகரிகம் ஓங்கி வளர்தல் இயற்கை. சிறந்த நாகரிகத்தின் மணிமுடியே மாசற்ற சமயநெறி. பழந்தமிழ் மக்களின் வாழ்க்கையைச் சங்க இலக்கியத்தைக்கொண்டு துருவி ஆராய்வார் அவர்பால் உயர்ந்த சமயநெறிகள் குடிகொண்டிருந்தன என உணர்தல் ஒருதலை. ஈண்டுப் பாலைக்கௌதமனார் பாடல்களில் வரும் இரு தெய்வங்களைப்பற்றிய குறிப்புக்களை மட்டும் ஓர்வோம்:

முருகன்

குட்டுவனின் கூற்றை ஒத்த வலியுடை வீரர்கள் போரிட்டு அழித்த நாடுகள் முருகவேள் வெகுண்டு பொருது அழித்தலால செல்வக்களியிழந்த சூரனின்

1. 'கோடை நீடக் குன்றம் புல்லென
அருவி யற்ற
நிவந்துகரை

பெருவறற் காலையும்
யிழிதரு நனந்தலைப் பேரியாறு.' 80
(பதிற், 28: 8-10)

பதிற்றுப்பத்துச் சொற்பொழிவுகள்

மூதூர் போலும் என்று குறிப்பிட்டுள்ளார். இப்பகுதியைப் படிப்பார்க்கு மிகப்பழைய நாளிலேயே தமிழகத்தில் தெய்வவழிபாடு பற்றி அதை ஒட்டிய புராணக் கருத்துக்களும் வழக்காற்றில் இருந்த வாய்மை புலனாகும்.

கொற்றவை

முப்பதாம் பாடலில் பாலைக்கௌதமனார் போருக்குப் புறப்படும் சேரவேந்தன் 'முரசுறை' கடவுட்குப் பலியூட்டும் செய்தியினைச் சித்திரித்துள்ளார் என்று முன்னமே கண்டோம். அமமுரசுறை கடவுள் வீரர்க்கு வெற்றிதரும் கொற்றவைத் தெய்வம் என்று கருதுவர் அறிஞர்.[1] மேலும் 'தன்னாட்டு அயிரை மலையிலுள்ள கொற்றவைக் கடவுளைத் தன் முன்னோர் போலவே பலியிட்டு வழிபட்டு வந்தான் குட்டுவன்' என்பர்.[2]

11. விலங்கினங்களும் பறவையினங்களும்

யானை

பாலைக்கௌதமனார் பாடல்களில் விலங்குகளையும் பறவைகளையும் பற்றிய குறிப்புக்கள் பல உள்ளன. அவற்றை ஈண்டு ஆராய்வோம். யானைப்படையை மிகுதியாக வைத்து இருந்தமையால், 'பல யானைச் செல்கெழு குட்டுவன்' என்ற பெயரையே ஒரு சேரவேந்தன் அடைந்தான் என்றால் யானைகட்கு - யானைப்படைக்கு அந்நாளில் இருந்த மாட்சியினை என்னென்று உரைப்பது![3] இனி இவ்வளவு சிறப்பமைந்த விலங்கை - விலங்குகளுள் பெரிய விலங்கை-புலவர் எவ்வாறெல்லாம் கூர்த்து நோக்கி அதன் அழகையும் ஆண்மையையும் சுவைத்துள்ளார் எனக் காண்போம். படைகளுள் சிறந்தது யானைப்படை[4] மாற்றார் அணிவகுப்பைக் கிழித்துச்சென்று ஏனைய படைகள்

---

1. Cera Kings K. G· S. Aiyar. Page 16.
2. சேரவேந்தர் செய்யுட்கோவை : பக்கம், XI.
3. பதிற்றுப்பத்து : 29: 14.
4. இனியது : 40.

உள்ளே நுழையுமாறு செய்யும் ஆற்றல் யானைப் படைக்கே உரியதாகும். பழந்தமிழ்நாட்டில் யானைகள் போருடற்றுவதில் தலைசிறந்து விளங்கின.[1] போர்க்குச் செல்லும் யானைக்குப் (பொன்னரி மாலை, ஓடை, கிம்புரி) முதலிய அணிவிப்பர்[2] அவ் யானைகள் மதஞ்சொரியும் தலையும், பசிய கண்களும்,[3] கடுத்த பார்வையும் உடையனவாய் விளங்கும். அவற்றால் மிதித்து அழிக்கப்பட்ட வயல்கள் பின்னா வளம் பயத்தல் இலவாகும்[4]

குதிரை

அரசனின் நால்வகைப் படைகளுள் குதிரைப்படையும் ஒன்று. போர்க்குச் செல்லும் விரைந்த செலவுடைய குதிரைகள் தலையாட்டத்தை அணிந்து விளங்கும்.[5]

பசு

பழந்தமிழ் நாட்டின் சிறந்த கால்நடைச் செல்வம் பசுக்களாகும். நம்முன்னோர் இச்செல்வத்தைப் போற்றிப் பாதுகாப்பதில் கண்ணுங்கருத்துமாய் இருந்தனர். அவர்கள் ஆ காத்து ஓம்பிய அழகினைப் பாலைக்கௌதமனர் தம் பாடல்களில் சிறப்பாகப் போற்றியுள்ளார்.[6]

எருது

நன்கு

பழந்தமிழ்

போற்றி வளர்க்கப்பட்ட 'நல் எருது'களைப் மக்கள் வண்டிகளில் பூட்டி வெளிச்செல்வர்.

அதுபோழ்து வண்டியின் உருளி சேற்றில் சிக்கிக்கொள்ளு மேல் 'மாட்டாது மடங்கிப் படுக்கும் ஏனை வலியில்லாத

எருதுகளைப் போலல்லாது தம் வன்மை முழுதும் செலுத்தி மூக்கொற்றியும், தாளூன்றியும் அள்ளற் சேற்றி

1. பதிற்றுப்பத்து, 21: 17.
2. பதிற்றுப்பத்து, 22 : 18.
3 பதிற்றுப்பத்து, 22 : 2.
4. பதிற்றுப்பத்து, 25 : 2.
5. பதிற்றுப்பத்து, 22 : 17.
6. பதிற்றுப்பத்து, 21: 21. (ii) பதிற்றுப்பத்து, 22: 15.

னின்றும் நீங்க வலிக்கும்'
வெருதுகள்.[1]
முயற்சியுடையன அவ்
மரையா

மரையா பெரிதும் காடுகளிலே வாழும் தன்மையன;
பெரிய தோற்றம் உடையன ; இணை இணையாகக் காட்சி
அளிப்பன.[2]

கழுதை

பண்டு பகைவர் புலங்களை
கழுதைகளைப் பயன்படுத்தினர் !

ஏர்பூட்டி உழுவதற்குக்

நரி

பாழ் இடங்களில் கவர்த்த வழிகளில் இருந்து

பிணந்
தின்னும் வெள்ளிய குறுநரிகள் பசியால்
கூவும்.[3]

ஊளையிட்டுக்

கூகை

கோட்டான்கள் எனப்படும்

கூகைகளின் கண்கள்
பிதுங்கியன போன்றிருக்கும். இவை கூவும் ஒலி கொடிய
கண்களையுடைய பேய்மகள் கூத்தாடத் துணைபுரியும்.[4]

சிதடு
இலை
சிறு

சிதடு என்பது சிள் வீடென்னும் ஒருவகை வண்டு. இல்லாமல் உலர்ந்த தலையினையுடைய உன்னமரத்தின் சிறு கிளைகளில் பொருந்தியிருந்து இச் சிதடுகள் செய்யும் ஓசை வண்டின் ஓசைபோல் இனிதாய் இராது.[5]

கொக்கு

நீர் நிறைந்த இடங்களில் வாழும் கொக்கின் பார்வை கூர்மையானது. சேய்மையிலிருந்தே நுனித்து நோக்கும்

1. பதிற்றுப்பத்து, 27 : 13.
2. பதிற்றுப்பத்து, 23 : 14.
3. பதிற்றுப்பத்து, 22 : 35.
4. பதிற்றுப்பத்து, 22 : 36.
5. பதிற்றுப்பத்து, 23 : 2.

ஆற்றலுடைய கொக்குகளால் விரைந்து குத்தப்படும் கடுமையினின்றும் மீன்கள் தப்புவது அருமை. எனவே அவை கொக்குகளின் பரிவேட்டுக்குப் பெரிதும் அஞ்சும்.[1]

நாரை

நீர் இடையறாமல் நிற்கும் இடங்களில் தமக்கு வேண்டிய இரையை நிரம்பப் பெறுதலின் அவ்விடங்களில் விரும்பி வாழும் நாரைகள் பெரிய கால்களை உடையன. வளைந்து தலைசாய்ந்து கிடக்கும் நெல்வயலிடத்தே அயிரை முதலிய கொழுத்த மீன்களை உண்டு மகிழும். கானற் சோலைகளில் மீன் வேட்ட மாடிய குருகுகள் வெள்ளிய பூங்கொத்துகளை உடைய புன்னைக் கிளைகளில் தங்கும்.[2] நாரை, செவ்வரி, குருகு, கொக்கு என்பன தமக்கிடையே சிறுசிறு வேறுபாடுகள் உடைய எனினும் ஏறக்குறைய ஒரே இனத்தைச் சேர்ந்த பறவைவகைகள் எனக் கருதுவர்.[3]

ஆண்டலை

ஆண்டலை என்பது 'ஆண்மகன் தலைபோன்ற தலையையும் புள்ளினைப்போன்ற உடலையும் உடையதொரு பறவை' என்பர்.[4] காட்டுக்கோழி என்றும் கூறுவர்.[5] தீய்ந்துபோன காடுகளிலும் வாழும் இயல்பின இவ் ஆண்டலைப் புட்கள்.[6]

காட்டுப்பன்றி

காட்டுப் பன்றியைக் 'களிறு' என்று குறிப்பர் பாலைக் கௌதமனாரும் பிறரும். கொல்லையில் உள்ள கோரையின் கிழங்குகளை உண்டற்கு இப்பன்றிகள் அவ்விடங்களை

1. பதிற்றுப்பத்து, 21 : 27.
2. பதிற்றுப்பத்து, 29 : 4.
3. Tamil Lexicon. Vol II. Page 1014. பார்க்க.

4. (i) பதிற்றுப்பத்து - டாக்டர் உ. வே. சா. பதிப்பு.
பக்கம்-60. பார்க்க.

(ii) Tamil Lexicon, Vol I. Page 221. பார்க்க.

5. பதிற்றுப்பத்து-ஔ. சு. து. பதிப்பு-பக்கம்-108.

பார்க்க.

6. பதிற்றுப்பத்து, 25 : 8.

நன்கு கிளறிவிடும். அதனால் புழுதியாகிய பண்பட்ட புன்செய்க் கொல்லைகளைப் பின்பு கலப்பைகள் கொண்டு உழவேண்டுவதில்லை என்று கூறுவர் ஆசிரியர்.[1]

காக்கையும் பருந்தும்

பிணமுகக்கும் காக்கையின் கண்கள் கரியனவாய் இருக்கும். பருந்தோடு சேர்ந்து காக்கைகள் பெரும் பேயும் சிறு எறும்பும் உண்ண அஞ்சும் பலியையும் உண்ணும்.[2]

12. மரவகை; கோடிவகை; மலர்வகை

தாவர உலகின்மீது சங்கத் தமிழ் புலவர் கொண்டிருந்த காதல் தணியாக் காதல் ஆகும். வாய்ப்பு நேர்ந்த வழியெல்லாம் அவர்கள் ஓங்கி உயர்ந்த மரங்களையும் பரவிப்படர்ந்த கொடிகளையும், அழகே வடிவான மலர்களையும் வருணிக்கத் தவறியதில்லை. அவ்வருணனைகளும் மக்கள் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்த பெருமையுடையனவாகவே விளங்கல் சங்கத் தமிழின் தனிச் சிறப்பாகும்.

பாலைக் கௌதமனார் தம் பாடல்களில் களும், கொடிவகைகளும், மலர் வகைகளும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

மரவகை
அளிக்கும்

நீர்வளம் நிறைந்த நாடுகளில் உள்ள மணல் மலிந்த
பெருந்துறைகளில் மருத மரங்கள் தம்பால் பல புள்ளினங்கள் ஒலிக்க ஓங்கிநிற்கும்; அவற்றோடு காஞ்சி மரங்களும் சிறு மகளிரால் சிதைவுண்ட கோலத்தோடு காட்சி அளிக்கும். காஞ்சி மரங்களைப் போன்றே தாழநின்று பூக்கும் இயல்புடைய முருக்க மரங்களின் மலர்களை மகளிர் கொய்து சிதைக்காராகலின் அவை கீழே வீழ்ந்து வறிதே கிடக்கும்.[3]

1. பதிற்றுப்பத்து, 26 : 2.
2. பதிற்றுப்பத்து, 30 : 39.
3. பதிற்றுப்பத்து, 23 : 18-20.

மூன்றாம் பத்து

நெய்தல் நிலத்தில் தழைந்த ஞாழல் மரங்களும் புன்னை மரங்களும் நிறைந்து காணப்படும்.[1] கானற் சோலையின் கரையில் தாழ இருக்கும் அடும்பங்கொடியைத் திரை அலைத்து ஒதுக்கி இருக்கும்.[2] பீர்க்கங்கொடிகள் பாழ்மனை வேலிகளில் படர்ந்திருக்கும்.[3]

கார் காலத்தில் மலர்ந்து கற்புடை மங்கையர் போற்றி அணியும் முல்லையும், மகளிர் கைபோலும் காந்தளும், நெருப்பை ஒத்தநிறம் படைத்த முள்ளுமுருங்கை மலர்களும், தாமரை மலர்களும், விளையாடு மகளிர் பறிக்க இயலாத வகையில் பழனத்தில் மலர்ந்திருக்கும் ஆம்பலும், இடையறாது மலர்ந்த குவளையும், வளைக்கை மகளிர் கொய்யும் வள்ளையும், நீலநிற நெய்தல் பூக்களும் பாலைக் கௌதமனார் பாடல்களில் வழங்கும் காட்சியின்பம் கண்டு களித்தற்குரியதாகும்.[4]

பழந்தமிழ் நாட்டின் நானில வளத்தைப் பாலைக் கௌதமனார் சித்திரித்துள்ள பகுதிகளைப் பார்த்தபோதும் கொங்கு நாட்டைப் பற்றியும், பூழி நாட்டைப் பற்றியும் ஆராய்ந்தபோதும் பல்வகை நிலப்பகுதிகட்கும் உரிய மக்களின் வாழ்க்கையை ஒருவாறு கண்டுள்ளோம். ஈண்டுப் பழந்தமிழ்நாட்டு சமூக வாழ்க்கையில் இன்றியமையாத இடம் பெற்றிருந்த வேறு சிலரைப் பற்றி மட்டும் காண்போம்.

13. மக்கள் இனம்

அந்தணர் :

ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்ற அறுவகைத் தொழிலும் உடையராய் இருந்

---

1. *பதிற்றுப்பத்து*, 30 : 1 & 3.
2. *பதிற்றுப்பத்து*, 30 : 6.

3. *பதிற்றுப்பத்து*, 26 : 10.
4. *பதிற்றுப்பத்து*, 21 : 33 ; 21 : 36 ; 23 : 20 ; 23 : 24 ; 27 : 3 ; 27 : 2 - 29 : 2 ; 30 : 2.

23 : 23 ;

தனர் அந்தணர். 'பார்ப்பார்க்கன்றி பிறர்க்குப் பணிபறி யலையே' என்று அரசர்களை நோக்கிப் புலவர்பாடும் தகைய தாய் அவர்கள் வாழ்க்கை அமைந்திருந்தது.[1]

வேள்விகள் இயற்றும் வழக்கம் சங்ககாலத் தமிழகத்திலேயே மலிந்துவிட்டது என்றால் மிகையாகாது. அவ்வாறு அந்நாளில் வேள்வி இயற்றிய பெரியார் சொல்லிலக்கணத்தையும் பொருள் இலக்கணத்தையும் சோதிடத்தையும் வேத ஆகம நூல்களையும் மாசறக்கற்றிருந்தனர். கற்ற கல்வியின் பயனாகப் பிற உயிர்கட்குத் தீங்கு செய்வதை நினைப்பிலும் கொள்ளாத நற்றவத்தோராய் அவர்கள் திகழ்ந்தனர். பகலவனை ஒத்த வாய்மை நெறி வழுவாத வீரர்களாய் இருந்த அவர்கள் வேள்வித் தீ மூட்டி வழி பாடு ஆற்றுங்கால் அவர்கள் உள்ளத்தெழுந்த விருப்பம் மெய்யின்கண் பரந்து வெளிப்படும்.[2]

வீரர்

பண்டு தமிழ்நாட்டின் வேலியாகத்

திகழ்ந்தவர்கள்

இவர்களே. புலித்தோலால் ஆகிய உறையில் புலால்நாறும் தங்கள் வாளை வைத்திருப்பர்; நாளும் போரை விரும்பு வர்; வலக்கையில் வாளுயர்த்திப் பகைவர் அரண்களை அழித்து வெற்றிகொள்வர்.[3] எமனை ஒத்தமொய்ம்பும் பின்னிடாப் போர்த்தொழிலும் உடையவர். பிளத்தற்கு அரிய பகைவரின் யானைப் படையையும் கிழித்து உட் புகுந்து போருடற்ற வல்லவர். குருதிக்கறை படிந்த கழற் காலும் கடுமாப்போலும் விரைந்த செலவுமுடைய வீரர்கள் அவர்கள்.

மழவர்

பழந்தமிழ் வீரர்களுள் தனிச்சிறப்பு மழவர். இவர்கள் வெட்சி, கரந்தை, வஞ்சி,

வாய்ந்தவர்

உழிஞை,

1. பதிற்றுப்பத்து, 24 : 6-7.
2. பதிற்றுப்பத்து, 21 : 1-7.
3. பதிற்றுப்பத்து, 24 : 2-5.

தொச்சி, தும்பை, வாகை எனப் போர்க்குரிய கண்ணிகள் பலவற்றையும் அணிவர். ஒருவகை வீரர்களாகிய இவர்கள் குதிரைப்படையை வைத்திருந்தார்கள். போருட்றுவதில் தனிச்சிறப்பு வாய்ந்தவர்கள்.

பாணர்

கலைமலிந்த நாடு பழந்தமிழ் நாடு. இசையையும் கூத்தையும் போற்றிப் பழந்தமிழ் நாட்டின் கலைச்சிறப்பை நாளும் செழுமை உடையதாக்கியவர்கள் வயிரிய மக்களே ஆவர். பை ஒன்றில் தங்கள் இசைக்கருவிகளைத் தொகுத்துக் கட்டியிருப்பர். குற்றமற்ற திவவுயாழினையுடைய வயிரியர் அவ்யாழைப் பண்ணொடு பொருந்த எழுப்பி ஊர்மன்றத்தை அடைந்து மறுகுகளின் சிறைக் கண்ணே நின்று பாடுவர். வரிசை அறிந்த வள்ளல்கள் வழங்கும் பரிசில்களைப் பெற்று இவர்கள் மகிழ்ச்சியால் ஆடுவார்கள்; பாடுவார்கள்.

14. இலக்கியவளமும் நயமும்

பாலைக்கௌதமனார் பாடல்களில் உள்ள இலக்கிய வளம், அவர் பாடல்களை ஊன்றிப் படிப்பார்க்குக் கழி பேருவகை அளிப்பதாகும். அணிகளுள் எல்லாம் சிறந்த அணி உவமை அணியாகும். எனவே இவண் மூன்றும் பத்திலுள்ள உவமைகளின் சிறப்பை மட்டும் சிறிது நினைவு கூர்வோம்.

1. "காலை யன்ன சீர்சால்
வாய்மொழி." (பதிற், 21 : 4)

2. “வேயுறழ் பணைத்தோள்.” (பதிற், 21 : 37)

3. “ஒரீஇயின போல இரவுமலர் நின்று
திருமுகத் தலமரும் பெருமதர் மழைக்கண்.” (பதிற், 21 : 34-35)

4. “முருக்குத்தாழ் பெழிலிய நெருப்புற ழடைகரை.” (பதிற், 23 : 20)

5. “அழன்மருள் பூவின் றாமரை.” (பதிற், 23 : 23)

6. “நெடுவயி னொளிறு மின்னுப்பரந் தாங்குப்
புலியுறை கழித்த புலவுவா யெஃகம்.” (பதிற், 24: 1-2)

7. “அடைச்சேம் பெழுந்த வாடுறு மடாவின்.” (பதிற், 24 : 20)

8. “உருமுறழ் பிரங்கு முரசிற் பெருமலை
வரையிழி யருவியி னொளிறுகொடி நுடங்க.” (பதிற், 25 : 10-11)

9. “முருகுடன்று கறுத்த கலியழி மூதூர்

உரும்பில் கூற்றத் தன்னநின்
திருந்துதொழில் வயவர்." (பதிற், 26 : 12-15)

10. "அரக்கத் தன்ன நுண்மணல்." (பதிற், 30 : 27)

என வருஉம் உவமைகள் உன்னப் உன்ன பேரின்பம் தரு
வன.

பயில்தொறும் பண்புடையார் தொடர்புபோல நவில் தொறும் நயம்மிகப் பயக்கும் இரு இடங்களை மட்டும் இங்கே காண்போம்.

பூழி நாட்டில் 'செருப்பு' என்று பெயர் தாங்கிய மலை ஒன்று உளது. அவ்வாறே 'அயிரை' என்ற பெயர் தாங்கிய இலக்கியப் புகழ் சிறந்த மலை ஒன்றும் உளது. இவ்விரு மலைகளைப்பற்றிக் குறிப்பிடும்போதும் 'மிதியாகிய செருப்பல்லாத செருப்பென்னும் மலை' என்றும், 'கொக்கிற்கு அஞ்சா (மீன் அல்ல ஆதலால்) நெடிய அயிரை மலை' என்றும் ஆசிரியர் சொற்பொருள் நயம் ததும்பப் பாடும் திறம் தமிழ்மொழியின் அழகையும் புலவரின் நுண்மாண் நுழைபுலத்தையும் புலப்படுத்துகின்றன.

15. பெயர்க்காரணம்

பதிற்றுப்பத்தில் உள்ள ஒவ்வொரு பாடலுக்கும் அப்பாடலில் உள்ள சிறந்த சொற்றொடர் ஒன்றின் காரணமாக அழகிய பெயர் அமைந்துள்ளது என்று தொடக்கத்திலேயே கண்டோம் அல்லவா? அதன்படி மூன்றாம்பத்

தில் உள்ள பத்துப் பாடல்கட்கும் பத்து அழகிய பெயர்கள் அமைந்துள்ளன.[1] அப் பெயர்களையும் அவை அமைந்த காரணங்களையும் ஈண்டுக் காண்போம்.

1. அடுநெய் ஆவுதி

சேரன் தலைநகரில் இருபெரு வேள்விகள் நடைபெற்றன. ஒன்று வேத வேள்வி; மற்றொன்று விருந்துவேள்வி எனக் கண்டோம் அன்றோ? விருந்து போற்றும் இல்லற வேள்வியில் விருந்தினரை உண்பித்தற்குச் சமைக்கப்படும் உணவின்கட் பெய்யப்படும் நெய்யை 'அடுநெய் ஆவுதி' என்று புலவர் சிறப்பித்துள்ளமையால் இப் பாட்டு இத் தொடராற் பெயர்பெற்றது.

2. கயிறு குறுமுகவை

ஆற்றுநீர் வளமற்ற கொங்குநாட்டில் பிள்ளைக் கிணறுகளில் நீண்ட கயிறுகளில் சிறிய முகவைகளைப் பிணைத்துப் பயன்படுத்துவர், 'தன்னால் நீர் வாங்குவது பெரிதன்றித் தன் கயிற்றையே நின்று வாங்கப்படும்

முகவை'களாக அவை விளங்கும். அவற்றை 'கயிறுகுறு முகவை' என்று கவிஞர் சிறப்பித்துள்ளமையால் அச் சொற்றொடரே இப் பாட்டிற்குப் பெயராற்று.

3. ததைந்த காஞ்சி

விளையாட்டு மகளிர் பலரும் தளிரும் முறியும் தாதும் பூவும் கொய்தலால் சிதைவுபட்டுக் கிடக்கும் காஞ்சி மரத்தை 'ததைந்த காஞ்சி' என்றார் புலவர். அச் சொற்றொடரே இப் பாட்டிற்கு அமைந்த பெயர் ஆயிற்று.

4. சீர்சால் வெள்ளி

ஏனைய கோளினும் நாளினும் வெள்ளி மிக்க வொளி யுடையது. அது சிறிது வடக்கே ஒதுங்கித் தாழ்ந்து

1. இப் பகுதி பற்றிய விரிவான விளக்கங்கட்குப் பதிற்றுப் பத்து டாக்டர். உ. வே. சாமிநாதஐயர் அவர்களின் பதிப்பையும், ஔவை. சு. து. அவர்களின் பதிப்பையும் காண்க.

விளங்குதலின் 'வறிது வடக்கிறைஞ்சிய வெள்ளி'

என்றும்
அது மழைவளந்தரும் கோள்களில் தலைமையாயதாதலின், ‘சீர்சால் வெள்ளி’யென்றும் வழங்கும் சிறப்புடையதெனினும் ஏனைக் கோள்களுடன் கூடியிருந்தாலன்றி மழை வளம் சிறவாமை தோன்றப் ‘பயங்கெழு பொழுதொடு ஆநியம் நிற்ப’ என்று விதந்தும் கூறியுள்ளார் ஆசிரியர். இத்தகைய பெருமைக்குரிய ‘சீர்சால் வெள்ளி’ பாட்டினும் பெற்றுள்ள சிறப்பிடம் கருதி இச் சொற்றொடரே இப் பாட்டிற்குப் பெயராயிற்று.

5. கானுணங்கு கடுநெறி

காட்டுத்தீயால் வெந்து கரிந்துகிடக்கும் நிலத்தில் உள்ள அஞ்சத்தக்க வழியை ‘கானுணங்கு கடுநெறி’என்று ஆசிரியர் கூறியுள்ளமையான் இப் பாட்டிற்கு இச் சொற்றொடரே பெயராயிற்று.

6. காடுறு கடுநெறி

முள்ளும் தழையும் மண்டி எவ்வுயிரும் நடந்துசெல்ல ஒண்ணுக் கடுமையதாய் உள்ள காட்டு வழியினைக் ‘காடுறு கடுநெறி’ என்றூர் ஆதலின் இப் பெயர் அமைந்தது.

7. தொடர்ந்த குவளை

‘ஆண்டுகள்தோறும் இட்டு ஆக்கவேண்டாது பண்டு இட்டதே ஈடாக எவ்வாண்டிற்கும் தொடர்ந்து’ செழித்து வளர்ந்து விளங்கும் குவளைமலர்க் கூட்டத்தைத் ‘தொடர்ந்த குவளை’ என்றமையால் இப் பெயர் அமைந்தது.

8. உருத்துவரு மலிர்நிறை

சேர நாட்டின் சிறந்த ஆறுகிய பேரியாறு பெருக் கெடுத்துப் பொருவது குறித்துக் கண்ணியும் மாலையும் சூடிவரும் மள்ளர்போல் தழைகள் தாங்கிவரும் காட்சியை 'உவலை சூடி உருத்துவரு மலிர்நிறை' என்றார். அதனால் இப் பெயர் அமைந்தது.

மூன்றாம் பத்து

9. வெண்கை மகளிர்

வளையணியாத வெறுங்கையுடைய மகளிரை 'வெண்கை மகளிர்' என்றமையால் இப் பெயர் அமைந்துள்ளது.

10. புகன்ற வாயம்

மாற்றார் படைப்பெருக்கை எதிரூன்றி நின்று தடுத்துப் பற்றிச் சிறைசெய்து வெற்றியுற்ற வீரர் கூட்டம் மேலும் அச்செயலையே விரும்புதல்போல் நீர்ப்பெருக்கை அணையிட்டுத் தடுத்து ஆரவாரிக்கும் மக்கள் கூட்டத்தைப் 'புகன்றஆயம்' என்று சிறப்பித்ததால் இப் பெயர் வந்தது

பாலைக்கௌதமனார் திருவுள்ளம்—தமிழ் உள்ளம்—போர் விரும்பாப் பெரு உள்ளம்—இயற்கைத் தேனுண்டு பாடும் இன்ப உள்ளம்—வறுமைக்கும் எளிமைக்கும் இரங்

கும் விழுமிய உணர்வுள்ளம்—வீரத்தையும் கருணையையும் கண்டு இறுமாப்பும் இறும்பூதும் கொள்ளும் சிறந்த உள்ளம்—அவர் பாடல்களில் உள்ள ஒவ்வொரு சொல்லிலும் விளங்கக் காண்கிறோம். ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக அவர் உள்ளத்தில் இருந்த பேருணர்வு அவர் கருத்தைக் கவர்ந்த குட்டுவனைப் பற்றியதே ஆகும் என்றால் மிகையாகாது.

பல்யானைச் செல்கெழுகுட்டுவன் தன் காதல் மனைவியுடன்—பெருந்தேவியுடன் இருந்த காட்சி, புலவர் பெருமானுக்குக் கண்ணிறைந்த காட்சியாக விளங்கியிருத்தல் வேண்டும் என்பது அவர் பாடல்களில் இரண்டு இடங்களில் வரும்
கற்புடைய

இனிய குறிப்புக்களினால் நன்கு புலனாகிறது பெருந்தேவியின் சிறப்பை—அழகை—எல்லாம் குறிப்பாகவும், வெளிப்படையாகவும் பக்தியோடு போற்றிய பாலைக்கௌதமனார் இறுதியாக,

... ... 'இவளோடு
ஆயிர வெள்ளம் வாழிய பலவே.'
(பதிற்றுப்பத்து, 21 : 37-38

என்று வாய் நிறைந்த சொற்களால் வாழ்த்தும் பகுதியைப் படிக்கும்போது நம்மை அறியாமல் நம் மனம் உருகிவிடுகிறது. பழந்தமிழ்ப் புலவரின்—கலையுள்ளம்—கடவுள் உள்ளம்—நம்மை ஆட்கொண்டுவிடுகிறது. ஆம்; அவர் வாழ்த்திய வாழ்த்து வீணாகிவிடவில்லை. அவரும் அவர் உள்ளத்தைத் திறைகொண்ட மன்னனும் அவன் பெருந்தேவியும் இன்றும்—பாட்டுலகில்—புகழ் வடிவில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். அவ்வண்ணமே தமிழோடு தமிழாய் அவர்கள் புகழுரு என்றும் நிலைத்திருக்கும். பாலைக்கௌதமனார் சேரனை இன்பவாழ்வு வாழும்படி வாழ்த்திய வாழ்த்து, உலகில் உள்ள ஒவ்வொரு உயிரையும் அவ்வாறே வாழுமாறு வாழ்த்திய வாழ்த்தொலிபோல் இன்றும் நம் செவிகளில் எதிரொலிக்கின்றது. அதுதான் நிறைமொழி மாந்தர் மறை நிகர்த்த மொழியின் ஆற்றல் போலும்!

17. உயர்ந்த உண்மை

உலகமெல்லாம் வாழவேண்டும் என்ற ஒரு பெருங் குறிக்கோளுடன் உலக உயிர்கட்கு எல்லாம் உயிராய்—தாயாய்—தெய்வமாய் விளங்கிய அரசனை வாழ்த்திய பாலைக்கௌதமனார் மன்பதை உய்யக் கூறிச்சென்ற மணிமொழிகள் பலவாகும். அவற்றுள் இன்றும் நமக்குப் பெரிதும் பயன்படக்கூடிய சிறந்த ஒரு உண்மையில் மட்டும் இப்பொழுது சிந்தனையைச் செலுத்துவோம். இன்று நாம் வாழும் யுகம் 'அரசியல் யுகம்'—அரசியல் கலவாத எதுவும் விளங்காமற் போகும் காலம் இது. இத்தகைய யுகத்தில் ஒரு நாட்டின் அரசியல் பழுதின்றி உலகம் போற்றத்தக்க வகையில் நடைபெறுவதற்குரிய ஒரு நல்லறிவுரையை—ஒப்பிலாத மணிமொழியை—வழங்கி நிற்கிறது மூன்றும் பத்தின் இரண்டாம் பாடலின் முதல் நான்கு அடிகள். 'கையிகந்த சினமும் கையிகந்த காமமும் கையிகந்த கண்ணோட்டமும் பகைவர்க்கு அஞ்சி நடுங்கலும், பொய்மொழியும், அன்புமிக வுடைமையும், வரம்பு மீறிய தண்டனைகளை வழங்கலும் இவ்வுலகத்தே

அறமறிந்து செய்யும் அரசுமுறை நடத்தற்குப் பெரிய வழி யடையாக நிற்கும் தீங்குகளாகும்.) பல்காலும் சிந்தித்துப் பயன் காணக்கூடிய சிறந்த ஓர் அறிவுரையை செந்தமிழ் நலம் மிக்க ஒரு பாட்டில் புலவர் எவ்வளவு அழகாகப் பொதிந்து வைத்துள்ளார் பாருங்கள்.[1] பாலைக் கௌதமனார் கூறிய அறிவுரை ஈராயிரம் ஆண்டுகட்குமுன் வாழ்ந்த முடிகெழு மூவேந்தர்களுள் ஒருவனுக்குத்தான். ஆயினும் 'எல்லாரும் இந்நாட்டு மன்னராகி'யுள்ள இந் நாளில்—முடியரசு தொலைந்து குடியரசு மலர்ந்துள்ள இந் நாளில்—முன்னினும் ஈராயிரம் மடங்கு அதிகமாகவே பாலைக்கௌதமனார் சொல்லிச்சென்ற பேருண்மையை நாம் போற்றிப் பயன்படுத்த வேண்டிய இன்றியமையாத நிலையில் இருக்கின்றோம். பாலைக்கௌதமனார் நமக்குச் சொல்லிச்சென்ற அறிவுரை மிகச் சிறந்தது; பயனுடை யது. வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் அவ்வுண்மை வழி நின்று நாம் நம் தாயகத்தை—தமிழகத்தை உலகின் கண்களில் உயர்த்துவோமாக! நம் தமிழன்னையின் 'நெஞ்சு மணி உவகை'யைப் பெறுவதற்கு அதனினும் சிறந்த தொண்டு உலகில் உண்டோ?

மூன்றும்பத்தின் ஆசிரியராகிய பாலைக்கௌதமனார் எத்தனையோ அருந்தமிழ்ப் பாடல்களை இயற்றி இருக்கக் கூடும். பாலை பாடுவதில் வல்லவராதலால் இவரைப் பாலைக்

கௌதமனார் என்று சிறப்பித்து வழங்கினர் என்று கூறுவர். ஆயினும் மூன்றாம்பத்துப் பாடல்களைத் தவிர புலமை நலங் கனிந்தொழுகுந் தன்மையனவாய் இவர் பாடிய வேறு பாடல்களைச் சங்க இலக்கியத் தொகுதியினுள் காணக்கூடவில்லை. கருத்து வேறுபாடின்றிப் பாலைக்கௌதமனார் பாடியனவாகவே இன்று நாம் நம்பக்கூடிய பாடல்கள்

---

1. "சினனே காமங் கழிகண் ணோட்டம்
அச்சம் பொய்ச்சொல் அன்புமிக வுடைமை
தெறல் கடுமையொடு பிறவு மிவ்வுலகத்
தறந்தெரி

திகிரிக்கு வழியடை யாகும்."
(பதிற்றுப்பத்து, 2 : 1-4)

பதிற்றுப்பத்திலுள்ள மூன்றும் பத்துப் பாடல்களே.[1] இப் பத்துப் பாடல்களும்—247 வரிகளும் இல்லையானால் நாம் ஒரு பெரு வேந்தனைப்பற்றிய செய்திகள் எதையும் அறிந்திருக்கமாட்டோம். அவ்வாறே பாலைக்கௌதமனார் என்ற சிறந்த சான்றோரைப் பற்றியும் ஒரு சிறிதும் தெரிந்திருக்க மாட்டோம். இதை எண்ணும்போதே நம் மனதில் ஒரு வகையான பயமும் பத்தியும் கலந்து கலந்து தோன்றுகிறதல்லவா?

பதிற்றுப்பத்தும் அதன் பழைய உரையும் தமிழ் மக்கட்குக் கிடைத்த அழியாப் பெருஞ்செல்வம். அச் செல்வத்தை உடைமையாலேயே நாம் 'செல்வர்கள்' என்ற இறுமாப்போடு வாழலாம். அச் செல்வத்தின் பெருமையை நமக்கு முதன் முதலாக எடுத்துக்காட்டிய பெருமை காலஞ்சென்ற தமிழ்க்கடலாகிய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களையே சாரும். அப்பெரியார்க்கும், அவர் பதிப்பித்த அந் நூலின் துணைகொண்டு சங்கத் தமிழின் வரலாற்றுச் சிறப்பை வையகமெல்லாம் அறியுமாறு 'சேர

வேந்தர்' பற்றி அரிய ஆராய்ச்சி நூல் எழுதிய அறிஞர் திரு. கே. ஜி. எஸ். ஐயர் அவர்கட்கும், அண்மையில் பதிற்றுப் பத்துக்கு விளக்க உரை கண்டு விழுமிய தொண்டாற்றி யுள்ள திரு. ஒளவை. சு. து. அவர்கட்கும், அறிஞர்கள் ஏட்டளவில் செய்த முயற்சியை எல்லாம் நாட்டு மக்களின் இயக்கமாக மாற்றிவருபவரும் இப் பதிற்றுப்பத்து மாநாட்டைக் கூட்டுவித்த நற்றமிழ்த் தொண்டருமாகிய திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்கட்கும் தமிழகம் என்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளது.

வாழ்க சங்கத் தமிழ்!

---

1. (i) பாடினோர் வரலாறு: பதிற்றுப்பத்து, டாக்டர். உ. வே. சா. பதிப்பு (1941) பார்க்க.

(ii) புறநானூறு—ஒளவை சு. து. பதிப்பு பக்கம் - 336 பார்க்க.

நான்காம் பத்து

[வித்துவான், திரு. தணிகை. உலகநாதன்]

1. முன்னுரை

கலைபயில் தெளிவும் கட்டுரை வன்மையும்மிக்க

தலைவர் அவர்களே ! தமிழ் கூறும் நல்லுலகத்துச் சான்றோர்களே! வணக்கம். அன்னை மொழியே ஆட்சி மொழியாக வேண்டுமென்னும் உரிமை எண்ணம் தமிழ் மக்கள் ஒவ்வொருவரது உள்ளத்திலும் கிளர்ந்தெழும் இக் காலத்தே தமிழகத்துத் தலைநகரில் தமிழ்க்காவலர் தலைமையில் ஓர் இலக்கியத் திருவிழா நடைபெறுவது கண்டு பேரின்பம் அடைகின்றேன்; பெருமிதம் கொள்ளுகின்றேன். இந்நாள் தமிழ்நாட்டின் பொன்னாள் ஆகும். இன்று இம் மண்டபத்தே நடக்கும் பதிற்றுப்பத்து மாநாடு வெளியூர்களில் வாழும் தமிழ்ப் புலவர்கள் உள்ளமெல்லாம் குடிகொண்டிருக்குமாகலின் இதனை மாநிலமெங்கும் நடைபெறும் மங்கலத் திருநாளாகவே எண்ணிப் பூரிப்புக் கொள்ளுகின்றேன்.

'தமிழ்' 'தமிழ்' 'தமிழ்' என்னும் உணர்வு மிக்கது இக் காலம். 'எங்கும் தமிழ்'; 'எல்லாம் தமிழ்' என்னும் ஆர்வம், படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டு வரும் குடிமக்களாகிய தமிழர்களின் உள்ளத்தே வேரூன்றத் தலைப்பட்டு விட்டது. அவ் வுணர்வு இனி, தழைத்துப் பூத்துக் காய்த்துக் கனிந்து பெரும் பயன் அளிக்கும் என்பது திண்ணம், திண்ணம். இடைக்காலத்தே அயலவர் ஆட்சியில் தமிழன் தன் மொழியை மறந்ததுண்டு; நாட்டை மறந்ததுண்டு; கலையை மறந்ததுண்டு. உரிமை பெற்ற நம்

திருநாட்டில் இன்று மறுமலர்ச்சி காணப்படுகிறது. தமிழ் வளர்ச்சி குறித்த கிளர்ச்சி இன்று யாண்டும் காணப்படுகிறது. கல்லூரிகளிலும் எல்லாப் பாடங்களும் தமிழில் கற்பிக்கப்படுதல் வேண்டுமென்னும் கருத்து அரசியலாரையே ஈர்க்கும் நிலையை இன்று காண்கிறோம். இத்தகைய எழுச்சிக்குக் கருவியாயிருப்பனவற்றில் இதுபோன்ற இலக்கிய மாநாடும் ஒன்று என்பது என் கருத்து. பல்லாண்டுகளாகக் கன்னித் தமிழன்னையை இனிய இலக்கிய மலர்களால் இடையறாது வழிபட்டு வரும் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் இம் மாநாட்டில் நான்காம் பத்தைப் பற்றிப் பேசும் பேற்றை எனக்கு அளித்தமைக்கு நன்றி பாராட்டுகின்றேன்; ஒல்லும் வகையில் என் கடமையை ஆற்றுகின்றேன்.

2. இலக்கியச் செல்வம்

தமிழ் மக்கள் வரலாற்றுப் புகழ் மிக்கவர்கள். கற்பனைக்கும் எட்டாத பழங்காலத்திலிருந்தே தமிழர்கள் ஆட்சிமுறை, நாகரிகம், வாணிபம், வீரம், கொடை, ஒப்புரவு முதலிய துறைகளில் சிறந்து விளங்கினார்கள் என்பதைச் சங்க இலக்கியக் கண்ணாடிகளால் நன்கு அறியலாம். சங்க இலக்கியங்கள் யாவும் பண்டைத் தமிழகத்தின் படப்பிடிப்பாகவே இருக்கின்றன. சிந்தனைச் சிற்பிகளாகிய சங்க காலப் புலவர் பெருமக்கள் தந்த இலக்கியச் செல்வங்கள் இன்றேல் நாம் பழமை உணர்ந்து விழுப்பம் அடைதல் எங்ஙனம்? ஒழுங்கான வரலாற்றுக் கருவிகளைப் பெறாத தமிழ்மக்களுக்குப் பழந்தமிழ் இலக்கியங்கள் சிறந்த சான்றுகளாகப் பயன்படுகின்றன. அவற்றுள் சங்கம் மருவிய பத்துப் பாட்டும் எட்டுத்தொகையும் தலையாயவை என்னலாம்.

3. பதிற்றுப்பத்து

'நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோ(டு) அகம்புற
மென்(று)
இத்திறத்த எட்டுத் தொகை.'

எட்டுத்தொகை நூல்களில் ஒன்றாகிய ஒத்த பதிற்றுப் பத்து என்னும் இவ் இலக்கியம் பண்டைச் சேரமன்னர் களின் வரலாற்றையே சிறப்பாகக் கூறும் அரிய வரலாற் றுக் கருவூலமாகும். மூவேந்தருள்ளும் முதற்கண் வைத்து எண்ணத்தகும் சேர மன்னர்கள் 'குமரியொடு வடஇமயத் தொருமொழி வைத்து உலகாண்ட' பெருமை உடையவர் கள் ஆவார்கள். அவ்வேந்தர்களின் வரலாறுகள் பன் னெடுங் காலமாகவே அறிஞர் பெருமக்களால் ஆராயப் படுகின்றன. அவர்களுக்கு உறுதுணையாக விளங்கும் கருவிகளுள் பதிற்றுப்பத்தே தலையாய தென்னலாம்.

இந்நூல், ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்ச் சேரநாட்டை ஆண்ட சேரமன்னர் பதின்மரைப் பற்றிப் புலவர் பதின்மர் பத்துப் பத்தாகப் பாடிய அகவற் பாக்களின் தொகுதியாகும். இந்நூலின் முதற் பத்தும் பத்தாம் பத்தும் இன்றி, இடையிலுள்ள எட்டுப்பத்துக் களே காணப்படுகின்றன. மிகப் பழங்காலத்திலேயே முதற் பத்தும் பத்தாம் பத்தும் மறைந்துவிட்டன. இந் நூலைத் தொகுத்தோரும் தொகுப்பித்தோரும் இன்னார் என்பதும் தெரியவில்லை.

ஒவ்வொரு பத்தின் இறுதியிலேயும் காணப்படும் பதிகத்தினால் பாட்டுடைத் தலைவன் பெயர், அருஞ் செயல், பாடினார் பெயர், பத்துச் செய்யுட்களின் பெயர், பாடியவர்

பெற்ற பரிசில், அவ்வரசர் ஆண்ட கால அளவு முதலியவற்றை அறிந்து கொள்கிறோம். இவை அகவற்பாவில் தொடங்கி உரைநடையில் முடிகின்றன. இங்ஙனம் அமைந்துள்ள பதிகங்களே பிற்காலத்தே சோழ மன்னர்கள் தங்கள் கல்வெட்டுக்களில் மெய்க் கீர்த்திகளைக் குறிப்பிடுவதற்கு அடிகோலின என்று அறிஞர்கள் கருதுகிறார்கள். ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் காணப்படும் துறை, வண்ணம், தூக்கு, பெயர் என்னும் குறிப்புக்கள் பிற தொகை நூல்களில் காணப்படாத தனிச்சிறப்பாகும். பத்துப்பாட்டுள் ஒன்றாகிய மலைபடுகடாம் என்னும் நூலைப் போலவே இந்நூலும் பொருட்சிறப்புடைய தொடர்

ஒன்றை அவ்வப்பாட்டின் பெயராகக் கொண்டதாகும்.

இங்கு நான் பேசத் தலைப்பட்ட நான்காம்பத்துச் செய்யுட்கள் அந்தாதியாக அமைந்துள்ளன. ஐங்குறுநூற்றின் நெய்தல் எட்டாம்பத்தும் அந்தாதித் தொடையாக

அமைந்திருத்தலைப் புலவர்கள் நன்கு அறிவார்கள். இவற்றால் சங்ககாலச் சான்றோர்களே, பிற்காலப்புலவர்கள் ஆந்

தாதி பாடுதற்கு வழிகாட்டிகளாக இருந்தார்கள் என்பதை அறியலாம். அன்றியும், ஒருபொருள் குறித்துப் பத்துப்பத்துப் பாக்கள் இயற்றும் அழகிய முறைக்கும் அடிகோலியவர்கள் சங்கப்புலவர்களே நூலின் அமைப்பு, தெற்றென விளக்கும்.

என்பதை இந் இந்நூல் தூய

தமிழ்ச்சொற்களால் ஆகியது. கூர்ந்து வரிகளில் 12 பிறமொழிச் சொற்களே

பார்ப்பின், 1800 இதனிற் காணப் படுவதாக அறிஞர் பூரணலிங்கம் பிள்ளையவர்கள் எடுத் துக்காட்டி யுள்ளமை மகிழ்ச்சியை விளைவிக்கிறது.

இவ்வரிய இலக்கியச் செல்வத்தைத் தேடித் தருவிப் பழையவுரையுடன் குறிப்புரையும் சேர்த்து வெளியிட்டுதவிய முதுபெரும்புலவர் டாக்டர் உ. வே. சாமிநாத அய்யர் அவர்களுக்கும் இந்நூற்குச் சொற்பொருள், கருத்து, விளக்கம், இலக்கணக்குறிப்பு, ஒப்பு முதலிய இன்றியமையாக் குறிப்புக்களமைந்த கைவிளக்கனைய அகலவுரை நூலை ஆக்கித்தந்த பேராசிரியர் ஔவை சு. துரைசாமிப் பிள்ளையவர்களுக்கும் தமிழுலகம் என்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளது.

4. பாட்டுடைத் தலைவன் வரலாறு

பதிற்றுப்பத்தில் நான்காம் பத்திற்குரியவன் களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரல். இம் மன்னனைக் குறித்த நான்காம் பத்துப் பதிகம் வருமாறு:

"ஆராத் திருவின் சேரலா தற்கு
வேளாவிக் கோமான்
பதுமன் தேவி ஈன்ற மகன்முனை
பணிப்பப் பிறந்து பல்புகழ் வளர்த்(து)

ஊழின் ஆகிய வுயர்பெருஞ் சிறப்பிற் பூழி
நாட்டைப் படையெடுத்துத் தழீஇ உருள்பூங் கடம்பின்

பெருவாயில் நன்னனை நிலைச் செருவி னாற்றலை
யறுத்தவன் பொன்படு வாகை முழுமுதல் தடிந்து குருதிச்
செம்புனல் குஞ்சரம் ஈர்ப்பச் செருப்பல செய்து செங்க
ளம் வேட்டுத் துளங்குகுடி திருத்திய வளம்படு
வென்றிக் களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்.”

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்கு மனைவியர் இருவர் ஆவர். அவருள் ஒருத்தி, சோழன் - மணக்கிள்ளியின் மகளாகிய நற்சோணை என்பவள். இந்நற்சோணை வயிற்றுதித்த மக்கள் செங்குட்டுவனும் இளங்கோவடிகளும் ஆவர். நெடுஞ்சேரலாதனின் மற்றொரு மனைவி வேளாவிக்கோமான் பதுமன் என்பவனின் மூத்த மகளாவாள். அவளிடம் நெடுஞ்சேரலாதனுக்குத் தோன்றிய மக்கள், களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரலும் அவன் தம்பியாய ஆடுகோட்பாட்டுச் சேரலாதனும் ஆவர். களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் என்னும் இப்பெயர் இவன் களங்காயாற் கண்ணியும் நாரால் முடியும் செய்து அணிந்துகொண்டிருந்தமையால் வந்த காரணப்பெயரா

கும். இவனது இயற்பெயர் தெரியவில்லை. "தான் முடிசூடுகின்ற காலத்து ஒரு காரணத்தால் முடித்தற்குத் தக்க கண்ணியும், முடியும் உதவாமையின் களங்காயாற் கண்ணியும் நாரால் முடியும் செய்துகொள்ளப்பட்டன" என்பர் பதிற்றுப்பத்தின் பழைய உரையாசிரியர். இச்சேரன் இளையனாய் முடிசூடிய காலத்தில் ஒருசிலர், தாமே சேரவரசுக்குரியோர் என, நன்னன் என்பான் துணைபெற்றுச் சேரநாட்டின் ஒரு பகுதியைக் கைப்பற்றி ஆண்டனர். அக்காலத்தே, "அந்நாட்டையும் வென்று, சேர ஆட்சிக்குரிய அனைத்து நாட்டையும் ஆளும் அந்நாள் வரை சேர மன்னர்க்குரிய கண்ணியும் முடியும் புனையேன்" என்று சூளுரை கூறி அவற்றிற்கு ஈடாகவே களங்காய்க்கண்ணி

யும், நார்முடியும் அணிந்தனனாகையால் இவனுக்கு இப்பெயர் வந்தது என்பார் ஒருசிலர். இவர்தம் கூற்றே வரலாற்று நிகழ்ச்சிக்குப் பெரிதும் பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது.

இவனுக்குப் பெரும்பகைவனாகி இவன் நாட்டைக் கவர்ந்த கடம்பின் பெருவாயில் என்னும் ஊரினனாகிய நன்னன் என்பானை இவன் மேற்றிசையிலுள்ள வாகைப் பெருந்துறையில் கொன்று தான் இழந்த நாட்டைப் பெற்றதுடன் அந்நன்னனுக்குரிய காவல்மரமாகிய வாகை

மரத்தை
நான்காம்

வெட்டி வீழ்த்தினுன் என்னும் செய்தியை இந் பத்தைப் பாடிய காப்பியாற்றுக் காப்பியனுர் குறிப்பிடுவதுபோலவே புலவர் நானூற்றிற் பாடியுள்ளார் : கல்லாடனுரும் அக

"பொன்னங் கண்ணிப் பொலந்தேர் நன்னன்
சுடர்வீ வாகைக் கடிமுதல் தடிந்த
தார்மிகு மைந்தின் நார்முடிச் சேரல்"
(பதிற்று. சுo: கசு-சு.)

"இரும்பொன் வாகைப் பெருந்துறைச் செருவில்
பொலம்பூண் நன்னன் பொருது களத்தொழிய வலம்படு
கொற்றம் தந்த வாய்வாள்
களங்காய்க் கண்ணி நார்முடிச சேரல்
இழந்தநாடு தந்தன்ன வளம்"
(அகம். ககக: கக - உங.)

அதியமான் நெடுமான் அஞ்சியின் குலத்துவந்த நெடுமி.ல் என்பானையும் இவ்வேந்தன் வென்று தன் யானைப் படையால் அவன் நாட்டு வளத்தை அழித்து, அதனைத் தன் ஆட்சிக்குட்படுத்தினுன். இச்செய்தியை, "நெடுமிடல் சாயக் கொடுமிடல் துமியப்

பெருமலை யானையொடு புலங்கெட விறுத்து."

என்னும் அடிகளால் அறியலாம்.

சீரும் சிறப்பும் வாய்ந்த பேரரசனாகத் திகழ்ந்த நார் முடிச் சேரல், அருங்குணங்கள் பலவற்றுக்கும் உறைவிட மானவன் என்பதைக் காப்பியாற்றுக் காப்பியனாரின் செஞ் சொற் செய்யுட்களால் உணரலாகும். இவன் தன்னைப் பாடிய புலவர்பெருமானுக்கு நாற்பது நூறாயிரம்காணமும்[1] தன் அரசியல் வருவாயில் பாகமும் கொடுத்தான். இவன் இருபத்தைந்தாண்டுகள் செங்கோலோச்சினான்.

5. பாடினோர் வரலாறு

நான்காம் பத்தைப் பாடிய காப்பியாற்றுக் காப்பிய
னார் காப்பியாறு என்னும் ஊரில்
பெயர் பெற்றார். முற்காலத்தே

பிறந்தமையால் இப்
காப்பியன் என்னும்

பெயரினர் பலர் வாழ்ந்து வந்தனர். ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியனாரும், காப்பியன் ஆதித்தன் கண்டத்தடிகளும் இப் பெயரால் அழைக்கப்பட்டமை ஈண்டுக் குறிப்பிடற் குரியதாகும். காப்பியர் என்பார் காப்பியர் என்னும் குடிவழியில் தோன்றியவர். காப்பியக் குடி, சேர சோழ பாண்டியர் குடிகளைப் போல்வதாய ஒரு பழங்குடி என்று ஒரு சாரார் கூறுவர். என்பார் அந்தணர் மரபினர் என்றும் கூறுவர்.

காப்பியர்
சிலர் காப்
பியக்குடி என்பது ஓர் ஊர்ப்பெயரே என்றும், அது பண்டைப் புகார் நகரத்திற்கு ஏறக்குறைய ஒரு காவத தூரத்தில் இருத்தல் வேண்டுமென்றும் கூறுவர். தஞ்சை மாவட்டத்தில் மாயவரத்துக் கண்மையில் காப்பியக் குடி
என்னும் ஊர் ஒன்று உளது; தென்னார்க்காடு மாவட்டத் திலும் விழுப்புரத்தை யடுத்துக் காப்பியாமூர் என்னுமோர்

ஊர் உளது.
யாண்டுளது

இக் காப்பியனார் பிறந்த காப்பியாறு என்பது அறியக்கூட வில்லை. நற்றிணை பாடிய ஆசிரியர்களில் ஒருவர் காப்பியஞ் சேந்தனார் என்

1. காணம் - சேரரின் பழைய நாணயம். இப்போதும் மலை நாட்டில் 3 கழஞ்சு அல்லது $1\frac{1}{2}$ பணம் காணம் என வழங்குகின்றது.

பவர்.

பியஞ்

அவர் இக் காப்பியனாரின் மகனாராகையால் காப் சேந்தனார் என்று அழைக்கப்பட்டார் என அறிஞர் சிலர் கூறுவர்.

களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலின் தோற்றமும் ஏற்றமும் குறித்து இவர் பாடிய பத்துச் செய்யுட்களும் காவிய நலனும், கற்பனை வளனும் நிறைந்து தேனிலே ஊறிய தீந்தமிழ்க் கவிதை மலர்களாகவே மிளிர்கின்றன.

பாட்டின் செய்திகளை ஆராய்வதன் பொருட் சுருக்கத்தைச் சிறிது கூற

முன் அவற்றின் விரும்புகின்றேன்.

காப்பியாற்றுக் காப்பியனார் முதற் பாட்டில் அடியார்கள் திருமாலை வழிபடும் தன்மையைச் சீரிய முறையில் சித்திரித்துக் காட்டுகின்றார்.

1. கமழ்குரல் துழாய்

"போர் மேம்பாட்டினை உடைய வேந்தே! குன்றுகள் பல தம்மிற் கூடப்பெற்று அலைகள் கூடி முழங்கும் கடலை ஆடையாக உடுத்த நிலவுலகில் வழிபடுவோர், தம் தலைமேற் கைகூப்பி வேண்டிக் கொள்ளும் பேரொலி நாற்பெருந் திசையிலும் திரண்டொலிக்கும்; தெளிந்த ஓசையைச் செய்யும் மணியை இயக்குநர், 'கல்'லென ஓசைபட ஆரவாரிப்பர்; உண்ணா நோன்புடைய விரதியர் குளிர்ந்த நீர்த் துறையில் நீராடி மணங்கமழும் துளசிமாலையும் ஒளி வீசும் திகிரியும் உடைய திருமாலின் சேவடிகளை வணங்கித் தத்தம் உறைவிடங்கட்கு மீள்வர்.

கரிய இருள் நீங்க முழுமதியம் வானத்தில் தோன்றினாற் போல நீ வறுமையால் தளர்ந்த குடிமக்களின் துன்பத்தைப் போக்கி அவர்களைப் பண்டுபோல் நிலைநிறுத்தினை. நின் அகன்ற மார்பு வடக்கிலிருந்து கிட்டு நிற்கும் மேலைமலைத் தொடரை

தெற்காகக் குறுக்
ஒப்பதாகும். நின்

பருத்த அழகிய வலிமிக்க தோள்கள் தேவர்கட்கு அஞ்சி, அவுணர்கள் வானத்தில் அமைத்த இயங்கும் மதிலினது

கதவுக்குக் காப்பாகச் செய்யப்பட்ட கணைய
ஒத்தன. வரையா வண்மையால் நீ வண்டன்

மரத்தை
என்னும்

வள்ளலை ஒத்தனை. வண்டுகள் மொய்க்கும் தழைத்த கூந்தலினையும் அறக்கற்பினையும் ஒளி பொருந்திய நெற்றியினையும் தன் பொன்னணிகட்கு விளக்கம் தரும் மேனியையும் அழகிய வளைந்த உந்தியையும் உடைய நின் பெருந்தேவி தேவ மகளிர் பலருள்ளும் சிறந்த அருந்ததி போன்றவள். நின் போர் முரசு நிலத்துள்ளார் நெஞ்சு நடுங்க, வறிதே முழங்காது வெற்றி மிகுதி குறித்தே முழங்கும். பனைமாலையும் பொற்கழலும் வலிய தாள்களும் உடைய நின் வீரர்கள், நெருங்கிய போரில் கிட்டார் மீது வேல் முதலிய படைகளை எறியார்.

புறமுது
நினது
தானை பாணர் முதலியோர்க்குப் பாதுகாப்பாகிப் பகைவர்க்கு அச்சம் தருவது. நீ இங்ஙனம் பல வகையினும் மாட்சிமைப்பட்டு விளங்குகின்றாய்."

"நாறுத பூவுடையதனை மிக நாறுவதொன்று போலச் சாதிபற்றிச் சொன்ன சொற்சிறப்பான் இதற்குக் "கமழ் குரற்றுழா'யென்று பெயராயிற்று" என்பர் பழைய உரைகாரர்.

"நக்கலர் துழாஅய் நாறிணர்க் கண்ணியை" (பரி. ச : ருஅ) எனத் துழாய்ப் பூங்கொத்து மணமுடையதென்று
கூறுவதனுல் இவ்வுரை சிறப்புடையதாகத் தோன்றவில்லை. "தனித் தனிப் பூக்களாக எடுத்துவைத்துத் தொடுக்கப் படாது கொத்துக் கொத்தாக வைத்துத் தொடுக்கப்படும்

சிறப்பும் மிகச் சிறிதாகிய தன்னகத்தும் தன்னைச் சூழ்ந் திருக்கும் இலைகளினகத்தும் ஒரொப்ப மணங்கமழும் மாண்பும் உடைய துழாயை, 'கமழ் குரற்றுழாய்' எனச் சிறப்பித்த செம்மை கருதி, இப் பாட்டிற்கு இது பெயரா
யிற்று" எனப் பேராசிரியர் ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்கள் எழுதிய உரைக் குறிப்பே ஈண்டுப் பெரிதும் பொருத்தமுடையதாகத் தோற்றுகிறது.

2. கழையமல் கழனி

"போர்ப் பெருமை மிக்க குரிசில் ! நீ மாட்சிமை உடையை; எத்திசையிலும்

பலவகையாலும்
விளங்கும் நின் 104 பதிற்றுப்பத்துச்
சொற்பொழிவுகள்

சால்பும், நடுவு நிலைமையும், பகைவரைப் போரின்கண் வென்று ஆண்டுப் பெற்ற அரிய பொருள்களைப் பாணர் சுற்றம் மகிழ்ந்து, 'பெற்றது போதும்; இனி வேண்டா' என அமையுமாறு கொடுத்தும் குறையாது நிறைந்த செல்வமும், தளர்ந்த குடிமக்களை மேம்படுத்திய வென்றியும், ஆகிய இவற்றைக் கழற்சிக் காய்கள் வைத்து எண்ணினால் உலகில் கிடைக்கும் கழற்சிக்காய்கள் எண்ணப்படும் பொருளின் மிகுதியால் போதாவாகும். கொற்றவ! நின் அரிய குணங்களில் ஒரு குணத்தைக் கண்டு நான் வியவாநின்றேன். போரில் நெடுமிடல் அஞ்சி என்பான் பட்டானைக் கதிர்களை உடைய நெல்லின் மூங்கில் போலும் தாள்கள் செறிந்த வயல்களை உடைய அவன் நாட்டை அகப்படுத்தி, கீழ்த் தன்மை யுடையவர்களும் நாளும் வசையே மொழிபவர்களுமாகிய நின்னால் வெகுளப்பட்ட பகைவரிடத்தே இருந்த காலையும் சினங் கொள்ளாது நீ பொறையே பூண்டொழுகுதல் எனக்கு மிக்க வியப்பைத் தருகின்றது."

நெற்றாள், பருமையால் மூங்கிலோடு ஒத்திருத்தலின் அதற்குக் கழையென்று பெயர் கொடுத்த சிறப்பால் இப் பாட்டுக்குக் 'கழையமல் கழனி' என்பது பெயராயிற்று.

3. வரம்பில் வெள்ளம்

து ம்

"கொடித்தேர் அண்ணலே! நீ தெள்ளிய மணி கட்டிய வலிய தாள்களை உடையதுமாகிய யானையைப் பகை

வரது கடிமரத்திலே கட்டினை. ஆழமாகிய நீர்த்துறைகள் கலங்குமாறு, வயல் கெடும்படி தங்கிய கரையில்லாத கடல் போன்றதும், வாளே மதிலாகவும் வேலே காவற்காடாக வும் அம்புகளே கூரிய முள்வேலியாகவும் பிறபடைக்கருவி கள் அகழியாகவும் முரசங்கள் கார்காலத்து இடிக்கும் இடியேறாகவும் நடக்கின்ற காலாட்கள் வெல்லுதற்கரிய மதிலாகவும் கொண்ட முழுமுதலரணம் போன்றதும் ஆகிய நின்படை போர்செய்யக் கருதினல் பகைமன்னர் நின்னையும் நின் படையையும் கண்டபோதே அஞ்சிப் பொருதலெண்ணுது நீங்குவர். இது பெரிதும் வியப்பாக உள்ளது.''

கரையை உடைய கடலை வரம்புடைய வெள்ளமென்ருக்கி இதனை அளவற்ற பெருமையுடையதாதலால் 'வரம்பில் வெள்ளம்' என்ருர். இதனல் இப்பாட்டுக்கு இப்பெயர் வந்தது.

4. ஒண்பொறிக் கழற்கால்

"ஒப்பற்ற பெரிய வேந்தே! போரறம் மாருத வீராது வலி கெடுமாறு முரசுமுழக்கிச் செய்யும் பெரிய போர்க் களத்தே நெருங்கியவழி, பலவகைப் படையிடத்தும் வீரர்களின் ஆரவாரம் எழப் பகைமன்னர்தம் வலி முற்றவும் அழியப் பொருது வெற்றிபெறும் ஆற்றலால் சிறந்த வலியினை உடையோனே! நீ சிவந்த பிடரினையுடைய குதிரைமீ திவர்ந்தும், நீண்ட கொடியினையுடைய தேரின் மீதேறியும், முகபடாம் விளங்கும் புகர் நெற்றியினையுடைய பொன்னரிமாலை யணிந்த யானையின் வலிய கழுத்தின்மீ திருந்தும் நிலைபெற்ற நிலத்தின்மீ திருந்தும் நின் தானையைக் காப்பதனுல் போரிற் புறங்கொடாத கோட்பாட்டினையும் போரில் தாம் செய்த அரிய செயல்களைப் பொறித்த கழலணிந்த கால்களையும் பெரிய நிலத்திலே படுகின்ற விரிந்த நூலாலாகிய ஆடையையும் உடைய வேற்றரசர் நினக்கு அஞ்சி நீங்குவர்."

வீரர்கள் போரில் செய்த அரிய
செயல்களைப்
பொறித்தலையுடைய ஒள்ளிய கழற்கால்
கழற்கால்' எனப்பட்டது. இச்சிறப்பால்

'ஒண்பொறிக்
இப்பாட்டுக்கு
இப்பெயராயிற்று.

5. மெய்யாடு பறந்தலை

" உயர்வமைந்த வேந்தே ! பெரிய

களிற்றியானை
களின் ஒளிபொருந்திய கொம்புகளுடன் நெடிய தேர் களின் சக்கரங்கள் சிதறிக்கிடக்கும் போர்க்களத்தே பருந் தின் சேவல்கள் தசையாகிய இரையை உண்ணும்; அந்தி வான் அனைய செங்குருதி படிந்த உட்களத்தே தலை வெட்டப்பட எஞ்சிநின்ற கவந்தம் ஆடும்; நடுவே பேய்

கள் கூத்தாடும். . இங்ஙனம் போரிடத்துக்
கெடாத புது
வருவாயினை உடைய நின்படை அழிவுபடாமல் நீ நன்கு ஓம்புதலால் நின் வெற்றியும் செல்வமும் படையும் புலவர் கள் சிறப்பித்துக் கூறும் பெருமை உடையனவாகும்."

குறையுடலெழுந்தாடுவது
பட்ட வழியன்றே, மெய்யாடு
ஒரு பெயருடையார் பலர்
பறந்தலையெனவே அங்ஙு

னம் பலர் பட்டமை தோன்றக் கூறிய சிறப்பான் இதற்கு இப்பெயராயிற்று. ஒரு பெயருடையார் பலர் பட்ட வழி

என்பதற்குப் பொருள் ஒரு படையைச்
இறந்தவழி என்பதுபோலும்.

சார்ந்தவர் பலர்

"ஆனை யாயிரம் தேர்பதி னாயிரம் அடர்பரி யொருகோடி
சேனை காவல ராயிரம் பேர்படிற் செழுமணிக் கவந்தமொன்
றாடும் கான மாயிரம் ஆயிரகோடிக்குக் கவின் மணி
கணிலென்னும் ஏன அம்மணி ஏழரை நாழிகை யாடிய
தினிதன்றே."

—கம்ப. மூலபலவதைப். உஉஅ.

என்னும் பாடல் ஈண்டு ஒப்புநோக்குதற்குரியது.

6. வாண்மயங்கு தார்

" ஒழியாத புது வருவாயினை உடைய நின் மிக்க வலி யானது கெடாது நிலைபெறுவதாகும். மனவெழுச்சியால் வலிய வீரர்களுடன் மேசென்று பகைவர் புதிதாகப் பகைத்துச் செய்யும் போரினை வெல்லுவை. பனை மரங்களை வெட்டின புனத்தைப்போலக் கை துணிக்கப்பட்டு யானைகள் மடிந்து கிடக்கும் இருதிறத்து வாட்படைகளும் தம்முட் கலந்து மயங்கும் தூசிப்படை நின்ற களத்திற் பட்ட குதிரை யானை ஆகிய விலங்குகளையும் வீரர்களையும் உண்ணும்பொருட்டுப் பெடையுடன் கூடியுறையும் ஆண் பருந்து கொண்டையை உடைய கழுகையும் உடன் கொண்டு பள்ளம் நோக்கி ஓடும். இங்ஙனம் நீ பல போர்களைச் செய்கின்றாய். இவற்றிற்கு அடியாகிய நின் போர் வளம் வாழ்க."

இருதிறத்து வாட்படைகளும் தம்மில் தெரியாமல் மயங்குமென்று கூறிய சிறப்பால் இப்பாடல் 'வாண்மயங்கு தார்' என்னும் பெயருடையதாயிற்று.

7. வலம்படு வென்றி

"பகைவர்க்குத் துன்பத்தைச் செய்து பாணர் முதலியோர்க்கு நன்கலன்களை வழங்கி, ஆன்றவிந்தடங்கிய செயிர்தீர் செம்மலே! சான்றோர் நின் புகழை ஏத்த நின் வளனும் வாழ்வும் நிலைபெறுவனவாகுக. வானளவு உயர்ந்த நின் சிறந்த புகழானது, உலகமுள்ளளவும் நிலை பெறுமாறு வீழ்ந்த குடியினரை மேம்படுத்திய வெற்றிக்குக் காரணமான செய்கையும் கரியபெரிய பனந் தோட்டால் ஆகிய மாலை, பெரிய வீரக்கழல் என்னுமிவற்றை அணிந்து சென்று பகைமன்னருடைய மதில்களை அழித்து அவருடைய சிறந்த வீரர்களைப் பிடித்துவந்து நின் நிழலில் வாழும் மக்கட்கொப்ப, அவர்கள் மனத்திலிருந்த கொடுமை அறவே நீங்குமாறு திருத்திவைத்த கொள்கையும் நீ மிகப்பெரிதும் உடையை. ஆதலால் இவ்வுலக மக்கள் நல்வாழ்வின் பொருட்டு நின் வாழ்க்கையும் வளனும் வாழ்வனவாகுக."

துளங்குகுடி திருத்துதலாகிய சிறந்த முறையினை எடுத்துக்கூறி அஃது அரசற்கு

நிலையாய

வெற்றியை அளிக்கும் என்று கூறிய சிறப்பால் 'வலம்படு வென்றி' என்னும் பெயர்த்தாயிற்று.

இது

8. பரிசிலர் வெறுக்கை

"பல வளங்களும் ஒன்றோடு ஒன்று கலந்த நாட்டைச் செம்மைப்படுத்திய களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலே! பகைவரின் மதிலிடங்கள் சிதையுமாறு நின்னால் ஏவப் பட்டு நாடுகாவலை நினக்கே தந்த தொடிமருப்பு யானைகளை யும், சிவந்த பிடரியினையுடைய குதிரைகளையும் பொன்னாற் செய்த வீரக்கழலையும் சிறந்த வேலைப்பாடமைந்த கண் ணியையும் உடைய சேரலர் வேந்தே! பரிசிலர் செல்வமே! பாணர்கள் இருக்கும் நாளோலக்கத்தை உடையாய்!

வாணுதல் கணவ! வீரர்க்குள் அரியேறு அனையாய்! குற்றமற்ற வடுக்கள் பொருந்திய மார்பினை உடையாய்! பழியொடு படராச் செல்வ! வானவரம்ப! 'இனிய பொருள்களைப் பெற்றவழி அவற்றைத் தனித்தனியாக நுகர்வேம்; எம்பால் தருக' என விரும்பாத நல்ல உள்ளத்தோடு பிறர்க்குப் பகுத்தளிக்கும் உணவைத் தொகுத்தளிக்கும் ஆண்மையால் நீ பிறர்க்கென வாழ்கின்றாய். ஆதலால் உலகத்தில் உள்ள செல்வர்கள் எல்லாருள்ளும் நின் நற்புகழே மேம்பட்டு நிற்கிறது."

பரிசிலர் வெறுக்கை என்பது பரிசிலர் வாழ்வு. இச் சிறப்பால் இதற்கு இப்பெயராயிற்று.

9. ஏவல் வியன்பணை

" தும்பை மாலையைச்சூடி, போரில் வெகுண்டெழுந்த பகைவர்கள் அச்சந்தரும் முனையிடத்தே, கேட்டு மனம் நடுங்குமாறு முழங்குவதும் படை வீரரைப் போருக்கு மேலும் மேலும் ஏவுவதுமாகிய முரசமானது இடிபோல அதிர்ந்து முழங்குமாறு போர் வேட்கை மிக்குப் பகைவர் மதில்கள் அழியுமாறு செல்லும் காலனைப்போலும் சினத்தையும் வன்மையையும் உடையோய்! இலைகள் உலர்ந்து உதிர்ந்து நிற்கும் வேலமரத்தின் கிளைகளில் தம்மைக் கைப்பற்றக் கருதும் வேடர்கள் விரித்த வலையோ என அஞ்சிப் புறாக்கூட்டம் சிதைந்து ஓடுமாறு நுண்ணிய மயிர்போன்ற இழையால் சிலந்தி பின்னிய வலையைப் போல்வதும், விளிம்பிலே மணிகள் அழுத்தப்பெற்றதும் பொற்கூட்டின் புறத்தே முத்து வடம் கோக்கப்பெற்றதும்

ஆகிய நாட்முடியினையுடைய சேரலே! நீ பிறர்க்கென வாழுகின்றாயாதலின் நினக்கென வாழும் நின் வீரர்களும் எமக்கு இல்லை யென்னாது யாம் வேண்டுவனவற்றை ஈவர்.”

ஏவல் வியன்பணை-ஏவுதலைச் செய்யும் பெரிய முரசம். போர் முடிந்தது என்னாது போர் முனைக்கண் மேலும் மேலும் படையை ஏவுதலையுடைய முரசம் ‘ஏவல் வியன்

பணை’ என்பதாம். இச் சிறப்பால் இப் பாடற்கு இப் பெயர் அமைந்தது.

10. நாடுகா ணவிர்சுடர்

“இன்னிசை செய்யும் முரசைக் குணிலால் புடைத்து முழக்கி, தோளில் புண்பட்ட வீரர் முன்னணியில் நிற்க, தூசிப்படை, கரந்தைக் கொடிபடரும் வயல்களில் சென்று தங்கிற்றுதலால் நின் பெரிய சேனைவீரர் போர் முனையில் தங்காதொழிவாராக. பகையரசர் வலிகெடலால் இனி எமக்குப் புகலாவார் பிறர் இலர் என்று எண்ணி நின்னை விரும்பி அப்பகைமன்னரின் அரண்களில் இருந்து காக்கும் வீரர், ஊக்கமிழந்து அடங்கிக் கிடப்பர். வெள்ளிய இதழ்நிரைத்த பனைமாலையை அணிந்து சேரவரசுக்குரியோரென எதிர்ந்த மன்னரை வென்று அவரால் நாட்டினின்றும் விரட்டப்பட்ட நன்மக்களை மீளக்கொணர்ந்து குடிபுகச்செய்து நிரப்பிய வெற்றியால் குரவையாடி மகிழ்ந்த தொடியணிந்த சிறந்த கையினையும் எழுமுடி யாரமணிந்த மார்பினையும் பொன்னுலாகிய கண்ணி, பொற்றேர் ஆகிய வற்றையுமுடைய நன்னனது வாகையாகிய காவல் மரத்தினை வெட்டி வீழ்த்திய வலியினையும் உடைய நார்முடிச்சேரல் களிப்புக்காக இடப்படும் பொருள்கள் சிறிதளவாகச் சேர்க்கப்பட்ட கள்ளானது இரவலர்களை வேறிடம் செல்லாமல் தடுக்க அவருடனிருந்து, தனக்கெனக் கொணரப்பட்ட பூவரும்புகளால் செய்யப்பட்ட நறவை உண்டுகளித்துப் பகைவரது பொலிவற்ற காலையுடைய உன்னமரம் வாடுமாறு அஞ்சாது அருவிகள் ஒலிக்கும் நேரிமலையில் உள்ளான். சிலவாகிய வளைகளை அணிந்த விறலியே! வேங்கை மரத்தைப்போல மென்மையான இயல்புடைய மகளிர் இழை

களை அணிந்து அழகுடன் விளங்கவும் பாணர்கள் பசிய பொன்னால் செய்த தாமரைப் பூக்களை அணியவும் பாணரில் சிறுவர் இனிய களிப்பு வழுவாத மென்சொல்லை விரும்பி மகிழ்ச்சி உடையவராய்ப் போர்க்களத்தை வாழ்த்த, தோட்டியால் குறிக்கப்பெறும் குறிப்பைக் கடவாமல் தம்மால் எழுப்பப்படும் புழுதித் துகள் தீப்பொறிபோலச்

சிதறுதலால் நாட்டினரெல்லாம் காணுமாறு காட்டிடத் தெழுந்த காட்டுத் தீப்போலும் சினத்தீயை விட்டுப் பாகர் ஏவல்வழி பழகிய வன்மையும் போர்த்தொழிலில் விருப்ப மும் உடைய யானைகள் பலவற்றை அளிப்பான். ஆதலால் நீ அவன்பாற் செல்வாயாக."

காட்டிலே உயர்ந்து எரியும் தீ நாட்டவரெல்லாம் தம்மிடத்தே இருந்து காணுமாறு சுடர்விட்டு ஒளிரும் சிறப்பினை 'நாடுகாணவிர் சுடர்' என்று குறிப்பிட்டுச் சுருங்கச் சொல்லி விளங்கவைத்த சிறப்பால் இப்பாட்டு இப்பெயர் பெற்றது.

இங்ஙனம் அரிய இனிய கருத்துக்கள் செறிந்த பத்துப்பாடல்களைக் காப்பியாற்றுக்

காப்பியனார் பாடி இலக் கிய விருந்து படைத்துள்ளார். இப்புலவர் பெருமான் பரி சில் பெறுதல் ஒன்றையே அரசன் மாட்டுப் பேரன்பு

குறிக்கோளாகக் கொள்ளாமல் பூண்டு அவனுடைய கொடை, வீரம், ஆட்சி முதலிய சிறப்புக்களை உள்ளவை உள்ள வாறே திறம்பட எடுத்துக் கூறியுள் ளார். அரசனை மகிழ்விப்பதையே எண்ணமாகக்கொண்டு இல்லாதனவற்றை உள்ளனவாகக் கூறும் இயல்பு பண்டைத் தமிழ்ப்புலவர் பால் எள்ளளவும் இல்லை எனலாம். அங்ஙனமே அரசர்கள் செய்யாத அருஞ்செயல்களை அவர்கள் செய்தன வாகக் கூறும் புனைந்துரையும் அவர்களிடம் காண்டல் அரிது. பொய்யா நாவும், வாய்ந்த நம் காப்பியனார் இப்

புலனழுக்கற்ற உள்ளமும் பத்துப்பாடல்களிலும் வெற்றெனத் தொடுக்கும் குற்றம் சிறிதுமின்றி, சுருங்கச் சொல்லல (conciseness of expression), பொருளாழமுடைமை (pregnancy of ideas), நவின்றோர்க்கினிய நன்மொழி புணர்த்தல் (felicity of diction), பொருளின் ஒருமை (singleness of thought) என அறிஞர்கள் கூறும் இலக்கிய அழகெல்லாம் எழிலுற விளங்குமாறு சொற்களை அமைத்துள்ளார்.

6. நார்முடிச்சேரலின் நல்லியல்புகள்

இனி, புலவர் களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலின் பெருமைகளை வியந்து பாராட்டும் செய்திகளிற் சிலவற்றைக் காண்போம். நார்முடிச்சேரல் ஒரு நல்லரசனுக்கு வேண்டிய நற்பண்புகள் எல்லாம் ஒருங்கே வாய்க்கப் பெற்றவன். அவனுடைய கொடைப்பெருமை, படைப்பெருமை, ஆட்சிமுறையெல்லாம் புலவர்க்கு இறும்பூது விளைக்கின்றன.

“போர்மிகு குரிசில்நீ மாண்டனை பலவே”

(பதிற்று. ௩௧ : ௩௬)

"மாண்டனை பலவே போர்மிகு குரிசில்நீ"

(பதிற்று. ௬௨ : ௧)

" கொன்ஞென்று மருண்டனன் அடுபோர்க் கொற்றவ"

(பதிற்று. ௬௨ : ௬)

" இரும்பூதாற் பெரிதே "

(பதிற்று. ௬௨ : ௧௭)

என வரும் தொடர்கள் அவன் மாட்சிகளை உள்ளங் குளிர்ந்து உவந்துவந்து அவர் பாராட்டுதலைக் குறிப்பனவாம்.

" நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே " (புறம். ௬௧௨)

என்னும் சீரிய கொள்கையைத் தலைமேற்கொண்டு,

நார்முடிச்சேரல் தன்கீழ் வாழ்வார்க்கு உண்டாகி இருந்த நடுக்கங்களை நீக்கித் திருமாலை வழிபடுதல் முதலிய நற் செயல்களில் அவர்களை ஈடுபடுத்தினான். மக்களை அவ ரவர்க்குரிய நல்லொழுக்கத்திலே நிறுத்துதல் குரிய கடனுதல்பற்றி அங்ஙனம் செய்தான்.

ஆண்மைச் சேரமான்

ஆற்றிய இச் செயல்களை,

“ துளங்குடி விழுத்திணை திருத்தி முரசுகொண்டு
ஆண்கட னிறுத்தநின் பூண்கிளர் வியன்மார்பு”
(பதிற்று. ௩௧: ௯௩) 112

பதிற்றுப்பத்துச் சொற்பொழிவுகள்

“துளங்குடி திருத்திய வலம்படு வென்றியும்”
(பதிற்று. ௩௭. ௭)

என்னும் அடிகளால் நன்கறியலாம். இங்ஙனம் புலவர் அவனது துளங்குடி திருத்திய செயலையே முதற்கண் வைத்துப்

பாராட்டியுள்ளார். இதனால் சேரமான் தன் கழ வாழ்வார்ரத தன ம்ககளுக்கு ஒபபாக எணண்ி அவா நலமே தன் நலமாகக் கருதி வாழ்ந்தனன் என அறியலாம்.

சேரமானின் படைமாட்சி குறித்தும், போர் வன்மை பற்றியும் புலவர் கூறும் கருத்துக்கள் கற்பார்க்குக் கழி பேருவகை அளிப்பனவாகும். போர்க்களத்தே பகைவர்

மேற் செய்யும் வன்கண்மை பேராண்மை எனப்படும். பகைவராயினும் அவர்க்கு ஒரு தாழ்வு நேர்ந்துழி அதனைத் தீர்த்தற்குக் கண்ணோட்டமுடன் உதவிபுரிதல் வேண்டும்.

“ பேராண்மை என்ப தறுகண்ஒன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு” (குறள்.

எஎரு.) என்னும் வள்ளுவனாரின் சொல்லமுதம் இதனை வலி

யுறுத்தும். நார்முடிச் சேரலின் வீரர்கள் பண்பாடு வாய்க்கப்பெற்றவர்கள் என்பதை,

இத்தகைய

"ஒடுங்காத் தெவ்வர் ஊக்கறக் கடைஇப்

புறக்கொடை எறியார் நின்மறப்படை கொள்ளுநர்"

(பதிற்று ருக: ருஉ - ரு.)

என்னும் அடிகள் விளக்கும். போர்க்களத்தே ஊக்க மிழந்து ஓடும் பகைவர்மீது ஆயுதங்களை எறிவது குற்ற மாகும். இவ்வாறு எறியாது நிற்கும் இயல்பு தழிஞ்சி என்னும் துறையின் பாற்படும்.

"அழிகுநர் புறக்கொடை அயில்வா ளோச்சாக்
கழிதறு கண்மை காதலித் துரைத்தன்று"
(பு. வெ. ௫௫)

"பகைவர் தேஎத் தாயினும்
சினவா யாகுதல் இறும்பூதாதற் பெரிதே."
(பதிற்று. ருஉ) நான்காம் பத்து 113

என்பதால் நார்முடிச்சேரல் தன்னால் பகைவரிடத்தே இருந்த நாட்களிலும்

வெகுளப்பட்ட
பெருஞ் சினம்
கொள்ளாது பொறையே பூண்டொழுகினன் என அறிய லாம். மற்றும் அவன் போர்வன்மை குறித்துப் புலவர் கீழ்வரும் செய்யுளடிகளால் பலபடப் பாராட்டுகின்றார்:

"காரிடி உருமின் உரறு முரசிற்
கால்வழங் காரெயில் கருதிற்
போரெதிர் வேந்த ரொருஉப நின்னே"
(பதிற்று. ௩௩: க0 - ௩)

"மாறா மைந்தர் மாறுநிலை தேய
முரைசுடைப் பெருஞ்சமந் ததைய வார்ப்பெழ
அரைசுபடக் கடக்கு மாற்றற்
புரைசான் மைந்தநீ யோம்பன் மாறே"
(பதிற்று. ௩௪: கூ - கஉ)

"புரைசால் மைந்தநீ யோம்பன் மாறே
உரைசான் றனவாற் பெருமைநின் வென்றி"
(பதிற்று. ௩௫: க - உ)

"உருவெழு கூளிய ருண்டு மகிழ்ந்தாடக்
குருதிச் செம்புன லொழுகச்

செருப்பல செய்குவை வாழ்கநின் வளனே"
(பதிற்று. ௩௬ :

௧௨ - ௪)

"கறுத்த தெவ்வர் கடிமுனை யலற
எடுத்தெறிந் திரங்கு மேவல் வியன்பணை
உருமென வதிர்பட்டு முழங்கிச் செருமிக்(கு)

அடங்கா ராரண் வாடச் செல்லும்
காலன் அனைய கடுஞ்சின முன்ப"
(பதிற்று. ௩௧: ௪ - அ)

இனி, நார்முடிச் சேரலின் கொடைப்பெருமையைச் சிறிது நோக்குவோம். இவனை முதற்பாட்டிலேயே,

"வெண்டிரை முந்நீர் வளைஇய வுலகத்து
வண்புகழ் நிறுத்த வகைசால் செல்வத்து
வண்டன் அனையைமன் நீயே." (பதிற்று. ௩௧ :

௨௧-௨௩)

ப. சொ.—8

என்று பாராட்டுகின்றார் புலவர். வண்டன் என்பான் வரையா வண்மை மிக்க ஒரு குறுநில மன்னன். அவன் சேரவேந்தர்களுக்குத் துணையாய் இருந்தவன். அவனுக்குரிய வண்டமலை என்னும் குன்று கருவூருக்குத் தெற்கில் உள்ளது. சேரமானின் வள்ளன்மையைக் குறிக்கக் காப்பியனார் மற்றும சில சான்றுகளைக் கூறுகின்றார். சேரமான் பகைவரைப் போரில் வென்று ஆண்டுப்பெற்ற பொருள்களைப் பாணர் சுற்றம் மகிழ்ந்து, 'பெற்றது போதும்; இனி வேண்டா' என அமையுமாறு கொடுக்கும் குணமுடையவன் என்கிறார்.

சேரமானின் மற்றொரு சிறப்பான பண்பும் உளங்கொளற் குரியதாகும். உண்டாரை நெடுநாள் இறவாமல் வாழவைக்கும் அமுதனைய நெல்லிக்கனியினைப் பெற்ற அதியமான் அதனை இனிதென்று தானே உண்ணாமல் ஔவைக்கு வழங்கினான். (புறம். கூக) இங்ஙனம் ஈத்துவக்கும் இன்பத்தையே பண்டைத் தமிழர் பெரிதும் விரும்பினர். வைத்திழக்கும் வன்கண்மையைப் பெரிதும் வெறுத்தனர்.

"செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே." (புறம். கஅக) என்று முழங்கினார் புலவர் நக்கீரனார்.

"உண்டா லம்மஇவ் வுலகம் ; இந்திரர்

அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத் தமியர்
உண்டலும் இலரே ; முனிவிலர் ;
துஞ்சலும் இலர் ; பிறர் அஞ்சுவ தஞ்சிப்
புகழெனின் உயிரும் கொடுக்குவர் ; பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் ; அயர்விலர் ;
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே.”

(புறம். கஅஉ)

என்னும் இளம்பெரு வழுதியின் பொருளுரையும் ஈண்டு நினைவு கூர்தற்குரியதாம். இத்தகைய சீரிய பண்பாட்டின் உறைவிடமானவன் நார்முடிச் சேரல் என்பதைக் காப்பி யாற்றுக் காப்பியனார் எத்துணை விழுமிய புலப்படுத்துகின்றார் பாருங்கள் :

சொற்களால்

“இனியவை பெறினே தனிதனி
நுகர்கேம்
தருகென விழையாத் தாவினெஞ் சத்துப்
பகுத்தூண் தொகுத்த வாண்மைப்
பிறர்க்கென வாழ்திநீ யாகன் மாறே.”

(பதிற்று. நஅ : கந-கசு)

பெறுதற்கு இனிய பொருள்களைப் பெற்றோர் அவற்றைத் தனித் தனியே உண்ண விழைவது இயல்பே. அத்தகைய விழைவைக் கெடுத்து அவற்றைப் பிறர்க்கு அளித்து நுகர்வித்தலாகிய 'ஈத்துவக்கும் இன்பம்' உடையவன் சேரமான் என, அவன் அருள் உள்ளத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறார் புலவர். 'உலகமக்கள் யாவரும் இன்புற்றிருக்கவேண்டும்; உலகமே ஒரு குடும்பமாதல் வேண்டும்' என்னும் செந்நெறி அரும்பிவரும் இக்காலத்தே இச்சீரிய கொள்கையைத் தமிழ்மக்கள் உலகெங்கும் பரப்புதற்கு முன்வருதல் வேண்டும்.

இவ்வாறு அளக்கலாகாப் பெருமையும் துளக்கலாகா
நிலையும்
மேலும்
யாற்றுக்

உடைய சேரமானின் சிறப்பியல்புகளை மேலும் வியந்து கூறுவதில் வாயூறிக் கிடக்கிறார் காப்பி காப்பியனார்:

"ஆன்றவிந் தடங்கிய செயிர்தீர் செம்மால்."
(பதிற்று. ௰௭ : ௯)

"உலகத் தோரே பலர்மன் செல்வர்
எல்லா ருள்ளும்நின் நல்லிசை மிகுமே."
(பதிற்று. ௰௮ : ௧ - ௨)

"நன்றுபெரி துடையையால் நீயே
வெந்திறல் வேந்தேயிவ் வுலகத் தோர்க்கே."
(பதிற்று. ௰௭ : ௧௨ - ௰)

என்னும் புலவரின் பொன்மொழிகள் உன்ன உன்ன உவகை யளிக்கின்றன.

7. பாட்டு ஓவியம்

பண்டைத் தமிழ்ப் புலவர்கள் இயற்கை வாழ்வு வாழ்ந்தவர்கள். இயற்கை எழிலிலேயே மூழ்கி இன்பங் கண்டவர்கள். பலவகை வண்ணங்களைப் பார்க்கும்போது அவை நமக்கு அவ்வளவாக இன்பம் பயப்பதில்லை. ஆனல், ஓவியன் ஒருவன் அவற்றைத் தூரிகை கொண்டு குழைத்து அழகிய ஓவியத்தைத் தீட்டுகின்றான். அவ்வோவியம் நம் கண்ணைக் கவர்கிறது. அங்ஙனமே உயிர், மெய், உயிர்மெய், ஆய்தம் முதலிய வெறும் எழுத்துக்களைக்கொண்டே கருத்தைக் கவரும் பாட்டு ஓவியத்தைத் தீட்டுகின்றார் புலவர். இத்தகைய அழகோவியம் நம் கருத்தை ஈர்க்கின்றது.

பாட்டுடைத் தலைவனாகிய சேரமானின் நார்முடியைக் குறித்துச் சொற்சிற்பியாகிய காப்பியனார் பாட்டோவிய

மொன்றை நம் மனக்கண்ணில் நிறுத்துகின்றார்:

மணிகள் கோக்கப்பெற்ற விளிம்பினையுடைய ஒரு பொற்கூடு; அதன் மேற்புறம் நாரால் பின்னப்பட்டுள்ளது; அந்நாரின் தோற்றம் இழைத்து வைத்தாற்போலும் புள்ளிகள் நிறைந்த கழுத்தினையும், சிறிய முதுகினையும் உடைய புறாக் கூட்டம், வேடர்கள் தம்மைக் கைப்பற்றக் கருதி விரித்த வலையோ என அஞ்சிச் சிதைந்து ஓடுமாறு, இலைகள் உதிர்ந்து நிற்கும் வேலமரத்தின் உலர்ந்த கிளைகளிச் சிலந்திப் பூச்சி தொடுத்த, அசைகின்ற வலையை நினைப்பூட்டும். வெறும் நாரின் காட்சியை மறைப்பதற்காகப் போர்வைபோல நூலால் கோக்கப்பெற்று ஒளி சொரிந்து விளங்கும் முத்து வடங்கள் அணியப்பட்டன.

"வாலிதின், நூலினிழையா நுண்மயி ரிழைய
பொறித்த போலும் புள்ளி யெருத்திற்
புன்புறப் புறவின் கணநிரை அலற

அலந்தலை வேலத்(து) உலவை அஞ்சினைச்
சிலம்பி கோலிய அலங்கல் போர்வையின்
இலங்குமணி மிடைந்த பசும்பொன் படலத்(து)
அவிர்இழை தைஇ, மின்உமிழ்பு இலங்கச்
சீர்மிகு முத்தம் தைஇய

நார்முடி.'' (பதிற்று. ௩௧ : ௧-௧௭)

காப்பியாற்றுக் காப்பியனாரின் பெருக்கை விளக்கும் காட்சியொன்றை

கற்பனையூற்றுப் இதோ பாருங் கள் :

காலாள் இயங்குகின்ற அரிய கற்பிக்கிறார் புலவர்.

கோட்டையொன்றைக்

''வாட்படையே மதிலாகவும், வேற்படையே காவற்காடாகவும், அம்புகளே கூரிய முள் வேலியாகவும், சிவந்த வாயையுடைய பிற படைக்கருவிகள் அகழியாகவும், நடக் கின்ற காலாட்கள் அரணாகவும்கொண்ட முழுமுதலரணம் போன்ற சேரமானின் படையைக் கண்ட மாத்திரத் தானே பகை மன்னர் அஞ்சி நீங்குவர்'' என்னும் பொருள் பட,

''வாள்மதி லாக வேல்மிளை யுயர்த்து
வில்விசை யுமிழ்ந்த வைம்முள் ளம்பிற்
செவ்வா யெஃகம் வளைஇய வகழிற்
காரிடி யுருமி னுாறு முரசிற்
கால்வழங் காரெயில் கருதின்

போரெதிர் வேந்த ரொரூஉப நின்னே.”
என்கிறார்.

(பதிற்று. ௨௩ : ௭-௧௨)

மற்றும்,

“பனைதடி புனத்திற் கைதடிபு பலவுடன்
யானை பட்ட வாள்மயங்கு கடுந்தார்
மாவும் மாக்களும் படுபிண முணீஇயர்
பொறித்த பேரிலும் புள்ளி யெருத்திற்

புன்புற வெருவைப் பெடைபுணர் சேவல்
குடுமி யெழாலொடு கொண்டுகிழக் கிழிய
நிலமிழி நிவப்பி னீணிரை பலசுமந்(து)
உருவெழு கூளிய ருண்டுமகிழ்ந் தாடக்
குருதிச் செம்புன லொழுகச்
செருப்பல செய்குவை.” (பதிற்று. ௩௬ : ௫-௧௪) என்னும் போர்க்களக் காட்சி நமக்குப் கின்றது.

பூரிப்பைத் தரு

இனி, நெடுமிடல் அஞ்சி என்பானின் வளஞ்செறிந்த மருதநிலக் காட்சி புலவர், இயற்கை வாழ்வில் ஊறித் திளைத்த இயல்பைப் புலப்படுத்துவதாகும்.

"தடந்தாள் நாரை படிந்திரை கவரும்
முடந்தை நெல்லின் கழையமல் கழனிப்
பிழையா விளையுள் நாடு." (பதிற்று. ௩௨ : ௧௨-௪)

8. பண்டைக்காலப் பழக்க வழக்கங்கள்

வாழ்க்கையின் சாயலே இலக்கியமாகும். பதிற்றுப் பத்துப் போன்ற சங்க இலக்கியங்களினால் நம் முன்னோரின் பல திறப்பட்ட பழக்கவழக்கங்களை உணர்ந்து கொள்ளுகிறோம்.

இனி நான்காம் பத்துச் செய்யுட்களிலிருந்து அறியக் கூடிய பழந்தமிழர் பழக்க வழக்கங்களிற் சிலவற்றைக் காண்போம்.

1. இக்காலத்தில் நிகழ்வதுபோலவே பழங் காலத்திலும் இறைவனை வழிபடுவோர் கையைத் தலைமீது கூப்பிக் குறையை எடுத்துக்கூறி வேண்டிக் கொள்வர். (பதிற்று. ௩௧)

2. முற்காலத்தே வழிபாடு புரிய நீராடுவோர் நீரில் மூழ்குதற்குரிய நேரத்தை மணியை அடித்துத் தெரிவிப்பது உண்டு.

3.

நீராடித்

உண்ணுவிரதியர் குளிர்ந்த நீர்த்துறையில் திருமாலை வழிபடுவர். (பதிற்று. ௩௧)

4. இக்காலத்தே சிலவற்றை எண்ணுபவர், தம் கைவிரலிட்டு எண்ணுவது போலப் பண்டைக் காலத்தே கழற்சிக்காய் கொண்டு எண்ணுதல் மரபு.

(பதிற்று. ௩௨)

5. போரில் செய்த

கள் தம் கழற்காலில்

அரிய செயல்களை வீரர் பொறித்துக் கொள்வர்.

(பதிற்று. ௩௪)

6. உடுக்கின்ற ஆடையைப் பெருமிதத்துக் குரிய அடையாளமாக நிலந்தோய உடுத்தனர். (பதிற்று. ௩௪)

7. களிப்பு மிகுவிக்கும் பொருள்களை மிகுதியாகக் கலந்தால் அருந்தினுர்க்குக் களிப்பு பெரிதும் மிகும் என்று கருதி அவற்றை அளவாகவே கள்ளோடு கலப்பர். (பதிற்று. ௪0)

8. வென்றி எய்திய அரசன் மகிழ்வெய்தித் தானைத் தலைவருடன் கூடித் தேர்த்தட்டிலே நின்று குரவைக் கூத்து அயர்வான். (பதிற்று. ௪௰)

9. பகைவேந்தர் கடிமரத்திற் களிறு பிணித்தலும் நீர்த்துறையைச் சேறுகக் கலக்கி அழித்தலும் செய்வர். (பதிற்று. ௫௫)

9. அரிய செய்திகள்

1. இந் நான்காம் பத்துச் செய்யுட்களால் நன்னன், நெடுமிடலஞ்சி, வண்டன் முதலியோரின் வரலாறுகள் ஒருவாறு புலப்படுகின்றன. (பதிற்று. ௪௰, ௫௧, ௫௨)

2. அவுணர்கள் தேவர்களுக்குப் பயந்து வானத்தில் இயங்குகின்ற அரணம் ஒன்றை அமைத்திருந்தனர். (பதிற்று. ௫௧)

3. போர்க்காலங் தவிர ஏனைக் காலங்களில் போர்முரசு முழங்குவதில்லை. (பதிற்று ௫௧)

4. பண்டை யரசர்கள்பால் குதிரைப்படை, தேர்ப்படை, யானைப்படை,

காலாட்படை என்னும் நால்வகைப் படைகளும் சிறப்பாக அமைந்திருந்தன. (பதிற்று. ௩௪)

5. போருக்குப் புறப்படும் அரசர் [1]உன்னமரத்தைக் கொண்டு நிமித்தம் பார்த்தனர். (பதிற்று. ௪0)

6. சேர மன்னர்கள் வான வரம்பன் என்னும் பட்டப் பெயர் பூண்டிருந்தனர். (பதிற்று. ௩அ)

7. சேர வேந்தன் பகையரசர் எழுவரின் திருமுடிப் பொன்னால் ஆரம் செய்து அணிந்தமையால் 'எழுமுடிமார்பன்' எனச் சிறப்பிக்கப்பட்டனன். (பதிற்று. ௪0)

வலை

8. சிலந்தி வேலமரத்தின் உலர்ந்த கிளைகளில் பின்னும். எருவைச் சேவல் தன்பெடையொடு

கூடிப் பிண முண்ணும். (பதிற்று. ௩௧. ௩௬) புலவரின் உயிர் நூலறிவைக் காட்டும்.

இஃது 9.

தெற்காக

மேற்குத் தொடர்ச்சி மலை வடக்கிலிருந்து அமைந்து நீர் கொண்டுவரும் மேகத்தைத் தடுத்து மழை தரும் கொடுமுடிகளை (பதிற்று. ௩௧) இச் செய்தி புலவர் தம் வைப் புலப்படுத்தும்.

உடையது.
நில நூலறி

10. தேவி என்னும் சொல் பெரும்பாலும் மனைவி யென்ற பொருளுடைய தாயினும் இச் சொல் மகள் என்ற பொருளிலும் வழங்கி வந்தமை, 'வேளாவிக் கோமான் பதுமன் தேவி ஈன்ற மகன்' என்னும் இப் பத்தின் பதிகத்துச் சொற்றொடரால் அறியலாம்.

---

1. உன்னமரம்: நிமித்தம் பார்க்கும் மரங்களில் ஒன்று. இது அரசர்க்கு ஆக்கமுண்டாயின் முன்னரே நற்குறியாகக் குழைந்து காட்டும் என்றும், கேடு நேர்வதாயின் கரிந்து காட்டுமென்றும் கூறுவர். உன்னம்: இலவமரமென்பர் சிலர்.

10. உவமைநயம்

காப்பியாற்றுக் காப்பியனார் இனிய உவமைகளை எடுத்துத் தொடுப்பதில் வல்லுநர்

களைக் காண்போம் :

என்பதற்குச் சில உதாரணங்

1. அரசனின் பருத்த தோள்கள் தேவர்களுக்கு
அஞ்சி அவுணர்கள் வானத்தில் அமைத்த இயங்கும்
மதிலின் கதவுக்குக் காப்பாகச் செய்யப்பட்ட கணைய
மரத்தை ஒத்தன.

2. அரசனின் அகன்ற மார்பு மேலை மலைத்
தொடரை ஒத்தது.

3. அரசன் பெருந்தேவி அருந்ததியை ஒத்த
வள்.

4. நெல்லினது பருத்த தாள் மூங்கிலைப்
போன்றது.

5. யானைகள் மணியைப் பக்கத்தே கட்டப்
பட்ட துடியை ஒத்த தாள்களை உடையவை.

6. சிவந்த ஒளி பொருந்திய குருதி அந்தி மாலைப் பொழுதில் உள்ள வானத்தைப் போன்றது.

7. போர்க்களத்தே பனைமரங்களை

வெட்டின
புனத்தைப் போலக் கை துணிக்கப்பட்டு யானைகள்
மடிந்து கிடக்கும்.

8. கரிய இருள் நீங்குமாறு முழுமதியம் வெண்ணிலவைப் பொழிந்து செல்வதுபோல அரசன் வருத்தமுற்ற குடிகளின் நடுக்கம் நீக்கி நல்லொழுக்கம் இனிது நிலவச் செய்தான்.

9. மென்மையான இயல்பினை உடைய விறலியர் பூக்கள் மலர்ந்துள்ள வேங்கை மரத்தைப்போல
விளங்கினர்.

11. செய்யுள்நயம்

"சுருங்கிய சொற்களால் ஆழ்ந்து அகன்ற பொருள் களை யுடையனவாய், இயற்கை நெறி வழாதனவாய், உணர்
வினை எழுப்பி, மெய்ப்பாடு தோற்றுவிக்கும் செய்யுட்களையே அறிவுடையோர் பாட்டு என்று

சான்றோர்

கொள்வா
ராவர்'' எனத் தமிழ்ப்பெரும் புலவர் உயர்திரு. ந. மு. வே. நாட்டாரவர்கள் கூறுவார்கள. இத் தன்மைகளுக்கு இலக் கியமாய் அமைந்தவை காப்பியாற்றுக் காப்பியனாரின் செய்யுட்களாகும். பொருட்சிறப்பு வாய்ந்த இவர்தம் பாடல்களின் பெயர்கள முன் னரே விள க்கப்பட்டன.

இவா, பிறைமதியின் இரு கோடும் கூடிய வழி முழு மதியமாதலின் அதனைக் 'கோடு கூடு மதியம்' என்ற சொற் றொடராற் குறித்தார். ஆண்மக்களாயுள்ளார் தம் கீழ் வாழ் வாரைக் காத்தற் பொருட்டு அவர்க்கு அவர் செய்யும் கடன் கள் எல்லாம் செய்து முடிக்க வேண்டும என்னும் செய்தி யைக் காப்பியனார் 'ஆண்கட னிறுத்தல்' என்னும் சுருங்கிய சொற்றொடரால் புலப்படுத்துதல் கருதத் தக்கது. சேர மான் ஆன் றவிந்த கொள்கைச் சான்றோனுவான். அவனது பெருமை அளவிடற்கரியது. நாற்றிசையிலும் உள்ள மன்னர்களுள் அருங்குணத்திலும் ஆட்சிநெறியிலும் அவனுக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை. இத் தன்மையை 'மாதிரம் விளக்கும் சால்பும் செம்மையும்' உடையவன் என்று புலவர் குறிப்பிடுகின்றார். மானமும் வலியும் உடைய வீரர்கள் புறங்கொடுத்தலைப் பெருங் குற்றமாகக் கருதுவர். சேரமான் அத்தகைய குற்றமுடையாரோடு

போர் செய்யான். ஆகையால் அவனது பகை மன்னரது கோட்பாட்டை 'ஓடாப்பூட்கை' என்று கூறினர். தொன்று தொட்டு வரும் முறையில் போர் இயற்றிப் பயின்றவர்களை வெல்லுதற்குப் பகைவர் புதுமுறைகளைப் புணர்த்துப் போர்செய்யக் கருதுவர். சேரமானின் வீரர் இத்தகைய பழமையும் புதுமையும் பயின்று வஞ்சனையின்றிப் போருடற்றுவர் என்பதை 'வம்பமர் கடந்து' என்னும் சொற்றொடர் புலப்படுத்துகின்றது. பகை மன்னரின் வீரர்

கள் அப் பகைவேந்தரின் வழிநின்று தம் அறம் திரியா மறத்தை நிலைநாட்டிப் பெருமை பெற்றார்கள். ஆகையால் அவர்களை ஒறுத்தல் அறமன்று. எனவே, அவர்களைப்பற்றிக் கொணர்ந்து தன்பால் அவர்களுக்குப் பகைமை எண்ணம் தோன்றா வண்ணம் நட்பும் துணைமையுமாகிய நலம் தோன்றுமாறு அறம்புரிந்தான் சேரமான். இவ்வரிய செய்தியை, 'கோடற வைத்த கோடாக் கொள்கை' என்கிறார். தமக்குக் கிடைத்த இனிய பொருள்களைப் பிறர்க்குப் பகுத்துக் கொடுத்தலை விழையாமல் தனித்தனியே உண்ணு
தற்கு
சிறந்த

விரும்பும உள்ளத்தை அடக்குதலைக் காட்டிலும் ஆற்றல் வேறொன்றுமில்லை. இவ்வாற்றலைக் காப்பிய

ஞர் 'பாத்தூண் தொகுத்த ஆண்மை' எனக் குறிப்பிடுதல் உளங்கொளற் குரியது. இங்ஙனம் நான்காம் பத்தில்,

"சில்வகை யெழுத்திற் பல்வகைப் பொருளைச்
செவ்வ னுடியிற் செறித்தினிது விளக்கித்
திட்பமும் நுட்பமும் சிறந்த."

சொற்றொடர்கள் பற்பல உண்டு. அவற்றை விரித்துக்கூற இடமின்மையின் நிறுத்திக் கொள்கிறேன்.

12. முடிவுரை

அன்புருவமான தமிழ்ப் பெருமக்களே!

இதுகாறும் என் சிற்றுரையைப் செவி பொறுமையுடன் நன்றி

மடுத்த உங்களுக்கு வணக்கம் செலுத்துகின்றேன்; பாராட்டுகின்றேன். பதிற்றுப்பத்து என்னும் இலக்கியச் சோலையிலே நுழைந்து இன்று நாம் இன்புறு கின்றோம். பத்துப்பாட்டும் எட்டுத்தொகையுமாகிய சங்கத்தமிழ் இலக்கியங்கள் தமிழ் மக்களின் தனிப்பெருஞ் செல்வமாகும்; கலங்கரை விளக்கமாகும். எழில் மணம் எத்திசையிலும் பரவும் வகையில்

அவற்றின்
நாம் பாடு
பட வேண்டும். பன்மொழிப் புலமை வாய்ந்த
தமிழ்
அறிஞர்கள் நம்மிலக்கியங்களைப் பிற மொழியில் ஆக்குதற்குரிய நல்வாய்ப்புக்கள் தற்காலத்தே காணப்படுகின்றன.

124 பதிற்றுப்பத்துச்
சொற்பொழிவுகள்

காலத்துக்கேற்ற கவினுறு பணியாகிய இதனை மேற்கொண்டு தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவுமாறு ஆவன செய்தல் அறிஞர்கள் கடமையாகும். 'வான மளந்த தனைத்தும் அளந்திடும் வண்மொழி' யாகிய நம் தாய்மொழி முதன்மொழியெனப் போற்றப்பெறும் இக்காலத்தே மொழிப்பணி புரிவதில் எல்லோருக்குமே ஒரு புத்துணர்ச்சி தோன்றுதல் வேண்டும். தமிழ்வளர்ச்சியையே முதல் நோக்கமாகக் கொண்டு பணியாற்றும் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் இன்னும் பற்பல தமிழ் இலக்கியங்களின் மணமும் நாட்டில் விரிந்து பரவுமாறு இத்தகைய மாநாடுகளைத் தொடர்ந்து நடத்தியுதவ வேண்டுகின்றேன். வணக்கம்.

"வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வே!
எழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழிய வே!"

—பாரதியார்.

ஐந்தாம் பத்து

[திரு. அ. ச. ஞானசம்பந்தன்]

1. தோற்றுவாய்

சங்கமருவிய நூல்களுள் ஒன்று எனப்படும் பதிற்றுப்பத்தினுள் ஐந்தாம் பத்து, 'கடல்பிறக்கோட்டிய குட்டுவனை' ஆசிரியர் பரணர் பாடியதாம். இக் குட்டுவனே இளங்கோவடிகளின் முன்னவன் என்ற கருத்தில் பதிகம் பேசுகின்றது. செங்குட்டுவனுடைய வீரச்செயல்கள் எனப் பலவற்றைச் சிலப்பதிகாரம் பேசுகிறது. அவ் வீரச்செயல்கள் பலவற்றுள்ளும் தலையாயது அவனுடைய வடநாட்டுப் படையெடுப்பு எனக் கூறலாம். 'யாதவி மடந்தை கானல்பாணி கனகவிசயர் தம் முடித்தலை நெரித்

தது' (சிலம்பு 27 : 50) என்று
செங்குட்டுவனின் வெற்றிகளுட்

சிலம்பு புகழும் அதுவே
சிறந்தது என்பதிற் றடை
யொன்று மில்லை.

2. பெருவெற்றி

எனினும் செங்குட்டுவனுடைய இப் பெருவெற்றி பதிற்றுப்பத்தில் இடம் பெறுமற் போனது வியப்பே! ஒருவேளை பதிற்றுப்பத்துப் பாடப்பெற்ற பின்னர், செங் குட்டுவன் வடநாடு போந்தான் என்று அமைதி கூறலாமா? அவ்வாறு கூறுவதாயினும அதனால் விளையும் இடர்ப்பாடுகள் பல. அவற்றுள் தலையாய ஒன்றைக் காண் போம். ஐந்தாம்பத்தைப் பாடியவர் பரணர் என்று பதி கம் பேசுகிறது. சங்கப்புலவர் வரிசையில் பரணர் சாதாரணமான புலவரல்லர். கபில, பரணர் என்று உம் மைத் தொகைக்கு உதாரணம் காட்டக்கூடிய அளவிற்கு

இவர்கள் பெயர்கள் நாட்டவர்களால் நன்கு அறியப்பட் டிருந்தன. அத்தகைய பெரும்புலவரால் குட்டுவன் பாடப்பட்டுள்ளான். புலமை நயந்தெரி பரணர் செங்

குட்டுவனுக்கு
கோவை ஏனோ

உடன்பிறந்த பெரும்புலவராகிய இளங்
மறந்துவிட்டார்! புலமையற்றவராயினும்
அரசனின் இளவல் துறவுபூண்டார என்பது
குறிக்கத் தக்க நிகழ்ச்சியாகப்படவில்லையா?
சிலப்பதிகாரத்தை ஒத்த பெருங்காவியத்தைப்
பின்னர்ப் பாடக்கூடிய பேராற்றல் வாய்ந்த
இளங்கோவின் ஆற்றல் இளமையில் வெளிப்படா
திருந் தது என்பதும் பொருத்தமுடையதாகத்
தெரிய
வில்லை.
குறிப்புந்

பின்னர் ஏன் பரணர் இளங்கோவைப்பற்றி ஒரு
தராமல் விட்டுவிட்டார்?

அதுதான் போகட்டும். பதிற்றுப்பத்து
பாடப் பட்டதன் பின்னர் இளங்கோ
சிலப்பதிகாரத்தை இயற்றி
னர் என்றே வைத்துக்கொள்வோம். அவர் ஏன் பரண
ரைப் பற்றித் தம் பெருநூலுள் யாண்டுங் குறிப்பிட
வில்லை? வித்துவக்காய்ச்சல் என்று பிற்காலத்தார் கூறு
வது காரணமாமோ ? சிலப்பதிகார

ஆசிரியரிடம் இத் தகைய குற்றத்தை ஏற்ற நினைப்பதுந் தீதன்றோ? பரணரைப்பற்றிப் பாட விருப்பம் இன்றேனும் தம தமையனாகிய செங்குட்டுவன் பரணருக்குத் தந்த பரிசிலையேனுங் குறித்திருக்கலாமே அடிகளே! ஐந்தாம்பத்தின் பதிக ஆசிரியர் கூறுகின்றபடி பார்த்தால பரணருக்கு உம்பற் காட்டுவாரியையும் தன் மகன் குட்டுவன் சேரலையும் செங்குட்டுவன் கொடுத்தான் என்றல்லவோ ஆகிறது. இத்துணைப் பெரிய பரிசிலைத் தந்த குட்டுவனுடைய வள்ளன்மையைப் பாராட்டவில்லையே இளங்கோவடிகள்!

3. மாடலன் வாய்ப்புகழ்

சிலப்பதிகாரத்தில் செங்குட்டுவன் பெருமை பேச வேண்டிய இடத்தில் அடிகளின் இடர்ப்பாட்டை நன்கு அறிகிறோம். தம்முடைய தமையன் புகழைத் தாமே பறைசாற்றுவது இயைபுடைத்தன்று. எனவே 'மாடலன்'

என்ற மறையவனைப் படைக்கின்றார் அடிகள். மாடலன் கூற்றாகவும் ஏனைய பாத்திரங்களின் கூற்றாகவும் குட்டுவன் பெருமை பேசப்படினும் மாடலனே அடிகட்கு மிகவும் உகந்தவனாகக் காணப்படுகிறான். இதோ அவன் பேசுகிறான்.

"......................குறையாக் கேள்வி
மாடலன் எழுந்து மன்னவர் மன்னே!
வாழ்கநின் கொற்றம் வாழ்கஎன் றேத்திக்

கறிவளர் சிலம்பில் துஞ்சும் யானையில்
சிறுகுரல் நெய்தல் வியலூர் எறிந்தபின்
ஆர்புனை தெரியல் ஒன்பது மன்னரை
நேரி வாயில் நிலைச்செரு வென்று
நெடுந்தேர்த் தானையொடு இடும்பில்புறத்
திறுத்துக்
கொடும்போர் கடந்து நெடுங்கடல் ஓட்டி
உடன்றுமேல் வந்த ஆரிய மன்னரைக்
கடும்புனல் கங்கைப் பேர்யாற்று வென்றோய்"
(சிலம்பு: நடுகல்: ௧௧௧-௨௧)

செங்குட்டுவன் வாகைகளை வரிசைப் படுத்த அடிகள் மாடலமறையோனையே பாத்திரமாக் கொள்கிறார். இவ் வெற்றிகளுள் நெடுங்கடல் ஓட்டிய வெற்றியையே பதிற்றுப் பத்துப் பகுதியும் பேசுகிறது. பதிற்றுப்பத்துப் பலபடியாகப் பேசும் வெற்றியை மாடலமறையோன் இரண்டே சொற்களுள் அடக்கிவிடுகிறான்.

4. கடல்வென்றி

'படுதிரைப் பனிகடல் உழந்த தாளே' (பதிற்று. ௪௧: ௨௧)

'தேரொடு சுற்றம் உலகுடன் மூய
மாயிருந் தெண்கடல் மலிதிரைப் பௌவத்து
வெண்டலைக் குரூஉப் பிசிர் உடையத்
தண்பல வரூஉம் புணரியிற் பலவே'
(பதிற்று. ௪௨: ௨0-௩.)

'இனியா ருளரோநின் முன்னும் இல்லை
மழைகொளக் குறையாது புனல்புக நிறையாது

விலங்குவளி கடவும் துளங்கிருங் கமஞ்சூல்
வயங்குமணி இமைப்பின் வேலிடுபு
முழங்குதிரைப் பனிக்கடன் மறுத்திசி னோரே'
(பதிற்று. சுடு: கஅ-உஉ)

'கோடுநரல் பௌவங் கலங்க வேலிட்டு
உடைதிரை பரப்பிற் படுகடல் ஓட்டிய
வெல்புகழ்க் குட்டுவற் கண்டோர்' பதிற்று. சுசு : கக-கங)

'கெடலரும் பல்புகழ் நிலைஇ நீர்புக்குக்
கடலொடு உழந்த பனித்துறைப் பரதவ'
(பதிற்று. சுஅ : ங-சு)

என, இத்துணை இடங்களில் ஐந்தாம் பத்துப்பாடல்களினாற் பாராட்டப்பெற்ற செங்குட்டுவனுடைய கடற்போர் மாடலனால் இரண்டு சொற்களால் ஓதுக்கப்படுதல் காண்க.

5. பதிகமுறை

செங்குட்டுவனுடைய வெற்றிகள் என்று சிலப்பதிகாரம் குறிக்கின்ற பலவற்றைப் பதிற்றுப்பத்தில் ஐந்தாம் பத்துக் குறிக்கவில்லை என்பது உண்மையே! அதனல் பரணர் குறித்த குட்டுவனும் இளங்கோ குறித்த குட்டுவனும் வெவ்வேறானவர் என்று நிலைநாட்ட முற்படுகின்றனர். அவர்கள் காட்டும் முடிவை ஏற்றுக்கொள்வதாயினும் காட்டப்பெறும காரணங்கள் நேர்மையுடையனவாகத் தெரியவில்லை. ஆனல், இவ்வழி மேற்கொள்பவர் பதிகப்பாட்டில் குறிக்கப்பெற்றுள்ள செய்திகளில் சிலவற்றை மறுத்துவிட்டுச் சிலவற்றை அப்படியே ஏற்றுக்கொள்கின்றனர். ஒவ்வொரு பத்தின் பின்னரும் காணப்படும் பதிகங்களே அப்பத்தைப் பாடினவர் பெயர் அப்புலவர் பெற்ற பரிசில் முதலியவற்றைக் குறிக்கின்றன. ஐந்தாம் பத்தில் காணப்பெருத குட்டுவன் செயல்கள், பரணராற் பாடப்படாத செயல்கள், ஏன் பதிகத்தில் இடம் பெற்றன? பரணர் கூருச்செயல்கள் பதிகத்திலிருப்பதால் பதிகம் பொய்யுரைக்கின்றது; சிலப்பதிகாரத்திலிருந்து

தன் கருத்துக்களைப் பதிகம் கடன் வாங்குகிறது. இன்றேல் சிலப்பதிகார ஆசிரியரே பதிகத்தையும் பாடி இருக்கலாம் என்றெல்லாம் கூறுகின்றார்கள் சில அறிஞர்கள்.

பரணர் குட்டுவன் காலம் முழுவதும் வாழ்ந்திருந்தார், அவனுக்குப் பின்னரும் வாழ்ந்திருந்தார். எனவே, அவர்

குட்டுவனுடைய வீரச்செயல்களாகச்

வில்லையாயின் அவை அவர் காலத்து

சிலவற்றைக் கூற
நிகழவில்லை என்
பதே முடிபென்று கூறுகிறார்கள். இவ்வாறு கூறுவதால் உண்டாகும் இடர்ப்பாட்டைப் பின்னர் காண்போம்.[1]

இவ்வளவு கருத்துவேற்றுமைக்கும் காரணம்

பதிகம்
தானே! பதிகம் புனைந்துரை பல கூறுகிறதாகலின் அதனை முழுவதும் ஒதுக்கிவிடுவதே முறை. பதிகத்தை முற்றிலும் ஒதுக்கிவிட அவர்களும் முனைந்து நிற்பர். ஆனால், ஒரு சிறிய இடையூறு! பதிகத்தை ஒதுக்கிவிட்டால் ஐந்தாம் பத்தை யார் பாடினார் என்பதை அறிய முடியாதே! பரணர் பாடினார் என்று கூறுவதே பதிகத்தின் துணைகொண்டு தானே! பதிகம் கூறும பல செய்திகளை நாம் மறுத்து இது வொன்றனை மட்டும ஏற்றுக் கொள்வது யாங்ஙனம்? ஒரே பாட்டில் தமக்குத் தேவையானதை மட்டும் ஏற்றுக் கொண்டு ஏனையவற்றை ஒதுக்குவது திறனாய்வு முறையன்று.

பதிகம் முழுவதையும் ஒதுக்கும்பொழுது பரணரும் ஒதுங்கிவிட்டும. பதிகம் கூறும் செய்திகள் நம்பத் தகுந்தனவாக இல்லை என்பதும், நூலுட் கூறப்பெற்றவற்றிற்கும்
தும்

பதிகம கூறுவதற்கும் மாறுபாடுகள் உள்ளன என்ப
உண்மைதாம். பின்னர் வழி யாது? பதிகம் யாரோ

ஒருவரால்
அனைவரும்

பிற்காலத்தில் எழுதப் பெற்றது என்பதை .
நம்புகின்றனர். இந்தப் பதிகங்களை நம்பிக்

கொண்டுதாமே பாடினோர் பற்றிய வரலாறுகளும் தொங்கு
கின்றன. "கெடலருந் தானையொடு கடல்பிறக் கோட்டிய
செங்குட்டுவனைக் கரணம் அமைந்த காசறு
செய்யுட்

1. 143-ம் பக்கத்தில் சேரர் மரபு என்னும் தலைப்பைக் காண்க.

பரணர் பாடினர் பத்துப் பாட்டு" என்று
பதிகந்தானே கூறுகிறது. இது தவிர
உள்ளேயுள்ள பாடல்களில் யாண்டும்
யார் பாடினர் என்று கூறத்தக்க சான்றுகள் ஒன்றும் இல்
லையே! எனவே பரணரே இதனைப் பாடினர் என்று
கொண்டு ஆய வேண்டிய கடப்பாடு யாது?

இப்பதிகங்கள் அனைத்தும் ஒருவரே பாடியுள்ளார்

என்பதும் அனைவரும் ஒப்புகிற ஒன்றுதான். எனவே ஒரு பதிகம் அடிபட்டால் ஏனைய பதிகங்களும் நில்லா. இப்பதிகங்களைக் கொண்டு சேரர் மரபுமுறை கூறுவதும் பொருந்துமாறில்லை. இவற்றை நம்பி மரபுமுறை கூறப்புகுந்து இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் மகன் கடல் பிறக்கோட்

டிய குட்டுவன் என்று கொள்கிறார்கள்.
அந்துவஞ் சேரலிரும் பொறை மரபில்

இம்மரபிற் சேராத
செல்வக் கடுங்கோ

வாழியாதன் என்றொருவன் வருகிறான்.
ரும் அடுத்தடுத்து ஆட்சி செய்தனரா

இவ் விருமரபின
என்று அறியவும்
வாய்ப்பில்லை. இவர்களுள் உள்ள உறவுமுறை யாது
என்றும்
பதிகந்தவிர வேறு வழியால் அறிய இயலவில்லை. ஆனால், செங்குட்டுவனைப் பரணரும் செல்வக் கடுங்கோவைக் கபிலரும் பாடியதாகப் பதிகங்கள் கூறுகின்றன.

6. கபில பரணர்

வேறு ஆதாரங்கள் கொண்டு கபிலரும்
காலத்தவரென முடிவுசெய்ய முடிகிறது.
பரணரும் ஒரு
அவ்வாறாயின்

இவ்விரு வேறு அரசர்களையும் சமகாலப் புலவர்களாகிய இவ்விருவரும் எவ்வாறு பாடினர்? அன்றியும் இப்பதிகங் கூறும் உறவுமுறை உண்மையானால் இரண்டாம் பத்தின் சேரலாதனுக்கு மூன்றாம் பத்தின் செல்கெழு குட்டுவன் தம்பி யென்றும் நான்காம் பத்தின் நார்முடிச் சேரல் ஒரு மகன் என்றும் ஐந்தாம் பத்தின் குட்டுவன் இரண்டாம் மகன் என்றும் ஆறாம் பத்தின் ஆடு கோட்பாட்டுச் சேரலாதன் மூன்றாம் மகன் என்றும் ஆகிறது.

ஐந்தாம் பத்தைப் பாடிய காசறு
எனப்படுபவர் அப்பத்தின் தலைவனுக்கு

செய்யுட் பரணர்
ஒரு அண்ணனும்

ஒரு தம்பியும் உண்டென்பதை ஏனோ பாடவில்லை? இளங்கோ என்ற ஒரு தம்பி இருந்தது கற்பனை என்று அறிஞர் முடிவு கட்டினாலும் நார்முடியானையும் ஆ. சேரலா தனையும் ஏன் பாடவில்லை? இவர்களிருவரும் முறையே 4, 6-ஆம் பத்துக்கட்குரிய பெருமை வாய்ந்தவர்களாயிற்றே! இருவருடைய வெற்றிகளும் 4, 6-ஆம் பத்துக்களிற் புகழப் படுகின்றனவே. தந்தை, தம்பி, மக்கள் மூவர் என்ற முறை வைப்பு உண்மையா யிருக்குமாயின் ஒருவரைப்பற்றிய குறிப்பு மற்றவற்றில் ஏன் வரவில்லை? ஐந்தாம் பத்துப் பாடும்பொழுது பரணர் இவர்களை மறந்துவிட்டாலும் தாம் பாடிய பிற பாடல்களிலேனும் குறிப்பிட்டிருக்க லாமே! ஊர் பெயர் தெரியாத சிற்றரசர்களை யெல்லாம் பாடும் பரணர் ஏன் இவர்களைப்பற்றி ஒரு குறிப்பும் தா வில்லை? எனவே பதிகங்களை நம்பி இவ்வுறவுமுறை கூறுதல் அத்துணைப் பொருத்தமுடையதா என்பதும் ஆய்தற்குரியது.

7. திறனாய்வு

இலக்கியத் திறனாய்வு முறை இக்காலத்தில்

வளர்ந்துள்

ளது. ஒரு கவிஞனுடைய சில பாடல்கள் கிடைக்குமா யின் அவற்றைக் கொண்டு அவன் பெயரில் வழங்கும் பிற பாடல்களை ஓரளவு ஆயலாம். இம்முறையில் காணின்

பரணருடைய பாடல்கள் புறநானூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை ஆகிய தொகுப்புக்களிற் காணப்பெறுகின்றன. பதிற்றுப்பத்து நீங்கலாகப் பரணர் பெயரில் காணப்பெறும் பாடல்கள் 75. புறத்தில் 13-ம், அகத்தில் 34-ம், குறுந்தொகையில் 16-ம் நற்றிணையில் 12-ம் அவராற் பாடப்பெற்றவை என வழங்குகின்றன.

இவை அனைத்திலும் காணப்பெறும் நடைக்கும் பதிற்றுப்பத்தில் காணப்பெறும் நடைக்கும் வேறுபாடு உண்டா என்று காண்டல் வேண்டும். மேலும் இப் பாடல்களிற் கூறப்பெறும் பிற செய்திகளையும் ஆய்தல் வேண்டும். பதிற்றுப்பத்தில் அவர் பாடிய மன்னனின் சிறப்பியல்பு

களை வேறு இடங்களில் நினைவு கூர்ந்துள்ளாரா என்றுங் காண்டல் வேண்டும்.

8. பாட்டொப்பு

சங்க நூல்களில் ஓரளவு பயிற்சி உடையாரும் ஓர் உண்மையை எளிதில் அறியலாம்.

ஏனைய சங்கப் பாடல்க
ளின் நடைக்கும் பதிற்றுப்பத்தின் நடைக்கும் வேறுபாடு மிக்கிருத்தலைக் காண்டல்கூடும். அகப்பட்ட எட்டுப் பத்துக் களையும் பாடியவர்கள் எனப் பதிகம் கூறும் புலவர்களின் பெயரால் பிற பாடல்களும் உளவே. சங்கப்பாடல்
தொகுப்பில் மிகுதியான பாடல்களைப் பாடிய கபிலர் பெய ரால் ஒரு பத்தும், கபிலரின் அடுத்த படியில் நிற்கும் பரணர் பெயரால் ஒரு பத்தும் காணப் பெறுகின்றனவே. பரணருடைய புறம், அகம், குறுந்தொகை, நற்றிணைப் பாடல்களையும் படித்துவிட்டுப் பதிற்றுப்பத்துப் பாடல் களையும் உடன் படித்தால் என்ன தோன்றுகிறது? பரம் பரையாகக் கூறிவந்த முடிவுகட்கு எதிராக நினைக்கவும் அச்சம் ஏற்படுகிறது. ஆனால், வேறுபாட்டை வெளிக்கூற எத்துணை அஞ்சுபவர்கட்கும் கூட இப்பாடல்களின் இடை யேயுள்ள வேறுபாடு புலனாகாமற் போகாதே! ஏனைய பாடல்களிற் காணப்படும் ஓசைநயமும், சொல்லாட்சிச் சிறப்பும் ஐந்தாம் பத்தில் காணப்படுகின்றனவா? பதிற்றுப் பத்தில் அதிகம் பயிலாமல் பரணருடைய பிற பாடல்களில் மிக்குப் பயின்ற ஒருவரிடம் ஐந்தாம் பத்தின் சில பாடல் களைக் காட்டினால் இவை பரணர் பாட்டு என்று கூறுவார் களா?

பதிற்றுப்பத்துப் பாடல்களைப்

படிக்கும்பொழுது
வேண்டுமென்று பிடிவாதத்திற்குப் பாடினவைபோல ஓர் உணர்ச்சி தோன்றக் காரணம் யாது? பதிற்றுப்பத்துப் பாடல்கள் புறப்பாடல்கள் தாமே! சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனும் சோழன் வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளியும் போரிட்டு இருவருமே போர்க்களத்து வீழ்ந்தார்களாம். இருவரும் இறந்தமை குறித்துப் பரணர்

பாடிய பாடலைக் காண்க. இங்குப் பரணராற் பாடப் பெற்ற குடக்கோ நெடுஞ்சேரலாதன் யார்? இவனே இரண்டாம் பத்தின் தலைவன் என்று எளிதாகக் கூறிவிடுகிறார்கள். அவ்வாறாயின் அவன்
கவலைப்படும் பரணர் குட்டுவனைப்
இதுபற்றிக் கூறவில்லை?

சாவிற்கு இத்துணைக்
பாடும்பொழுது ஏன்

“ எனைப்பல் யானையும் அம்பொடு துளங்கி
விளைக்கும் வினையின்றிப் படையொழிந் தனவே.
விறற்புகழ் மாண்ட புரவி யெல்லாம்
மறத்தகை மைந்தரொ டாண்டுப்பட் டனவே!
தேர்தர வந்த சான்றோர் எல்லாம்
தோல்கண் மறைப்ப வொருங்குமாய்ந் தனரே!

விசித்துவினை மாண்ட மயிர்க்கண் முரசம்
பொறுக்குநர் இன்மையின் இருந்துவிளிந்
தனவே!
சாந்தமை மார்பின் நெடுவேல் பாய்ந்தென
வேந்தரும் பொருதுகளத் தொழிந்தனர்!
இனியே
என்னு வதுகொல் தானே? கழனி
ஆம்பல் வள்ளித் தொடிக்கை மகளிர்
பாசவன் முக்கித் தண்புனற் பாயும்
யாணர் அறாஅ வைப்பிற்
காமர் கிடக்கையவ ரகன்றலை நாடே."
(புறம் : சுஙு)

இனிப் பரணர் பாடியதாகக் கூறப்பெறும் பத்தின் ஏழாம் பாடலும் கீழே தரப்படுகிறது.

ஐந்தாம்
இவை

இரண்டின் ஓசை, சொல்லாட்சி, இழும் (Rythm) என்பவற்றிடைக் காணப்பெறும் வேறுபாட்டையுங் காண்க.

"அட்டா னானே குட்டுவன் அடுதொறும்
பெற்றா னாரே பரிசிலர் களிறே!
வரைமிசை இழிதரும் அருவியின் மாடத்து
வளிமுனை அவிர்வருங் கொடிநுடங்கு தெருவில்
சொரிசுரை கவரும் நெய்வழி புராலின்

பாண்டில் விளக்குப் பரூஉச் சுடரழல
நன்னுதல் விறலிய ராடும்
தொன்னகர் வரைப்பின்அவ னுரையா னவே!"
(பதிற்று. சஎ)

'Style reveals the man' என்ற பழமொழியொன்றுண்டு மேனாட்டில். தனித்து இரண்டு பாடல்களை மட்டும் எடுத்துக் காண்பதால் இவற்றிடை வேறுபாட்டை நன்கு காண முடியாமலும் இருக்கலாம். பல பாடல்களையும் ஒரே நேரத்திற் படித்துப் பார்த்தால் உண்மை விளங்கும்.

9. கடற்போர் கூறுமை

இது ஒருபுறம் இருக்கப், புறம் 369-ஆம் கடல் பிறக்கோட்டிய வேல்கெழுகுட்டுவனைப்

பாடல் பாடியதாக
பரணர் அவனுடைய

அமைந்துள்ளது. அப் பாடல் முழுவதும்
போர்த்திறமையை வியந்து பாராட்டுவது

தான். எனினும்

அடைமொழியாக

என்ன வேற்றுமை? குட்டுவனுக்கு பாடல் ஒரு அமைந்த கடற்போரைப்பற்றி இப் போரையே

வரியாயினும் கூறவில்லை! அவன் செய்த நிலப் பாராட்டுகிறது இப் பாடல்.

"பேய்மகள் பற்றிய பிணம்பிறங்கு பல்போர்பு
கணநரி யோடு கழுதுகளம் படுப்பப்

பூதங் காப்பப் பொலிகளம் தழீஇப்
பாடுநர்க் கிருந்த பீடுடை யாள..." (புறம்:

பதிற்றுப்பத்தில்
டுகூகூ: கரு-கஅ) படுவது அவன் செய்த

குட்டுவன் மிகுதியாகப் போற்றப்
கடற்போரின் பொருட்டேயாம்.

'படுதிரைப் பனிக்கடல் உழந்த தாளே' (பதிற்று.

௨க: ௨எ)

'மாயிருந் தெண்கடன் மலிதிரைப் பௌவத்து
வெண்டலைக் குரூஉப்பிசி ருடையத்
தண்பல வரூஉம் புணரியிற் பலவே.' (பதிற்று. ௨௨
௨ கு-சு) 'பிணம்பிறங் கழுவத்துத் துணங்கை யாடி
... ...
முழங்குதிசைப் பனிக்கடல் மறுத்திசி னோரே.'

(பதிற்று. ௪௫: ௧௨-௨௨)

'கொடுநரல் பௌவங் கலங்க வேலிட்டு
உடைதிரை பரப்பிற் படுகடல் ஓட்டிய
வெல்புகழ்க் குட்டுவன்.' (பதிற்று. ௪௬: ௧௧-௩),

என்ற எடுத்துக்காட்டுக்களால் அவனுடைய கடற்போர்ப் பெருமை பேசப்படுகிறது. இப் பாடல்களில் அவனுடைய பிற போர்களும் பேசப்பட்டாலும் அவன் கடற்போரே அதிகச் சிறப்பு வாய்ந்தது என்பதை ஐந்தாம் பாடல் தெளிவாகக் கூறுகிறது.

'சிலைவிசை யடக்கிய மூரி வெண்டோல்
அனைய பண்பிற் றானை மன்னர்
இனியா ருளரோநின் முன்னும் இல்லை.'

(பதிற்று. ௪௫: ௧௬ - ௮)

என்ற அடிகள் இக்கருத்தை வலியுறுத்தும்.

இத்துணைப் பெருமையுடையதாக பதிற்றுப்பத்தில் பாராட்டப்படும் இக் கடற்போர் புறநானூற்றிற் காணப் படும் குட்டுவன் பற்றிய ஒரே பாடலிற் பேசப்படாதது வியப்பினும் வியப்பே! இது ஒருபுறம் நிற்க. பரணரால் புறம் முதலிய நூல்களிற் பாடபெற்ற 75 பாடல்களில் எத்துணைச் செய்திகள் இடம்பெறுகின்றன? ஒருமுறை இப் பாடல்களைப் படிப்பவரும் இப் புலவர் பெருமானின் பரந்துபட்ட அறிவையும் நுண்மாண்

துறைபுலத்தையும்
பாராட்டாமல் இருத்தல்
மூற்காலத்தும் வாழ்ந்த

இயலாது. தம் காலத்தும் தமக்கு
மன்னரைப் பற்றியும் அவர்களுள்
நிகழ்ந்த போர்களைப்பற்றியும இவர் கூறும்
செய்திகள் படிப்பார்க்கு வியப்பை விளக்காமல் இரா.
மருதத்திணையை
மிகுதியும் பாடுபவர்
தெல்லாம் இரண்டு

பரணராகளின் அலரைப் பேசும்பொழு
அரசர் போரிட்டதைக் குறிப்பிட்டு
அபபொழு தெழுந்த ஆர்ப்பினும் பெரிதால்
என்று குறிப்பிடுகிறார்.
இவ் வலர்

10. பரணரால் பாடப்பெற்றவர்

இவரால் குறிக்கப்பெறும் அரசர் பற்றி ஒரு சிறிது காண்பாம்.

ஆட்டனத்தி ஆதிமந்தி
பாடுகிறார். அகநானூறு 76,

வரலாற்றை மிகுதியாகப்
135, 236, 376, 396 பாடல் 136

களில் இந் நிகழ்ச்சி பேசப்பெறுகிறது. இதனையடுத்து அன்னிமிஞிலி என்பானை இவர் கூறுவதைப் பார்த்தால் அவன் காலத்தேதான் இவர் வாழ்ந்தாரோ என்றும் நினைக்கவேண்டியுளது. அவனை அகநானூறு 142, 181, 262, 396 பாடல்களிலும், நற்றிணை 265 பிடுகிறார். அடுத்துக் கரிகாலனை அகம்

பாடலிலும் குறிப் 125, 135, 246,

376 பாடல்களிற் குறிப்பிடுகிறார். இவர்கள் யான குறிப்புக்கள் வருகின்றனவெனினும்

பற்றி மிகுதி பிறரும் பலர் பற்றியும் குறிப்புக்கள் வருகின்றன.

பழையன்பற்றி அகம் 186, 326-லும்; அஃதைபற்றி அகம் 76, குறுந்தொகை 298-லும்; தித்தன் 352, அகம் 122, 152, 226-லும்; திதியன்

பற்றிப் புறம்
பற்றி அகம்

196, 322-லும்; நன்னன் பற்றி அகம் 152, 356
தொகை 73, 292, நற்றிணை 270-லும்; அதிகன்

குறுந்
பற்றி
அகம் 162-லும்; பேகன் பற்றி அகம் 262 புறம்
141, 142-
லும்; பசும்பூண்பாண்டியன் பற்றிக் குறுந். 393-லும்; எவ்வி பற்றி அகம் 266 குறுந். 19-லும்; அழிசி பற்றிக் குறுந். 258-லும்; ஓரி பற்றி நற்றிணை 6, 265-லும்; தழும்பன் பற்றி நற்றிணை 300-லும்; பாணன் கட்டி என்பவர்ப்பற்றி அகம் 226-லும்; உருவப் பஃறேர் இளஞ் சேட்சென்னி பற்றிப் புறம் 4-லும்; குடக்கோ நெடுஞ்சேரலாதன் பற்றிப் புறம் 63-லும் பாடுகின்றார். குறைந்த அளவு இருமுறையும் நிறைந்த அளவில் ஆறு இடங்களிலும் ஒவ்வொருவரும் பேசப்படுகின்றனர்.

இத்துணைப் பேர்களைப்பற்றி ஒடுகிற ஓட்டத்தில் குறிப்பிட்ட பரணர் பெருமான் குட்டுவனையும குறிப்பிடுகிறார், நானூற்றில் ஒரே ஒரு இடத்தில். அங்குத் தான் அவனுடைய கடற்போர் பேசப்படுகிறது. அது வருமாறு!

"படைநிலா இலங்குங் கடல்மருள் தானை
மட்டவிழ் தெரியல் மறப்போர்க் குட்டுவன்
பொருமுரண் பெறுஅது விலங்குசினஞ் சிறந்து

செருச்செய் முன்பொடு முந்நீர் முற்றி

ஓங்குதிரைப் பௌவம் நீங்க ஓட்டிய
நீர்மாண் எஃகம் நிறத்துச்சென்று அழுத்தக்
கூர்மதன் அழியரோ நெஞ்சே!" (அகம்: உகஉ)

11. பண்டைச் செயல்

குட்டுவன் என்ற பெயரும் அவன் கடல் பிறக்கோட்டிய செய்தியும் இப்பாடலின்கண் தெளிவாகப் பேசப்படுதல்

உண்மைதான். ஆனல் 'ஒட்டிய நீர்மாண் எஃகம்' என்ற தொடர் கூர்ந்து நோக்கற் குரியது. பண்டொரு நாள் நடைபெற்ற செயலைக் குறிப்பதுபோல் அமைந்துள்ளன வல்லவோ இச்சொற்கள். இவ்வொரு முறை குட்டுவன் செயலைக் குறிப்பிட்டது தவிர மேலே குறிப்பிட்ட வரிசையில் குட்டுவன் பெயர் யாண்டுங் குறிப்பிடப்படவில்லை. தாம் பாடிய 34-அகப்பாடல்களில் ஆறு இடங்களில் அன்னி மிஞிலியைக் குறிப்பிட்ட பரணர் ஏனே குட்டுவனை ஒரே இடத்தில் மட்டுங் குறிப்பிடவேண்டும்? பதிற்றுப் பத்தில் ஐந்தாம் பத்து இவர் பாடியதாக விருப்பின் அத்துணைப் பெரிய சிறப்பு இன்னும் பலவிடங்களிற் குறிக்கப் பெற்றிராதா? ஆதிமந்திக்கும், கரிகாலனுக்கும் ஏன்? பெண் கொலை புரிந்த நன்னனுக்கும் கொடுத்த அளவு கூடக் குட்டுவன் பெறுமற்போனது ஏனே? மோகூர்ப் பழையனைப் பரணர் அகம் 186, 326 பாடல்களிற் குறிப்பிடினும் குட்டுவன் அவனை வென்றதைக் கூறினரல்லர்?

இவ்வொரு பாடலில் குட்டுவனைப் குறிப்பிட்ட காரணத்தால் அவன் காலத்தேதான் பரணர் வாழ்ந்தார் என்று வாதிட்டால் அவரால் குறிக்கப்பெற்ற மேலே கூறப் பெற்ற அனைவரும் சமகாலத்தவர் என்றே கருதநேரிடும்.

இக்குறிப்புக்களும் இருவகைத்து. ஒரு மன்னனுடைய பெயரைக் குறிப்பிட்டு அவனுடைய இன்ன ஊரை ஒத்த இவள் நலம் கெடினும் என்று வருமிடங்கள் உறுதியாக ஒன்றை அறிவுறுத்தும். புலவர்கள் ஓர் ஊரைக் குறிப்பிடும்பொழுது அப்பொழுது வாழும்

மன்னனைக்
மன்னனைக்

குறிப்பிடுவார்களே தவிர முன்னர் வாழ்ந்த குறிப்பிடுதல் மரபன்று; முறையுமன்று.

12. உவமை காட்டும் உண்மை

"பல்வேல் மத்தி கழாஅ ரன்ன." (அகம்: சு)

"பொறையன் கொல்லி,
ஒளிறுநீ ரடுகத்து வியலகம் பொற்ப." (அகம் : சுஉ)

"இத்தன் உறந்தைக், கன்முதிர் புறங்காட் டன்ன."
(அகம் : கஉஉ)

"மாஅல் யானை ஆஅய் கானத்து." (அகம் : சுூஉ)

"பழையன், காவிரி வைப்பிற் போஒர் அன்ன."
(அகம் : கஅசு)

"அன்னி மிஞிலியின் இயலும்." (அகம் : கககூ)

"ஆஅய் நன்னாட்டு அணங்குடைச சிலம்பின்
கவிரம் பெயரிய." (அகம்

: கசுஅ)

"ஓரி, பல்பழப் பலவின் பயங்கெழு கொல்லி."

(அகம் : உ0அ)

"பேகன், கொண்டல் மாமலை நாறி." (அகம் : உசுஉ) இவ் வுவமைகள் அனைத்தும் ஒவ்வோர் ஊரைப் பற்றியும அதனோடு தொடர்புடைய அரசனைப் பற்றியும் கூறலான் புலவர் தம் காலத்து வாழ்ந்த அரசனையே குறிக்கின்றார் என்று கூறத் தடை யாது? தம் காலத்து வாழும் அரசனை விட்டுவிட்டு முன்னர் வாழ்ந்த அரசன் பெயரொடு ஊரைச் சேர்த்துப் புலவர் கூறினர் என்றல் பொருந்தா தன்றோ? எனவே ஊருடன் சேர்த்து ஓர் அரசனைக் குறிப்பிட்டு அவ்வூரை ஒத்த அழகு என்று புலவர் கூறினால் அவ்வரசன் அவர் காலத்தே வாழ்ந்தவன் என்று கூறுவதிற் பிழை ஒன்றும் இல்லை. இக்கருத்தை மனத்துட்கொண்டு கீழ்வரும் அடிகளைக் கவனித்தல் வேண்டும். இப்பாடலும் பரணர் பாடியதே!

"ஆரியர் அலறத் தாக்கிப் பேரிசைத்
தொன்றுமுதிர் வடவரை வணங்குவில் பொறித்து

வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன்
வஞ்சி யன்னவென் நலந்தந்து சென்மே."
(அகம் :
௩௯௬)

ஆரிய மன்னர் மேல் படையெடுத்துச் சென்று அவரை வென்று இமயமலையில் வில்கொடியைப் பொறித்து
மீண்ட ஒரு சேரனைக் குறிக்கின்றது இப்பாடல். அவனுடைய ஊர், வஞ்சி என்றுங் குறிக்கிறது. இத்தகைய பெருவீரன் பெயர் குறிப்பிடப்படவில்லை. இது பரணர்பாடிய
பாட்டேயாகும். இவரால் பதிற்றுப்பத்துப் பாடப்பட்டிருப்பின், அப்பாடல் குறிக்கும் குட்டுவன் இச்செயலைச் செய்திருப்பின் இதனைப் பரணர் ஆண்டுக் கூறி இரா? குட்டுவன் இச்செயலைச் செய்யவில்லையாயின் இதனை யார் செய்தனர்? குட்டுவன் தந்தை என்று பதிற்றுப்பத்தின் பதிகம் கூறும் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் நிகழ்த்திய பெருவீரச்செயல் என்றேனுங் கூறலாமா?

13. உயர்வுநவிற்சி

சேரலாதனைப் பற்றிக் குமட்டூர்க் கண்ணனர் என்ற புலவர் பாடியனவாகப் பத்துப் பாடல்கள் இரண்டாம் பத்
தில் அமைந்துள்ளன. ஆனல் அப்பத்துப் யாண்டும் அவன் வடநாடு சென்றதாக ஒரு இல்லை.
பாடலுள்

குறிப்பும்

“ஆரியர் துவன்றிய பேரிசை இமயந்
தென்னங் குமரியொடு ஆயிடை
மன்மீக் கூறுவர் மறந்தபக் கடந்தே.”

(பதிற்று. ௧௧: ௨௩-௫)

எனவரும் அடிகள் உயர்வுநவிற்சி யணியாய் இமயமுதல் குமரிவரை ஆண்டான் என்று கூறுகின்றனவே தவிர அவன் படையெடுப்புப் பற்றி ஒன்றுங் கூறிற்றிலது. இதேபோலக் குட்டுவனைப் பற்றிய ஐந்தாம் பத்து 3-ஆம் பாடலும்,

“கடவுள் நிலைஇய கல்லோங்கு நெடுவரை
வடதிசை எல்லை இமயம் ஆகத்
தென்னங் குமரியொ டாயிடை அரசர்
முரசுடைப் பெரும்சமம் ததைய வார்ப்பெழச்
சொல்பல நாட்டைத் தொல்கவின் அழித்த
போரடு தானைப் பொலந்தார்க் குட்டுவ.”

(பதிற்று. ௪௩: ௬ - ௧௧)

என்று கூறிச் செல்கிறது. எனவே அகம். 396-ம் பாடல் நெடுஞ்சேரலாதனைக் குறிக்கவில்லை என்பதும் வெள்ளிடைமலை. மேலும் இவ்வகப் பாடலில் 'பிணித்தோன் வஞ்சியன்ன' எனவருஞ் சொற்களால் இவ்வரசன் புலவர் காலத்தே வாழ்ந்தவன் என்பதும் நன்கு விளங்கும்.

14. பரணர் அல்லர்

இவ்வாறயின் அகநானூறு 396-ஆம் பாடலில் பரணர் காலத்து வாழ்ந்த அரசன் ஆரியர் அலறத்தாக்கிய செய்தி யாரைக் குறிக்கும்? யாரைக் குறித்தாலும் பதிற்றுப் பத்தின் இரண்டாம் பத்தின் தலைவன் நெடுஞ்சேரலாதனையும், ஐந்தாம் பத்தின் தலைவன் குட்டுவனையும் குறிக்கவில்லை. என்பது தெளிவு. அது தெளிவாகவே ஐந்தாம் பத்தின் ஆசிரியர் பரணர் அல்லர் என்பதும் நன்கு விளங்கும்.

மற்றொன்றும் நோக்கற்குரியது. இரண்டாம் பத்தில் நெடுஞ்சேரலாதன் புகழ் பாடும்பொழுது அவன் செய்த கடற்போரே பெரிதாகப பேசப்படுகின்றது.

> "வரைமருள் புணரி வான்பிசி ருடைய
> வளிபாய்ந் தட்ட துளங்கிருங் கமஞ்சூல்
> நளியிரும் பரப்பின் மாக்கடல் முன்னி
> அணங்குடை அவுணர் ஏமம் புணர்க்கும்
> சூருடை முழுமுதல் தடிந்த பேரிசைக்
> கடுஞ்சின விறல்வேள் களிறு ஊர்ந்தாங்கு."
> (பதிற்று.
> கக : க-சு)

என்று முருகப்பெருமான் செய்த கடற்போரை உவமிக்கின்றார் சேரலாதன் செய்த கடற்பேராருக்கு. அன்றியும்,

"நுங்கோ யாரென வினவின் எங்கோ
இருமுந்நீர்த் துருத்தியுள்
முரணியோர்த் தலைச்சென்று
கடம்புமுதல் தடிந்த கடுஞ்சின முன்பின்
நெடுஞ் சேர லாதன்." (பதிற்று.
உ0: க - ரு)

என்றும் அவன் புகழ் பேசப்படுகிறது. எனவே நெடுஞ் சேரலாதன் கடற்போர் செய்தலில் இத்துணைச் சிறந்தவனு யின், அவனை ஒரு புலவன் இவ்வளவு சிறந்த முறையில் பாராட்டியும் பாடினான் எனில், பின் வந்தவர்க்கு இது தெரியாமலா போய்விடும்? ஐந்தாம் பத்தின் தலைவன் குட்டுவனை யார் பாடினாலும் அவன்தான் முதல் முதலில் கடற் போர் புரிந்தவன் என்ற கருத்தில்.

"அனைய பண்பின் தானை மன்னர்
இனியார் உளரோ முன்னும் இல்லை
....
மழங்குதிரைப் பனிக்கடல் மறுத்திசி
னோரே."
(பதிற்று. சரு : கஎ - உஉ)

என்று பாடுவதன் நோக்கம் யாது? தந்தை

செயலை
மகனைப் பாடும் வேகத்தில் மறந்து விட்டாரா புலவர்? மூன்றும் என்ற உம்மையால் பின்னரும் வரப்போவதில்லை என்று பேசும் அளவிற்குக் குட்டுவனிடம் அன்பு பூண்டு விட்டாரா அப் புலவர்? இவ்வாறு தந்தை முதலாகச் செய்த செயலை மறைத்து மகனே செய்தது போலப் பாடு பவரையா 'காசறு செய்யுள் புலவர்' எனப் பாராட்டுவது? பரணரை ஒதத புலவர் இத்தகைய பெரும் பிழையைச் செய்திருப்பாரா? எனவே, இதனாலும் ஐந்தாம் பத்தைப் பரணர் பாடவில்லை எனற கருத்தே வலியுறல் காண்க. இப்பத்தைப் பரணர் பாடவில்லை என்பது ஒருபுறம் இருக்க நெடுஞ்சேரலாதனும் குட்டுவனும் தந்தையும் மகனும் அல்லர் என்பதும் இதனால் வெளிப்படுகிறதன்றோ! தம்முள் தொடர்புற்றவராக இவ்விருவரும் இருந்தாலொழிய இவ்வாறு முன்னவன் செயலை மறந்து பின்னவனைப் பாடக் காரணமில்லை யார் இப் பத்தைப் பாடி இருப்பினும்.

குட்டுவன்

ந சேரல்

(2) பல் யானைச் செல்கெழு
பதிற் III

கோட்டிய (5) ஆடுகோட்பாட்டுச்
ன் சேரலாதன்
V பதிற் VI

(க) உதியஞ்

ன் நெடுஞ் சேரலாதன்

பதிற் II

ாய்க்கண்ணி

ச் சேரல்

ற் IV

(4) கடல்பிறக்

குட்டுவ

பதிற்

(1) இமயவரம்

(3) களங்
கார்முடி
பதி

வஞ் சேரலிரும் பொறை வழி

|

ல்வக் கடுங்கோ வாழியாதன்

பதிற் VII

|

ிந்த பெருஞ்சேரல் இரும்பொறை

பதிற் VIII

|

ளஞ் சேரல் இரும் பொறை

பதிற் IX

(உ) அந்து

(6) செ

(7) தகடேர் எ

(8) இ

15. சேரர் மரபு

இதனிற்க சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன் வேற்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளியொடு பொருது மாய்ந்தான் என்று பரணர் பாடுகிறாரே அவன் யார்? பல புலவர்கள் எளிதான முறையில இவனை இரண்டாம் பததின் நெடுஞ்சேரலாதன் எனக் கூறிவிடுகின்றனர். அவர்கள் கூற்றை அப்படியே ஒப்புக் கொள்வதாயின் விளையும் பயனைக் காண்போம். பதிற்றுப்பத்துள் காணப்படும் சேரர் உரிமை வழி வருமாறு.

இப்புலவர் பாடிய அகம். 62-ம் பாடலில் வரும் 'களிறுகெழு தானைப் பொறையன் கொல்லி,' எனவரும் அடி 8-ம் பத்தின் தலைவனாய தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையைக் குறிப்பது என்பர் அறிஞர். வேறு காரணங்களால் கொல்லி இவன் காலத்தில்தான் சேரர்

கைவசம் வந்தது எனவும் அறிய முடிகிறது. பதிற்றுப்பத்தை நீக்கிக் கண்டாலும பரணர் புறம். 63-ஆம் பாடலில் நெடுஞ் சேரலாதனையும், புறம் 369-இல் கடலோட்டிய குட்டுவனையும், எட்டாம்பத்தின் தலைவனாகிய தகடூர் எறிந்த பெருஞ் சேரல் இரும்பொறையை அகம் 62-ஆம் பாட்டிலும் பாடினர் என்று ஆகிறதே. இந்நிலையில் பதிற்றுப்பத்தின் மரபுவழியை ஒப்புக்கொண்டு குடக்கோ நெடுஞ்சேரலாதன் என்பவன் இரண்டாம் பத்தின் தலைவன் என்பதையும் ஒப்புக்கொண்டால், பரணர் 7 பேர் ஆட்சி செய்யுங்காலம் முழுமையும் இருந்தார் என ஒப்ப நேரிடும். (எதிரேயுள்ள வமிசாவளியைக் காண்க.) இதனை மறுக்க வேண்டுமாயின் ஆட்சி செய்யாமல் உண்டு உடுத்து இருந்த அரச குமாரர்களைப் பாடினர் எனக் கூற நேரிடும். 7 பேர் ஆட்சிக்காலம் வரை ஒரு புலவர் இருப்பதாயின் அவரை 'வேத நூற் பிராயம் நூறைத்' தாண்டியவராகவே ஏற்க நேரிடும். இவ்வாறு கொள்ளாமல் இருக்க வேண்டுமாயின் பரணரால் குறிக்கப்பெற்ற இம் மூவரும் அடுத்தடுத்தும் சமகாலத்தும் வாழ்ந்தவர் என்றும் கொள்ளவேண்டும். கொள்ளவே பதிகங்கூறும் உறவு முறை வீழ்ந்துவிடுதல் கண்கூடு.

16. ஆய்விலா நம்பிக்கை

இத்துணைப் பெரிய தொல்லைகளும் ஏன் விளைகின்றன? பதிகத்தில் கூறப் பெற்றவற்றை அப்படியே உண்மை என்று

ஏற்றுக்கொள்வதனாலேயே யன்றோ? பழந்தமிழ் நாட்டில் ஒரு நல்ல பழக்கம் இருந்து வந்துள்ளதை யாரே மறுக்க முடியும்? 7-ஆம் நூற்றாண்டில் பாடப் பெற்ற பாண்டிக் கோவையை எடுத்து ஆளும் இறையனார் களவியல் உரையாசிரியரைச் சங்கச் சான்றோராகிய நக்கீரர் என்று இதுவரை இந்நாடு ஏற்றுவந்தது. அப்படியே நக்கீரர் முதலில் வாய்மொழியாற் கூறினார், பின்னர் வந்தவர்கள் பாண்டிக் கோவையை மேற்கோள் காட்டினார்கள் என்றும் கூடக் கூறமுடியாமல் மேற்கோள் பாட்டையே உரையாசிரியர் எடுத்து ஆண்டு அன்றியும் உரை கூறிய நக்கீரர் பேசுவதையும் காணலாம்.

தமக்குப் பின்னர் வரும் ஆறு தலைமுறையார்களையும் யார் யாரிடமிருந்து உரையைக் கற்றார் என்பதனையும் முன்னரே கூறிவிடுதல் வியப்பினும் வியப்பே! யாரோ ஒரு சிறந்த புலவர்தாம் இவ்வுரையை

எழுதியிருத்தல் வேண்டும். எனினும் இத்துணைப் பெரிய நூலுக்குத் தாம் உரையிட்டதாகக் காட்டிக் கொள்ள வேண்டாத அப் புலவர்பெருந்தகை நக்கீரர் பெயரை அதற்குச் சூட்டியும் இருக்கலாம்! அன்றேல் அவருடைய பெயரும் நககீரர் என்றே இருந்திருக்கலாம். இறையனார் களவியல் நூல், தொல்காப்பியத்தினும் ஓரளவு மாறுபட்ட கொள்கை யுடையது. எனவே, தொல்காப்பியப் பொரு

ளதிகாரத்திலும் புறம்பாக அந்நூல் ஏன் தோன்றிற்று என்பதை மனத்துட் கொண்டு யாரோ ஒருவர் ஆலவாயின் அவிர்சடைக் கடவுளே இந்நூற்பாக்களை இயற்றினன் எனக் கதை கட்டிவிட்டார். அவர் அவ்வாறு கதைகட்ட வாய்ப்பாக இருந்தது களவியல் நூலாசிரியர் பெயரும் 'இறையனார்' என்று இருந்த ஒற்றுமை !

இதேபோலத்தான் ஐந்தாம்பத்தைப் பரணர் இயற்றினார் என்று கூறும் கூற்றும் ஆம். பரணர் என்ற பெயரை யுடைய பிற்காலப்புலவர் ஒருவர் இதனை இயற்றியும் இருக் ஐந்தாம் பத்து

கலாம், அது எவ்வாறாயினும் புறம், அகம், நற்றிணை, குறுந்தொகை முதலிய தொகுப்பு நூல்களிற் காணப் பெறும் பாடல்களை இயற்றிய பரணருக்கும் ஐந்தாம்பத்தைப் பாடிய பரணருக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை,

பெயர் ஒற்றுமை தவிர. அதுவும் அவருக்குப் பரணர் என்ற பெயர் உண்மையில் இருந்திருந்தால். பதிற்றுப்பத்து முழுவதையும் ஒருமுறை கற்பாரும் எட்டுப்பத்துக்களிலும் காணப்படும் சொல் ஆட்சி முதலியவற்றில் ஓர் ஒற்றுமையைக் காண்டல் கூடும். இவை அனைத்தும் ஒருவர் பாடியனவோ என்றுகூட நினைக்கத் தோன்றுகிறது. தக்க ஆதாரங்கள் கிடைக்குந் துணையும் இக் கருத்தை வலியுறுத்த வேண்டா.

பதிகத்தை நம்பி ஐந்தாம்பத்தைப்பற்றித் தொங்கிக் கொண்டிருக்கும் பரணர் பெயரை ஐந்தாம் பத்தின் ஆசிரியர் என்ற கொள்கையை விட்டுவிட்டால் இரண்டு நன்மைகள் ஏற்படும். முதலாவது சேரன் செங்குட்டுவனும், கடல் பிறக்கோட்டிய குட்டுவனும் ஒருவனே என்று கூறத்

தேவை இல்லை. ஒன்று எனக் கூறுவதால் செங்குட்டுவன் இளங்கோவடிகளின் கற்பனையில் உதித்தவன் என்று கூறு

மளவிற்கு ஆராய்ச்சி
பாடிய பாட்டுத்தான்

நீண்டுவிடுகிறது., ஏன்? பரணர்
ஐந்தாம் பதது எனக்கொண்டால்
இம்முடிபு சரியானதே. ஆனல் அக் கோட்பாடு
எத்துணை இடையூறுகளை
விளைவிக்கிறதென்பதைக் கண்டோம். பரணர் என்ற பெயரை உடைய ஒரு பிற்காலப் புலவரோ அன்றி வேறு பெயரையுடைய ஒருவரோ அப் இயற்றி இருத்தல் வேண்டும்.

பத்தை

17. வடநாட்டுப்போர்

மற்ஞெருவகையில் நோக்கிஞலும் இக் கருத்து வலி யுறுதலேக் காணலாம். அகம் 212-ஆம் பாடலில் குட்டு வன் பெயரைக் குறிப்பிட்டு அவன் கடற்போரைக் குறிப் பிடுகிருர் உண்மைப் பரணர். அதற்கு முன்னர் குறிப் பிட்ட 75 பாடல்களிலும் அரசர்களேக் குறிப்பிட நேர்ந்

தால் அவர்கள் ஊரையும் பெயரையும் போர் செய்த இடத்தையும் குறிப்பிடுகிருர். ஐயம் ஏற்பட்டால் மேலே எண்ணிக்கை கொடுக்கப்பெற்றுள்ள பாடல்களேப் புரட்டிப் பார்க்கலாம். அவ்வளவு தூரம் கருத்துடன் அரசன் பெயரைத் தவருமல் குறிப்பிடும் பரணர் பெருமான் அகம் 396-ஆம் பாடலில் அரசன் பெயரைக் குறிப்பிடவே இல்லே. ஆனுல், அவன் ஒரு சேர மன்னன் என்பதை மட்டும் வில் கொடியைக் குறிப்பதால் குறிப்பிடுகிருர். மீட்டும் ஒருமுறை பாடலேக் காண்போம்.

“ஆரியர் அலறத் தாக்கிப் பேரிசை
தொன்றுமுதிர் வடவரை வணங்குவில் பொறித்து
வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன்
வஞ்சி யன்னவென் நலந்தந்து சென்மே.”

என்னும் பாடலேக் கூர்ந்து நோக்குவோமாக.

"ஆரியர் அலறத் தாக்கி' என்றதாலேயே ஆரிய மன்னர்களுடன் போரிட்ட செய்தியைக் கூறிவிட்டாரே கவிஞர்; அவ்வாறிருக்க மீட்டும் 'வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன்' என்று கூறவேண்டிய இன்றியமையாமை யாது?

ஆரியரை அலறத் தாக்கிய செயல் வேறாகவும், வெஞ்சின வேந்தரைப் பிணித்த செயல் வேறாகவும் இருந்தால் தான் இப் புலவரைச் சிறந்த புலவர் என்று கூறல் கூடும். எனவே மூன்று செயல்கள் இப் பாடலிற் குறிப்பிடப்படுகின்றன. (1) சேரன் ஒருவன் ஆரியர் அலறத் தாக்கினான்; (2) பேரிசை இமயத்தில் விற்கொடியைப் பொறித்தான்; (3) அப் போரில் பேரிசை மன்னர் சிலரைப் பிணித்தான் இம் மூன்றும் செய்தி ஓரளவு எண்ணவூட்டுச் (Suggestion) செய்வதாக உளதன்றோ! ஆரிய மன்னரைப்போரில் வென்று இமயத்தில் விற்கொடியைப் பொறித்து, ஆரிய மன்னர் இருவரைக் கட்டி அவர்
தலைமேல் கல்லை ஏற்றி ஒரு சேரன் கொண்டு
நினைவூட்டுவனபோலவன்றோ உள்ளன. இப்

வந்ததை

பாட
லின் அடிகள். அத்தகைய ஒரு சேரனைத் தானே
சிலப்

பதிகாரம் குறிக்கிறது? அவ்வாறாயின் ஏனைய மன்னர்களை விடாமற் பெயர் குறித்த இப் புலவர் இம் மன்னனின் பெயரைக் குறிப்பிடவில்லை! ஏன்?

இக் கேள்வி சிறந்ததுதான். ஆனால் விடையும் ஊன்றி நோக்கினாற் கிடைக்கும். ஏனைய அரசர்கள் செய்த போரெல்லாம் தமிழ்நாட்டில் செய்தவையே. தமிழர் தமிழருக்குள் போரிட்டு மண்டையை உடைத்துக்கொண்ட கதைதான் சங்கப் பாடல்களிற் பரக்கக் காண்கின்ற செய்தி. எனவே, அவர்கள் தம்முள் போரிட்டுக்கொண்டதைக் குறிப்பிடும்பொழுது பெயர்களைக் குறிப்பிடாவிடின் குழப்பமே விளையும். கரிகாலன் என்ற பெயருடைய இருவரையும் திருமாவளவன் என்ற பெயருடைய ஒருவனையும் நன்கு விளங்கிக்கொள்ளாமல் எத்தனை குழப்பம் விளைவித்துவிட்டோம். எனவே, தமிழ்நாட்டில் தம்முள்ளேயே போரிட்ட மன்னர்கள் பெயர்களை விடாமற் குறிக்கிறார் கவிஞர். ஆனால் வடநாட்டிற்சென்று ஆரியர் அலறத் தாக்கிப் பேரிசை இமயத்தில் விற்கொடி பொறித்தவர் எத்துணைச் சேரர்? ஒருவன் தானே! எனவே அவன் பெயரைக் கூறாமலே விட்டுவிட்டார் பரணர், தமிழ் நாடு முழுவதும் அறிந்த பெரும்புகழ் படைத்தவன் அவனாகலான்.

வஞ்சியைக் குறிக்கும்பொழுது 'வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன் வஞ்சி' என்று கூறுவதனால் அச்சேரன் வெற்றிபெற்று மீண்ட காலத்தையடுத்து இப்பாடல் தோன்றி இருக்கலாம் என்று நினைப்பதில் தவறு இல்லை. கடற்போர் செய்த குட்டுவனை நிலப்போரில் மிக்கவனாகப் புகழ்தல் எத்துணைப் பொருத்தமற்றது? புறம் 369-ஆம் பாடலில் இவ் வருணனை வருகின்றது காணலாம்:

"இருப்புமுகஞ் செறித்த வேந்தெழில் மழைக்கண்
கருங்கை யானை கொண்மூ வாக
நீண்மொழி மறவ ரெறிவன ருயர்த்த
வாள்மின் னாக வயங்குகடிப் பமைந்த

குருதிப் பலிய முரசுமுழக் காக
அரசராப் பனிக்கு மணங்குறு பொழுதின்
வெவ்விசைப் புரவி வீசுவளி யாக
விசைப்புறு வல்வில் வீங்கு நாணுகைத்த
கணைத்துளி பொழிந்த கண்ணகன் கிடக்கை ஈரச்
செறுவயின் தேர்ஏ ராக
விடியல் புக்கு நெடிய நீட்டிநின்
... ..."

(புறம்: ௩௬௯)

எனவரும் அடிகள் அம் மன்னனுடைய போரைப் பற்றிய உருவகமாகும். கடல்பிறக் கோட்டியவன் ஒருவனைப்பற்றி இத்தகைய கற்பனையும் உருவகமும் தோன்றக் காரண மில்லை. எனவே, இப் பாடல் அகப்பாடலில் அப் புலவர் பெயர் குறிப்பிடாமல் கூறிய மன்னனைப்பற்றியதே யாகும் என நினைப்பதில் தவறில்லை எனத் தோன்றுகிறது. பரண ரால் இவ்விரண்டு (அகம் : 396 புறம் : 362) பாடல்களி லும் குறிக்கப்பெற்றவன் செங்குட்டுவனு அல்லனு என்பது இவண் ஆராய்ச்சியன்று. ஆனால் பதிற்றுப்பத்தில் கட லோட்டிய குட்டுவனைப் புகழ்ந்த புலவர் பரணரல்லர் என்பதை வலியுறுத்தவே இதுகாறுங் கூறப்பெற்றது. இதை ஏற்றுக்கொண்டால் பதிகம் கூறும் அனைத்தும் பொருத்தமற்றவை, புலவர் பெயர் கூறுவது உட்பட என்பது நன்கு விளங்கும்.

18. முடிபுண்மை

பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பத்தைப் பாடிய புலவரின் பெயரை நாம் அறிய முடியவில்லையாயினும் அதிற் புகழப் படும் குட்டுவன் சிலப்பதிகாரக் குட்டுவன் என்று நினைந்து இடர்ப்படவேண்டிய தில்லை. இதில் குறிக்கப்பெறுபவன் பெயரும் குட்டுவன்தான். அவன் செய்த வீரச்செயல்கள் இரண்டு. முதலாவது அவனியற்றிய கடற்போர். ஆனால் பதிற்றுப்பத்துக் கூறுவதுபோல் அவனுக்கு முன்னும் பின்னும் கடற்போர் இயற்றியவர் இல்லை என்று கருதுதல் தவறு. அவனுக்கு முன்னே பின்னே நெடுஞ்சேரலாதன்

என்பவனும் கடற்போர் செய்துள்ளான் என்பதை அதே
பதிற்றுப்பத்தின் மற்றொரு பகுதியால் (2-ம் பத்து) அறிகிறோம். இப்பதிற்றுப்பத்தைப் பல புலவர்கள் பாடியிருப்பின் இவ்வாறு முரணும்படி பாடமாட்டார்கள். ஒரே புலவன் பாடியிருப்பின் முன்னரே குறிப்பிட்டோமே என்ற கருத்தால் இவ்வாறு நெடுஞ்சேரலாதன் செயலை விட்டுவிட்டுக் குட்டுவனைப்பற்றி மட்டும் பாடியிருத்தல் கூடும். இவ்வகை முரண்பாடும் இப்பாடல்களை ஒரே புலவன் இயற்றினுனே என்ற ஐயத்தை வளர்க்க உதவுகிறது.

கடற்போரையன்றி இக்குட்டுவன்
றொரு வீரச்செயலும் பேசப்படுகிறது

செய்ததாக மற்
பதிற்றுப்பத்தில்.
அறுகை என்பவனுக்கும் மோகூர் மன்னன் ஒருவனுக்கும் போர் நிகழ்ந்திருக்கிறது. அப் போரில் குட்டுவன் நண்பனாகிய அறுகை தோற்று ஓடி ஒளித்துக்கொண்டான். தனக்கு வந்து உதவுமாறு அவன் குட்டுவனை வேண்டவுமில்லை. அவ்வாறிருந்தும் அறுகைக்காகப் பரிந்துகொண்டு குட்டுவன் மோகூர் மன்னன்மேல் படையெடுத்துச் சென்று அவனை வென்றான். இச் செய்தியை 4-ஆம் பாடல் குறிக்கின்றது.

"நுண்கொடி உழிஞை வெல்போர் அறுகை
சேணனு ஆயினுங் கேளென மொழிந்து
புலம்பெயர்ந் தொளித்த களையாப் பூசற்கு
அரண்கடா வுறீஇ யணங்குநிகழ்ந் தன்ன
மோகூர் மன்னன் முரசங் கொண்டு
நெடுமொழி பணித்தவன் வேம்புமுத றடிந்து"
(பதிற்று. ௪௪ : ௭௦ - ௫)

இதனால் நண்பனாகிய அறுகை தன்னை அழைக்காத விடத்தும் அவன்பொருட்டுச் சென்ற குட்டுவன் நண்பு பாராட்டும் இயல்பு நன்கு வெளிப்படுகின்றது.

இதுகாறுங் கூறியவற்றால் சில உண்மைகள் வெளிப் படும். ஐந்தாம்பத்தின் ஆசிரியர் பரணர் அல்லர். பதிகம் முற்றிலும் தள்ளத்தக்கதேயன்றிக் கொள்ளத்தக்கதன்று.

சங்கப் பாடல்கள் பாடிய பரணரின் வேறானவர் ஐந்தாம் பத்தின் ஆசிரியர் என்றால் ஏன் செங்குட்டுவன் செய்தி இதில் இடம்பெறவில்லை என்ற வினாவிற்கே வழி இல்லை யாய்விடும். இப்பத்தின் தலைவன் குட்டுவன் என்ற பெயரையுடைய ஒரு சேரன். இவன் நெடுஞ்சேரலாதன் என்ற இரண்டாம்பத்தின் தலைவனுக்கு மைந்தன் என்ப தும் (பதிகம் தவிர) ஆதாரமில்லாக் கூற்றேயாகும். ஒரு மன்னனைப் புகழ வேண்டுமாயின் அவன் வீரச்செயல் ஒன்றும் நிகழ்த்தாவிடத்தும் அவன் முன்னோர் செய்த வீரச்செயலைப் பெரிதாகக் கூறி அது செய்தான் மகனே! மருகனே! வழித்தோன்றலே என்று கூறும் புறப்பாடல் களை யாரே அறியார்? அவ்வாறிருக்க நெடுஞ்சேரலாதன் மகனாகக் குட்டுவன் இருப்பானேயாகில் அவன் தந்தையின் கடற்போர்த் திறனை எந்தப் புலவன்தான் விட்டுவைப் பான்? அது பழந்தமிழ்க் கவிஞர் மரபுமன்று. எனவே இவர்கள் தந்தையும் மைந்தனும் என்று கூறுவதும் பொருத்தமற்றதே.

சேரநாட்டில் கிடைக்கும் செப்பேடுகளிற் பரணன் கானம், கண்ணன்காடு, காக்கையூர் என்ற பெயருடைய ஊர்கள் காணப்படுதலின் ஐந்தாம் பத்தைப் பரணர் பாடி னார் என்று இத்துணை முரண்களையும் பொருட்படுத்தாமற் கூறவேண்டிய கடப்பாடின்று.

இப் பதிற்றுப்பத்துப் பாடல்கள் யாரால் பாடப் பெற்றிருப்பினும் இப் பாடல்கள் ஓரளவு கவிதைநயம் பொருந்தியவைதாம். ஏனைய சங்கப் பாடல்களில் காணப் பெறும் ஒலிச நயமும், சொல்லாட்சிச் சிறப்பும், கற்பனைத் திறமும் இப் பாடல்களிற் காணப்பெறவில்லை. எனினும்

பிற்காலப் பாடல்கள் பலவற்றை நோக்க இவை நல்ல கவிதைகள் என்றே கூறலாம். ஒவ்வொரு பாடலிலும் காணப்படுகிற நல்ல அடி ஒன்றை எடுத்து அப்பாடலின் தலைப்பாக மிகவும் பிற்காலத்தில் யாரோ இட்டிருக்கின்றனர்.

'சுடர்வீ
' வரைசேர்பு

வேங்கை' என்ற முதற்பாட்டின் தலைப்பு
எழுந்த சுடர்வீ வேங்கை' என்ற அடியி

லிருந்து எடுக்கப்பெற்றுளது.
றுமே பகைமை உண்டு. சில

யானைக்கும் புலிக்கும் என் மரத்தின்
சந்தர்ப்பங்களில் வேங்கை நினைந்து

பூக்களையே வேங்கைப் புலி என்று யானை கொள்வதுண்டு. 'மருண்டவன் கண்ணிற்கு இருண்டதெல்லாம் பேய்' என்ற முதுமொழிக் கிணங்க வேங்கையினிடம் சினங்கொண்ட யானைக்குக் காணுமிடந் தோறும் வேங்கைக் காட்சியே கிடைக்கிறது. எனவே, தன் பகையாகிய வேங்கைப்புலி மரத்தின்மேல்

இருக்க நியாயமில்லை என்பதைக்கூட மறந்துவிட்டுப் பூக்கள் நிறைந்த வேங்கை மரத்தின் கிளைகளைத் தன் துதிக்கையால் வளைத்து ஒடித்துத் தலையின்மேல் வைத்துக்கொண்டு பிளிறுகிறதாம். அது போர் மறவர்கள் போர்ப்படை தாங்கிப் போர்க்களத்தில் நின்று ஆரவாரஞ் செய்வதுபோல் இருக்கிறதாம். இவ்வழகிய உவமை மூதற் பாடலில் இடம் பெறுகிறது.

"மறப்புலிக் குழூவுக்குரல் செத்து வயக்களிறு
வரைசேர்பு எழுந்த சுடர்வீ வேங்கைப்
பூவுடைப் பெருஞ்சினை வாங்கிப் பிளந்துதன்
மாயிருஞ் சென்னி அணிபெற மிலைச்சிச்
சேஎ ருற்ற செல்படை மறவர்
தண்டுடை வலத்தர் போரெதிர்ந் தாங்கு
வழையமல் வியன்காடு சிலம்பப் பிளிறும்"(பதிற்று. ௭௧: எ-௧௩)

பகையரசர் தலைகளைத் தோமரத்தால் இடிப்பதை உவமை கூறவந்த கவிஞர் மிளகை உலக்கையால் இடிப்பதை உவமிக்கின்றார். இவ்வுவமை பாடிய காரணத்தாலேயே இப் புலவரைச் சேர நாட்டைச் சேர்ந்தவரென்றும், பரணர் அல்லரென்றும் கூறிவிடலாம்.

"..தெவ்வர்
மிளகெறி யுலக்கையின் இருந்தலை யிடித்து"
(பதிற்று. ௭௧ : ௨0 - ௧)

என்பதால் சேரநாட்டில் பிறந்தவர்கட்கே இயல்பாய் வருவது இவ்வுவமை என்பதைத் திறனாய்வாளர் அறியலாம்.

தமிழ்நாட்டின் பிறபகுதிகளிற் காணப்படாத 'மிளகு எறி உலக்கை' பற்றிப் பாடிய இவ்வாசிரியர் மற்றொரு புதிய பழக்கத்தையும் இரண்டாம் பாடலில் குறிப்பிடுகிறார். நல்ல பூக்களை மாலையாகத் தொடுத்தணிதல் தமிழ்நாட்டு மரபாயினும் இஞ்சியை இம்மாலையுள் வைத்துத் தொடுத்தல் வேறு பாடல்களிற் காணாத புதுமையாம். பத்துப் பாட்டிற் பல விடங்களிற் பேசப்படினும் இஞ்சி மாலையில் இடம்பெற்றிலது. ஆனால் இரண்டாம் பாட்டில் 'இஞ்சி விராய பைந்தார் பூட்டி,' என்று இவ்வாசிரியர் பாடுவது இவர் இப்பகுதியைச் சேர்ந்தவரல்லர் என்பதையே குறிக்கிறது.

மகளிரை வருணிக்கும் 6-ம் பாட்டின் முதல் 4 வரிகளும் சிறந்த ஓசைநயம் பெற்றுள்ளன. மெல்லிய தன்மையுடைய மகளிர் என்று சொல்லால் கூறாது சொற்களின் ஓசையால் அக் கருத்தைப்பெற வைப்பது சிறந்த கவிதை யின் இலக்கணங்களுள் ஒன்று.

'இழையர் குழையர் நறுந்தண் மாலையர்
சுடர்நிமிர் அவிர்தொடி செறித்த முன்கைத்
திறல்விடு திருமணி யிலங்கு மார்பின்

வண்டுபடு கூந்தல் முடிபுனை மகளிர்' (பதிற்று. சசு: க-ச)

இப்பகுதியின் முதலடியில் வரும் 'ழ'கர ஒலியால் அவர்கள் மென்மைத்தன்மையைப் பெறவைக்கின்றார் ஆசிரியர். 'சுடர்நிமிர் அவிர்தொடி செறித்த முன்கை' என்ற அடியில் வரும் வல்லோசையால் அவர்கள் அணிந்திருந்த வளையல்களின் ஓசையைக் காட்டுவதோடு கடினமான பின்னல் செய்யப்பெற்றுக் கையில் இறுக்கமாக அணியப்பெற்றிருந்தன அவை என்ற குறிப்பையும் பெறவைக்கின்றார். சொற்பொருளாலன்றி ஓசையால் இப்பொருளைக் குறிப்பாகப் பெறவைப்பதைக் கவிஞன் வன்மைகளுள் ஒன்றாகக் குறிப்பிடுவர் திறனாய்வாளர்.

கடலின் ஓசை தூரத்தே இருந்து கேட்டால் ஒருவகையாகவும் அலைகளின் பக்கத்தே இருந்து கேட்டால்

ஒருவகையாகவும் கேட்கும். தூரத்தே இருந்து கேட்கும்பொழுது 'ஓ' என்ற ஒலியும் அணித்தே நிற்கையில் அலைகள் வீழ்ந்து உடைவதால் 'கடபட' என்ற ஒலியும் கேட்கும். இவ்வொலி வேறுபாட்டை இரண்டு அடிகளில் தெரிவிக்கிறார் கவிஞர்.

'கோடுநரல் பௌவங் கலங்க வேலிட்டு
உடைதிரை பரப்பில் படுகடல்......' (பதிற்று. சக: கக-உ)

என்ற பகுதியில் 'கோடுநரல்' 'வேலிட்டு' என்று முதலும் முடிபுமாக உள்ள சொற்கள் 'ஓ' ஒலியையும் 'உடைதிரை' 'படுகடல்' என்ற சொற்கள் 'கடப்ட' ஓசையையும் தருதல் இசையுணர்வுடையார்க்குப் புலனும்.

ஐந்தாம் பத்துப் பாடல்களிலும் இங்ஙனம் பல அழகு களைக் காண்டல் கூடும்.

ஆறும் பத்து

[திரு. க. பெருமாள், எம். ஏ.]

1. தலைசிறந்தது

தலைவரவர்களே! பெரியோர்களே! தாய்மார்களே! வணக்கம்.

இந்த ஏற்றமும் எழிலும் மிக்க தமிழ்நாட்டை 'வண் புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு' (தொல்: பொருள் சூ. 391) என்று தொல்காப்பியம் பாராட்டியுள்ளது. 'வண் புகழ் மூவர்' என்பதற்குக் கொடுத்துப் பெறும் புகழுடைய மூவேந்தர் என்று பேராசியர் உரை வகுத்துள்ளார். தொல் காப்பியத்தாலும் பேராசிரிய ருரையாலும், முடியுடை வேந்தர் மூவர்க்கும் அமைந்த பல்வேறு திறத்து மாட்சி களுக்குள்ளே, கொடைவளத்தால் பெற்ற புகழாகிய மாட் சியே தலைசிறந்தது என்பது அறியப்படுகின்றது. தொகை யும் பாட்டுமாகிய நூல்களிலே ஈகைவளத்தால்

புகழ்பெற்ற

மன்னர்களும்

றுள்ளார்கள்.

வள்ளல்களுமே பெரிதும் பாராட்டப் பெற்

கொடைமாட்சியைப் பாராட்டும் துறை களுக்குக் கொடை, கொடைவஞ்சி, கொடைமடம் போன்ற பெயர் வழக்குண்டு. அப் பெயர் வழக்குத் தமிழ் இலக் கண இலக்கியங்களிலே பெரிதும் பயின்று வந்துள்ளது.

௭.

அன்று, ஈத்துவக்கும் இன்பம் பெற்ற,

"வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பெயர் எல்லை அகத்தவர் வழங்கும் யாப்பு"

௭ (தொல் : பொருள் : ருகக)

என்னும் பயன்மரம் நல்லதொரு வளர்ச்சியைப் பெற்றிருந்தது. அந்த 'யாப்பு' என்னும் பயன்மரம், பாட்டும், உரையும், நூலும், வாய்மொழியும், பிசியும், அங்கதமும், முதுசொல்லுமாகிய எழுவகைச் செழுங்கிளைகளை விட்டுப் பணைத்துப் பெருகிப் பயன்தந்து வந்துள்ளது. அச் செழுங்கிளைகள் ஏழிலும் பழுத்து, இலக்கியச்சுவைகளாம் இன்பச்சாறுகள் பொதிந்து விளங்கும் பாடற்கனிகள் பல, காற்றாலும், நெருப்பாலும், கடலாலும், காலத்தாலும் கெட்டுப்போகாமல் எட்டுத்தொகை பத்துப்பாட்டு என்னும் பேழைகளில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

2. பெண்பாற்புலவர்

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகப் பதிற்றுப்பத்து விளங்கிவருகின்றது. அது சேரப் பேரரசர்களுடைய வரலாற்றுச் செய்திகளைக் கூறும் ஏற்றம் வாய்ந்ததாகவுள்ளது. அதன் முதற்பத்தும் இறுதிப்பத்தும் இன்று கிடைக்கவில்லை. அதன் ஆறும்பத்தைப் பாடியவர் காக்கை பாடினியார் நச்செள்ளையார் என்னும் பெண்பாற்புலவராவர். பழங்காலத்தில் காக்கை பாடினியார் என்ற பெயர்கொண்ட பெண்பாற்புலவர் சிலர் இருந்துள்ளனர். பெருங்காக்கை பாடினியார், சிறுகாக்கை பாடினியார் என்னும் பெயர் கொண்ட பெண்பாற்புலவர்கள் சிறந்த இலக்கணப்புலவர்களாகத் திகழ்ந்துள்ளனர் என்பதனைத் தொல்காப்பியம், யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை போன்ற இலக்கண நூல்களின் உரைகள் அறிவிக்கின்றன. சிறந்த இலக்கணமும் உயர்ந்த இலக்கியமும் படைக்கவல்ல அக்காலப் பெண்ணுலகின் பெருமையை எவ்வாறு பாராட்டுவது ?

ஆடுகோட் பாட்டுச்சேரலாதனைப் பாட்டோவியத்தில் வாழ்விக்கும் காக்கை பாடினியார் நச்செள்ளையார் அகப் பொருள் பற்றிய பாக்கள் பல பாடி இருத்தல் கூடும். அவற்றுள்,

"திண்டேர் நள்ளி கானத்து அண்டர்
பல்ஆ பயந்த நெய்யிற் றொண்டி

முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோறு
எழுகலத்து ஏந்தினும் சிறிதுஎன் தோழி பெருந்தோள்
நெகிழ்த்த செல்வற்கு
விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே"

(குறுந்தொகை: ௨௧0)

என்னும் குறுந்தொகைப்பாட்டு ஒன்றே இப்போது கிடைத்துள்ளது. அப்பாட்டு 'அன்பின் ஐந்திணை' நெஞ்சத்தை, அறிவும் உணர்வும் ததும்பும் வண்ணம், படம்பிடித்துக் காட்டும் புலவரது ஆற்றலை விளக்குவதற்குத் தக்க எடுத்துக்காட்டாக அமைகின்றது. நன்றியுணர்வு சான்ற புலவரது நெஞ்சம், அப்பாட்டில், நள்ளி என்னும் வள்ளலின் பெயரை வைத்துப்பாடி மகிழ்ந்துள்ளது.

காக்கை பாடினியார் புறப்பொருளைப்பற்றிப் பாடுவதில் பெரிதும் வல்லவர். அவரியற்றிய

பதிற்றுப்பத்தின் ஆறும்பத்தும்,

"நரம்பு எழுந்து உலறிய நிரம்பா மென்தோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறினன் என்றுபலர் கூற,
'மண்டு அமர்க்கு உடைந்தனன் ஆயின் உண்டஎன்
முலைஅறுத் திடுவன் யான்' எனச் சினைஇக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களம் துழவுவோள் சிதைந்து வேறு ஆகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுஉவந் தனளே" (புறம்: உ௭அ)

என்னும் புறநானூற்றுப் பாட்டும் சிறந்த புறத்திணைப் பாக்களாக விளங்கிவருகின்றன. ஈண்டுத் தரப்பட்ட புறநானூற்றுப்பாட்டு, தமிழ்நாட்டு மறக்குடிமகள் ஒருத்தியின் மறனிழுக்கா மானத்தையும் மாண்பையும் மிகவும் செம்மையாக விளக்குகின்றது. நச்செள்ளையாரின் வீர நெஞ்சமே அப்பாட்டாக உருப்பெற்றுள்ளது என்று கூறினும் மிகையாகாது.

இவ்வளவு சிறப்புமிக்க நச்செள்ளையாரைப் பற்றிய செய்திகள் சில, ஆரும்பத்தின் பதிகத்தில் கூறப்பட்டுள் ளன. அவை,

“ஆடுகோட்பாட்டுச் சேரலாதனை
யாத்த செய்யுள் அடங்கிய கொள்கைக்
காக்கைபாடினியார் நச்செள்ளையார் பாடினுர் பத்துப்பாட்டு,
அவைதாம்: வடுவடுநுண்ணயிர், சிறு செங்குவளை,

குண்டுகண்ணகழி, நில்லாத்தானை, துஞ்சும் பந்தர்,
வேந்து மெய்ம் மறந்தவாழ்ச்சி, சில்வளைவிறலி,
ஏவிளங்குதடக்கை, மாகூர்திங்கள்,
மரம்படுதீங்கனி:
இவை பாட்டின் பதிகம்.
பாடிப்பெற்ற பரிசில்: ‘கலன் அணிக’ என்று அவர்க்கு
ஒன்பது காப் பொன்னும் நூறாயிரம் காணமும் கொடுத்துத்
தன் பக்கத்துக் கொண்டான் அக்கோ”(6-ம் பத்துப் பதிகம்)

என்பன. இவ்வளவே அவரைப்பற்றி
வரலாற்றுச் செய்திகள் ஆகும்.

அறியக்கிடக்கும்

நச்செள்ளையார், தன்மீது இயற்றிய பத்துப்பாட்டையும் ஏற்று மகிழ்ந்து, அவருக்கு அணிகலனுக்கென ஒன்பது காப்பொன்னும், நூறு ஆயிரம் பொற்காசும் வழங்கிய சேரலாதனுடைய பெற்றோர்கள், குடக்கோ நெடுஞ்சேரலாதனும் வேளாவிக்கோமான் தேவியுமாவர். களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலும், கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவனும், ஆடுகோட்பாட்டுச் சேரலாதனும் நெடுஞ்சேரலாதனுடைய மக்கள் ஆவர் என்ற செய்தியை நான்கு ஐந்தாம் பத்துக்களின் பதிகங்கள் அறிவிக்கின்றன. ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்,

“ தண்டா ரணியத்துக் கோட்பட்ட வருடையைத்
தொண்டியுட் டந்து கொடுப்பித்துப் பார்ப்பார்க்குக்
கபிலையொடு குடநாட் டோரூர் ஈத்து
வான வரம்பன்எனப் பேரினிது விளக்கி ”

(ஆறும் பத்துப் பதிகம்)

யவன் என்று பாராட்டப்பெற்றுள்ளான். இவற்றுள், தண்டாரணியத்தில் ஆடுகளைக் கவர்ந்து பங்கிட்டுச் சிறந்த செய்தியையும், பார்ப்பார்க்குக் குடநாட்டோரூரையும் கபிலையையும் வழங்கித் சிறந்த செய்தியையும் ஆறும்பத்தில் அறியமுடியவில்லை. ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் என்ற பெயர்கூட ஆறும்பத்தில் வைத்துப் பாடப்பெறவில்லை. வானவரம்பன் எனப் பேரினிது விளக்கியவன் என்ற செய்திமட்டும் ஆறும்பத்தில் அறியமுடிகிறது. வானவரம்பன் என்று சிறப்பிக்கபட்ட

சேரலாதனுடைய நாடும் ஊரும் ஆரும்பத்தில் நன்கு பாடப்பட்டுள்ளன.

3. நாடும் ஊரும்

மலைவளமும் நிலவளமும் கடல்வளமும் மிக்கது சேர நாடு. அந்நாட்டின் மேற்குக் கடற்கரைப் பகுதி ஆடு கோட்பாட்டுச் சேரலாதன் ஆட்சியால் மாட்சிபெற்றது. அஃது இயற்கை செயற்கை வளங்களுக்கு இருப்பிடமாக விளங்கியது. அவ் வளநாட்டின் கடல் முழக்கத்தைப் பாடிக்கொண்டே ஆரும்பத்து தொடங்கியுள்ளது.

எப்போதும் ஓய்வின்றி அசைந்தாடும் இயல்புள்ள பெருநீர்ப்பரப்பு, கடுங்காற்றின் மோதுதலால் விளக்கம் மிக்க பேரலைகளைத் தோற்றுவித்தது. எழுந்தும் விழுந் தும் சுழன்றும் ஒன்றோடொன்று மோதிய பேரலைகளின் பெருமுழக்கம், இடிமுழக்கத்தை ஒத்திருந்தது. கண்ணைக் கவர்ந்த கருங்கடற் பரப்பும் காதைப் பிளந்த பேரலை முழக்கமும் காக்கை பாடினியார் நச்செள்ளையார் நெஞ்சத் தைக் கவர்ந்தன. உடனே, அவை,

> "துளங்குநீர் வியலகம் கலங்கக் கால்பொர
> விளங்கிரும் புணரி உரும்என முழங்கும்."
>
> (பதிற்று. ருக : க - உ)

என்னும் செந்தமிழாக மலர்ந்தன. வெண்ணிறப்

பெரும் புணரி, எந்நேரமும் கடற்கரையைத் தழுவிச் சிரித்துக் கவிபாடிக்கொண்டே இருந்தது. கடற்கரைக்குக் கானற்

சோலைகள் கவின்பல செய்தன. அந்தக் கவினுடைய கடற் கரை சேர்ந்த சேரலாதன் நாடு,

"கடல் சேர் கானற் குடபுலம்." (பதிற்று. ௫௧ : ௧)

என்று பாடப்பெற்றுள்ளது. பாடல் பெற்ற அக் குடபுல நன்னாட்டிற்குப் போந்தைப் பொழிலும் கானற்சோலையும் மைதவழ்மலையும் குவியிணர் ஞாழலும் நனையுறு நறவும் பிறவும் அணிசெய்தன. கடற்கரையில் செழித்து வளர்ந்த அடும்பு என்னும் கொடிகள், பின்னிச் செறிந்து கண்ணைக் கவர்ந்தன. அவற்றின் மருங்கே மருங்கே அலவன் ஆடின; நாரைகள் பாடின. இந்தக் காட்சிகளை ஆறும் பத்து, படம் பிடித்துள்ளது. எனினும், அப்பத்து அருவி, சுனை, ஆறு போன்ற நாட்டின் இன்பப் பெருக்கிகளையும் எழில் பெருக்கிகளையும் படம்பிடிக்க மறந்துவிட்டது.

சேரலாதன் நாட்டில் நன்செய் புன்செய்நிலங்கள்

வளம்கொழித்தன. அவற்றிற்கு ஆரும் பத்து விளக்கம் தந்துள்ளது. புன்செய் நிலங்களில் வேலமரங்கள் மிகுதியாக இருந்தன. அவற்றின் பராரைகளிலும், கிளைகளிலும் உள்ள பட்டைகளின் ஊடே ஊடே சில்வீடுகள் என்னும் வண்டுகள் இருந்து இசைமுழங்கின. சில்வீடுகள் சிதடி என்னும் பெயரால் வழங்கப்பட்டன. உழவர்களின் உயிர்ச்செல்வங்களாகிய பகடுகள் வன்மையாலும் வனப்பாலும் செயலாலும் சிறப்புற்றிருந்தன.
பகட்டுச்செல்வமே
ஏர்ச்செல்வத்திற்கு ஏற்றம் தந்தது. அதனுல் விந்தி நன்புலமாக்கினுர்கள் உழவர்கள்.

புன்புலம்
அவர்களே
'வன் கை வினைஞர்' என்று ஆரும்பத்து பாராட்டியுள்ளது. சோம்பலின்றி நாஞ்சில் ஆடியது. அதனுல், அறம்பொருள் இன்பங்களில் திளைத்து, உழவர்கள் வாழ்வு விளையாடியது. அந்த உழவர்கள், தம் முயற்சியின்றியே, உழுபடைச்சால்களில் பெற்ற ஒளிக்கதிர் மணிகளால் செல்வர் ஆனுர்கள். செல்வ உழவர்கள் இடம் அகன்ற பேரூர்களில் வாழ்ந்தார்கள். எத்தனையோ வகையான ஏற்றங்களைக் கண்ட இருபதாம் நூற்றுண்டில்கூட, உழ

வையே நம்பி வாழும் மக்கள், பலவகையான நலங்களும் அமைந்த பேரூர்களில் வாழமுடியவில்லை. இன்று பேரூர்களில் வாழ்வோர்கள் எல்லாம், உழவர்களின் உழைப்பால் பிழைக்கும், உழுவித் துண்போரும், வணிகரும், அரச வினைஞரும், சமயத் தலைவரும், பிறருமே ஆவார்கள். அன்றோ, சேரலாதன் ஆட்சியிலோ, உழவர்களெல்லாம் செல்வர்களாகவும் இடம் அகன்ற பேரூர்களிலே வாழும் ஊழுடையவர்களாகவும் விளங்கினார்கள். உழவர்கள் இனிது வாழும் காலமே நல்ல காலம். உழவர்கள் இனிது வாழும்நாடே நல்ல நாடு. அந்த நல்ல காலமும் நல்ல நாடும் ஆடுகோட் பாட்டுச் சேரலாதனுடைய ஆட்சியின் மாட்சியால் அமைந்தன. அதனை,

> "..........................கானத்துக்
> கறங்கிசைச் சிதடி பொரியரைப் பொருந்திச்
> சிறியிலை வேலம் பெரிய தோன்றும்
> புன்புலம் வித்தும் வன்கை வினைஞர்
> சீருடைப் பல்பகடு ஒலிப்பப் பூட்டி
> நாஞ்சி லாடிய கொழுவழி மருங்கின்
> அலங்குகதிர்த் திருமணி பெறூஉம்
> அகன்கண் வைப்பின் நாடுகிழ வோனே."
>
> (பதிற்று. ௬அ : ௧௨-௧௯)

என்னும் பாடற் பகுதியால் அறிந்து மகிழ்தல் வேண்டும்.

4. மூதூர்

மேலும் அவன் நாடு,

"கல்பிறங்கு வைப்பு."

என்றும் பாராட்டப்பட்டுள்ளது. ஈண்டுக் 'கல்' என்பதற்கு மலை என்றும், 'கல்பிறங்கு வைப்பு' என்பதற்கு மலைகள் உயர்ந்த நாடு என்றும் பொருள் கொள்ளுதல் வேண்டும். மலைவளம் மிக்க அந்த நன்னாட்டில் காடுகளால் சூழப்பட்ட மூதூர் ஒன்று இருந்தது. அது,

"கல்பிறங்கு வைப்பிற் கடறுஅரை யாத்த
தொல்புகழ் மூதூர்." (பதிற்று. ௫௩ : ௪ - ௫) என்று சிறப்பிக்கப்பட்டுள்ளது.

மதுரை வஞ்சி போன்ற பேரூர்கள், தமது தொன்மையும் பெருமையும் பற்றி மூதூர் என்று வழங்கப்பட்டுள்ளன. எனினும் அவை, பெரும்பாலும் மதுரை மூதூர் வஞ்சிமூதூர் என்று கிளந்தே ஓதப்பட்டுள்ளன. ஈண்டுத் 'தொல்புகழ் மூதூர்' என்று சிறப்பித்துக் கூறப்பட்டதே ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் அரசு வீற்றிருந்த தலைநகரின் பெயரோ என்னவோ தெரியவில்லை. 'ஆடுகோட் பாட்டுச் சேரலாதன், மேல் கடற்கரையிலிருந்த தொண்டியைத் தலைநகராகக்கொண்டு அதனைச் சூழ்ந்த நிலப்பரப்பை ஆட்சி புரிந்தனன் என்று தெரிகிறது' என்று கல்வெட்டாராய்ச்சியில் வல்ல டி. வி. சதாசிவ பண்டாரத்தார் தமது 'பதிற்றுப்பத்தும் பதிகங்களும்' என்னும் கட்டுரையில் எழுதியுள்ளார். அவர் அவ்வாறு எழுதுவதற்குத் துணையாக இருந்தது ஆறும்பத்தின் பதிகமே ஆகும். எனினும், தொண்டியும் தொல்புகழ் மூதூரும் ஒரே நகரத்துக்குரிய பெயர்களா வேறு வேறு நகரங்களுக்குரிய பெயர்களா என்று வரையறை செய்வது இடர்ப்பாடாகவே உள்ளது. அது மேலும் ஆராய்தற்குரியது.

5. பெருந்துறை

சேரனுடைய நாடு,

"தண்கடற் படப்பை நன்னாடு." (பதிற்று. ருரு : சு)

என்றும் விதக்கப்பட்டுள்ளது. அந்நன்னாட்டிலே

பெருந்
துறை என்னும் பெயரிய துறைமுகப்பட்டினம் ஒன்று பேசப்பட்டுள்ளது. அது, குறிப்பிட்ட ஒரு துறைமுகப் பட்டினத்திற்கு அமைந்த சிறப்புப் பெயரோ, துறைமுகம் அமைந்த ஊர் எதனையும் குறிக்கும் பொதுப் பெயரோ என்பது தெரியவில்லை. அப் பெருந்துறையைத் தாழம் பூமணம் சான்ற கானற்சோலைகள் சூழ்ந்திருந்தன. அதன்

கண், கடல்வழி வந்த நன்கலவெறுக்கைகள் தொகுக்கப் பெற்ற பண்டசாலைகள் (பந்தர்) இருந்தன. அது கடலலையால் ஏற்படும் இன்னிசையைக்கேட்டு எப்போதும், இன்புற்றுக்கொண்டே இருந்தது. கடல்வாணிப வளத்தை விளக்கிக்காட்டும் அப்பட்டினம் சேரலாதனுக்கு உரிமையாயிருந்தமையை,

"இன்னிசைப் புணரி இரங்கும் பௌவத்து
நன்கல வெறுக்கை துஞ்சும் பந்தர்
கமழும் தாழைக் கானல்அம் பெருந்துறைத்
தண்கடற் படப்பை நன்னாட்டுப்
பொருந!" என்னும் பாடற் பகுதி
(பதிற்று. ௫௫ : ௩-௬)

புலப்படுத்துகின்றது.

6. விழவுமலி ஊர்கள்

ஒரு நாட்டின் வாழ்க்கை வளத்தையும் கலைவளர்ச்சியையும் நாகரிகச் செம்மையையும் விளக்கவல்லன அந்நாட்டில் நிகழ்த்தப்படும் விழாக்களே ஆகும். இடத்தால் அகன்று, செல்வத்தால் செழித்து, கல்வியால் தழைத்து, காலத்தால் தொன்மைப் புகழ் மேவி விளங்கும் பேரூர் வியலுள் எனப்படும். அத்தகைய வியலுள் பல சேரலாதன் நாட்டில் இருந்தன. வியலுள்தோறும் காலத்துக்குக் காலம் விழவு நிகழ்ந்தது. விழவில் கூத்தர் முழவினை முழக்கினர்; முழவின் தாளத்திற்கேற்ப வீரர் ஆடினர். கோடியரும் வீரரும் கூடி ஆடி மகிழும் விழவுமிக்க நாடுடைய வேந்தன் சேரலாதன் என்பது,

> "விழவு வீற்றிருந்த வியலு ளாங்கண்
> கோடியர் முழவின் முன்னர் ஆடல்
> வல்லான் அல்லன்." (பதிற்று. ருசு

: க-ரு) என்னும் வரிகளால் விளங்குகிறதல்லவா?

7. நறவு

சேரனுடைய விழவுமலி ஊர்கள் பலவற்றுள், நறவு என்னும் பெயரிய பேரூர் ஒன்றிருந்தது.

நறவு என்பது

•

பருகப்படும் தேன் கள் ஆகியவற்றுக்கும் வழங்கப்படும் பெயராகும். அவை மிக்கமையால் அவ்வூருக்கு அப் பெயர் அமைந்ததோ என்னவோ தெரியவில்லை. நறவு என்று வாளா கூறின் பருகப்படும் கள்ளிற்கும் ஆகும் என்பது கருதியே, 'தவ்வா நறவு' என்று அப்பேரூரை, வெளிப்படை இலக்கணம் தந்து விதந்து கூறியுள்ளார்

நச்செள்ளையார். அப் பேரூர்
மாறாத விளைவிளையுடைய நல்ல

மழைவளம் குன்றினும்
வயல்களைப் பெற்றிருந்தது.
அதனால், . எப்போதும் இடையறவறியாத புதுவருவா யினைப்பெற்றுச் சிறந்தது அது. அதில் அம்பு தொடுப்பதில் சோர்வு அறியாத வில்வீரர்கள் வாழ்ந்தார்கள்.
அங்கு ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், தன் மென்சாயல் மகளிரோடு, அன்பொடு பொருந்திய அகத்திணை இன்ப மெல்லாம்பெற்று நுகர்ந்து இன்புற்று வந்தான்.

அவன் மேற்கடற் பக்கத்து நறவு என்ற நகரில் இருந் தாண்டவன் (சேரன் செங்குட்டுவன் பக்கம்-14) என்று மு. இராகவையங்கார் அவர்கள் கூறியுள்ளார்கள். நௌரா (Naura) என்று யவனாசிரியர்கள் குறித்துள்ளதும் இதுவே ஆகும்; (வஞ்சிமாநகர் p 65.)

நறவு என்னும் அந்நல்லூர் நாட்டின் பல்வேறு ஊர்களுடனும் நெடுஞ்சாலைகளின் வாயிலாகத் தொடர்புபெற்றிருந்தது. நெடுஞ்சாலைகளின் இரண்டு பக்கமும் இனிய பழமரங்கள் வைக்கப்பட்டிருந்தன. நெடுவழிப் பயணம் போவோர், அப்பழங்களைப் பசி ஆற நுகர்ந்து, வழிநடைச் சோர்வு தீர்ந்தனர். இவ்வளவு நல்ல முறையில் போக்குவரவுவாயில்களை அமைத்த சேரலாதன் ஆட்சி, பிற்காலத்து ஆட்சியாளர்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைகின்றது அல்லவா? அதனைப் புலவர் விறலியாற்றுப்படையில் வைத்து,

“செல்லா மோதில் பாண்மகள்! காணியர்
மிஞிறுபுறம் மூசவும் தீஞ்சுவை திரியாது
அரம்போழ்கு அல்லா மரம்படு தீங்கனி

அஞ்சேறு அமைந்த முண்டை விளைபழம்
ஆறுசெல் மாக்கட்கு ஓய்தகை தடுக்கும்
மறாஅ விளையுள் அறாஅ யாணர்த்
தொடைமடி களைந்த சிலையுடை மறவர்
பொங்குபிசிர்ப் புணரி மங்குலொடு மயங்கி
வருங்கடல் ஊதையிற் பனிக்கும்
துவ்வா நறவின் சாயினத் தானே”

என்று பாடியுள்ளமை எவ்வளவு

(பதிற்று. சு௦ : ரு - கஉ)

அழகாக உள்ளது?

மேலே கூறப்பட்ட தொல்புகழ் மூதூரும், பெருந்துறையும், விழவுமலி வியலூர்களும், 'துவ்வா நறவும்' குட நாட்டின் முட்டாப் பெருவள வாழ்வுக்குத் தக்க எடுத்துக் காட்டுக்களாக அமைகின்றன.

8. அறத்தாறு

இவ்வளவு வளம் மிக்க குடநாட்டில் அறம் துஞ்சும் செங்கோல் ஆட்சி நடத்தியது. ஆடுகோட்பாட்டுச் சேரலாதனுக்கு, நிலமும் காடும் மலையும் கடலும் தந்த பொருள்கள் இடையறாது வந்து குவிந்தன. அவற்றுடன், தன் ஆணைவழி நடந்த பிறநாடுகளிலிருந்தும் திறைப் பொருள்கள் வந்து சேர்ந்தன. வந்து குவிந்த நெல்லும் மணியும் பொன்னும் போன்ற எல்லாச் செல்வப்பொருள் களையும் அவன், அறம் பொருள் இன்பம் என்னும் மூன் றன் பொருட்டாகப் பகுத்துத் தந்து, அறம் முட்டுறாது ஆட்சி செய்தான். பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் அவ னுடைய ஆட்சித்திறன், பகைவர்களுக்கு வியப்பையும் ஆராய்ச்சியையும் பெருக்கியது. பகைவரால் வியக்கப் படும் ஆற்றலும், பெருமையும், அறத்தாட்சியும் சான்ற அவன், தன்னை எதிர்த்துப் பொருது, வலியிழந்து, பணிந்து, தன் ஆணை வழிநின்று, திறையளந்த அவர் களுடைய நாடுகளையும் தன் நாட்டைப்போலவே பாது காத்துப் பேணும் பொறுப்பைத் தன் கடனாகக் கொண் டிருந்தான். அத்தகைய அறத்தொடு கூடிய. அவனது

பொறுப்பாட்சியை, அவன் தன் பகைவரொடு பொருது வாகைசூடித் திறைபெற்ற பின்னும் சினம் தணியாது கொதித்திருந்த ஒருபோது, நச்செள்ளையார்,

"அறியாது எதிர்ந்து துப்பிற் குறையுற்றுப்
பணிந்து திறை தருபநின் பகைவ ராயின்

சினம்செலத் தணிமோ வாழ்கநின் கண்ணி
பல்வேறு வகைய நனந்தலை ஈண்டிய
மலையவும் கடலவும் பண்ணியம் பகுக்கும்
ஆறுமுட்டு உறுஅது அறம்புரிந்து ஒழுகும்
நாடல் சான்ற துப்பிற் பணைத்தோள்
பாடுசால் நன்கலம் தரூஉம்
நாடுபுறம் தருதல் நினக்குமார் கடனே"
(பதிற்று. இக: கக - கக)

என்று, அழகும் உணர்வும் ததும்பப் பாடி, அவனுக்கு, அவனது சிறப்பையும் பொறுப்பையும் எடுத்துக்காட்டிச் சினம் தணிவித்துள்ளார். இந்தப் பாடற் பகுதிக்கண்,

"சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்
நவின்றோர்க் கினிமை நன்மொழி புணர்த்தல்
ஓசையுடைமை ஆழமுடைத் தாதல்"

போன்ற பாட்டழகுகள் பலவும் பொதிந்து, அறிவும் உணர்வும் ஊட்டி அறநெறிப்படுத்தும் பாட்டியிரும் விளையாடுகின்றது.

9. உணவு

வளமார் பாட்டு விளையாடும் முட்டாப் பெருவளமும் அறநலமும் சான்ற அவன் நாட்டில் உணவு சமைத்தல் ஒரு கலையாக வளர்ந்திருந்தது. அவர்கள் உணவு வகைகளுக்குள்ளே ஊன்துவை யடிசிலே பெரிதும் சுவைத்

துண்ணப்பட்டுள்ளது. அவரை துவரை போன்ற முதிரைப் பருப்பில் செவ்வூன் துண்டங்களைச் சேர்த்து அரைத்துத் துவையல் செய்யப்பட்டது. கொழுப்புமிக்க வெண்ணிணத்திறைச்சியைச் சோற்றுடன் கலந்து ஊன்சோறு

அடப்பட்டது. அவற்றை உண்ட மக்கள் உரமும் மறமும் பெற்று விளங்கினர்.

“செவ்வூன் தோன்றா வெண்துவை முதிரை
வாலூன் வல்சி” (பதிற்று. ௫௫ : எ-அ)

என்னும் வரிகள் அந்த உண்மையை எடுத்துக்காட்டுகின்றன.

ஆறும் பத்தில் கள்ளுணவைப் பற்றிய செய்திகள் அறியப்பெறவில்லை. வீரர்களைப் பற்றிக் கூறும்போதோ பாணர் கூத்தர் விறலியரைப் பற்றிக் கூறும்போதோ கள்ளுணவைச் சேர்த்துக் கூறும் வாய்ப்புண்டு. ஆனால், காக்கைபாடினியார் நச்செள்ளையார் யாண்டும் கள்ளுணவைப் பற்றிப் பேசவே இல்லை. அதனால், அவர் வள்ளுவர் கட்சியைச் சேர்ந்தவராதல் கூடுமோ என்று எண்ண இடம் ஏற்படுகின்றது. நச்செள்ளையார் சேரன்நாட்டு அணிவகைகளையும் உடைவகைகளையும் வேண்டுழி வேண்டுழிக் கூறியுள்ளார். உணவு உடை உறையுள் ஆகியவற்றில் ஏற்றம்பெற்ற அவன் நாட்டில் கல்வி கேள்விச்செல்வங்களும் நிரம்பியிருந்தன.

10. மேம்படுகல்வி

உலகம் நலமுற்று ஓங்கும் வகையில் உழைக்கக் கற்பதே உயர்ந்த கல்வியாகும். தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர்கள் கற்ற கல்வி அத்தகையதே. அறத்தை நிலைநாட்டி உலகிற்கு அமைதியான வாழ்க்கையை நல்கும் பொறுப்பை மேற்கொண்ட ஆளுவோர்கள் கற்றற்குரிய கல்வியும் அத்தகையதே ஆதல்வேண்டும். ஓதல் வேட்டல் ஈதல் என்னும் பொதுத்தொழிலினும், படைக்கலம் பயிறல், பல்லுயிரோம்பல், பகைத்திறஞ்செறுதல் என்னும் சிறப்புத்தொழிலினும் வழுவாமல் நிற்கக் கற்பதும், அவற்றை நடைமுறையில் செலுத்துவதுமே ஆளுவோர்களுக்கு அமைந்த உலகம் தாங்கும் கல்வியாகும். அக்கல்வியே 'மேம்படு கல்வி' என்று உயர்த்திக் கூறப்படும்.

தகுதி வாய்ந்தது. உலகம்தாங்கும் மேம்படு கல்வியில் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் வல்லவனாக விளங்கினான். உலகம் தாங்கும் மேம்படு கல்வியில் வல்ல அவன், ஈடும் எடுப்புமற்ற வில்லாற்றல் பெற்ற வீரர்களுக்கெல்லாம் மெய்புகு கவசம்போலப் பாதுகாவலாக அமைந்து, வில் லுக்குச் சிறந்தவர்கள் சேரர்களே என்ற சொல்லுக்கு விளக்கமாகத் திகழ்ந்தான். மேலும், அவன், வீறு பெருங்கொற்றமுள்ள வேந்தர்களுக்கெல்லாம் வேந்தனாக வும், தன்னை அடைக்கலம் புக்கவர்களுக்கெல்லாம் அரணாக வும் அமைந்திருந்தான். கல்வித் துறையிலோ, ஆட்சித் துறையிலோ, போர்த்துறையிலோ பிறரெவர்க்கும் இல் லாத பெருஞ்சிறப்புப் பெறுதலை வீறுபெறுதல் என்று கூறுதல் வழக்கம். அவ்வாறு வீறுபெற்ற வேந்தர்களுக்கெல்லாம் வேந்தனாகச் சேரலாதன் விளங்கினான் என்றாலே, அவனுடைய பெருமையும் அருமையும் எத்தகையனவாய் இருத்தல் வேண்டும்? பெருமைக்கும் அருமைக் கும் பேராண்மைக்கும் ஊராண்மைக்கும் இருப்பிடமான அவன்,

''உலகம் தாங்கிய மேம்படு கற்பின்
வில்லோர் மெய்ம்மறை வீற்றிருங் கொற்றத்துச்
செல்வர் செல்வ! சேர்ந்தோர்க் கரணம்!
(பதிற்று. ௰௯ : அ - ௰)

என்று பாராட்டப்பெற்றுள்ளான். அவனுடைய
திறலையும் அறிவாற்றலையும் உணராது,
அருந் வலியும் படைவலியும் துணைவலியும்

தம்முடைய இட அறியாது, அவனோடு முரணிப்
காலச்செவ்வியும் கள், தம்முடைய வீரதைக்

போர் செய்த பகைவேந்தர்
களத்தேபோட்டு வெறுங்
கையராகி நின்றார்கள். அதுவே அவர்கள் கண்ட
போர்ப் பயன்.

11. படை

போர் செய்து, பொருளும் புகழும்
பெற்ற ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்,

பெறும் ஆற்றல்
நிலையான களிற்

றுப்படையும் காலாட்படையும் தேர்ப்படையும் வைத்துக் கொண்டிருந்தான். அவன் குதிரைப் படையைப் பற்றிய செய்திகள் ஆறும் பத்தில் காணப்பெறவில்லை; தேர்ப்படையைப் பற்றிய செய்திகளும், அப் பத்தில் போதிய அளவு விளக்கம் பெறவில்லை ; ஆயின், யானைப்படையும் காலாட்படையும் பற்றிய செய்திகளோ அதில் மிகவும் கவர்ச்சியான முறையில் கூறப்பெற்றுள்ளன.

யானைப்படை

நால்வகைப் படைகளுள் யானைப்படையே பேரச்சத்
தையும் பேரழிவையும் உண்டாக்கவல்லது. அப்படை, பகைவர்களுடைய படைக்கடலைப் பிளந்து கலக்கிப் பாழ்படுத்தும் ஆற்றலும், அவர்களுடைய அரணங்களைத் தகர்த்துத் தவிடுபொடியாக்கும் திண்மையும் வாய்ந்தது. கடுஞ்சினத்துக் கொல்களிற்றை எதிர்த்துப் பொருது வெல்லுதலையே வீரர்கள் தமக்குச் சிறந்த வீறுசால் புகழாகக் கொண்டார்கள். இந்த உண்மையை,

'களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே'

என்ற புறநானூற்றுக் கூற்றுப் புலப்படுத்துகின்றது. யானை ஆயிரம் எறிந்த மான வேந்தனுக்குப் பரணி பாடுதல் வேண்டும் என்ற நூல்வழக்கும் இந்த உண்மையை உறுதிப் படுத்துகின்றது.

அரசர்கள் இடம் அறிந்து போர்வினை

நிகழ்த்துதல் வேண்டும். இடனறிந்து வினைமேற் சென்றார்க்கு வெற்றியே அன்றித தோல்வி என்பது வந்துறாது; இடனறிந்து போர்வினை மேற்கொள்ளின் சிறிய படை ஒன்றன் துணை கொண்டே பெரிய படையினையும் வெல்லுதல் ஏலும். இந்த உண்மையை,

'சிறுபடையான் செல்லிடம் சேரின் உறுபடையான்
ஊக்கம் அழிந்து விடும்.' (குறள் : ௪௯௮) என்னும் திருக்குறள் தெளிவாக்குகின்றது.

சேரலாதன் இடனறிந்து வினைசெய்வதில் வல்லவன். பகைவரைப் பொருது அவர்களுடைய செல்வங்களைக் கவர எண்ணிய சேரலாதன் அச் செயற்கு வேண்டும் இடம் அறிந்து, தன் படையுடன் சென்று, பகைப்புலத்துத் தங்கினால் போதும். உடனே பகைவர்கள் 'யாம் கொடுக்கும் திறைப்பொருள்களை ஏற்று, எமக்கு அருள் செய்வீராக' என்று பணிமொழி கூறி, என்றும் குன்றாத வருவாயினையுடைய தம்முடைய நாட்டிடத்தே அவனுக்குத் திறை யளப்பார்கள். ஒருநாள் அவன், இடனறிந்து சென்று பகைப்புலத்துத் தங்கித் திறைபெற்றுத் தன்னுடைய படைகளுடன், தன் 'தொல்புகழ் மூதூர்' நோக்கித் திரும்பி வந்துகொண்டிருந்தான். வரும் வழியில், தன்னாலும் தன் முன்னோர்களாலும் பாதுகாக்கப்பட்ட பெருமையையுடைய துணைவேந்தருடைய மன்னெயில் குறுக்கிட்டது; பிறரால் கைக்கொள்ளப்படாத வகையில் நின்று நிலைபெற்ற கோட்டை என்பது 'மன்னெயில்' என்பதற்குப் பொருளாகும். அம் மன்னெயிலின் வாயில்தொறும் சிலம்பும் தழையும் ஏந்திய பாவைகள் தொங்கிக் கொண்டிருந்தன. அவைகள் 'எம்முடைய வேந்தனோடு எதிர்த்துப் பொரும் ஆற்றல் மிக்கவர் எவரேனும் இருப்பரேல், அவர் தம்முடைய காலில் கட்டிய கழலையும் அரையில் உடுத்த போர்க்

குரிய உடையையும் நீக்கி, இந்தச் சிலம்பையும் தழையையும் அணியும் மகளிர் நிலை எய்துவது உறுதி' என்று எச்சறிக்கை செய்யும் பான்மையில் அமைக்கப்பட்டிருந்தன. பின்னர் எச்சு வரும் என்று முன்னர் அறிக்கை செய்வது எச்சறிக்கை எனப்படும். எச்சறிக்கை செய்த வண்ணம் பாவைகள் தொங்கிக் கொண்டிருக்கும் வாயில்களையுடைய மன்னெயிலின் மதிற் சுவர்கள் வளைவு வளைவாகக் கட்டப்பட்டு விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்திருந்தன. கோள்வல் முதலைகள் நிறைந்த குண்டுகண் அகழிகள் அவற்றிற்கு அரண் செய்தன. பாதுகாப்பின் பொருட்டும், பகைவர்களைத் தாமாகவே தாக்கி அழித்தலின் பொருட்டும், எந்திரப் பொறிகளும் எய்யப்படும் கணைகளும், வேண்டுழி வேண்டுழி எல்லாம் கோட்டை வாயிலில் வைக்கப்பட்டிருந்தன.

அவையே அன்றி, இருப்பாணிகளால் இறுகப் பிணிக்கப் பட்ட, பலகைகளால் செய்யப்பட்ட, பற்பல நிலைகளையுடைய நெடுங்கதவங்கள் கோட்டைவாயில்களில் கடுங்காவல் செய்துகொண்டு நின்றன. கணையமரங்கள்

அவற்றின் பின்னர் நின்று, அவற்றிற்கு
வன்மையும் திண்மையும்
தந்தன. இவ்வளவு ஏமப்பாதுகாப்பினையுடைய அம் மன்னெயிலும் அவற்றின் கதவுகளும் தம்முடைய அருமையும் பெருமையும் குலையாமல் இருக்கவேண்டுமானல், அவைகள் சேரலாதனுடைய தறுகண் யானைகளின் கண்களில் படாமல் இருத்தல் வேண்டும்; பட்டுவிட்டாலோ, அன்றே, அப்பொழுதே அவைகள் மண்ணோடு மண்ணாக மாறவேண்டியதுதான். அந்தக் களிறுகள அவ்வளவு மறம் மிக்கவைகள்.
போர்

வேங்கைமரங்களைப் புலியெனக் கருதி, அவற்றோடு
செய்து, முகத்தில் வடுப்பெற்றுப் பொலிவோடு
விளங்கின அவைகள், மன்னெயிலைக்
கண்டுவிட்டால், மதமிக்கு அவற்றைத் தாக்கவும்
தகர்க்கவும் தொடங்கிவிடும்.
தம்முடைய ஆண்மைத் தடக்கைகளைச் சுருட்டித் தூக்கி எயில்வாயில் நெடுங்கதவங்களை மோதிப் பிளக்கும். மதம் மிக்க காலத்துக், குத்துக்கோலுக்கும தோட்டிக்கும் தம்மைச் செலுத்தும பாகர்களுக்கும அவைகள் சிறிதும் அஞ்சா. ஆகவே, யானைகளை மன்னெயிலின் நேர்வழியில் செலுத்தினல, யாவராலும், அவற்றை அடக்கமுடியாத நிலை ஏற்பட்டுவிடும். அதனல், வளைந்து வளைந்து செல்லும் நிலை ஏற்பட்டாலும் கூட, அதனைப் பொருட்படுத்தாது, அவற்றை நேர்வழியில் செலுத்தாமல், வேறுவழியிலேயே நடத்திச் செல்லுதல் வேண்டும். அதுவே அவனுக்குத் தக்கது என்று அன்பாக அறிவுரை கூறும் வகையில்,

“வென்று கலந்தரீஇயர் வேண்டுபுலத் திறுத்தவர்

வாடா யாணர் நாடுதிறை கொடுப்ப
நல்கினை யாகுமதி யெம்மென் றருளிக்
கல்பிறங்கு வைப்பிற் கடறுஅரை யாத்தநின்
தொல்புகழ் மூதூர்ச் செல்குவை யாயிற்
செம்பொறிச சிலம்பொ டணித்தழை தூங்கும்
எந்திரத் தகைப்பின் அம்புடை வாயிற்

கோள்வல் முதலைய குண்டுகண் ணகழி வானுற வோங்கிய
வளைந்துசெய் புரிசை ஒன்னாத் தெவ்வர் முனைகெட
விலங்கி
நின்னிற் றந்த மன்னெயி லல்லது
முன்னும் பின்னும் நின் முன்னோ ரோம்பிய எயின்முகப்
படுத்தல் யாவது? வளையினும் பிறிதாறு சென்மதி
சினங்கெழு குரிசில் எழூஉப்புறந் தரீஇப் பொன்பிணிப்
பலகைக் குழூஉநிலைப் புதவிற் கதவுமெய் காணின்
தேம்பாய் கடாத்தொடு காழ்கை நீவி
வேங்கை வென்ற பொறிகிளர் புகர்நுதல் ஏந்துகை
சுருட்டித் தோட்டி நீவி
மேம்படு வெல்கொடி நுடங்கத்
தாங்க லாகா ஆங்குநின் களிறே”

(பதிற்று. ருரு: க - உக)

என்று பாடிச் சேரலாதனுடைய களிற்றுப்

படையின் பேராற்றலை விளக்கியுள்ளார் நச்செள்ளையார்.

12. நில்லாத்தானை

களிற்றுப்படையால் வன்மை மிக்க சேரலாதனுடைய காலாட்படை 'போர் எனிற் புகலும் மறவர்'களால் அமைந்தது. 'வலக்கையில் தோமரம் ஏந்திய அவ் வன்கண் ஆடவருடன் சென்று, பகைவர்களுக்குரிய நிலப்பகுதி குறைபடுமாறு அவர் எல்லைக்குட்பட்ட நிலத்தே பாசறை வகுத்தான் சேரலாதன். பாசறையில, போர் தொடங்குதல் வேண்டும் என்னும் ஏவற்குறிப்பமைந்த முரசின் முழக்கம் கேட்டுப் பகைவர்களுக்கு அச்சம் பெருகுமாறு ஆரவாரம்செய்தனர் அவன் வீரர்கள். அவர்கள் பகைவர்களுடைய தேர் குதிரை காலாட்பண்டகளுடன் பொருதல் தம்முடைய தகுதிக்குத் தாழ்வு என்று கருதினார்கள். ஆனால், பகைவருடைய யானைப்படையைக் கண்டவுடனே, சிறிதும் காலம் தாழ்க்காது மேற்சென்று, அப்படையைத் தாக்கிப் பொருதார்கள். அத்தகைய ஆற்றல் அமைந்த படையை 'நில்லாத்

தானை' என்று வியந்துள்ளார் நச்செள்ளையார். நில்லாத் தானைக்குரிய அவன், அரசனும் தன்மைக்கும் தானே உரியவனுய்ச் சிறந்தான்.

அதனை,

"நிலம்தப விடூஉம் ஏணிப் புலம்படர்ந்து
படுகண் முரசம் நடுவண் சிலைப்பத்
தோமர வலத்தர் நாமம் செய்ம்மார்
ஏவல் வியங்கொண்டு இளையரொடு எழுதரும்
ஒல்லார் யானை காணின்
நில்லாத் தானை இறைகிழ வோயே."

(பதிற்று. ருச :

கஉ - எ) என்று எழுத்தோவியமாக்கியுள்ளார் புலவர்.

அவன் நில்லாத்தானை,

"கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்
ஆற்ற லதுவே படை" (குறள் : எசுஉ)

என்னும் படை இலக்கணத்தைத் தனக்கு உரிமையாகப் பெற்றிருந்தது. அப் படைவீரர்கள், தமக்கு ஊறு நேர்ந்தவிடத்தும், உயிர் அஞ்சா மறவர்களாக விளங்கினர்கள். அவர்கள் போர்பல செய்து, விழுப்புண் பெற்று, வயிரம் ஏறிய கட்டுக் குலையாத உடல் பெற்றிருந்தார்கள். அவ் விழுப்புண் ணழகர்களை,

"வாண்முகம் பொறித்த மாண்வரி யாக்கையர்"

(பதிற்று. ருக : ங)

என்று கூறி, கற்போர் கேட்போர்களுடைய மனக்கண் முன் கொணர்ந்து நிறுத்துகின்றார் புலவர். இடிபோலப் பகைவர்களைத் தாக்கும் ஆற்றல் பெற்ற அவர்கள் தம்முடைய கொல்படைகளை ஏந்திக்கொண்டு, வெள்ளிய பனந்தோட்டால் கட்டப்பட்ட ஒள்ளிய குவளைப் பூக்களைச் சூடிக்கொண்டு, "இன்று வயிறும் மனமும் ஆர, நுகரக்

கடவனவற்றை
வர்களுடைய
இனிது நுகர்ந்த நாம், நாளைக்குப் பகை
'மண்புனை இஞ்சி மதிலை'க் கடந்தல்லது
உணவு உட்கொள்ளமாட்டோம்'' என்று வஞ்சினம்
கூறித்
தாம் சூடிய போர்க்கண்ணிக்கு ஏற்பப்
வர்களைப் புறம் கண்டார்கள்.

போர்செய்து பகை

வஞ்சினம் கூறி, வினைமேற் செல்லும் வயவர்களுக் கெல்லாம் வயவனாக விளங்கிய அக்

காரணம் பற்றிச் சேரலாதனுக்கு 'வயவர் பெருமகன்' என்ற பாராட்டுப் பெயர் வழங்கப்பட்டுள்ளது. போர்க்களத்தே புகழ்பலகொண்ட வயவர் பெருமகன், தன் நாக்களத்திலும் பெரும்புகழ் கண்டான். நாக்களத்தில் புகழ் பெறுதலாவது, நாவால் பொய் கூறாமல் இருத்தலே ஆகும். நெஞ்சக் களத்தில் நிகழும் மாறுப் பெரும்போரில், நெஞ்சத்தின் தீய ஆற்றல் களை எல்லாம் புறங்கண்டவர்களுக்கே, 'பொய் கூறாமை' என்னும் நாவின் வெற்றி உண்டாகும். அவ் வெற்றியைப் 'பொய்யாமை' என்னும் உயர்ந்த அறமாக்கியுள்ளார் வள்ளுவர். எதன் பொருட்டும் பொய் கூறாத நல்ல வெற்றி யைக் கண்ட நாவிற்கு 'வயங்கு செந்நா' என்ற பெரிய பட் டத்தைத் தந்துள்ளார்கள் அக் காலத்துப் பெரியோர்கள். அப் பெரும் பட்டத்தையும் சேரலாதன் பெற்றுத் திகழ்ந் தான். முற்காலத்து முடியுடை வேந்தர்களில் சிலர் மகளிர் ஊடலினும் பொய்யறியாது வாழ்ந்தார்கள் என்ற செய்தி ஈண்டு நினைவிலிருத்துதற்குரியது. மேலும், போர்க்
குரிய எல்லா அறங்களாலும்
முன்னிட்டும் அவற்றிலிருந்து
வீரர்களுக்கும், சான்றோர்கள்

நிரம்பி, எக்காரணத்தை

சிறிதும் திறம்பாத பெரு
என்ற பெயர் வழக்குண்டு.
பேராண்மையால் பகைவர்கள் எயிலை எறியும் தடக்கையும், ஏந்தெழிலாகமும் பெற்று விளங்கிய சேரலாதனுடைய வில் வீரர்கள் சான்றோர்கள் என்று பாராட்டப்பெற்றுள் ளார்கள். அவ் வீரச் சான்றோர்களுக்கெல்லாம் மெய்புகு
'கவசம்போல அமைந்து, அவர்களுக்குத் தானே தலைவனாகத் திகழ்ந்தமையால், சேரலாதன் 'சான்றோர் மெய்ம்மறை' என்றும் புகழப்பட்டுள்ளான். வயவர் பெருமகனாகவும்,

ஆறாம் பத்து

வயங்கு செந்நா வீரனாகவும், சான்றோர் மெய்ம்மறையாக வும் விளங்கிய அவனை, 'வானவரம்பன்' என்றே அன்றைய உலகம் பாராட்டியுள்ளது. வானவரம்பன் எனத் தன் பெயர் நிறீஇய அவனது வீரர்களையும் அவனையும்,

"வெண்தோட்டு அசைத்த ஒண்பூங் குவளையர்
வாள்முகம் பொறித்த மாண்வரி யாக்கையர்
செல்லுறழ் மறவர்தம் கொல்படைத் தரீஇயர்
இன்றுஇனிது நுகர்ந்தன மாயின் நாளை
மண்புனை இஞ்சி மதில்கடந்து அல்லது
உண்குவம் அல்லேம் புகாஎனக் கூறிக்
கண்ணி கண்ணிய வயவர் பெருமகன்
பொய்படுபு அறியா வயங்குசெந் நாவின்

எயிலெறி வல்வில் ஏவிளங்கு தடக்கை
ஏந்தெழில் ஆகத்துச் சான்றோர் மெய்ம்மறை
வான வரம்பன் என்ப" (பதிற்று. ருஅ: உ - கஉ) என்று மிக அழகாகப் பாடியுள்ளார் காக்கைபாடினியார்.

மேலே கூறப்பட்ட பாட்டில் வீரர்கள் சான்றோர் என்று பாராட்டப்பட்டார்கள். ஆயினும், கற்பன எல்லாம் கற்று, நற்குணங்களால் நிரம்பி, நற்செயல்களால் மாட்சிமைப்பட்டு, பெரியோரை வியவாமலும் சிறியோரை இகழாமலும் இருக்கும் சமன்நிலை எய்தி, ஆன்று அவிந்து அடங்கிய கொள்கையுடைய பெருமக்களே பெரும்பாலும் சான்றோர் என்னும் சொல்லால் குறிக்கப்பெறுவார்கள். 'சான்றாண்மை' என்னும் திருக்குறளதிகாரத்தில் விளக்கப் பெறும் இலக்கணங்களைப் பெற்றவர்கள் அவர்களே ஆவார்கள். பிசிராந்தையார், சான்றோர்கள் பலர் வாழும் ஊரில் வாழ்ந்தமையாலே, எத்தனையோ வகையான ஏற்றங்களையும் பெற்று, யாண்டு பலவாகியும் நரையிலராகி வாழ்ந்தார் என்ற செய்தியும் ஈண்டு நினைவு கூர்தற்பாலது. சான்றோர்கள் பலர் சேர்ந்து வாழும் நாடே நல்ல நாடு. 'நாடு' என்பதற்கு இலக்கணம் வகுத்த வள்ளுவரும், தக்கார் சேர்ந்து வாழும் நாடே, நாடெனப்படுவது என்று கூறியுள்ளமையை,

" தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்

செல்வரும் சேர்வது நாடு" (குறள்.
எங்க)

என்ற

தான்,

குறள் அறிவிக்கின்றது. சான்றோர்கள் இருப்பதால் தனக்கு நேரும் எல்லாவகையான கேடுகளையும் சுமைகளையும் பொறுத்துக்கொண்டு, உலகம் இன்னும் இருந்து வருகின்றது. இல்லையேல், உலகம் என்றோ மண் புக்கு மாய்ந்துபோயிருக்கும்.

"சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை"

(குறள். கஉகூ) என்ற குறள் அறிவிக்கும் உண்மை அதுதானே?

சேரலாதன் நன்னாட்டில் சான்றோர்கள் சேர்ந்து வாழ்ந்துவந்தார்கள். அவர்களுக்கு எந்தவகையான இடையூறும் குறைவும் நேராதவாறு அன்பும் அளியும் செய்து ஆண்டான் சேரலாதன். அதனால் அவன் வலன்' என்றும் சிறப்பிக்கப்பட்டுள்ளான்.

'சான்றோர் புர

சான்றோர்களே ஆளுவோர்களுக்கும் வாழுவோர்களுக்கும் வழிகாட்டிகளாக உள்ளவர்கள். சமன் செய்து சீர்தூக்கும் நேர்மையையும் பொறுமையையும் உலகிற்குக் கற்பிப்பவர்களும் அவர்களே. அவர்கள் விரும்புவன எண்ணம் மொழி செயல்களின் தூய்மையே யாகும். யாதொன்றும் தீதிலாத செய்தலாகிய வாய்மையே அவர்களது அறம் ஆகும். அவர்கள் விரும்பும் தூய்மையும் வாய்மையும் சேரலாதனிடம் குடிகொண்டிருந்தன. அவற்றால் அவனுக்குக் குன்றாப்புகழ் சேர்ந்தன. அதனால் அவன்,

"நசைசால் வாய்மொழி இசைசால் தோன்றல்"
(பதிற்று. ௫௫: ௧௨)

என்றும் போற்றப்பட்டுள்ளான்.

14. மழவர் மெய்ம்மறை—ஊன் சோறு

மழவர் எனப்படுவோர் போர் செய்வதற்கெனவே பிறந்த மறக்குடி மக்களாவார். அவர்கள், தன்னிற் ஆறும் பத்து

கலந்த சிவந்த ஊன் கறி தோன்றாதவாறு, துவரையால் அரைக்கப்பட்ட துவையலையும், வெண்மையான ஊன் கலந்து சமைத்த சோற்றையும் உண்டு உரம் நிரம்பியிருந்தார்கள். உரம் மிக்க அவர்கள் வீரத்தையும் வினைத்திறத்

தையும் பழைய இலக்கியங்கள் பெரிதும் வியந்து கூறியுள்ளன. அத்தகைய மழவர்களுக்கும், சேரலாதன் மெய்புகு கவசம் போன்று பாதுகாவலாக அமைந்தான். அதனால், அவன்,

> "செவ்வூன் தோன்றா வெண்துவை முதிரை
> வாலூன் வல்சி மழவர் மெய்ம்மறை"
>
> (பதிற்று. ௫௫ : எ - அ)

என்று பெரிதும் மதிக்கப்பட்டுள்ளான்.

15. சினங்கெழு குரிசில்

சினம் பெருங் குற்றங்களுள் ஒன்றாகக் கருதப்படுகின்றது. ஆயினும், தனியொருவனையும் உலகினையும் நெறிப்படுத்துவதற்கு உதவியாக உள்ள சினம், நற்குணங்களுள் ஒன்றாகவும் ஒப்பற்றதாகவும் வைத்து எண்ணப்படுதற்குரியதாகவே உள்ளது. அந்த நல்ல சினந்தான், துணிவையும் ஆண்மையையும் படைத்து, வீரத்துக்குத் தாயாக விளங்கும் தகுதி பெறுகின்றது. வீரத்தின் கடமை ஈரத்தைக் காப்பதே. ஈரத்தைக் காக்கும் அந்த வீரத்தின் தாயாம் சினத்தைப் பெரியோர்கள் பாராட்டுகின்றார்கள். ஆனால், அந்தச் சினம், வீரத்துக்குத் தாயாகாமலும், தன்னளவில் நில்லாமலும், வெறும் மறத்தைப் படைத்து, வெறியைப படைத்து, நல்லது கெட்டது ஒன்றும் அறியாமல் கண்மூடித்தனமாக விளையாடத் தொடங்குமேல், அப்போது அது பெருங் குற்றமாகி விடுகின்றது. அளவுக்குமீறிச் சினத்தைக் கொள்ளுகின்றவர்களுடைய நிலை, நுனிக்கொம்பர் ஏறி அஃதிறந்தூக்கினவர்கள் நிலையில் சென்று முடிந்து விடுகின்றது. அந்த உண்மையைத் 'தன்னையே கொல்லும் சினம்' என்னும வாய்மொழி விளக்குகின்றது. ஆளுவோர்களுக்குப் பகையை அழிக்கச் சினம் தேவையாகின்றது.

எப்படி அறத்தை வகுக்க அறிவு தேவையாகின்றதோ,

எப்படி அறத்தைக் காக்க அறிவும் ஆண்மையும் திய ஆணை தேவையாகின்றதோ, எப்படிப்

பொருந்

பண்பை
வளர்க்க அறிவாலமைந்த குணம் தேவையாகின்றதோ, அப்படியே பகையை அழிக்க அறிவொடு பொருந்திய சினம் ஆளுவோர்களுக்கும் பிறர்க்கும் தேவையாகின்றது. அத் தேவையான சினம், சேரலாதனிடம் இயற்கையாகவே அமைந்திருந்தது. அதனால் அவன் 'சினங்கெழு குரிசில்' (பதிற்றுப். 6 : பாட்டு 3. வரி 14.) என்று வியக்கப்பட்டுள்ளான்.

16. ஓடாப் பூட்கை மறவர்

அச் சினங்கெழு குரிசில், மானத்தாலும் மறத்தாலும் மாட்சியும் செருக்கும் மிக்க படையாலும் தன்னோடு ஒப்பு நிற்க வல்ல மன்னர்களுடன்தான் போர் செய்வான். அவனுடைய பகைவர்களை 'ஓடாப்பூட்கை மறவர்' (பதிற்றுப். 6 : பாட்டு 7. வரி 1.) என்று ஆறும் பத்துப் பாராட்டியுள்ளது. அவர்கள் தடக்கையானைப்படையாலும் (பதிற்று 6: பாட்டு 1. வரி 29) பிற படையாலும் சேரலாதனை ஒத்திருந்தார்கள். அதனால் அவர்கள் சிலபோது அறிவு அறைபோகிச் சினத்தின் எல்லை மீறிச் செருக்கிக் காலம் இடம் முதலியவற்றின் வலி அறியாது, சேரலாதனிடம் போர் செய்ய வந்து மாட்டிக்கொள்வார்கள். சேரலாதனோ,

அவர்கள் தூசிப்படையை நாள்தோறும் அலறத் தாக்கிக் கெடுத்து, அவர்களுடைய 'நெடுமலை யடுக்கத்த நாடுக'ளை யும் கைக்கொள்வான். எவராலும் எதிர்க்க முடியாத தன்னையும் எதிரூன்றித் தாக்கும் ஆற்றல் மிக்க 'ஓடாப் பூட்கை மறவரை' வாளமர் செய்து, கொன்று குவித்து நூழிலாடுவான். அவ்வாறு நூழிலாடிப் பகையழித்த பின்னர்த்தான் அவனது சினம் தணியும்:

"கணந்தலை வேந்தர் தார்அழிந்து அலற
நீடுவரை அடுக்கத்த நாடுகைக் கொண்டு
பொருதுசினம் தணிந்த செருப்புகல்
ஆண்மைத் ஆறும் பத்து

179

தாங்குநர்த் தகைந்த ஒள்வாள்
ஓங்கல் உள்ளத்துக் குரிசில்."
(பதிற்று. ருரு : எஎ - உக.)

என்பதனால், பொருது சினம் தணிந்த அவனுடைய செருப்புகலாண்மையும், ஒள்வாளமர் செய்து முருக்கிய அவனுடைய ஓங்கலுள்ளமும் அருஞ்சமம் வெளிப்படுகின்றன.

17. ஒள்வாளமலை

ஒள்வாளமர் செய்வதில் வல்ல அப்

பேராண்மை மிக்க
சேரலாதன், அகன்ற ஊர்களில்
சிறப்புடன் எடுக்கப்படும்

விழாக்களில், கூத்தர்கள் முழக்கும் முழவின் பேரோசைத் தாளத்திற்கேற்ப, அதன் முன் நின்று ஆடும் கலையில் வல்லவனாக இருக்கவில்லை. ஆனால், அறியாமை மிகுதியால் சினந்து, பகைமேல் வந்து, தன்னுடன் பொருத வேந்தர்கள், தம்முடைய உடல் மறந்து, வீரத்துறக்கத்தை விரும்பி விழுப்புண் பட்டுவிழும் செங்களத்திலே, முழக்கப்படும் வலம்படு முரசின் பெரு முழக்கத்தின் தாளத்திற்கேற்ப, விளங்கும் மணிப்பூண் அணிந்தவனைப், பொன்னாற் செய்த உழிஞைக்கொடி சூடினவனைத் தன் வன்கண் வீரர்களுடன்

ஒள்வாள்
அவன்.

உயர்த்து ஆடுதலில் வல்லவனாக விளங்கினான்
பட்ட வேந்தனை அட்ட வேந்தனும் அவன்

வீரர்களும் சூழ்ந்து வாளேந்தி ஆடுதல் ஒள்வாளமலை என்னும் துறையின் இலக்கணமாகும். அவ் விலக்கணத்திற்கு

ஏற்ப, அவன் ஆடினமையை,

"விழவு வீற்றிருந்த வியலு ளாங்கண்
கோடியர் முழவின் முன்னர் ஆடல்
வல்லான் அல்லன் வாழ்கஅவன் கண்ணி
வலம்படு முரசம் துவைப்ப வாளுயர்த்து
இலங்கும் பூணன் பொலங்கொடி உழிஞையன்
மடம்பெரு மையின் உடன்றுமேல் வந்த
வேந்து மெய்ம் மறந்த வாழ்ச்சி
வீந்துகு போர்க்களத் தாடும் கோவே."

(பதிற்று. ருசு : க - அ)

என்னும் பாட்டு உணர்வோவியமாக்கிக் காட்டுகின்றது.

18. ஊராண்மை

பேராண்மையினுல் ஒள்வாளமலை ஆடும் அவன், ஊராண்மையிலும் தலை சிறந்து விளங்கினன். 'பேராண்மை என்ப தறுகண் ஒன்றுற்றக்கால், ஊராண்மை மற்றதன் எஃகு' என்ற இலக்கணம் அவனிடம் குடிகொண்டிருந்தது. பகைவர் மேல் கண்ணோடாது செய்யும் மறம் தறுகண் எனப்படும். பகைவர்க்கு ஒரு தாழ்வு நேர்ந்தவிடத்து, அவர்களைத் தழுவிக் காத்து, அத் தாழ்வு நீக்க அருள் செய்தலே ஊராண்மை எனப்படும். இந்த ஊராண்மையைத் 'தழிஞ்சி' என்று வழங்குவார்கள் இலக்கண நூலார்கள்.

"அழிகுநர் புறக்கொடை அயில்வாள் ஓச்சாக்

கழிதரு கண்மை காதலித் துரைத்தன்று."
(பு. வெ. மா. ௫௫)

என்பதனுல் தழிஞ்சித்துறை இலக்கணம் தெளிவாகின்றது.

'இன்று போய் நாளை நின் தானையோடுவா' இராமனுடைய நெஞ்சம் தழிஞ்சிக்கு என்ற தலை சண்டு நினைவுகூர்தல் நல்லது.

எடுத்துக் காட்டா

போர்க்களத்து அழிந்து வழிமொழியும் நிலைமையைப் பெற்ற பகைவர்களுக்கு, அருளும் அவனுடைய தழிஞ்சி இலக்கணத்தை,

"செல்லா மோதில் சில்வளை விறலி
....
குரல் புணர் இன்னிசைத் தழிஞ்சி பாடி
... .
... .
புரவெதிர் கொள்வனைக் கண்டனம் வரற்கே."
(பதிற்று. ௫எ)

என விறலியாற்றுப்படையில் வைத்து விளக்கியுள்ளார் நச்செள்ளையார்.

பொருலகத்தில், தருகண், ஞாயிற்றின் இயல்போடும் ஊராண்மை, திங்களின் இயல்போடும் பொருந்தி விளங்கும் பண்புகளாகும். அவ்விரண்டு பண்புகளையும் தன்னிரண்டு கண்களெனக் கொண்டிருந்த சேரலாதனுடைய யானைப் படைகளும் தேர்ப்படைகளும், வெள்ளம் போலத் திரண்டு, மேல் வந்த பகைவர்களுடைய படைக்கடலின் ஊடே ஊடே புக்கு, அவற்றைப பிளந்து உடைத்துத் துமித்துத் தேய்த்துப் பாழ்படுத்தின. படைக்கடலைப் பிளந்து துமித்த அவற்றின் காட்சிகள், பெருங்கடலைப் பிளந்து திசைதொறும் திசைதொறும் திரிந்து சுழலும் பெருங் கப்பல்களின் காட்சிகளோடு ஒப்பு நின்றன.

19. தேர்ப்படை

தேர்ப்படைச் செல்வத்தால் சிறந்து விளங்கிய அக் குடவர்கோ, 'கொடித்தேரண்ணல்' (பதிற்று. கூ : ரு) என்று பாராட்டப் பெற்றுள்ளான். அக் கொடித்தேரண் ணலின் காலாட்படை வீரர்கள் தம்மை மெய்புகு கவசத்தாலும் பாதுகாத்துக் கொள்ளாமல், வில்லும் வாளும் தோலும் போன்ற எஃகு சுமந்து பகைவர்களை அதிரப் பொருது, அவர்களுக்கு உயர்நிலை யுலகத்தையே தந்து, புகழணிந்து, சினம் தணிந்து நின்றார்கள். அவ்வாறு அதிரப் பொரும் ஆற்றல் அமைந்த செல்லுறழ் சேரலாதனுடைய தும்பைப் போர்த்திறத்தை,

தடக்கைச்

"கொடிநுடங்கு நிலைய கொல்களிறு மிடைந்து
வடிமணி நெடுந்தேர் வேறுபுலம் பரப்பி
அருங்கலம் தரீஇயர் நீர்மிசை நிவக்கும்
பெருங்கலி வங்கம் திசைதிரிந் தாங்கு
மையணிந் தெழுதரு மாயிரும் பஃறோல்
மெய்புதை அரணம்எண் ணாதுஎஃகு சுமந்து
முன்சமத் தெழுதரும் வன்கண் ஆடவர்
தொலையாத் தும்பை தெவ்வழி விளங்க
உயர்நிலை உலகம் எய்தினர் பலர்பட
நல்லமர்க் கடந்த நின் செல்லுறழ் தடக்கை"

(பதிற்று. இஉ : ௧ - ௧௦)

என்னும் பாடற்பகுதி, பெருமிதச்சுவை தோன்றக் காட்டுகின்றது.

விளக்

20. கடற்போர்

இந்தப் பாடற் பகுதியில் அமைந்த,

"அருங்கலம் தரீஇயர் நீர்மிசை நிவக்கும்
பெருங்கலி வங்கம்" (பதிற்று. இஉ : ௩-௪) என்னும் வரிகள் சேரலாதனுடைய கடல்

வாணிகத்தின்
ஏற்றத்தை உய்த்துணரத் துணைசெய்கின்றன. எனினும் சேரலாதனுடைய கடற்படை, கடற்போர் ஆகியவற்றைப் பற்றிய செய்திகள் ஆறும்பத்தில் இடம்பெறவில்லை. அதனால், அவனுக்குக் கடற்போர் செய்தற்குரிய வாய்ப்பே ஏற்படவில்லையோ என்னவோ தெரியவில்லை. அல்லது ஆறும் பத்து பாடப்பட்ட காலத்தும் அதற்கு முன்னும் அவன் கடற்போர் செய்தானோ இல்லையோ என்பதும் தெரியவில்லை.

21. கோடைத்திறம்

சில வேந்தர்கள் போர்வெறி
மிக்கவர்களாகவே தம்
காலமெல்லாம் போக்குவார்கள். அவர்களைச் சான்றோர்கள் நல்லறிவு கொளுத்தி நெறிப்படுத்துவார்கள். அதற்கு எடுத்துக்காட்டு சங்க இலக்கியங்களில் உண்டு. வேந்தர்களுக்கு எப்போதும் எஞ்சாமல் இருக்கவேண்டிய மாட்சிகளுக்குள்ளே ஈகை என்பதும் ஒன்று.

"அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற்கு இயல்பு" (குறள்: ௩௮௨)

என்னும் இறைமாட்சி இலக்கணத்தை ஈண்டு நினைவு கூர்தல் வேண்டும். சேரலாதன் போர்த்திறத்தில் ஈடும் எடுப்பும் அற்று விளங்கியதுபோலவே, கொடைத்திறத்

திலும் ஆட்சித்திறத்திலும் விளங்கினான். போர்க்களத்தில், பேரிடி போன்று, அச்சத்தையும் அழிவையும் பகைவர்க்குத் தந்து நல்லமர் பல கடந்த அவன் செல்லுறழ்

தடக்கைகள், இரப்போர்க்குக் கொடுத்தற்பொருட்டே கவியக் கற்றிருந்தன. எவ்வளவு அரும்பொருளாயினும் எவரிடத்திலுமிருந்து ஏற்பதற்கு அவன் கைகள் மலர் பறியாவாயிருந்தன.

"நல்லாறு எனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று" (குறள்: உஉஉ) என்னும் தமிழறத்தினை அத்தடக்கைகள் கற்று, கற்றபடி நின்றன. அதனை,

"நல்லமர்க் கடந்தநின் செல்லுறழ் தடக்கை
இரப்போர்க்குக் கவிதல் அல்லதை இரைஇய
மலர் பறியா" (பதிற்று. ருஉ: க0 - ௲) என்னும் வரிகள் உலகிற்கு அறிவித்து நிலைபெற்று நிற்கின்றன.

மேலும், அவன் இரப்பவர் வறுமைக்குப் பகைவனாக ஒளிர்ந்தான். அவர்கள் வறுமையைத் தீர்த்தற்பொருட்டு, நல்ல அணிகலங்களும் பிறவும் நாடோறும் வாரி வாரி வீசும் வள்ளலாகத் திகழ்ந்தான். அதனால், அவ் 'வண் புகழ்' வேந்தனைச் சான்றோர்கள் பலவாறு பாடி மகிழ்ந் தார்கள். இசையால் திசைபோகிய அவனது வள்ளன்மை யைக் கேள்வியுற்றதனால், தாம், அவனைக்காண வந்த தாகக் காட்சி வாழ்த்துப் பாடியுள்ளார் நச்செள்ளையார்.

"வள்ளியை என்றலின் காண்குவந் திசினே
....
இரவலர் புன்கண் தீர நாடொறும்
உரைசால் நன்கலம் வரைவில வீசி

அனையை ஆகல் மாறே"

(பதிற்று. ௬௪) என்பது அக்காட்சி வாழ்த்துப் பகுதியாகும்.

சேரலாதனின் கொடைத்திறத்தின் மிகுதியால், அவன் நாட்டில் இரவலரே இல்லாதொழிந்தனர். இரக்கும் தொழிலோரே இல்லாதவாறு எல்லாரும் ஏமவாழ்வு பெறும் வகையில் ஆளும் ஆட்சியே பொற்கால ஆட்சி

என்ற பாராட்டைப் பெறுதற்குரியது. அந்த ஆட்சி சேரலாதன் கொடைத்திறத்தால் அமைந்தது. அத்தகைய ஆட்சியால் மாட்சி பெற்ற அவன், இரவலர்க்கு ஈத்துவக்கும் இன்பம் வேண்டினன். பிறநாடுகளிலிருந்த இரவலர்களைத் தேரில் கொணர்ந்து அவர்களுக்கு வேண்டிய அனைத்தும் அளித்து மகிழ்ச்சியில் திளைத்தான் அவன். அதனை,

"வாரார் ஆயினும் இரவலர் வேண்டித்
தேரில் தந்தவர்க்கு ஆர்பதன் நல்கும்
நசைசால் வாய்மொழி இசைசால் தோன்றல்"
(பதிற்று. ருரு : ௧0 - ௨)

என்று மனமாரப் பாடி மகிழ்ந்துள்ளார் புலவர் பெருமாட்டியர்.

22. சிறுகுடி மக்கள்

அவன் நாட்டில் சிறுகுடி மக்களாக வாழ்ந்தவர்கள் இரவலர்களே. அச் சிறுகுடி மக்கள் பெருங்குடி மக்களாக உயர்தற்குரிய வகையில் சேரலாதன் வழிபல வகுத்துப் பேரறம் செய்து உலகம் புரந்தான். அதனால்,

"இரவல் மாக்கள் சிறுகுடி பெருக
உலகம் தாங்கிய மேம்படு கற்பின்
....
செல்வர் செல்வ! (பதிற்று. ருசு : எ - ௧0)

என்ற போற்றுதலைப் பெற்றான் அவன்.

பலவர் பெருமாட்டி ஓரிடத்தில் சேரலாதனுடைய காதல்வாழ்வை அவன் காதல்வாழ்வோடு எடைபோட முயன்றுள்ளார். உலகத்தில் காதல்வாழ்வே எல்லா வகையான வாழ்வுகளினும் உயர்ந்த வாழ்வாகக் கருதப் படுகின்றது. 'அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை' என்பத னல் அது மெய்ப்பிக்கப்படுகின்றது. கணவர், தம் காதல் மகளிரைத் தம் உயிரினும் உலகினும் கடவுளரினும் உயர்ந் தவர்களாகக் கொள்ளுவர். அப்படியே தம் கேள்வரைத்

தம்முயிரினும் உலகினும் கடவுளரினும் உயர்ந்தவர்களாகக் கொள்வர் கற்புக்கடம்பூண்ட பொற்புடை மகளிர். அந்தப் பெருவாழ்வின் மேன்மைநிலையைச் சங்ககாலத்து அகப் பாடல்களும் ஆழ்வார்களின் பாசுரங்களும் நாயன்மார் களின் திருப்பாடல்களும் தெள்ளத்தெளிய விளக்கி யுள்ளன. அத்தகைய மேன்மை வாழ்வில், ஊடலின் பொருட்டுத் தோன்றும் தம் காதலியரின் கண்ணீர்த்துளி களைக்கூடக் காணப் பொறுக்கமாட்டார்கள் காதலர்கள். அவ்வளவு மெல்லிய மலர் நெஞ்சத்தில் மணக்கும் காதல் வாழ்வைச் சேரலாதனும் வாழ்ந்து மகிழ்ந்தான். அவன் காதல் வாழ்வில் தன் காதலியர் ஊடலின்பொருட்டுத் துளித்த கண்ணீருக்குப் பெரிதும் அஞ்சினன்; அதனி னும் பெரிது அஞ்சினன் இரவலர் புன்கண் நீர்சோர்ந்த விடத்து அதனால், ஈதல்வாழ்வும் காதல்வாழ்வும் நிறுக்கப்பட்ட சீர்கோலில், ஈதல்வாழ்வே சற்று எடை மிகுத்துக் காட்டுவதாகத் தோன்றுகின்றது. இவ்வாறு எடைபோட்டு வாழும் சீரிய வாழ்வை, விறலியாற்றுப் படையில் வைத்து,

> "ஒண்ணுதல் மகளிர் துளித்த கண்ணினும்
> இரவலர் புன்கண் அஞ்சும்
> புரவெதிர் கொள்வனைக் கண்டனம் வரற்கே.
>
> (பதிற்று. இள: கரு - இ)

என்று பாட்டோவியமாக்கி யுள்ளது உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் பான்மையுட தன்றோ?

ன் விளங்குகின்ற

23. இல்லறம்

போர்த்திறத்திலும் கொடைத்திறத்திலும் புகழோங்க வாழ்ந்த சேரலாதன் இல்லறத்திலும் மகிழ்வோங்க வாழ்ந்துள்ளான். அவன் காதல்மகளிர் பலரைப் பெற்றிருந்தான். அவர்கள்,

> "செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்
> அறிவும் அருமையும் பெண்பா லான"
> (தொல். பொருள்: உ0௧)

என்னும் தொல்காப்பிய இலக்கணத்துக்கு இலக்கியமாக இருந்தார்கள். அடக்கத்தால் உயர்ந்த ஒழுக்கத்தையும், நிறைந்த அறிவையும், குணம் செயல்களால் உண்டாகிய கெடாத புகழையும் உடைய அவர்கள், இளமையும் துணையாகும் தன்மையுமுடைய மக்கட்செல்வத்தை அவனுக் குப் பெற்றளித்தனர். அதனால், மிக்க காமத்து வேட்கை தீரும் வகையில் மக்கட்பெற்று மனையறம் காத்தான் அவன். மேலும் அவன் ஒழிந்த காலத்தில், நறவு

போர்வினையும் ஆட்சிவினையும் என்னும் ஊரிலுள்ள மென்

சாயல் மகளிரோடு இனிதிருந்து அகத்திணையின்பம் துய்த்தான். அவற்றைப் புலவர் பாடியுள்ளார்.

"இளந்துணைப் புதல்வர் நல்வளம் பயந்த
வளங்கெழு குடைச்சூல் அடங்கிய கொள்கை
ஆன்ற அறிவிற் றோன்றிய நல்லிசை
ஒண்ணுதல் மகளிர்..." (பதிற்று. இள : ௪0 - ௩) என்பது அவன் காதல் மகளிருடைய இலக்கணமாகும்.

24. ஊடலில் இரத்தல்

ஊடலின்பமும் கூடலின்பமும் காதல் வாழ்க்கையின் உயிரும் உணர்வுமாக உள்ளன.

"ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்."
(குறள். ௧௩௩0)

என்னும் உண்மையறம் சேரலாதன் காதல்வாழ்வில் களிநடம் புரிந்தது. உருத்துநோக்கிப் பகைவர்களின் உயிரைக் குடிக்கும் அவனது உருத்தநோக்கு, ஊடல் வாழ்வில் தோல்வியை ஏற்கும் பணிந்தநோக்காக மாறி விடும் கலையில் வல்லதாக இருந்தது.

ஒருநாள் முழவு முழங்கின; விழவு நிகழ்ந்தது. திருமகள் அருள் ஒளியை வெளிப்படுத்தும் விளக்கொளியில் துணங்கைக் கூத்து நடந்தது. சேரலாதனும், மகளிர்க்குத் தலைக்கை கொடுத்துத் துணங்கைக்கூத்தில் களித்தாடி

ஞன். வீடுதிரும்பினன். வீட்டிலோ ஊடல்
கூத்துக்
காத்துக்கொண்டிருந்தது. உரிமையரசி அவன் புறவொழுக்கத்தைப் பொருளாயினள். அசைந்த கோதையும், பரந்த தேமலும், குளிர்ந்த கண்ணும், பெரிய இயல்பும் உள்ள அவள் சினந்தாள். அவளின் மலரிதழ் ஒத்த
சீறடிகளும் சினத்தைப் புலப்படுத்தி நடந்தன.

வண்ணச்
அதனல்
கிண்கிணிகளும் தேம்பின. அவள் அலையால் பொரப்பட்ட தளிர்போல அசைவுற்ருள். வெகுளியால் வாயிதழ் துடித்தாள். இவ்வளவு மாற்றத்துக்கும் காரணமான அரசனை நன்ருக ஒறுக்கவேண்டுமென எண்ணினள். எடுத்தாள் சிறு செங்குவளையை; அவன்மீது எறிய ஓங்கினள். அவனே, அரசியின் வெகுளிக்கு எதிர்வெகுளி காட்டாமலும், அவள் ஊடலுக்கு எதிர்ஊடல் செய்யாமலும் அமைதியாக நின்று, அன்பெல்லாம் கண்ணிலும் முகத்

திலும் காட்டி, முறுவல் ஊட்டி, அம் மெல்லிய சிறு செங்குவளையை அன்புக்கொடையாகத் தனக்கு அளித்துவிடுமாறு, பணிமொழி கூறி, மணிக்கை ஏந்தி இரந்து நின்றான். எவ்வளவு சிறந்த பொருளாயினும் அது தமக்கு வேண்டும் என்று எவரையும் எப்பொழுதும் ஏற்றறியாத அவன் கைகள், அன்பு வாழ்வில் ஒரு சிறு செங்குவளையைத் தனக்கு வேண்டும் என்று இரந்ததும், அவ்வாறு இரந்தும் அரசி சினம் தணியாளாய், 'நீ எமக்கு யார் ஐயோ' என்று கூறிச் சென்றதும் நச்செள்ளையாருக்குப் பெருவியப்பையும் மகிழ்ச்சியையும் பெருக்கின. அவ்வியப்பான மகிழ்ச்சிக் காட்சி, ஒரு நாடகக் காட்சிபோலக் கேட்போர் கற்போர்களின் அகக்கண்ணில் பட்டு இன்பம் பெருக்கவேண்டும் என்று எண்ணி,

"..................................தடக்கை
இரப்போர்க்குக் கவிதல் அல்லதை இரைஇய
மலர்பறி யாஎனக் கேட்டிகும்; இனியே,
சுடரும் பாண்டில் திருநாறு விளக்கத்து
முழாவிமிழ் துணங்கைக்குத் தழூஉப் புணையாகச்
சிலைப்புவல் லேற்றின் றலைக்கை தந்துநீ

நளிந்தனை வருதல் உடன்றனள் ஆகி
உயவும் கோதை ஊரல்அம் தித்தி

ஈரிதழ் மழைக்கண் பேரியல் அரிவை
ஒள்ளிதழ் அவிழகம் கடுக்கும் சீறடிப்
பல்சில் கிண்கிணி சிறுபரடு அலைப்பக்
கொல்புனற் றளிரின் நடுங்குவனள் நின்றுநின்
எறியர் ஒக்கிய சிறுசெங் குவளை
ஈயென இரப்பவும் ஒல்லாள்‘நீ எமக்கு
யாரை யோ’எனப் பெயர்வோள் கையதை
கதுமென உருத்த நோக்கமோடு அதுநீ
பாஅல் வல்லாய் ஆயினை......” (பதிற்று. ருஉ:
க0-உசு)

என்று பாடி அவனது காதல் வாழ்வில் எளியனும் தன்மையை இனிது விளக்கியுள்ளார் அவர். மேலும், கற்புக்கு உலகமும் அஞ்சவேண்டும், கடவுளும் அஞ்சவேண்டும், கணவனும் அஞ்சவேண்டும் என்ற, சிலப்பதிகாரத்தில் உணரப்படும் உண்மையும் இப்பாட்டில் இலைமறைகாய் போலப் பொதிந்துள்ள தன்மை, வியப்புச் சுவையை நல்கு கின்றதன்றோ? மனைவியிடத்திலிருந்த சிறு செங்குவளையை உருத்துநோக்கிக் கவர்ந்துகொள்ளமாட்டாத அவன், ‘வான்றோய் வெண்குடை வேந்தர் தம் எயிலை’ உருத்து நோக்கிக் கவர்ந்துகொள்ளும் ஆற்றலை எவ்வாறு பெற்றனனோ என்றும் புலவர் வியந்து கூறியுள்ளார்.

25. கலை

காதல்வாழ்வில் தோற்று வெல்லும் ஆற்றலுள்ள சேரலாதன் கலையுள்ளம் பெற்றவன்; அதனோடு கலைத்திறமும் உள்ளவன். அவன் துணங்கைக் கூத்தாடுவதில் வல்

லவண.

என்று

அதனால் 'துணங்கை ஆடிய வலம்படு கோமான்' சிறப்பிக்கப்பட்டுள்ளான். மகளிர்க்குத் தலைக்கை

தந்து, துணங்கைக் கூத்து ஆடிவந்த அக்காரணம் பற்றியே அவன், ஊடற்போரில் தோற்க நேர்ந்தது என்ற செய்தி

மேலே அறியப்பட்டது. அவன் நாட்டில் வியலுள் தொறும் விழவு நடந்தன. அங்கு ஆடற்கலையும் பாடற்கலையும் நிகழ்ந்

தன. விறலியர் ஆடற்கலையை வளர்த்தனர்; பாணர் பாடற்கலையை வளர்த்தனர்; பரிசிலர் இலக்கியக் கலையை வளர்த்தனர். கோடியர் கூத்துக்கலையை வளர்த்தனர். அந்தக் கலைஞர்களுக்கு வேண்டுவனவெல்லாம் தந்து, ஆதரவு நல்கி, பல்வகைக் கலைகளும் தழைத்தோங்குவதற்குத் தானே காரணமாக இருந்தான் சேரலாதன்.

“ஆடுக விறலியர் பாடுக பரிசிலர்”

(பதிற்று. இஅ : க)

"பனிச்சுரம் படரும் பாண்மகன் உவப்ப" (பதிற்று. ௰௨ : ௩)

"செல்லா மோதில் பாண்மகன்" (பதிற்று. ௬0 : ௩)

"விழவு வீற்றிருந்த வியலு ளாங்கண்
கோடியர் முழவின் முன்னர் ஆடல்" (பதிற்று. ௰௬ : ௧ - ௨)

போன்ற அடிகள் அவன் நாட்டின் கலைவளர்ச்சியையும், கலைஞர்கள் வளர்ந்தமையும், அவ்வளர்ச்சிக்கும் வளர்ந்ததற்கும் சேரலாதன் காரணமாக இருந்தமையையும் புலப்படுத்த வல்லனவாக வுள்ளன.

'பூந்துகில் அல்குல் தேம்பாய் கூந்தல்
மின்னிழை விறலியர் நின்மறம் பாட' (பதிற்று. ௰௭ : ௫ - ௬)

என்று பாராட்டப்பெற்ற அவன், கலைச்சுவை நுகர்ச்சியில் ஈடுபாடுமிக்கவனுயிருந்தான்.

26. கலைக்காட்சி

ஒருநாள் போந்தைப் பொழில் ஒன்றன்கண் அமைந்த எழிலேந்தும் பந்தர்க்கண் அவன் இனிது வீற்றிருந்தான். அப் பந்தர்க்கு நெய்தலும் நறவும் நாகும் பிறவும் மணமும் கவினும் பெருக்கின. பந்தரில், இமயமலை, தென்கடல், குணகடல், குடகடல் என்னும் நான்கெல்லைக்குட்பட்ட

இருநில வேந்தரும் சான்றோரும் அவனைச் சூழ்ந்து
இருந்தனர். அப்போது, மன்னனும மறறவாகளும

மகிழ, சுடா நுதலும், மடநோக்கும்,
இலங்கெயிறும், அமிழ்துபொதி துவர்வாயும்,
அசைநடையும் உடைய விறலியர் ஆடலும்
அதற்கேற்ற பாடலும் நிகழ்த்தினர் அரசன்
அவற்றில்
மனம ஒன்றினவனாய்த்
தான். இந்த நிகழ்ச்சி

தன்னை மறநது, நெடிது வீற்றிருந்
அவனது கலையுள்ளததின் ஈடுபாட்
டுத்தன்மையைப் புலப்படுக்கப் போதுமான
எடுத்துக் காட்டாக அமைகின்றது அவனது
கலையுள்ளத்தின் வளர்ச்சி
நிலையைச் செவ்வே விளங்கிக்
அவன் சிற்றின்பத்துறையில்

கொள்ளும் ஆற்றலற்றவர்கள்,
மெல்லியனுதல் கூடும் என்று

பிறழ உணரும் நிலை எய்தினர்கள். ஆனல், உண்மையில், அவனது கலையுள்ளமோ காதலுள்ளமோ, அவனது கடமைகளை மறப்பதற்கோ கெடுப்பதற்கோ ஒருபோதும் காரணமாக அமைந்ததே இல்லை. அவன் உறங்

கிக் கொண்டிருப்பான்; அவன் ஒளி உலகை ஆண்டுகொண்டிருக்கும். அவன் கலைநுகர்ச்சியிலீடுபட்டுத் தன்னை மறந்தவன் போலிருப்பான்; அவன் மூளை ஆட்சிவினையை ஆராய்ந்துகொண்டிருக்கும்; அவன் மென்சாயல் மகளிரோடு மகிழ்ந்து விளையாடிக்கொண்டிருப்பான்; அவன் மனமோ இகல்வினையை எண்ணிக்கொண்டே இருக்கும். அதனல், ஒன்றில் ஈடுபட்டு, மற்றென்றனை மறந்து, மனத்தைப் பறிகொடுக்கும் நிலை, அவனுக்கு எப்போதும் ஏற்பட்டதே இல்லை. ஆளுவோர்க்கெல்லாம் இத்தகைய மறதியற்ற நிலையும் மடியற்ற நிலையும் மனதைப் பறிகொடாநிலையும் மிகவும் மிகவும் இன்றியமையாதன இன்றியமையாதன என்பதற்கு அவனது ஒங்குள்ளம் எடுத்துக்காட்டாக இலங்கி வருகின்றது.

கடுஞ்சினமும் கொடுநஞ்சும் பெற்றுப் பிறவுயிர்
களுக்கு அச்சமும் ஊறும் தரும் ஆற்றல்பெற்ற அரவங்கள், மைதவழும் பெருங்குன்றங்களின் இரும்பிளவுகளிலே ஏமமும் இன்பமும் பெற்று இனிது வாழினும் கூட, நெடுந் தொலைவிலே வானத்திலே ஆடும் முகிற்குலத்திலே தோன்றி

முழங்கும் பேரிடி, அவற்றைக் கொன்றழிப்பது போலவே, தாம் சேட்புலத்தே இனிதிருக்கும் ஒரே காரணம் பற்றி மைந்துற்றுச் செருக்கித் திரியும் பகைவர்களை, இருந்த விடத்திலிருந்து கொண்டே, அறமும் மறமும் சான்ற ஆணையை நடத்தி அழிக்கும் ஆற்றல் பெற்றது சேரலாதனின் ஒங்கலுள்ளம். அவ்வுள்ளம் பெற்ற சேரலாதனுடைய, மறமும் மானமும் நீங்கப் பெறாத வீரர்கள், பனந்தோட்டுக் கண்ணி சூடிப் பகைவர்களைப் பொருதார்கள். கொன்று குவிக்கப்பட்ட பகைவருடைய உடற்குருதிபட்டு, நிறம் வேறுபட்டுத் தோன்றிய அப் பனந்தோட்டுக் கண்ணிகளை, ஊன் துண்டங்கள் என்று பிறழ உணர்ந்த
பருந்துகள், அவற்றைக் கவர்ந்துகொண்டு
ஏகுதற்குரிய காலச் செவ்வியைப் பார்த்துப்
பரந்து வட்டமிட்டுக் கொண்டிருந்தன.
ஆண்மையும் வன்மையும் சான்ற பகைவர்கள்
தொடுத்த அம்புகளால் கண் இழந்த
தண்ணுமைகள், இளையர் கையில்
அறையப்படாமல் வாளா இருந்தன. இப்

போர்க்காட்சிகள் சேரலாதனுக்குப் பெருஞ்
சினத்தை மூட்டின. அத
னால் அவன் சினந்து சீறி உருத்துநோக்கினன். மாற்றருஞ்
சீற்றத்துக் கூற்றம், நாளுலர்ந்த உயிர்க்குலத்தை அகப்
படுத்தத் தன் பார்வையாகிய வலையை விரித்தது போல
விரித்து,
களுக்குப்

பகைவர்களுடைய உயிரைக் குடித்து, அவர்
பேரச்சத்தையும் பேரழிவையும் விளைத்தது அவ
னுடைய உருத்த நோக்கம். மனைவியின் ஊடலில் தோற்ற
இவ்வுருத்தநோக்கம், பகைவர்களுடைய உயிரையே குடித்து
விட்டது. கலைநிகழ்ச்சிகளைக் கண்டு களித்துத் தன்னை
மறந்த அந்த நோக்கம், பகைவர்களுக்குக்
கூற்றமாகிவிட்டது. அதனால், அவன்
ஓங்கவுள்ளத்தையும் உருத்தநோக்
கத்தையும, பகைவரும பிறரும் மென்மையோடும் மறதி
யோடும் பொருத்தி ஏமாற்றம அடைதல் ஆகாது. இந்த
உண்மையை அவனும், அவன் திறம் உணராதோரும் நன்கு
உணர்ந்து கொள்ளும் வகையில்,

“ சுடர்நுதல் மடநோக்கின்
வாள்நகை இலங்கெயிற்று
அமிழ்துபொதி துவர்வாய் அசைநடை விறலியர்

பாடல் சான்று நீடினை உறைதலின்
வெள்வேல் அண்ணல் மெல்லியன் போன்மென உள்ளுவர்
கொல்லோ நின் உணரா தோரே மழைதவழும்
பெருங்குன் றத் துச்
செயிருடைய அரவெறிந்து
கடுஞ்சினத்த மிடல்தபுக்கும்
பெருஞ்சினப்புயல் ஏறுஅனையை,
தாங்குநர்,
தடக்கை யானைத் தொடிக்கோடு துமிக்கும் எஃகுடை
வலத்தர்நின் படைவழி வாழ்நர் மறங்கெழு போந்தை
வெண்தோடு புனைந்து நிறம்பெயர் கண்ணிப் பருந்தூ
றளப்பத்
தூக்கணை கிழித்த மாக்கண் தண்ணுமை
கைவல் இளையர் கையலை அழுங்க
மாற்றருஞ் சீற்றத்து மாயிரும் கூற்றம்
வலைவிரித் தன்ன நோக்கலை
கடியையால் நெடுந்தகை செருவத் தானே”
(பதிற்று. க : கக - கள)

என்று எடுத்துக் கூறித் தாம் நுகர்ந்த புலமை நல இன்பத்தை எல்லோர்க்கும் பகுத்துக் கொடுக்கும் புலவர் பெருமாட்டியாரின் அருமை பெருமைகளை எல்லாம் எவ்வாறு எடுத்துக் கூறிப் போற்றிப் பாராட்டுவது? அருமைக்கும் பெருமைக்கும் இருப்பிடமான புலவர் பெருமாட்டியார், ஆண்மைக்கும் வண்மைக்கும் இருப்பிடமான சேரலாதனை, அவன் எப்பொழுதும், எதன் பொருட்டும், இன்பப் பேறுகளுக்கெல்லாம் இருப்பிடம் என்று கருதப்படும் துறக்கத்து வாழ்வைச் சிறிதும் விரும்பிச் செல்லாமல், இந்த நிலவுலகத்திலேயே நின்று நிலைத்து அறத்தாட்சி செய்து, அனைவர்க்கும் அறம் பொருள் இன்பம் ஆகிய மூன்றும் முட்டாத நல்வாழ்வை அளித்தல் வேண்டும் என்று வாழ்த்தியுள்ள,

'..........எனைய தூஉம்
உயர்நிலை யுலகத்துச் செல்லாது இவண்நின்று
இருநிலம் மருங்கின் நெடிது மன்னியரோ'

(பதிற்று. ௫௪:

௯- ௧௧)

என்னும் வரிகள் புலவர் நன்னெஞ்சத்தைப் புலப்படுத்தும் பொன்னெழுத்துக்களாக உள்ளனவல்லவா? மேலும் சேரலாதனுடைய வாழ்நாள் உலந்து போதல் கூடாது என்று எண்ணி,

" வேண்டுவ அளவையுள் யாண்டு பல கழியப்
பெய்துபுறம் தந்த பொங்கல் ஆடி
விண்டுச் சேர்ந்த வெண்மழை போலச்
சென்று அளவியரோ ....

....

ஓங்க லுள்ளத்துக் குருசில்நின் நாளே"
(பதிற்று. ௫௫ : ௧௯ - ௨௧.)

என்று பாடியுள்ளது வியக்குந்தொறும் வியப்பிறந்து நிற்கின்றதல்லவா?

வியக்குந்தொறும்

இதுகாறும் கூறப்பட்ட ஆடுகோட்பாட்டுச் சேரலாதனுடைய ஆட்சியின் மாட்சிகளும், நாடுநகரங்களின் ஏற்றங்களும், போர்த்திறனும் கொடைத்திறனும், வாழ்க்கை வளமும் கலைநலமுமே ஆரம்பத்தில் அமைந்த அருந்தமிழ்ப் பாக்களாக வடிவம் பெற்றுள்ளன. அந்த அமிழ்தத் தமிழ்ப் பாக்கள் அறிவுக்கு ஆழ்கடலாகவும், இன்பத்துக்கு எழில் வானாகவும், திறலுக்கும் தெறலுக்கும் செஞ்ஞாயிறாகவும், அன்புக்கும் அருளுக்கும் தண்திங்களாகவும், அறத்துக்கு அறக்கடவுளே ஆகவும் நின்று நிலவுகின்றன. அந்த வீரச் சுவையும் காதற் சுவையும் கலைச்சுவையும் பழுத்த பாடற் செழுங்கனிகளை உலகத்துக்குத் தந்தவர் ஒரு பெண்பாற் புலவர் என்பதை எண்ணும் போது,

'பந்திக்கு முந்திப் படைக்குப் பிந்தி'

என்பதும்,

'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு'

என்பதுமான எதுகைமோனைப் பழமொழிகள் இந்த நாட்டில் எப்படித் தோன்றின என்றும்,

அவற்றைத் தோற்று வித்த சூழ்நிலையும் ஆட்சிநிலையும் அறிவுநிலையும் எத்தகை

ப. சொ.—13

யனவாயிருத்தல் வேண்டும் என்றும் எண்ணி வருந்தி இரக் கப்படும் நிலையே ஏற்படுகின்றது. அந்த இரக்கப்படும் நிலை ஒழிய வேண்டுமானல், ஆண்களும் பெண்களும் அவரவர்களுக்கு ஏற்றனவும் தக்கனவுமான கல்வி நலங்களையும் கலை நலங்களையும் பெற்று, நன்மக்களுடன் மனையறம் காத்து, நாட்டுக்கும் மொழிக்கும் நற்றொண்டாற்றி, உலகத்தின் முன்னேற்றத்துக்கு உழைக்கவல்ல காக்கை பாடினியார் நச் செள்ளையார்களையும் ஆடுகோட்பாட்டுச் சேரலாதர்களையும் தோற்றுவித்தல் வேண்டும். அவ்வாறு தோற்றுவிக்கும் நல்ல நாளை உலகம் விரைவில் எய்துவதாகுக. வாழ்க தமிழ்! வாழ்க தமிழர்! வாழ்க உலகம்! வாழ்க பதிற்றுப் பத்து! வாழ்க ஆறும்பத்து! வாழ்க ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்! வாழ்க காக்கை பாடினியார் நச்செள்ளையார். வாழ்க வண்புகழ் மூவர்! வணக்கம்.

ஏழாம் பத்து

[புலவர் திரு. முருகவேள், பி. ஓ. எல்.]

நல்ல சிதம்பர நாதப்பே ராசிரியர்
பல்வகைய சீர்ப்பதிற்றுப்
பத்தின்நலம்—சொல்லுமிம்மா
நாட்டின் தலைவரென நன்றமைந்தார்!
மற்றிதனைக்
கூட்டியவர் வாழ்க! நலம் கொண்டு.

1. தோற்றுவாய்

தமிழ்ப் பெருமக்களே!

தமிழ்நாடு எத்துணையோ பல வகைகளில் தனிப் பெருஞ் சிறப்புடையது. ஆயினும், இந்நாளில் அதன் பழம் பெருமைகள் பலவும் பொய்யாய்க் கனவாய்ப் பழங் கதைகளாய்ப் போய்விட்டன. எனினும், தமிழ்நாடு இன்னும் ஒரு சிறிதளவாதல் "இங்குளி வாங்கும் கலம்" போல, மங்காப் புகழொளி வீசித் திகழ்ந்துகொண்டுதான் வருகின்றது. அதற்குரிய சிறந்ததொரு பெருங் காரணமாகத் திகழ்வன, "செவ்விய மதுரஞ் சேர்ந்தநற் பொருளிற் சீரிய கூரிய தீஞ்சொல்" அமைந்த தமிழ்க்கவிதைகளேயாம். "இங்கிலாந்து தேயம் வேறு பிறிதெதனாலுமன்றித் தனது கவிதைகளினாலேயே, இத்துணைச் சிறந்த புகழ் வாய்ந்ததாக விளங்குகின்றது."[1] என மேத்யூ ஆர்னல்டு என்னும் ஆங்கில அறிஞர் ஒருவர் மொழிந்தமை, நம் அருமைத் தமிழ் நாட்டிற்கே இதுபோழ்து மிகவும் இயைந்ததாக உள்ளது. தமிழ் மக்களின் நயத்தக்க நனி நாகரிகம், தமிழ்க் கவிதைகளால்தான் உலக அரங்கில் ஓரளவேனும் மதிக்கப்பெற்று விளங்கி வரு

1. "By nothing ig England so glorious as by her poetry."
—*Matthew Arnold.*

கின்றது. தமிழ் நாட்டிற்கு இஞ்ஞான்றுள்ள பெருமைகளெல்லாம் பெரும்பாலும் அதன் அழகிய இனிய அரிய கவிதைகளினால் எஞ்சி நின்றனவேயாகும்.

2. சங்கத் தமிழ்க் கவிதைகள்

தமிழ்க் கவிதைகள் பலப்பல திறத்தன. அவைகளுள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு தனிச்சிறப்புண்டு. எனினும், அவைகள் எல்லாவற்றினுக்கும் மிக்க தனிப்பெருஞ் சிறப்பு சங்கத் தமிழ்க் கவிதைகளுக்கே உரியதாகும். "சங்கமலி செந்தமிழ்" என்று ஆழ்வார்களும் நாயன்மார்களும்கூடச் சங்கத் தமிழ்க் கவிதைகளைச் சிறந்தெடுத்துப் போற்றியுள்ளனர். சங்கத் தமிழ்ப்பாடல்கள், "பயில்தொறும் புத்தின்பம் பயந்து அறிவூட்டி, நவில்தொறும் மிக்க சுவை நல்கும் இயல்புடையன"; "அறிவு விருந்தின்பூற்றுய்ச் சாந்துணையும் கற்கத்தகும்" சிறப்புடையன; ஒரு சிறு சொல்லேனும் வறிதே விரவாமல் தொட்டனைத் தூறும் மணற்கேணிபோல, உய்த்துணருந்தோறும கழிபேரின்பம் பயப்பன. அவற்றிடை அமைந்துள்ள தூய இனிய அரிய கருத்தழகுகள் எவருள்ளமும் கவரவல்லனவாகும். இயற்கை யழகின் நலங்களை அழியாத சொல்லோவியப் படிச்சந்தங்களாக எடுத்துக்காட்டி விளக்குந் திறனில், அவற்றிற்கு வேறுபிற எவையும் இணையாகமாட்டா. பழந்தமிழ் மக்களின் பலதிற வாழ்க்கை நிலைகளையும், வரலாற்றுக் குறிப்புக்களையும் உணர்த்தி நிற்கும் ஒப்புயர்வற்ற சான்றுகளாகச் சங்கத் தமிழ்ப் பாடல்கள், கலைத்திறனும் இலக்கிய வளமும் மிக்கொளிர்ந்து கவினுற்று வீறித் திகழ்கின்றன!

கலைநிரம்பிக் கற்றற் கினிதாய், அறிவின்
நலம்நிரம்பிச் சொற்பொருள்கள்
நன்ருய்,—விலைவரம்பின்
றுள்ளுதொறும் உள்ளுதொறும் உள்ளம்
உவப்பிக்கும்
தெள்ளுசங்க நூலின் திறம்!

மனக்கவலை மாற்றும் மருந்தாகும், எல்லா
நினைப்பரிய தீக்குணமும் நீக்கும்,—தனக்கிணையில்

ஞாயிறாய்த் தெள்ளமுத வான்யாறாய்த் தேனூற்றும்
வாயிருஞ் சங்கநூல் மாண்பு!

கருத்தருமை, நல்லியற்கைக் காட்சி, நுணுக்கம்
திருத்தமிகு வாழ்க்கைத் திறங்கள்,—பொருத்தமுயர்
தூய கலைச்சிறப்பு, தொல்வரலாற் றுக்குறிப்பும்
மேவியொளிர்ம் சங்கநூல் மிக்கு!
இயற்கைஎழிற் கின்புறுதல், வாழ்வியலைத் தேர்தல்,
மயற்கையறும் மெய்யறிவு வானில்—உயர்ச்சியுறல்,
நல்லொழுக்கில் நின்றருளை நாடல், உடையவர்கட் கில்லை,
சங்க நூலிற்போல் இன்பு!

3. பதிற்றுப்பத்து

இத்தகைய அளப்பருஞ் சிறப்பு மிக்க சங்கப்பாடல்கள், பத்துப்பாட்டு எட்டுத்தொகை பதினெண் கீழ்க்கணக்கு என மூன்று பிரிவாகத் தொகுக்கப்பட்டுள்ளன. அவைகளுள் எட்டுத்தொகையினைச் சேர்ந்த ஒன்றே பதிற்றுப்பத்து என்னும் நூலாகும். பத்துப் பத்துப் பாடல்களாகச் சேரவேந்தர் பதின்மர்மீது, பத்து நல்லிசைப் புலவர் பெருமக்களாற் பாடப்பெற்றதனால், இந்நூல் பதிற்றுப்பத்து எனப் பெயர் பெறுவதாயிற்று. எனினும் இந்நூலின் முதற்பத்தும் இறுதிப்பத்தும் அகப்படாதொழிந்தமையின் இஞ்ஞான்று எஞ்சி நிற்பன, இடைப்பட்ட எட்டுப்பத்துக்களேயாம். கிடைத்துள்ள ஒவ்வொரு பத்துக்கும் இறுதியில் பதிகம் என ஒன்று பாடிச் சேர்க்கப்பட்டிருக்கின்றது. வரலாற்று ஆராய்ச்சிக்குப் பெரிதும் பயன்படத்தக்க இப் பதிகங்களின் அமைப்பே, பிற்காலத்திற்போந்த சோழ வேந்தர்களின் மெய்க்கீர்த்திகளுக்கு அடிகோலி இருத்தல் கூடும். நச்சினார்க்கினியரும் அடியார்க்கு நல்லாரும் தத்தம் உரைகளினிடையே எடுத்தாண்டுள்ளமையால், இவற்றின் பழமையும் பெருமையும் புலனாகின்றன. புறநானூற்றைப்போலப் பதிற்றுப்பத்து முழுவதும், புறப்பொருள் பற்றிய நூலேயாகும். இதன்கண் பாடல்கள் யாவும் பாடாண்திணை ஒன்றினையே பொரு

ளாகக்கொண்டு அமைந்து நிற்கின்றன. பிற நூல்களிற் காணப்படாத முறையில், இந்நூலின் ஒவ்வொரு பாடற்கும் துறை வண்ணம் தூக்கு பெயர் என்பனவற்றைப் புலப் படுத்தும் குறிப்புக்கள் காணப்படுகின்றன. அன்றியும், இதன் பாடல் ஒவ்வொன்றிற்கும் அதன்கண் வரும் பொருள் பொதிந்த அழகிய தொடரைத் தெரிந்தெடுத்துப் பெயர் அமைக்கப் பெற்றுள்ளது.

பத்துப்பத் தாய பதிற்றுப்பத்து என்னும்நூல்,
பத்தரசர் சேரரைப் பற்றியதாய்—பத்துப்
புலவர்கள் பாடியதாம்; போற்றும் முதல்ஈறு
இலவாய்,எட் டேயுளகாண் இன்று!
இமைய வரம்பன்,பல் யானைச்செல்
குட்டுவன், இன்களங்காய்
அமைகண்ணி நார்முடிச் சேரல்,செங்
குட்டுவன், ஆடுகொள்வோன்,
தமிழியற் செல்வக் கடுங்கோ,
தகடூர் இரும்பொறையன்,
இமிழ்குடக் கோஇளஞ் சேரல்
பதிற்றுப்பத்து ஏற்றவரே.

கல்வி மிகுகுமட் டூர்க்கண்ணர், பாலைக் கவுதமனார்,
பல்யாற்றுக் காப்பிய னார்,பர ணர்,காக்கை பாடினியார்
நல்ல கபிலர், அரிசில் கிழாஅர், நலஞ்சிறந்த
தொல்பெருங் குன்றூர்க் கிழார்,பதிற் றுப்பத்துச்
சொல்லினரே.

4. கபிலர்

பதிற்றுப்பத்தின் ஏழாம்பத்தைப் பாடியவர்
கபிலர் ஆவர். சங்க இலக்கியப் பாடல்களில்
ஈடுபட்டுத் திளைத்து
மகிழ்ந்து இன்புறும் இயல்புடையார் எவரும், கபிலர்
என்னும் புலவர் பெருமானைப் பற்றி அறியாதிரார். சங்கத்
தொகை நூல்களிற் காணப்படும் சான்றோர்களுள், சான்
றோர் பரவும் சால்பு மிக்கவருட் கபிலர் தலை
சிறந்தவராவர்.
சங்கப் புலவர்கள் பலருள்ளும் மிகவும்
ராக முன்னணியில் நிற்பவர் கபிலர்.

தலை சிறந்த ஒருவ
ஏனைய புலவர்கள்

பாடிய பாடல்களைக் காட்டிலும், கபிலர் பாடிய
பாடல்
களே நமக்கு இதுபொழுது மிகுதியாகக்
துள்ளன. பிற புலவர்களின் பாடல்களைவிடக்

கிடைத்
கபிலரின்
பாடல்களுக்கு, ஏதோ ஒரு பெருந் தனிச்சிறப்புப் பண்டே
இருந்திருத்தல் வேண்டும். அது பற்றியே “கபிலரது
பாட்டு” என்னும் தொடரைச் செய்யுட் கிழமைப்பொருளை

விளக்குதற்கு, உரையாசிரியர்கள் பலரும் ஒருமுகமாக எடுத்துக் காட்டுகின்றனர் போலும்! "கொடுக்கிலா தானைப் பாரியே என்று கூறினும் கொடுப்பாரிலை" என ஆளுடைய நம்பிகள் பாடியருளுதலால், பாரிவள்ளலைப்பற்றிக் கபிலர் பெருமான் பாடிய பாடல்களை அவர் தாமும் சுவைத்து மகிழ்ந்தனரோ என நினைத்தற்கு இடம் நிகழ்கின்றது.

ஆளுடைய நம்பிகளாகிய
கபிலர் பெருந்தகையின்
கூடுமெனின், கபிலர் தம்

அருட்பெருஞ் செல்வர் தாமே,
பாடல்களைச் சுவைத்திருத்தல்
கவிதை மாட்சியினைக் கணித்

துரைக்கவல்லார் யார்? சங்கப் புலவர்கள் பலருள்ளும் கபிலரைத் தனிப்பெருஞ் சிறப்புடையவராகச் சான்றோர் பலரும் கருதித் தொன்று தொட்டுப் போற்றிவந்தமை,
.

"தரணியிற் பொய்ம்மை இலாத்தமிழ்ச் சங்க
மதிற்கபிலர்
பரணர்நக் கீரர்முதல் நாற்பத் தொன்பது
பல்புலவோர்
அருள்நமக் கீயும் திருவால வாய்அரன் சேவடிக்கே

பொருள் அமைத் தின்பக் கவிபல பாடும் புலவர்களே." எனவரும் நம்பி யாண்டார் நம்பிகள் பாடலால் நன்கினிது புலப்படுகின்றது. இங்ஙனம் பிற்காலப் பெரியோர்கள் மட்டுமேயன்றி,

"உலகுடன் திரிதரும் பலர்புகழ் நல்லிசை
வாய்மொழிக் கபிலன்."

என நக்கீரனாரும்,

"தாழாது
செறுத்த செய்யுட் செய்செந் நாவின்
வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்."

எனப் பொருந்தில் இளங்கீரனாரும்,

"பொய்யா நாவிற் கபிலன்."

"நிலமிசைப் பிறந்த மக்கட் கெல்லாம்
புலனழுக் கற்ற அந்த ணாளன்
இரந்துசெல் மாக்கட் கினியிட னின்றிப்
பரந்திசை நிற்கப் பாடினன்."

என மாறோகத்து நப்பசலையாரும்,

"அரசவை பணிய அறம்புரிந்து வயங்கிய
மறம்புரி கொள்கை வயங்குசெந் நாவின்
உவலை கூராக் கவலையில் நெஞ்சின்
நனவிற் பாடிய நல்லிசைக் கபிலன்."

எனப் பெருங்குன்றூர்க் கிழாரும் ஆகிய முற்காலச் சான்றோர்கள் பலர் தாமும், கபிலரின் செந்நாப் புலமையைச் சிறந்தெடுத்துப் புகழ்ந்திருத்தல் காணலாம். "தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என, நம்மனோர் இந்நாளில் விரும்பும் பெற்றிமைக்கு ஏற்பத் தமிழினை உலகெங்கணும் பரவி வளர்க்கும் கருத்தும் கடமையும் உடையவராய் இவர் விளங்கியிருந்தனர் போலும்! பிரகத்தன் என்னும் ஆரிய அரசன் ஒருவனுக்குத் தமிழறிவித்தற் பொருட்டுக் குறிஞ்சிப்பாட்டு இவரால் இயற்றப் பெற்றதென்னும் செய்தி, தமிழ் பரப்பி வளர்த்த இவர்தம் சான்றாண்மைக்குச் சான்று பகர்தல் தெளியலாம். இவர் பாரி, பேகன், காரி, ஓரி, நள்ளி முதலிய வள்ளல்களைப் புகழ்ந்து பாடியுள்ளார். தம் வாழ்நாள் முழுவதும் தம் ஆருயிர் நண்பனாகிய பாரிவள்ளலின் அரவணைப்பில் இருந்து,"இன்பக் காலத்தும் துன்பக் காலத்தும் அவனை விட்டுப் பிரியாமல் அன்பு பூண்டொழுகிய கெழுதகைமை மிக்கவர் இவர். பாரி வள்ளலின் பறம்பு மலையைப் பகைவர்கள் வளைந்து கொண்டபோது, அதன் அகத்தே வாழ்ந்தவர்களுக்கு உணவுப் பொருள் குறைவுபடா வண்ணம், புறவு கிளி முதலிய பறவைகளைப் பழக்கிச் "சேய் நின்று, செழுஞ் செய்ந்நெல்லின் விளைகதிர் கொண்டு, தடந்தாள் ஆம்பல் மலரொடு கூட்டி, யாண்டு பல கழிய வேண்டுவயிற் பிழையாது" உதவிக் காத்த செயலும், பாரி

இறந்துபட்டபோது
அவனோடு ஒருங்கு உயிர் துறந்து விடத் துணிந்த பரிவும், பின்னர் அவனது வேண்டுகோட் கிணங்கிச் சின்னாள் உயிர் வாழ்ந்திருந்து அவன்றன் மகளிரை மணஞ் செய்து கொடுக்க முயன்ற மாண்பும், கபிலரின் உயரிய பண்புகளைக் கவினுற விளக்கிக் காட்டுவனவாம். வையாவிக் கோப் பெரும் பேகன் என்னும் மன்னவன் தன் மனைவி கண்ணகி என்பாளைப் புறக்கணித் தொழுகியபோது, அவளோடு இனிது புணர்ந்து இணங்கி நின்று வாழுமாறு, அவனது நெஞ்சுருக வேண்டிக்கொண்ட திறத்தால், இவர் தம் அருளியல் நலம் இனைத்தென்பது வெளிப்படுகின்றது. கபிலர் மண்ணுள் செல்வம் எய்திய மன்னரே யாயினும் பிழை புரிந்தனராயின், அவர் தம் உள்ளம் புண்ணுறும் வண்ணம் ஒரோவழிக் கடிந்துரைக்கவும் வல்ல பெருந்தகை மைச் செம்மலார் என்பதும், புலவர் உலகின் பலதிற உரிமை நிலைகளைச் சிறிதும் கைந்நெகிழ விடாமற் பெரிதும் கருத்திருத்திக் காத்தொழுகும் கடப்பாடுடையர் என்பதும்,

> "கோடிபல அடுக்கிய பொருள்நுமக் குதவிய
> நீடுநிலை அரையத்துக் கேடும் கேளினி!
> நுந்தை தாயம் நிறைவுற எய்திய
> ஒலியற் கண்ணிப் புலிகடி மாஅல்!
> நும்போல் அறிவின் நுமருள் ஒருவன்
> புகழ்ந்த செய்யுட் கழாஅத் தலையை
> இகழ்ந்ததன் பயனே இயல்தேர் அண்ணல்!"

எனவரும் புறநானூற்றுப் பாடற் பகுதியால் தெளிவுறப் புலப்படுத்தப் படுகின்றன. கபிலரின் இன்னோரன்ன நலங்

கள் பலவும் கணக்கிலவாகும்.

5. செல்வக் கடுங்கோ வாழியாதன்

கபிலரால் பதிற்றுப் .பத்தின் ஏழாம் பத்தின்கண் பாடப் பெற்றவன், செல்வக் கடுங்கோ வாழியாதன் என்னும் சேர அரசன். அவன் அறிவும் திருவும் ஆற்றலும் மிக்க

பேரரசன். கடைச்சங்க காலத்தில் இருந்து அரசாண்ட சேர வேந்தர்கள் உதியன் மரபினர் என்றும், இரும்பொறை மரபினர் என்றும் இருவகைப் படுவர். உதியன் மரபினர் வஞ்சியில் இருந்து அரசு செலுத்தினர். இரும்பொறை மரபினர் தொண்டியைத் தலைநகராகக் கொண்டு விளங்கினர். அவர்களுள் செல்வக் கடுங்கோ வாழியாதன் என்னும் இவன், இரும்பொறை மரபைச் சேர்ந்தவன். இவனுடைய தந்தை "மடியா உள்ளமொடு மாற்றார்ப் பிணித்த நெடுநுண் கேள்வி" அந்துவஞ்சேரல் இரும்பொறை என்பவன். தாய், பொறையன் பெருந்தேவி என்பவள். இவன் மனைவி, நெடுஞ்சேரலாதனுக்கு மகட் கொடுத்த வேளாவிக் கோமான் பதுமன் என்பவனின் மற்றொரு மகளாவர். ஆதலின், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்குச் செல்வக் கடுங்கோ

ஓரில்சிற்பெண்கொண்ட முறையினன் என அறிகின்றோம், தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை, செல்வக் கடுங் கோவின் மகனவன். குண்டுகட்பாலியாதன் என்னும் புலவர் பாடிய புறநானூற்றுப் பாடற் கீழ் (387) இவன், சிக்கற் பள்ளித்துஞ்சிய செல்வக் கடுங்கோ வாழியாதன் என்று குறிப்பிடப் பெற்றுள்ளான்.

வாழியாதன் சிறந்த வண்மையும் நிறைந்த வன்மையும் வாய்ந்தவன். உயரிய பல நற்பண்புகள் உடையவன்.
இவனுடைய சிறப்பியற் பண்புகள் பலவற்றையும் விளக்குவதாய்ப் புறநானூற்றின்கட் போதரும்,

ஒரு சேர

"வையங் காவலர் வழிமொழிந் தொழுகப் போகம் வே
ண்டிப் பொதுச்சொற் பொறாஅது இடஞ்ஞிறி தென்னும்
ஊக்கம் துரப்ப ஒடுங்கா உள்ளத்து ஓம்பா ஈகைக்
கடந்தடு தானைச் சேர லாதனை
யாங்கனம் ஒத்தியோ ? வீங்குசெல் மண்டிலம் !
பொழுதென வரைதி புறக்கொடுத் திறத்தி மாறி வருதி
மலைமறைந் தொளித்தி
அகலிரு விசும்பி னானும்
பகல்விளங் குதியாற் பல்கதிர் விரித்தே." ஏழாம் பத்து

என்னும் பாடல் மிகவும் சுவை நலம் அமைந்ததாகும். இப் பாடலை ஆசிரியர் இளம்பூரணர் "ஒரீஇக் கூறலும் மரீஇய பண்பே" (தொல். உவமம். 35) என்னும் நூற்பாவுக்கு மேற்கோளாகக் காட்டியுள்ளார். பேராசிரியர் "வேறுபட வந்த உவமத் தோற்றம், கூறிய மருங்கிற் கொள்வழிக் கொளாஅல்" (தொல். உவமம். 32) என்னும் நூற்பாவின் கண், பொருளுக்குக் கொடுத்துள்ள அடைகளை உவமைக் கும், உவமைக்குக் கொடுத்துள்ள அடைகளைப் பொருளுக் கும் கூட்டி நயஞ்செறிந்த நல்லுரை விரித்துள்ளார். அதன்கண், உலகெலாம் மகிழ நிலவெறிக்கும் மதியத்தினை யும்விடப் பலவகையில் வாழியாதன் நலமிகச் சிறந்தவன் என்பது விளக்கப்படுகின்றது. மதியம் ஏனைய கோள் களைப் போன்றே தானும் ஒளிவீசித் தன் நெறியே செல் லும்; ஆதனோ ஏனைய அரசரினும் மிக்கவனாய் அவர் பலரையும் தன்வழி ஒழுகச் செய்யும் ஆற்றல் சான்றவன். மதியம் இருபத்தெழுவர் மகளிரொடு இன்பம் துய்த்துப் போகம் வேண்டிப் பொதுச்சொற் பொறுக்கும்; ஆதனோ போகம் வேண்டிப் பொதுச் சொற் பொறாதவன். மதியம்

எஞ்ஞான்றும் தன் எல்லைக் கண்ணேயே அடங்கிச் சுழன்று வரும்; ஆதனோ பகைவர்நாட் டெல்லைகளையும் தன் நாட்டு எல்லைக்கண் அடக்கிச் சேர்த்துக் கொள்ளவல்ல ஆண்மையாளன். மதியம் தேய்ந்து தேய்ந்து ஒடுங்கும்; ஆதன் ஒடுங்கா உள்ளம் உடையவன். நாள்தொறும் ஒரொரு கலையாகவே மதியம் பல்லுயிர்க்கும் இன்பம் நல்கும்; ஆதனோ தானுடையதெல்லாம் ஒரு காலே பலர்க்கும் பகிர்ந்து முற்றத்தருவான். மதியத்தின் படைகளாகிய விண்மீன்கள் எல்லாம் ஞாயிற்றின் முன்னே நிற்கலாற்றாது தோற்றொழியும்; ஆதனின் படைகளோ அத்தகையனவன்றிப் பகைவரை யெல்லாம் வென்று தோற்றோடச் செய்யும். மதியம் விலங்கு செலல் மண்டிலத்தது; ஆதன் அறநெறி நின்று விலங்கிச் செல்லா மேம்பாடுடையவன். நாடோறும் பொழுது வேறுபட்டு ஒளி தரும் மதியம் போலப் பொழுதென வரையாது, ஆதன் இரப்பவர் அனைவர்க்கும் என்றும் ஒரு படித்தாய்த் தண்ணளிபுரிவன்.

இடையிடையே முகில்கள் மறைப்ப ஒளி மழுங்கும் இயல்புடைய மதியம்போலன்றிப், பிறரெல்லாம் தன் முன்னிலையில் ஒளி மழுங்கச் சுடர் விளங்கித் திகழும் சிறப்புடையவன் ஆதன். பலகாலும் இடம் பெயர்ந்து திரிதரும் இழிவுடைய மதியம் போலாது, ஆதன் எஞ்ஞான்றும் ஒருநிலை நின்று ஒளிர்பவன். மலை மறைந்து ஒளிக்கும் இயல்பினது மதியம்; ஆதனோ தன் நாட்டு மலைமீக் கூறும் அருஞ்சிறப்பினன். அகலிரு விசும்பின்கண் அலைந்து நிற்பது மதியம்; ஆதன் இவ்வுலகத்து நிலைபேறுடையவன். மதியம் பகல் விளங்காதது; ஆதன் எப்பொழுதும் விளங்கும் தோற்றமும் அமைந்தவன்." இங்ஙனம் செல்வக்

ஏற்றமும்
கடுங்கோ
வின் சிறப்பியற் பண்புகளை யெல்லாம்
திறந்தெரிந்து
தொகுத்துக் கூறும் இத்துணைப் பொருள் பொதிந்த இனிய இப் பாடலைப் பாடியவர் கபிலரே. இனி, அவர் இவன்மீது பதிற்றுப் பத்தின்கண் ஏழாம்பத்தாக அமையப் பாடிய புலாஅம்பாசறை, வரைபோல்இஞ்சி, அருவி ஆம்பல், உரைசால் வேள்வி, நாண்மகிழ் இருக்கை, புதல்சூழ் பறவை, வெண் போழ்க் கண்ணி, ஏமவாழ்க்கை, மண்கெழு ஞாலம், பறைக்குரல் அருவி என்னும் பெயர்கொண்ட பாடல்களின் பொருள் நலத்தினை, இயன்ற பெற்றி இனிது தொகுத்து முயன்று காண்போம்!

முறையே

புண்கமழ் புலாஅம் பாசறை, வரைபோற்
பொலிஇஞ்சி, அரியவீ ஆம்பல்,
விண்கமழ் உரைசால் வேள்வி, நாண் மகிழ்வீற்
றிருக்கையே, புதல்கள்சூழ் பறவை,
தண்கமழ் வெண்போழ்க் கண்ணி, நல் ஏமஞ்
சால்வாழ்க்கை, மண்கெழு ஞாலம்,
கண்கமழ் தூய பறைக்குரல் அருவி,
கபிலர்தம் ஏழாம்பத் தாகும்.

6. புலாஅம் பாசறை

கபிலர், நள்ளி ஓரி அகுதை காரி பேகன் முதலிய வள்ளல்களைப்பற்றிப் பாடியுள்ளனராயினும், அவர் பாரி

வேள் பால் மட்டுமே உயிரோ ரன்ன செயிர்தீர் நட்புரிமை பூண்டு, அவனுடனேயே நெடுங்காலம் ஒருங்கிருந்து இன்புற்று வாழ்ந்துவந்தார் எனத் தெரிகின்றது.

"இம்மை போலக் காட்டி உம்மை
இடையில் காட்சி நின்னோடு
உடனுறை வாக்குக உயர்ந்த பாலே"

எனக் கபிலர் பெரிதும் விரும்பிப் பாடுதலினால், பாரியோடு அவரிடை வளர்ந்து விளங்கிய நட்பின் பான்மை இனைத்தென்பதனை நன்குணரலாம். பாரிவேள் இறந்ததன் பின்னர், பறம்பு மலையையும் பறம்புநன்னாட்டையும் குறித்து நினைந்து, நெஞ்சம் வருந்திப் பலவாறு இரங்கிய கபிலர், பாரியின் மகளிரை மணஞ் செய்வித்தற் பொருட்டு விச்சிக்கோன், இருங்கோவேள் என்னும் சிற்றரசர்பாற் சென்று பாடினர். அவ்விரு மன்னரும் பாரியின் மகளிரை மணந்துகொள்ள எக்காரணம் பற்றியோ உடன்படாமையால், மலையமானுக்கோ அன்றி அவன்றன் கிளைஞர்க்கோ கபிலர் பாரிமகளிரை மணம்புரிந்து கொடுத்துத் தம் நட்புக்கடன் கழித்தனர். இந்நிகழ்ச்சிகளின் பிறகே கபிலர் சேரநாடு சென்றிருத்தல் கூடும்!

சேர வேந்தனாகிய செல்வக்கடுங்கோ வாழி யாதன் என்பவன், பாரிவள்ளலைப் போலவே கொடைநலமும் பிற நலமும் சாலவும் வாய்ந்தவன் என்பதனைப் பலர் வாயிலாகக் கேள்வியுற்ற கபிலர், அவனைக் காண்பதற்காகச் சேரநாடு சென்றார். அதுபோது அவ்வேந்தன் தனது தலைநகரில் இல்லாமல், பாசறைக்கண் பகைப்புலத்தே தங்கி இருந்தான். அப் பாசறையில் ஒளி பொருந்திய வாள்களும், வலிமைமிக்க பல களிறுகளும் குருதிக் கறைபடிந்து விளங்கின. செல்வக் கடுங்கோ அப் பாசறையில் திரு

வோலக்கத் தமர்ந்திருந்தான். அங்கே வீரர்களின் மகிழ்ச்சி மிக்க ஆரவாரம் நிறைந்திருந்தது. முழவுகள் முழங்கின. தாளங்கள் ஒலித்தன. அவற்றிற்கு ஏற்பப் பாடினி ஒத்தறுக்கும் வெறுங்கையை அசைத்து, அரச

னது ஒளிமிக்க வேலின் வெற்றி குறித்துப் புகழ்ந்து பாடிக் கொண்டிருந்தாள். இத்தகைய சூழ்நிலைகளின் இடையே விழவுக்களம் போன்று விளங்கிய பாசறையின்கண் வீற்றிருந்த செல்வக் கடுங்கோவினைக் கபிலர் சென்று கண்டார்.

செல்வக் கடுங்கோவுக்குத் தம் ஆருயிர் நண்பனாகிய பாரிவள்ளலின் சிறந்த பல பண்புகளையும் பரிந்தெடுத்துரைத்து, அவ்வள்ளல் முழவுமண் புலரவும் இரவலர் இனையவும் வாராச் சேட்புலம் படர்ந்து, இறந்துபட்ட செய்தியைத் தெரிவித்து வருந்தினார். பாரி வள்ளல் பறம்புநாட்டின் பண்புமிக்க தலைவன். அவனது பறம்பு மலை பலாமரங்கள் நிறைந்தது. அவற்றிற் பழுத்து வெடித்த பழங்களின் வெடிப்பில் இருந்து தேன் நிரம்பி ஒழுகும். வாடைக் காற்றானது வீசி அத்தேனைச் சிறுசிறு துளிகளாக எங்கணும் சிதறச்செய்யும். பாரியின் அரண்மனை ஓவியம் வரைந்தாற்போன்ற எழில்மிகுந்து தொழில் நலம் சிறந்தது. உருவநலமும் பண்புநலமும் ஒருங்கே வாய்ந்த 'பாவை யன்ன நல்லோள் கணவன்' பாரி. போர்வீரர்

நிமித்தம் காணும் உன்னமரம், தனக்குத் தோல்வியே எய்தும் எனக் காட்டுமாயினும், அதுகண்டு சோர்வடையாது போர்புரிந்து வெற்றிபெற்று, உன்னத்தின் நிமித்தத்தினைப் பொய்ப்பிக்கும் பெருவிறல் மிக்கவன் வேள்பாரி. ஆதலின், எம் தலைவனாகிய அவனை 'உன்னத்துப் பகைவன்' என்றலும் ஒல்லும். பாரிவேள் சந்தனம் பூசிய பரந்த மார்பை உடையவன். பூசிய சாந்தின் ஈரம் புலர்ந்தாலும், நெஞ்சின் ஈரம் எஞ்ஞான்றும் புலராது ஈகை வினைபுரிபவன். அவன் வாராச் சேட்புலம் படர்ந்து இறந்துபட்டதனால், ஏதேனும் கொடு என்று இரப்பதற்காக நின்பால் யான் வந்தேனில்லை. மெய்யே விளம்புவ தல்லது, செய்யா கூறிக் கிளத்தல் எய்யாதாகின்று எம் சிறுசெந்நா வாதலின், நின்புகழை யான் குன்றவோ மிகைபடவோ கூறமாட்டேன். 'செல்வக்கடுங்கோ வாழி யாதன் ஈதலாற் பொருள் செலவாதல் குறித்து மனம் வருந்தான்; இடையறாது, ஈந்து கொண்டிருத்தலால் புகழ் மிகுதல்பற்றி மகிழ்வுற்

றுச் செருக்கெய்தான்; முன் ஈந்ததினும் பின் ஈவது மிகுதியாகுமாறு பெரும்பொருளைப் பன்முறையும் நிரம்ப விரும்பி வழங்குவான்' என உலகினர் நின்னைப் பெரிதும் புகழ்ந்து கூறுகின்றனர். அந் நல்லிசைகேட்டு நின்னைக் காண்டல் வேண்டும் என்னும் இன்பம் ஒன்றுமே குறித்து நின்பாற் போந்தேன்" எனக் கபிலர் செல்வக்கடுங்கோவின் பாற் சொல்லி மகிழ்ந்து, அவனை வாழ்த்தினர்!

"...............

புலர்ந்த சாந்திற் புலரா ஈகை
மலர்ந்த மார்பின் மாவண் பாரி,
முழவுமண் புலர இரவலர் இனைய
வாராச் சேட்புலம் படர்ந்தோன்!

அளிக்கென

இரக்கு வாரேன்! எஞ்சிக் கூறேன்!
ஈத்தது இரங்கான், ஈத்தொறும் மகிழான்,
ஈத்தொறும் மாவள் ளியன்என நுவலுநின்
நல்லிசை தரவந் திசினே!"

(பதிற்றுப்பத்து. ௬௧ - ௭ - ௧௪.)

செல்வக்கடுங்கோ
கண்டு மகிழ்ந்து

வாழியாதனைக் கபிலர் முதன்முதலாகக் வாழ்த்தியபோது பாடியதாகலின், இம் முதற்பாடல் "காட்சி வாழ்த்து" என்னும் துறை அமைக்கப் பெற்றது. கடுங்கோவைக் கபிலர் கண்ட இடம் பாசறையாதலானும், அப் பாசறையில் பகைவரைப் பொருது குருதிக்கறை படிந்த வாட்படையும் களிற்றுப் படையும புலால

நாறறம வசுதல அறுநது அப பாசறை யினைப் “புலாஅம் பாசறை” எனக் குறிப்பிட்டுக் கபிலர் சிறப்பித்துரைத்த காரணத்தானும், இப் பாட்டிற்குப் புலாஅம்பாசறை என்னும் பெயர் இனிது பொருந்துவ தாயிற்று.

7. வரைபோல் இஞ்சி

சேரமான் செல்வக்கடுங்கோ வாழியாதன் வென்றிச் சிறப்புகள் மிக்கவன். அவனது பல்வகைப் படைகளும்

பகைப்புலத்தினை நெருங்க வளைத்துநின்று மதிற்புறத்தே தங்கியுள்ளன. ஓடையும் பொன்னரிமாலைகளும் ஆகிய இழைகளை அணிந்து, களிறுகள் பல நிரைநிரையாகப் போதருகின்றன. மழைமேகமோ என்று மருளும்படி, கிடுகை ஏந்திய படைகள் ஒருபுறம் குவிந்துள்ளன. வில் வேல் வாள் முதலிய படை ஏந்திய வீரர்களைப் பொரு தழித்த கொய்சுவற்புரவிகள் பிறிதொருபுறம் திரண்டு நிற்கின்றன. சேரமான் தன் பகைப்புலத்தினை எரிபரந் தெடுக்கின்றான். பகைப்புலங்களில் யாண்டும் 'பசும்பிசிர் ஒள்ளழல்' பற்றிக் கொள்கின்றது. ஞாயிறுகள் பல ஒரே பொழுதில் எல்லாத் திசைகளிலும் சூழ்ந்துகொண்ட மாயம் போன்று, ஒள்ளழல் எங்கணும் சுடர்விட்டெரிகின்றது. பகைவர் உயிர்க்குப் பொறுக்க முடியாத மயக்கத்தை விளைத்து, வெற்றிமுழக்கம் செய்து சுழலும் துப்புத்துறை போகிய கொற்ற வேந்தனாகிய சேரமானின் தன்மை, 'மடங்கல்' வண்ணம் கொண்டதாய் இருந்தது.

இந்நிலையில், இவனோடு போர்செய்து வெற்றி பெறுதல் எஞ்ஞான்றும் அரிது என உணர்ந்த பகைவர்கள், இடமகன்ற புனல்பொரு கிடங்கினையும் மலைபோலும் மதிலினையும் தாம் உடையராக விளங்கியும், பணிவும் வணக்கமும் புலப்படத் தாழ்ந்துநின்று 'தோட்டி செப்பி'த் திறை தந்துவிடுவார்கள். இங்ஙனமே இவனுக்குப் பகைவராயினார் யாவரும் திறைதந்து விடுவார்களாயின், அது மிகவும் நல்லது. புல் நிறைந்த வியன்புலத்தில் ஆனிரைகள் பலவற்றையும் பரவி மேயவிட்டு, வளம் மிக்க வயல்களில் விளைந்து உதிர்ந்த நெல்மணிகளைக் காஞ்சி மரத்தின் அடியிலே குவியலாகச் சேர்த்துவைத்துக் கள்ளுண்டு மகிழும் வன்கை வினைஞர்கள், அரிய ஆம்பல் மலரைத் தலையிலே சூடி, வண்டுகள் அதனை மொய்க்காவாறு ஓச்சும் வளஞ் செறிந்த அப் பகையரசர் நாடுகள், இவனுக்குத் திறைதந்து விடுதலால் மிகவும் நலம் பெறும்! யாங்ஙனமெனில் திறை தந்துவிட்டால் போர்நிகழாது; போர்நிகழாதொழியவே அமைதி நிறைந்து, வளம்பெருகும். அதனால் அங்கெல்

லாம் சான்றோர்களின் உரையும் பாட்டும் விளைக்கும்.

பெருகிப் புகழ்

"துப்புத்துறை போகிய கொற்ற வேந்தே!
புனல்பொரு கிடங்கின் வரைபோல் இஞ்சி
அணங்குடைத் தடக்கையர், தோட்டி செப்பிப்
பணிந்துதிறை தருபநின் பகைவர்!"

(கூ - கஉ)

எனவரும் அடிகளில், வரைபோல் இஞ்சியை அரணாக உடையராய் இருந்தே பகைவர்கள் திறைதருப எனக் கூறிய சிறப்பானே, இப்பாடற்கு "வரைபோல் இஞ்சி" எனப் பெயர் அமைந்தது.

8. அருவி ஆம்பல்

இப்பாடலில் முதற்கண் செல்வக் கடுங்கோவின்
சிறந்த பல பண்புகளும் வியந்து பாராட்டப்படுகின்றன. சேரமான் கல்வி அறிவு ஒழுக்கங்களிற் சிறந்த நல்ல அந்தணர்களை மட்டுமே பணிந்தொழுகுவதன்றி, வேறு பிறர் எவரையும் பணிதலை அறியான். நட்டோர்க்கல்லது ஏனையோர்க்குக் கண்ணோட்டத்தால் அஞ்சான். இந்திரவில் போன்று பல நிறமுடைய மாலைகள் கிடந்து அசையும் சந்தனம் பூசிய தன் மார்பினை, உரிமை மகளிர்க்கு இன்பந் தரற்பொருட்டு விரிந்து காட்டுவதன்றிப் பகைவர்க்குக் காட்டுவதில்லான். உலகமே தன் நிலையிற் பிறழ்ந்தாலும், கூறிய சொல்லினின்று பிழைபட்டுப் பொய்த்தலை அறியான்.

"பார்ப்பார்க் கல்லது பணிபறி யலையே!
பணியா உள்ளமொடு அணிவரக் கெழீஇ,
நட்டோர்க் கல்லது கண்அஞ் சலையே!
வணங்குசிலை பொருதநின் மணங்கமழ் அகலம்,
மகளிர்க் கல்லது மலர்ப்பறி யலையே!
நிலந்திறம் பெயருங் காலை யாயினும்,
கிளந்த சொல்நீ பொய்ப்பறி யலையே!"

ப. சொ.—14

(பதிற்று. சுரு: க-எ)

எனச் சேரமானின் சிறந்த பண்புகளைத் தேர்ந்தெடுத்து விளக்கும் இவ் வரிகள், நவின்றோர்க்கு இனிமை பயக்கும் நலம் நிறைந்தனவாகும்.

இத்தகைய பண்பு பல வாய்ந்த நற்பெருங் குரிசிலாய செல்வக் கடுங்கோ, சிறியிலை

உழிஞைத் தெரியல் சூடி,
பகைப்புலத்தே கவர்ந்துகொள்ளத்தகும் பொருள்கள் மிகுதியாகக் கிடைக்குமாறு, தண்டமிழ்ப் படைவீரர்களை மேலும் மேலும் செலுத்துகின்றான். மலைகளும் நிலைதளருமாறு முழங்கும் இடியேறுபோல, பகைவர்கள்மீது சினந்து செல்கின்றான். ஒரு வளைப்பிலேயே இருபெரும் பகையரசர்களை வென்று புறங்காண்கின்றான். ஒள்வாட் செருமிகுதானை வெல்போரோனாக விளங்குகின்றான். இவனது ஆண்மையையும் சிறப்பினையும் காண்கின்றனர் சில வீரர்கள். அவர்கள் இதற்கு முன்பு அரசர் பலர்க்குப் படை வீரராயிருந்து பல போர்களில் வெற்றி பெற்றவர்கள். இதுபோதோ இவனுடைய பகையரசர்கள்பால் படை வீரர்களாயிருந்து, இவனால் வெற்றி கொள்ளப்பட்டு வீறழிந்தவர்கள். அழிந்துபட்ட தம் வீரத்தினையும் வெற்றியினையும் மீண்டும் எய்திச் சிறக்க விரும்புகின்றனர் அவர்கள்! ஆதலின், அரணும் துணையும் ஆற்றலும் மிக்க அரிய இவ்வரசன்பாற் சென்று சேர்ந்துகொள்ளலே, வீராகிய தமக்கு இனிக் கடமை என்று அவர்கள் தெளிந்து கொள்ளுகின்றனர். சேரமான்பாற் போந்து அடைக்கலம் புகுந்து, இனி "நீ கண்டனையேம்" எனச் சூள் மொழிந்து, பகைவரிடமிருந்து பிரிந்து இவன்பாற் சேர்ந்துகொள்கின்றனர்! சேரமான் அவர்களை ஏற்றருள்கின்றான். தன்குலத்து முன்னோர்களைப்போல வன்மையும் கண்ணோட்டமும் வாய்ந்து, தானும் பல போர்கள் செய்து வெற்றியுற்று வீறெய்தித் திகழ்கின்றான். இத்தகைய சேரமானைக் கபிலர் பெருமான், "இவ்வுலகம் சான்றோர்கள் செய்யும் அறத்தால் நிலைபெறுகின்றது' என்பது உண்மையாயின், ஆம்பல் என்னும் எண்ணும், பல ஆயிரங்களாகப் பொருகிய வெள்ளம் என்னும் எண்ணும் ஆகிய ஊழிகள்

பல வாழ்வாயாக!" என அழகுற வாழ்த்தியருளுகின்றார்.

"செல்வக் கோவே! சேரலர் மருக!
கால்திரை எடுத்த முழங்குகுரல் வேலி
நனந்தலை உலகம் செய்தநன்று உண்டெனின்,
அடைஅடுப்பு அறியா அருவி ஆம்பல்
ஆயிர வெள்ள ஊழி,
வாழி யாத! வாழிய பலவே!" (பதிற்று.
சுரு:கசு-உக)

'ஆம்பல்' என்னும் சொல், ஆம்பல் என்னும் ஒருவகை மலரினையும், ஆம்பல் என்னும் ஒரு பேரெண்ணினையும் குறிப்பதாகும். ஆதலின் மலரினை நீக்கி எண்ணினை மட்டும் குறிப்பதற்காக, இலை அடுத்தல் அறியாத ஆம்பல் - பூவல்லாத ஆம்பல் என வெளிப்படை கூறி, ஆம்பல் என்னும் எண்ணின் அளவாகிய பல ஊழிகள் நெடிதினிது வாழ்வாயாக என வாழ்த்திய சிறப்பினால், இப்பாடலுக்கு "அருவி ஆம்பல்" எனப்பெயர் அமைவதாயிற்று. அடை - இலை. வீ - மலர். அருவீ எனற்பாலது அருவி எனக் குறுகி நின்றது.

9. உரைசால் வேள்வி

இப்பாடல், செல்வக்கடுங்கோ வாழியாதனைப் பாசறைக் கண்ணே சென்று கண்ட கபிலர், அவன் தனது அரண்மனைக்கண் இருந்து வழங்கும் கொடைச் சிறப்பினை இனிதெடுத்து விளக்கும் முறையில் அமைந்துள்ளது. வலம்படு முரசமும், வாய்வாட் கொற்றமும் உடைய பெரும்பூண் வேந்தர்கள் எத்துணையோ பற்பலர் இவ்வுலகில் இருக்கின்றார்கள்! ஆயினும் அவர்களாற் பெறும் பயன் யாதொன்றும் இல்லை. சேரமானின் அரண்மனைக்கு முன்னே மணல்மலி முற்றமும், அதன் பின்னே வீரர் உள்ளும் புறமும் இருந்து ஒழுங்குறக காக்கும் தாருந் தகைப்பும் உள்ளன. அரண்மனையின் உவளகத்துக்கும் மணல்மலி முற்றத்திற்கும் இடையிலேதான் தாருந் தகைப்பு உள்ளது. அங்கிருந்தே சேரமான் ஈகைவினை புரிகின்றான். அறநூல்களை ஓதிப் பயின்ற நாவினையும், துணங்கிய கேள்வியினையும் உடைய அந்தணர்கள் சேரனை

வந்து காண்கின்றனர் அவர்களுக்குச் சேரமான் அரிய கலன்கள் பலவற்றை நீர்வார்த்துக் கொடுக்கின்றான். அந்நீர் பெருக்கெடுத்து மணன்மலி முற்றம் முழுவதும் சேறாக்கி விடுகின்றது. சேறுபட்ட அம்முற்றத்தில் நிற்பதற்கு யானைகள் வெறுப்புறுகின்றன. யானைகள் நிற்பதற்கு வெறுக்கும் வண்ணம், மணன்மலி முற்றம் முழுதினையும் நீர்வார்த்துக் கொடுத்தலாற் சேறாக்கிவிடும் கொடைத் திறம் மிக்கவன் சேரமான்!

அவன் தன் காவலர்க்கும் ஏவலர்க்கும் ஒரு கட்டளை யிட்டிருந்தான். பரிசிலர்கள் அரண்மனைக்குள் வந்து எம்மைக் காணவேண்டும், அதன் பின்னர் அவர்களுக்கு யாமே பரிசில் அளித்தல் வேண்டும் என்ற கடப்பாடு இல்லை. நமது அரண்மனைக்குப் புறத்தேயும் பரிசில் பெறு தற்குரியவர்களைக் கண்டால், அவர்களுக்கு உடனே பகைப்புலத்திருந்து கொணர்ந்த புரவிகளையும் தேர்களை யும், அவ்வவற்றிற்குரிய அணிகளை அணிந்து கொடுமின்கள் என்பதே அக் கட்டளை. இங்ஙனம் கொடைத்துறையின் கண் ஆனாப் பெருவிருப்பம் அமைந்த கொள்கையை உடை யவன் சேரன். அவனைப் பின் வருமாறு கபிலர் புகழ்ந்து பாடுகின்றார்.

மாயிரு விசும்பில் ஞாயிறு ஒன்று தோன்றி, விண்மீன்கள் பலவற்றின் ஒளியையும் மழுங்க வைத்துக் கெடுமாறு செய்தல் போல, சேரர் குடியில் தோன்றிப் பகைவர்களின் முரண் சிதைத்து ஒழித்த அண்ணலாக நீ விளங்குகின்றாய். கருங்கழியில் மலர்ந்த நெய்தற் பூவின் அழகிய இதழ்போன்ற நிறத்துடன் உயர்ந்தெழுந்த முகில்களைவிட, நீ மிகுந்த செல்வத்தைப் பரிசிலர்க்கு மழைபோலப் பொழிந்து வரையாது வழங்குகின்றாய். அதனால் பசியையுடைய பரிசிலராகிய சுற்றத்தார்க்குப் பசியை நீக்கியதனால் உண்டாகும் பெரும் புகழை மேவி நிற்கும் தோன்றல் நீ! நினது பாசறையின் கண்ணே நின்பால் நினது வலிய தாளை வாழ்த்தி, நின்னைக் காணவிரும்பி யான் வந்தேன்.

ஏழாம் பத்து 213

"மாயிரு விசும்பிற் பன்மீன் ஒளிகெட
ஞாயிறு தோன்றி யாங்கு, மாற்றோர்
உறுமுரண் சிதைத்தநின் நோன்தாள்

வாழ்த்திக்

காண்கு வந்திசிற் கழல்தொடி அண்ணல்!
... ...
மழையினும் பெரும்பயம் பொழிதி!

அதனால்

பசியுடை ஒக்கலை ஒரீஇய
இசைமேந் தோன்றல்! நின் பாசறை

யானே."

(பதிற்று. சுசு: கஉ-உ0)

இப் பாடற்கண் "உரைசால் வேள்வி என்றது, யாகங்கள் எல்லாவற்றினும் அரியவும் பெரியவுமாக உரையமைந்த வேள்வி" என்றும், "வேள்வியை இவ்வாறு உரையமைந்த வேள்வியென உரைத்த சிறப்பினால் இப்பாட்டு உரைசால் வேள்வி எனப்படுவதாயிற்று" என்றும் பழைய உரையாசிரியர் கூறுவர். இனி, நம் திருஞானசம்பந்தப்பெருமான்,

"புந்தியினால் மறைவழியே புற்பரப்பி
நெய்சமிதை கையிற் கொண்டு
வெந்தழலின் வேட்டலகின் மிகஅளிப்போர்
சேருமூர் மிழலை யாமே"

எனக் கூறியருளியிருத்தல் போலக், கொலை வேள்விகளினின்றும் வேறுபடுத்துக் கூறுதற்கு உரைசால் வேள்வி எனக் குறித்த சிறப்பால், இப்பெயர் அமை[illegible]னும் பொருந்தும்.

"என்புகழ் கின்ற தேழை
எயினனேன் ? இரவி என்பான்
தன்புகழ்க் கற்றை மற்றை
ஒளிகளைத் தவிர்க்கு மாபோல்,
மன்புகழ் பெருமை நுங்கள்
மரபினோர் புகழ்கள் எல்லாம்

உன்புகழ் ஆக்கிக் கொண்டாய்!
உயர்குணத் தூவத் தோளாய்!".

எனவரும் இனிய கம்பர் பாடல், "மாயிரு விசும்பிற் பன் மீன் ஒளிகெட ஞாயிறு தோன்றி யாங்கு" எனக் கபிலர் ஈண்டுக் கூறிய உவமை நலத்தினையே, ஓராற்றால் தழீஇ அமைந்திருத்தல் உணர்ந்து மகிழற்பாலது. இப்பாடலும் 'காட்சி வாழ்த்து' என்னும் துறை அமைந்ததாகும்.

10. நாண்மகிழ் இருக்கை

இப் பாடலில், சேரமானின் திருவோலக்கச் சிறப்பும், பல்வகைச் செல்வச் சிறப்பும் கூறப்படுகின்றன. சேரனின் படை வீரர்கள் பேராற்றல் வாய்ந்தவர்கள். அவர்களின் உள்ளத்தில் எப்பொழுதும் நிலையாமை உணர்ச்சியே நிலை பெற்றுள்ளது. இங்ஙனம் காஞ்சி சான்ற வயவர்களாய் விளங்குதலால், எய்தற்கரியது இயைந்தக்கால் அந்நிலையே அவர்கள் செய்தற்கரிய செயல் பலவும் செய்து முடிக்கும் திறனுடையராய் விளங்குகின்றார்கள். விரைந்து செல்லும் தம் புரவிகளுக்குப் போர் வேட்கை மிகுமாறு விரியுளை சூட்டிச் செலுத்திச் சென்று, அவ் வீரர்கள் பகைவர்களின் வலிமை கெடப் போர்புரிகின்றார்கள். அவர்களை வாளால் வெட்டி வீழ்த்துகின்றார்கள். பிணமாக விழும் அப் பகைவர் களை இடறிக்கொண்டு செல்லுதலால், அவ் வீரர்களுடைய குதிரைகளின் கால்கள் கறைபடிந்த குளம்புகளையுடையன வாய்த் திகழ்கின்றன. இத்தகைய வீரர்களுக்குத் தலைவ னாக விளங்கும் சேரமான்,

"காஞ்சி சான்ற வயவர் பெரும!
வில்லோர் மெய்ம்மறை! சேர்ந்தோர் செல்வ!
பூண் அணிந்து எழிலிய வனைந்துவரல் இளமுலை மாண்வரி
அல்குல் மலர்ந்த நோக்கின்
வேய்புரைபு எழிலிய விளங்குஇறைப் பணைத்தோள் காமர்
கடவுளும் ஆளும் கற்பிற்
சேண்நாறு நறுநுதற் சேயிழை கணவ!
பாணர் புரவல! பரிசிலர் வெறுக்கை!
பூண் அணிந்து விளங்கிய புகழ்சால் மார்ப!"
(பதிற்று. சுரு: ச - கஉ.)

எனக் கபிலரால் புகழ்ந்து போற்றிப் பாராட்டப்படுகின்றான். அவன் தனது திருவோலக்கத்தின் கண்ணே வீற்றிருந்தருளி, யாழ் வல்லவன் ஒருவன் அழுகைச் சுவைக்குரிய பாலைப் பண்களை யெல்லாம் தொகுத்து ஒவ்வொன்றாக மாறி மாறி இசைப்பதுபோல, களிப்பினைத் தருவதாய் வேறு வேறு சிறந்த கள் வகைகளைச் சேறுபடச் செய்யும் பெரு மழைபோல, தன்னைச் சூழ்ந்துள்ளவர்க்கு மீண்டும் மீண்டும் அருந்தத் தருகின்றான். விழாக் களத்தின் செல்வத் தோற்றமுடையதாய்ப் பொலியும் நாண்மகிழ்

இருக்கையாகிய சேரனது அத்திருவோலக்கச் சிறப்பினை இனிது கண்டு நனிமிக மகிழ்ந்தேம் எனக் கட்டுரைக்கின்றார் கபிலர். சேரனின் திருவோலக்க இருக்கையின் செல்வத்தை நாண்மகிழ் இருக்கை எனக் கூறிய சொற் சிறப்பானே, இதற்கு நாண்மகிழ் இருக்கை என்று பெயர் அமைந்தது. பாணர்களுக்குப் பரிசில் அளித்துச் சிறப்பிக்கும் சேரமானின் பண்புகளைப் பாராட்டிப் பாடுவதாகலின், இது 'பரிசிற்றுறைப் பாடாண்பாட்டு' என்னும் துறை கொண்டது.

11. புதல்சூழ் பறவை

முதுவாய் இரவலன் ஒருவனிடம் சேரமானின் சீரிய இயல்புகள் பலவற்றையும் சிறந்தெடுத்துக் கூறிப் புகழ்ந்து பாராட்டுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. அம் முது வாய் இரலவன் தன் கையகத்தே பேரியாழ் ஒன்றினை ஏந்தியுள்ளான். அது, வளைந்த கரிய தண்டினை யுடையதாக விளங்குகின்றது. இசையின்பத்திற்கு இடமாகவுள்ள அப் பேரியாழ், இனிய இசைக்குரிய நரம்புகளால் நிறைந்துளது. அதன்கண் பாலைப் பண்ணை எழுப்பி, முதிய வாய்மையை உடைய அவ் விரவலன், சேரனை நினைந்து செல்கின்றான்.

சேரனின் படை வகுப்பு ஒழுங்குடையது. அதனால் மாற்றாரால் குலைத்தற்கரியதாக விளங்கும் அது, தன்னை எதிர்க்க வெகுண்டுவரும் பகைவர்களின் வலிமையை அழித்தொழிக்கின்றது. அப் படைவகுப்பில் யானையின்

மீதும் குதிரையின்மீதும் வரும் வீரர்கள், பகைவர் எறியும் அம்பையும் வேலையும் தடுத்தற்குத் தம் கேடயத்தினை உயரப் பிடித்து ஏந்திக்கொண்டு வருகிறார்கள். அத்தோற்றம், மலையின் உச்சியில் நாட்காலையில் படிந்து தோன்றும் மேகக் கூட்டத்தின் தோற்றத்தினைப்போல விளங்குகின்றது. ஒளி
யும், உடலிற் பின்னிக்

விரிந்து விளங்கும் வேற்படையை
கிடந்து அசையும் மாலைபோல

உடலெங்கும் ஓடிச் சுழற்றப்படும் வாட்படையையும் தாங்கிவரும் அவ் வீரர்கள், போர்க்கண் அன்றிப் பிறவற்றால் இறத்தலை விரும்பாதவர்கள். அவர்கள் வாகைப் பூவினைக் கிழித்துக் குறுக நறுக்கிப் பனங் குருத்தினை இடையிடையே வைத்து மாலை தொடுத்து அணிந்துள்ளனர். வெண்ணிறமான பனங்குருத்துடன் நீல நிறமுடைய வாகைப் பூக்களை இடைவைத்துத் தொடுத்திருப்பது, முல்லைப் புதரைச் சூழ்ந்து மொய்க்கும் வண்டினங்களைப் போல வயங்குகின்றது.

இத்தகைய போர்வீரர்களையுடைய
கடுங்கோ, காட்டகத்தே முல்லைப்புதர்களில்

செல்வக்   வண்டினங்கள் பிடவ
மொய்க்கும்   வதும், பனிங்குடன்

மரத்தின் பூக்குலையில் சென்று தங்கு
விரவிய பரல்கள் நிரம்பிய முரம்பு

நிலத்தில் வாழ்பவர்கள் இலங்கு கதிர்த் திருமணிகளைப் பெறுவதுமாகிய, இடமகன்ற ஊர்களையுடைய நாட்டிற்குத் தலைவன். அவன் இடிமுழக்கம் போல ஒலிக்கும் முரசங் களுடன் தவறுத வஞ்சினங்களைக் கூறிச் சென்று, வேல் ஏந்திவரும் பகைவர் படைக்கூட்டத்தினை மருங்கற மாய்ப்பான். அஞ்சினோரைப் புறமுதுகுகாட்டி ஓடச் செய்வான். பிணங்கள் நிறைந்த போர்க்களத்தில் பகை வராயினர் பணிந்து நின்று, பண்டே போலத் திறை கொண்டு போந்து செலுத்தின், அவற்றை ஏற்றுக்கொள் வான். அங்ஙனம் பகையரசர் பணிந்து பழைய திறையாகத் தந்த யானையோடு, நெல்லை அளக்கும் மரக்கால் தனது செப்புறை தேய்ந்து கழன்றோடுமாறு, நெல்லாகிய உணவை நிறைய அளந்து கொடுப்பான், செல்வக் கடுங்கோ வாழி யாதன் என்று அறிந்தோர்கள் கூறுகின்றனர்.

“ போர்படு மள்ளர் போந்தொடு தொடுத்த
கடவுள் வாகைத் துய்வீ ஏய்ப்பப்
பூத்த முல்லை புதல்சூழ் பறவை

கடத்திடைப் பிடவின் தொடைக்குலைச் சேக்கும்"
(பதிற்று. ௬௬ : ௧௪ - ௭)

என வெண்மையான பனங்குருத்தை முல்லை முகைக்கு
ஒப்பாகவும், நீல நிறமான வாகைப்பூவை அம் முல்லை முகையைச் சூழ்ந்த வண்டிற்கு ஒப்பாகவும், உவமை கூறிய சிறப்பால் இதற்குப் 'புதல்சூழ் பறவை' என்று பெயரா யிற்று. ஆறறிந்து செல்லும் முதுவாய் இரவலனுக்குச் சேரனின் இயல்பாய கொடைநலம் மட்டும் கூறி, அவன்

பால் ஏகுக என்னுது ஒழிந்தமையின், இது பாடாண் பாட்டு' எனவே படும்.

'செந்துறைப்

12. வெண்போழ்க் கண்ணி

சென்ற பாடலில், முதுவாய் இரவலனுகிய பாண னிடம் சேரன் கொடைநலம் கூறியதாகப் பாடிய கபிலர்,
இப்பாடலில் பாணன் ஒருவனை அச் சேரனிடம் ஆற்றுப் படுத்துவதுபோலப் பாடுகின்றார். சேரமான், பல போர்

களிலும்
கொல்

எதிர்த்தோரை வென்றழித்தவன். பகைவர்களைக்
லும் படைகளைத் தெரிந்தெடுத்துக்கொண்டு,
வெற்றிக்கொடி விண்ணிலே அசைய, வயிரும் வலம்புரிச்
சங்கும் ஆர்ப்ப, போர்த்துறை பயின்ற யானைகள் போர்
நிகழும் இடம்நோக்கி அணியணியாக நிரைவகுத்துச்
செல்லப் பொருது வீழ்ந்த மக்களின் நிணம் பரந்த போர்க்
களத்தில் பருந்துகள் பிணங்களின் குருதியை நிரம்ப
அருந்த, தலைவெட்டுண்ட கவந்தங்கள் ஆண்மை மலிந்து
ஆடாநிற்க, அழகில்லாத பிணந்தின்னும் பேய்மகள் காண்
போர் வருந்துமாறு அச்சுறுத்த, போரினால் பெருந்துன்ப
மும் பேரிழப்பும் எய்திய நாட்டுமக்கள் அனைவரும் அஞ்சி
நடுங்க, அவன் போர்கள் பலவற்றை நிகழ்த்தியுள்ளான்.
அவற்றில் மீண்டும் போருண்டாகாதவாறு, அதற்கு ஏது

வாயினாரையெல்லாம் வேரறக்கொன்று, வென்றி
எய்தி வீறுற்று விளங்குகின்றான் அவன் !

அவனுடைய வீரர்கள் சேரற்குரிய

பனந்தோட்டுடன் உழிஞை வாகை தும்பை முதலிய போர்ப் பூவும், கொன்றை முதலிய பிற பூக்களும் விரவித்தொடுத்த மாலையணிந்துள்ளனர். அவர் தம் முகங்களில் வாள்கள் பொறித்த வடுக்கள் பல, வரிவரியாகப் பதிந்து மாட்சி மிக்குத் திகழ்கின்றன. இறைச்சி விற்கும் பாசவர்கள் ஊன்கறியை வெட்டுதற்குக் கொள்ளும் அடிமணையைப் போல அவர் தம் மெய்யும் மார்பும் வாள்பதித்த வடுவும் தழும்பும் நிறைந்து காணப்படுகின்றன.
அவற்றை
அவர்கள் மார்பிற்
மறைக்கமாட்டாமல்

பூசிக்கொள்ளும் சந்தனமும்
பொலிவழிந்து நிற்கின்றது. இவ்
வாறு உவகைச் சுவையினும் வீரச் சுவையினையே
பெரிதும்
விரும்பும் இயல்பினராய வீரர்களுக்குத் தலைவனாக விளங்கு பவன் செல்வக்கடுங்கோ! அவன் நேரிமலைக்குரிய பொருநன் ஆவன். அம் மலையிற் காந்தட் பூக்கள் நிரம்பப் பூத்துள்ளன. அவைகள் தெய்வத்தால் விரும்பப்படுபவை. ஆதலால், அப் பூக்களில் நீங்காது படிந்து நிரம்பத் தாதுண்ட தும்பிகள்,
யிற் குன்றிச் சிறகுகள்

விரைந்து பறக்கும் தம் தன்மை
உதிர்ந்துவிட வருந்தாநிற்கும்.

இத்தகைய கல்லுயர் நேரிமலைக்குரிய பொருநனும், சான்றோர் பெருமகனும் ஆகிய செல்வக் கடுங்கோவினைப் பாடிச்சென்றால், கடனறி மரபிற் கைவல் பாணனாகிய நீ, கொடுமணம் என்னும் ஊரிற் செய்யப்படும் வேலைப்பாடு மிக்க பொற்கலங்களையும், பந்தர் என்னும் ஊரிற் கிடைக்கும் சிறந்த முத்துக்களையும் நின் சுற்றத்தாருடனே பெறுவாய்.

"கொடுமணம் பட்ட நெடுமொழி ஒக்கலொடு பந்தர்ப்
பெயரிய பேரிசை மூதூர்க்
கடனறி மரபிற் கைவல் பாண!
தென்கடல் முத்தமொடு நன்கலம் பெறுகுவை!
....

கல்லுயர் நேரிப் பொருநன்
செல்வக் கோமாற் பாடினை செலினே!"
(பதிற்று. சுஎ : க - உ௩)

என வரும் வரிகள், இப்பாடல் 'பாணாற்றுப்படை' லைத் தெளிவித்து மகிழ்விக்கின்றன. மேலும்,

யாத

“மலர்ந்த காந்தள் மாறூது ஊதிய
கடும்பறைத் தும்பி சூர்நசைத் தாஅய்ப்
பறைபண் அழியும் பாடுசால் நெடுவரைக்
கல்லுயர் நேரிப் பொருநன்” (பதிற்று. கூஎ:
கக-உஉ)

என்னும் பகுதி, மிகுந்த பொருள்நலம் பொதிந்து காணப்படுகின்றது. ‘தெய்வம் விரும்புதலால் நாம் ஊதலாகாதென்று அறிந்து நீங்காமல், விரைந்து பறக்கும் செருக்கால், தும்பியானது காந்தள் மலரை ஊதித் தன் சிறகிழந்து வருந்துமாறுபோல, செல்வக் கடுங்கோ வாழியாதன் கண்டு காத்தலால் நாம் இதனைக் கைப்பற்றிக் கொள்ளக் கருதுதல் கூடாது என்றுணர்ந்து நீங்காமல்,
வலியுடையேம் என்னும் செருக்கால், பகைவேந்தர்
நேரிமலையைக் கைப்பற்றிக் கொள்ளக்கருதி
முயலுவராயின் தம் வலி குன்றுவர்’
என்னும் குறிப்புப் பொருள் பயந்து, இது மிகவும் சுவை மிகுந்ததாக விளங்குகின்றது. தொடுத்தற்குரிய பூவல்லாத பனங்குருத்தினைத் தொடுக்கப்படும் கொன்றையொடு

தொடுத்தமைபற்றி, ‘நாறிணர்க் கொன்றை வெண்போழ்க் கண்ணி’ எனக் கூறிய அடைச் சிறப்பானே, இதற்கு வெண்போழ்க்கண்ணி எனப் பெயர் வழங்கிற்று.

13. ஏம வாழ்க்கை

இப்பாடலின்கண், காமவேட்கையின்

மீதோடாத செல்

வக் கடுங்கோவின் வென்றி வேட்கைச் சிறப்புக் கூறப்படு

கின்றது. வாழியாதன், பகைவர் நாட்டிடத்தே சென்று பாசறை அமைத்துத் தங்கியுள்ளான். அவனுடைய உரிமை மகளிர் பிரிவாற்றாது அவனையே நினைந்து உறக்கம் பெறாமல் வருந்துகின்றனர். அதனால் அவர்தம் உடல்மெலிந்து இழைகள் நெகிழ்கின்றன. காண்போரை வருத்தும் பேரழ

கையுடைய அம்மகளிர், உயரிய மதில்சூழ்ந்த அரண்மனையின் நீண்ட பெரிய சுவர்களில், பிரிவின்கண் மீண்டுபோந்து கூடுதற்கு அவன் குறித்த நாட்கள் பலவற்றையும் எழுதியெழுதிக் கணக்கிட்டுக் களைப்புறுகின்றனர். அதனால் இயல்பாகவே சிவந்த அம்மகளிரின் விரல்கள் மேலும் சிவப்புறுகின்றன. இங்ஙனம் அணங்கெழில் அரிவையர்ப் பிணிக்கும் மணங்கமழ் மார்பனாக விளங்குகின்றானாயினும், சேரனின் சிந்தை காமநுகர்ச்சியிற் செல்லாது, போர் நிகழ்ச்சி எய்தும் வென்றிச் சிறப்பின்மீதே பெரிதும் படர்கின்றது. இவ்வியல்பு அவன் தாள்நிழற்கீழ்ப் பாசறைக்கண் இருந்துவாழும் ஏனைய போர்வீரர்களிடமும் காணப்படுகின்றது.

காற்றுகிய குறுந்தடி ஓச்சுதலால் கடலாகிய முரசம் பேரொலி செய்து முழங்குவதுபோல, அப்பாசறைக்கண் விண்ணதிருமாறு முரசொலி பெருமுழக்கம் புரிகின்றது. அங்கே கண்டோர் விரும்பும் பலவகைக் கோலங்கள் நிலை பெற்ற பகைவர் மதிலை அழித்தன்றி, உணவு கொள்ளுவ தில்லை என்னும் சூளுறவுடையராய்ப் பல நாட்களை உண்ணு மலே கழித்துக்கொண்டு, வீரர்கள் ஊக்கம் குன்றாமல் கடும்போர் விளைக்கின்றனர். பகைவரின் உறையுளைத் தாம் பெறினல்லது, அவர்கள் சிறிதும் ஓய்வு கொள்ளார் போலும்!

பகைவேந்தர் ஏறிப்போந்த களிற்றினைக்கொன்று, அதன் மருப்பினை எடுத்துக்கொண்டு, கொடிகள் அசையும் கள்ளுக்கடைத் தெருவுக்குத் தம் தோழர்களுடன் சென்று, அங்கே யானை மருப்பினைக் கள்ளுக்கு விலையாகக் கொடுத்து, கள்ளைப்பெற்று விரும்பியுண்டு மகிழ்ந்துசெல்லும் இயல் பினராகிய இவ்வீரர்கள், போரில்லாக் காலத்தேனும் உத் தரகுரு என்னும் வட்புலத்தே வாழும் மக்களைப்போல, அச்சம் என்பது இன்னதென்றறியாமல் இன்பமே நுகரும் வாழ்க்கையுடையராய், நாடோறும் இனிய உவகையைப் பொருந்தி உறையும் வாய்ப்பினைப் பெறுவார்களோ? அது போதும் பெறுதல் அரிதெனவே யாம் ஐயுறுகின்றோம்!

ஏழாம் பத்து 221

"நாமம் அறியா ஏம வாழ்க்கை
வடபுல வாழ்நரிற் பெரிதமர்ந்து அல்கலும்
இன்னகை மேய பல்லுறை பெறுபகொல்?

. . . .

அணங்கெழில் அரிவையர்ப் பிணிக்கும்
மணங்கமழ் மார்ப !நின் தாள்நிழ லோரே!”
(பதிற்று. சுஅ:

கஉ-உ0) துன்பம் இடையிடையே விரவிய இன்பமன்றி, எஞ்ஞான்றும் இடையறவு படாத இன்பமேயாய்ச் செல்லுவதாகிய வாழ்க்கையினை ‘நாமம் அறியா ஏம வாழ்க்கை’ எனச் சிறப்பித்து, அத்தகைய அரிய இன்ப வாழ்க்கையினை உத்தர குரு எனப்படும் வடபுலத்து வாழ்வோர் நடாத்துவதனையும் விளக்கியவாற்றால், இப்பாடல் ‘ஏம வாழ்க்கை’ எனப் பெயர் பெற்றது.

14. மண்கெழு ஞாலம்

வாழியாதனது அசைவில் கொள்கை ஆள்வினைச் சிறப்பினை, அவன் குடிவரலாற்றுடன் இயைத்துப் புகழ்ந்து போற்றுகின்றது இப்பாடல். ஆதன் அசைவில் கொள்கையாளன். அவன் தன் பகைவர்களைப் படுபிணம் பிறங்க அடுதல் புரிகின்றான். அதுபோது மலைபோலும் யானையின் மேல் வானளாவ ஓங்கிய அவனுடைய வெற்றிக்கொடிகள், மலைமேலிருந்து கீழேவிழும் அருவிகளைப்போல, இடந்தோறும் அசைந்து விளங்குகின்றன. கடல்போன்று பரந்தபடைகளின் நடுவே முழங்கும் முரசமானது, காற்றால் மோதப்பட்ட கடல்போலக் கடியதாய்ப் பேரொலி புரிகின்றது. வாளேந்திய வீரரும், வேல் தாங்கிய வீரரும், பகைவர்களைப் பாய்ந்து ஒய்ந்த குதிரைகளும், ஆராய்ந்து தெரிந்தெடுக்கப் பெற்ற போர்வேட்கை மிக்க மறவர்களும் கொண்ட படைகளுடன் சென்று, பகைவர்களைக் கொன்றழித்துக் கொற்ற வேந்தனாகத் திகழ்கின்றான் ஆதன். ஆயினும், கொடியோர்த் தெறுதலும் செவ்வியோர்க் களிததலும் வேந்தர்க்குரிய கடமையாதலின், பகைவர் நாட்டிற் கேடுற்று வருந்

தும் குடிமக்களுக்கு, வேண்டும் நலம் பலவும்
களை நன்கினிது வாழ்விக்கின்றான்.

செய்து அவர்

அவனது ஆட்சி நலத்தால், நிலமானது தன்பால் விளையும் பொருள்களை மிகவும் பெருக விளைத்தளிக்கின்றது. திங்கள்தோறும் மும்மாரி பெய்யுமாறு மழை இடையறாது வருதலால், ஞாயிற்றின் வெம்மை வரம்பிகவாது தணிந்து நிலவுகின்றது. உலகிற்கு நல்ல பயனைக் கொடுக்கும் வெள்ளி என்னும் கோள், உலகம் செழித்தற்குரிய மற்றை நாள்கோள்களை அடுத்து இயைந்து நிற்கின்றது. விசும்பு இடமகன்று இனிதிலங்குகின்றது. மழைமுகில்கள் இவ்வுலகினை யாமே புரப்பேம் என்று ஏறட்டுக் கொண்டாற்போலத் தோன்றுகின்றன. நாட்டின் நால்வேறு திசைகளும் ஒருபடித்தாக ஆக்கமெய்திச் சிறக்கின்றன. இங்ஙனம் தன் முன்னோர்களினும் மேலாகச் சீரும் சிறப்பும் மிக, இவன் அருமந்த அரசாட்சி புரிந்து நாட்டினைப் புரந்தருள்கின்றான். இவனுடைய முன்னோரின் கொள்கைகளைக் காட்டிலும் இவன் கொள்கைகள் அசைவிலா மேம்பாடுடையனவாய் வீறுற்று மேலோங்கித் திகழ்கின்றன. இவனைப்போலவே இவனின் முன்னோர்களும் ஓரளவாதல், அசைவில் கொள்கை ஆண்மையாளர்களாகச் சிறந்து திகழ்ந்ததனால்தான், ஏனையோர்போல உலகின் ஒவ்வொரு பகுதியினையே ஆண்டு மாண்டொழியாமல், இம்மண்கெழு ஞாலம் முழுதினையும் ஒருங்கே ஆளும் பெருஞ்சிறப்பை எய்தி அவர்கள் பிறங்கினார்கள்.

"கெடுகுடி பயிற்றிய கொற்ற வேந்தே!
நின்போல்,
அசைவில் கொள்கையர் ஆகலின், அசையாது
ஆண்டோர் மன்றஇம் மண்கெழு ஞாலம்!
நிலம்பயம் பொழியச், சுடர்சினம் தணியப்,
பயங்கெழு வெள்ளி ஆநியம் நிற்ப,
விசும்புமெய் அகலப், பெயல்புரவு எதிர,
நால்வேறு நனந்தலை ஓராங்கு நந்த,
இலங்குகதிர்த் திகிரி முந்திசி னோரே!"

(பதிற்று. சுக: க௦ - எ)

ஏழாம் பத்து

223

பழைய உரைகாரர் "பொன்ஞாலம் அன்றி இம்மண் ஞாலம் முழுவதும் ஆண்டார் என்பது தோன்ற மண் கெழு ஞாலம் என்ற சிறப்பானே, இதற்கு மண்கெழு ஞாலம் என்று பெயராயிற்று" என்பர். சேரனின் முன் னோர்கள் ஏனையோர்போல உலகின் ஒரோவொரு பகுதி களை ஆளாமல் உலக முழுதும் தம் குடைக்கீழ் நிலவ ஆண் டனர் என்றும், அதற்குக் காரணம் செல்வக்கடுங் கோவைப்போல அவர்களும் அசைவில் கொள்கையுடைவர் களாக விளங்கியமையே என்றும் விளக்கிய சிறப்பால், இப்பாடல் மண்கெழு ஞாலம் எனப்பெயர் கொண்டது எனினும் அமையும்.

15. பறைக்குரல் அருவி

செல்வக்கடுங்கோ வாழியாதனின் வென்றி கூறும் திறத்தால், அவனுக்குள்ள சிறப்புக்களையெல்லாம் தொகுத்துக்கூறி முடித்து, வாழ்த்தி மகிழ்கின்றது இப் பத்தாம் பாடல்! ஆதன் வீரர்களுக்குத் தலைவன். அவர்கள் களிறுகளையும் குதிரைகளையும் போர் செய்வதற்கு நெறி யறிந்து செலுத்திப் பழக்கிக் கைவந்தவர்கள். வேலும் வாளும் வீசவல்லவர்கள். கற்றாரோடு பொருது காழ்ப் பேறிய தோள்களை உடைய மற்பயிற்சி மிக்கவர்கள். தேனின்மையால் வண்டுகள் மொய்க்காத பனந்தோட்

டுடன், தீஞ்சுனை நீரில் மலர்ந்த குவளைப் தொடுத்த கண்ணியை அணிந்தவர்கள்.

பூக்களை விரவித்

மதம் மிகுந்து

கடுஞ்சினம் வாய்ந்த பகையரசர்களைப் பொருது, அவர்தம் போர்வன்மையும் தலைமையும் சிதைய முழுதாக அழித்த வர்கள். போர்செய்தலும் அதன்கண் வெற்றிபெறுதலுமே, தமக்குரிய நிலையான இயல்பாகக்கொண்டு சிறப்பவர்கள் தமது வெற்றிநலந் தோன்றத் தம் காலிற் கழல் யாக்கப் பெற்றுள்ளவர்கள்.

இத்தகைய வீரர்களுக்குத் தலைவனாய் விளங்கும் ஆதன், விளையாட்டிற்கெனவும் பொய் கூறாத வாய்மை யுடையவன். பகைவர்கள் புறத்தே இகழ்ந்து கூறும்

சொற்களை ஒரு பொருளாக மதியாதவன். புரைதீர்ந்த நுண்ணுணர்வு மிக்கவன. பூண்கிளர் மார்பினன். அவன் மனைவியோ, பெண்மைக்குரிய நாணம் நிறைந்தவள். அறிவின் திட்பத்தால் விளையும் பெருமடம் செறிந்தவள். நற்குண நற்செயல்கள் வாய்ந்து, கற்பால் இறைமைத் தன்மை பெற்றவள். அத்தகைய கற்பின் செல்விக்குக் கணவனாகிய ஆதன், சிறந்த சான்றோர்களைத் தனது நீங்காத சுற்றமாகக் கொண்டான். அச் சான்றோர்கள் தம் உயிர்க்கு இறுதி எய்தினும், கொள்கை உறுதியிற் சிறிதும்
பிறழாதவர்கள்.
போர்க்களத்தே

அனைய சான்றோர்கள் சூழ, அவன்
பகைவென்று, களவேள்வி நிகழ்த்தி
வெற்றிக்கடவுட்கு உணவளித்து மகிழ்வித்தான். அறப்
போர் புரிந்து துறக்கம் புகுந்த வீரர்களை, அவர்கள் நிகழ்த்திய அரிய ஆண்மைச் செயல்களைப் புலவர்கள் பாடவும்

பாணர்கள் இசைக்கவும் கூத்தர்கள் நடிக்கவும் செய்து, தான் இருந்து கண்டு கேட்டுச் சிறப்பிக்குமாற்றால் இன்

புறச்செய்தான். நட்பமைந்த சான்றோர்க்குப் பணிந்தொழுகும் மென்மையும், பகைவர்க்கு வணங்காத ஆண்மையும் வாய்ந்த தன் இளந்துணை மக்களைக்கொண்டு, நாடு காத்தற்கு "அறிவு வேண்டுழி அறிவு உதவியும் வாள் வேண்டுழி வாளுதவியும்" துணைபுரிந்து முதுமை எய்திய சான்றோர்களுக்குத் தொண்டுபுரிய வைத்து நன்றி பாராட்டி, அவ்வாற்றால் தான் ஆற்றுதற்குரிய தொன்று தொட்ட கடமையினை நிறைவேற்றி முடித்தான். அத்தகைய வெல்போர் அண்ணலாகிய ஆதனே! தேவர்கள் வாழும் பொன்னுலகத்தினும் கேட்குமபடி இழும் எனும் ஒலியுடன் இழிந்து, கீழே விழுந்தவழிப் பறைபோன்ற முழக்கமிடும் அருவிகள், மலை முடிகள்தோறும் நிறைந்து விளங்கும் அயிரை என்னும் நெடிய மலையைப்போல, நின் வாழ்நாள்கள் குறையாது பெருகுவனவாக!

"...பெண்மை சான்று பெருமடம் நிலைஇக்
கற்பிறை கொண்ட கமழும் சுடர்நுதற்
புரையோள் கணவ! பூண்கிளர் மார்ப! ஏழாம்

தொலையாக் கொள்கைச் சுற்றம் சுற்ற
வேள்வியிற் கடவுள் அருத்தினை! கேள்வி உயர்நிலை
உலகத்து ஐயர்இன் புறுத்தினை! வணங்கிய சாயல்
வணங்கா ஆண்மை
இளந்துணைப் புதல்வரின் முதியர்ப் பேணித் தொல்கடன்
இறுத்த வெல்போர் அண்ணல்!... அயிரை நெடுவரை
போலத் தொலையா தாக! நீ

வாழும் நாளே!”

(பதிற்று. ௭0: ௧௪ - ௨௭.)

அருவியின் நீரொழுக்கு வரைமுடி மீதிருந்து இழி தரும்போது இழும் எனும ஒலிக்குறிப்புடையதாய்ப், பிறகு கீழே விழுந்தவழிப் பறைபோன்ற ஒலிமுழக்கம் உடையதாய் மாறுபாடு அடைதலை யுணர்த்த, ‘இழுமென இழிதரும் பறைக்குரல் அருவி’ என உரைத்த சிறப்பால், இப் பாடல் பறைக்குரல் அருவி எனப்பெயர் பெற்றது.

16. உரை நலம்

இனி, ஈண்டு ஒன்றைமட்டுமேனும் கிளந்து கூறவேண் டிய இன்றியமையாமையுள்ளது. “மொழிக்கு மொழி தித்திப்பாக” இந்நூற்குப் புத்துரை வரைந்துள்ள பேரா சிரியர். திரு. ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள், “உழுத சால்வழியே உழுவான் பொருட்டு,இழுதை நெஞ்சம் இதென் படுகின்றதே” எனத் திருநாவுக்கரசர் வருந்திக் கூறியவாறு, உழுதசால் வழியே உழுது செல்லாமல், இப்பத்தாம் பாடற்குச்செவ்விய இனிய பழுதற்ற முறையிற் பொன்னினும் மணியினும் போற்ற வேண்டுவதாய் எழுதி யுள்ள உரைவிளக்கம் சாலவும் பாராட்டற்பாலதாகும்.

‘வேள்வியிற் கடவுள் அருத்தினை’ என்பதற்கு யாகங் களைச் செய்து தேவர்களை உணபித்தாய் என்றும்; ‘உயர் நிலை உலகத்து ஐயர் இன்புறுத்தினை’ என்பதற்கு வேதங் களை ஓதினமையால் தேவருலகிலுள்ள முனிவர்களை இன் புறச் செய்தாய் என்றும்; ‘இளந்துணைப் புதல்வரின்

முதியர்ப் பேணித் தொல்கடன் இறுத்த' என்பதற்குப் புதல்வர்களைப் பெற்றமையால் நின்குலத்து முன்னோர் களான பிதிர்க்களைக் காப்பாற்றித் தொல்கடன் இறுத்தாய் என்றும் பொருள் கொள்வர் சிலர். அங்ஙனம் தாம் கொள்ளும் பொருளுக்கு மேற்கோளாகப் பரிமேலழகர் தமது திருக்குறள் உரைக்கண், 'மக்கட்பேறு' என்னும் அதிகாரத்தின் தொடக்கத்தில், "இரு பிறப்பாளர் மூவரா லும் இயல்பாக இறுக்கப்படும் கடன்கள் மூன்றனுள், தேவர் கடன் வேள்வியானும், முனிவர் கடன் கேள்வியா னும், பிதிரர்கடன் புதல்வரைப் பெறுதலானும் அல்லது இறுக்கப்படுவதில்லை" என வரைந்திருப்பதனைக் காட்டுவர். பரிமேலழகர் வடமொழி நூல்களின் வயப்பட்டு உரைத் தமை பொருத்தமாகாது என மறுப்போர்க்கு, அற்றன்று! பரிமேலழகர் வடமொழி நூல்களைத் தழுவிக் கூறினரல்லர்; அவர்தம் கூற்றுக்குப் பதிற்றுப்பத்தினகன் உள்ள அரிய இப்பாடலே உரிய சான்றாகும் என மொழிவர்.[1]

எனினும், மதிநுட்பம் நூலோடுடைய நம்மருமைப் புதிய உரையாசிரியர் அவர்கள், இக்கருத்துக்களை கொண்டு உடன்பட இசையாமல், "வாழியாதன்

ஏற்றுக்

எய்துந்
தோறும் களவேள்வி நிகழ்த்திக் கடவுளரை மகிழ்விக்கின்றான்; அறப்போர் புரிந்து துறக்கம் புகுந்த வீரர்களாகிய உயர்நிலை உலகத்து ஐயரை, அவர்தம் ஒழுகலாற்றையும்

போர்த்திறனையும் குறித்துப் புலவர்கள் முத்தமிழாலும் போற்றுமாறு செய்து சிறப்பித்தலால் இன்புறுத்துகின்றான்; நாடுகாவலிற் பல்லாற்றானும் உதவியளித்துப் பின்

1. "The theory of three debts or duties to the Devas, the ancestors, and the learned, to be discharged respectively, by every man, by performing sacrifices, by bringing forth children, and by learning the ancient texts, is, as seen by this very poem and poem No. 70, as old as the Sangam age. There- fore, when Parimelazhagar speaks of this in his Commentary on the chapter on children in Tirukkural, he is not going against any Tamil tradition."—Prof. T. P. M.

னர் முதுமை எய்திய பெரியவர்களைத், தனது இளந் துணைப் புதல்வர்களைக்கொண்டு தொண்டு செய்வித்துப் பேணி நன்றி பாராட்டுதலால் உவகையுறுவித்துத் தொல் கடன் இறுக்கின்றான்" எனச் செவ்விய விளக்கம் செய்து, தக்க சான்றுகளும் தந்து காட்டியுள்ள அருமைப்பாடு, அவர்தம் நுண்மாண் நுழைபுலமும் பன்மாண் நலமும் அறிவிப்பதாகும்.

தமிழ்

17. கபிலர் புகழ்ந்த கடுங்கோவின் பண்புகள்

செல்வக் கடுங்கோ சிறந்த பல பண்புகள் நிறைந்தவன். அவன் ஈத்தது இரங்கான், ஈத்தொறும் மகிழான், ஈத்தொறும் மாவள்ளியன். நல்லிசை மிக்கவன். அவனது திருவோலக்கம் விழவுக்களம் போன்று விளங்கும். துப்புத் துறைபோகிய கொற்ற வேந்தனாகிய அவன், பலவகைப் படைகளும் உடையனாய்ப் பகைவர்க்கு மடங்கல் வண்ணம் கொண்ட கடுந்திறல் வாய்ந்தவன். அவன் பார்ப்பார்க் கல்லது பணிபறியான், நட்டோர்க் கல்லது கண்ணஞ்சான், வணங்கு சிலைபொருத தன் மணங்கமழ் அகலம் மகளிர்க் கல்லது மலர்ப்பறியான். நிலந்திறம் பெயருங் காலையாயினும், கிளந்தசொல் பொய்ப்பறியான். ஆடுபெற் றழிந்த மள்ளர் மாறி, 'நீ கண்டனையேம்' என்று கூறிப் பணியும் வண்ணம், பல போர்கள் நிகழ்த்தி வெற்றிபெற்றவன் அவன். மாற்றார் உறுமுரண் சிதைத்த நோன்றாள் உடைய அவ்வேந்தன், அந்தணர் அருங்கலம் ஏற்ப நீர் சொரிந்து

தருவான். இசை மேவும் தோன்றலாகிய அவ் வரசன், பாணர்களின் ஒக்கற் பசிதணிய மழையினும் பெரும்பயம் பொழிவான் அவன் காஞ்சி சான்ற வயவர் பெருமகன், பாணர் புரவலன், பரிசிலர் வெறுக்கை! பாணர்களுக்கு மதிவகைகளை அம்மன்னவன் சேறுசெய் மாரியின் அளிப்பான். இரவலர்களுக்கு அம்பண அளவை நிறைய ஆர்பதம் நல்குவான். அவன் நேரிமலைக்குரிய பொருநன். தன்னைப் பாடிவரும் பரிசிலர்க்குக் கொடுமணம், பந்தர் என்னும் ஊர்களின் தெண்கடல் முத்தொடு நன்கலம் தருவான்.

228 பதிற்றுப்பத்துச் சொற்பொழிவுகள்

அணங்கெழில் அரிவையர்ப் பிணிக்கும் மணங்கமழ் மார்பினையுடையவன். பகைவர் கெடுகுடி பயிற்றிய கொற்ற வேந்தன்; அசைவில் கொள்கையன்; வலம்படு வான் கழல் வயவர் பெருமகன்; நகையினும் பொய்யா வாய்மையன். பகைவர் புறஞ்சொற் கேளாப் புரைதீர் ஒண்மையன். பெண்மை சான்று பெருமடம் நிலைஇக், கற்புஇறை கொண்ட கமழும் சுடர்நுதற் புரையோள் கணவன். பூண் கிளர்மார்பன். வேள்வியிற் கடவுள் அருத்தி, கேள்வி உயர் நிலை உலகத்து ஐயர் இன்புறுத்தி, இளந்துணைப் புதல்வரின் முதியர்ப் பேணித் தொல்கடன் இறுத்த அண்ணல். இத் தகைய சிறந்த பல பண்புடைய செல்வக் கடுங்கோ, கல்லுயர் நேரிப் பொருநன். அயிரை நெடுவரையும் அவனுக்கே உரியது!

18. முடிவுரை

இங்ஙனம் மேற் குறித்தவாறு, தனது சிறந்த பண்புகளையெல்லாம் திறந்தெரிந்து, சொல்லும் பொருளும்
சுவைமிக நல்லியற் கவிதைகளாற் பாடிப் புகழ்ந்த கபிலர் பெருமானுக்குச் செல்வக் கடுங்கோ வாழியாதன், சிறு புறம் என நூறாயிரம் காணம் கொடுத்தான். மேலும், சேலம் மாவட்டத்தில் ஊற்றங்கரைக்கோட்டத்தின் தென் பகுதியில், மஞ்சவாடிக் கணவாயின் வடபால் உள்ள நன்று என்னும் குன்றேறித், தன் கண்ணிற் கண்ட நாடெல்லாம்

காட்டிப் பரிசாகக் கொடுத்துப் போற்றிப் புரந்தான். இவ்வாறு கடுங்கோவாழியாதன் தன் கண்ணிற்கண்ட நாடெல்

லாம் கொடுத்ததனுல், கபிலர் எண்ணிறந்த பல பரிசிலாகப் பெற்ருர். இவ்வுண்மையினை,

ஊர்களைப்

"அரசவை பணிய அறம்புரிந்து வயங்கிய
மறம்புரி கொள்கை வயங்குசெந் நாவின்
உவலை கூராக் கவலையில் நெஞ்சின்
நனவிற் பாடிய நல்லிசைக்
கபிலன் பெற்ற ஊரினும் பலவே."

(பதிற்று. அடு: க - கங) ஏழாம் பத்து

எனப் பெருங்குன்றூர்க் கிழார் பாடிய பாடல் (பதிற்று. 85) சான்று பகர்ந்து வலியுறுத்துதல் காணலாம். இதனால் சொல்வேந்தராகிய கபிலரும்,
கடுங்கோவும் பல்யாண்டுகள்

வில்வேந்தனாகிய செல்வக்
கெழுதகைமைக் கேண்மை

பூண்டு வாழ்ந்தனர் என்பது பெறப்படும். ஒருநாள் சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதன் கபிலர் கைப்பற்றி, "மெல்லிய வாமால் நுங்கை" எனக் கூறினான். அதற்குக் கபிலர், கடுங்கண்ண கொல்களிற்றூற் சமந்தாங்கவும், நிமிர் பரிய மாதாங்கவும், சாவ நோன்ஞாண் வடுக்கொள வழங்
கவும், பரிசிலர்க்கு அருங்கலம் நல்கவும் பல்காற்
வாதலால் நின் கைகள் வலிமை மிக்கனவாயின!

பழகிய
ஆனால்,

"புலவுநாற் றத்த பைந்தடி
பூநாற் றத்த புகைகொளீஇ, ஊன் துவை
கறிசோ றுண்டு வருந்துதொழில் அல்லது பிறிதுதொழில்
அறியா வாகலின்."

(புறம். கச : கஉ - இ)

நின்னைப் பாடுவோர் கைகள் மெல்லிய வாயின!

என
விடை கூறியதாகப் புறநானூற்றுப் பாடல் ஒன்று (14) விளக்குகின்றது. இவ்வாற்றால் அவ் விருவர்தம் அரிய

நட்புரிமை நலம் இனைத்தென யாவரும் அறிந்துகொள்ள லாம். இங்ஙனம் கபிலர்மாட்டுக் கழிபெருங் கேண்மை

கொண்டு
அயிரை

விளங்கிய செல்வக் கடுங்கோ வாழியாதன், நெடுவரைபோலத் தொலையா வாழ்நாள் உடையனாய்ச் செருப்பல கடந்தும், வேள்வி பல செய்தும், ஒகந்தூர் என்னும் ஊரினைத் திருமாலுக்குக் கொடுத்து மனமுற வழிபட்டும், அறத்துறை ஒழுகுதலால் புரோசு மயக்கியும், இருபத்தைந்து ஆண்டுகள் செங்கோல் செலுத்திச் சிறப்புற வாழ்ந்து வந்தான்! கபிலரும் அவன்றன் அருமை நட்புரிமையால் 'உவலை கூராக் கவலையில் நெஞ்சினராய்க்' கவிதை பல இயற்றிக்கொண்டு, களிப்புற வாழ்ந்து வந்தார்!

தென்கலைச் செல்வர் சிறந்தபெரும் பேரறிஞர் நன்குயர் உ. வே. சாமி நாதையர்—சங்க நூல் நாற்றிசையும் தேடிமிக நன்று பதித்தளித்தார். போற்றிப் பணிதும் புகழ்ந்து!

அவ்வை துரைசாமிப் பிள்ளை அவர்கள்தாம் ஒவ்வும்

வகைபதிற்றுப் பத்தினுக்குச்—செவ்வியகல் இன்ப
எழிலுரையொன் றீந்துளரால். மற்றதுதான்
மன்பெரிதும் போற்றத் தகும்!

எட்டாம் பத்து

[திரு. சு. பரமசிவன், பி. ஏ. (ஆனர்சு)]

1. முன்னுரை

எட்டுத்தொகை நூல்களுள் நான்காவதாக வைத்து எண்ணப்படுவது பதிற்றுப்பத்தாகும். கன்னங்கரிய இருளிலே மறைந்த கைவல் சிற்பியின் கலைமன்றத்தின் ஒரு பகுதியை, மின்மினிக் கூட்டத்தின் ஒளி புலப்படுத்துதல் போல, வரலாறு காணு இருளிலே மூழ்கிய பண்டைத் தமிழ்நாட்டின் ஒரு பகுதியை உணர்த்தி நிற்பது பதிற்றுப் பத்தாகும். புறப்பொருளை மட்டுமன்றிப் பொன்றுப் புகழ் தாங்கிய சேரமன்னர் பதின்மரைப் பற்றியும் எடுத்தியம்பும் பதிற்றுப்பத்துள் எட்டாவது பத்தினைப் பாடியவர் உரைசால் சிறப்பின் அரிசில்கிழார் ஆவர். இவ்வருந் தமிழ்ப் புலவரால் பாடப்பெற்றவன் பெருஞ்சேரல் இரும்

பொறை என்னும் சேரர் பெருமகன்.
பாடல்களின்
மாட்சியையும், உணர்த்தும்
முன்னர்ப் பாடிய பாவலர்

செய்திகளேயும் ஆராயும்
பெருமான் வரலாற்றினைக்
காண்போம்.

2. அரிசில்கிழார்

சிந்தையை அள்ளும் செந்தமிழ்ப்
பாடல்களை அளித்த சீர்சால் புலவா
அரிசில்கிழார், சங்கம் மருவிய
தண்டமிழ்ப் புலவர்களுள் ஒருவராவர்.
பெயர் இயற்பெயர் அன்று என்பது நோக்கிய

இவருடைய
அளவிலேயே
விளக்கமாகும். இடைக்குன்றூர் கிழார்,
பெருங்குன்றூர்
கிழார்,
கிழார்

ஐயூர்கிழார், ஆவூர்கிழார், மூலங்கிழார், ஆலத்தூர்
என்பனபோன்று அரிசில்கிழார் என்பதும் சிறப்

புப் பெயரே யாதல்வேண்டும். பெயர் விழையாப் பெற்றிய ராகப் புலவர் இருந்தமையாலோ, பீடுடைய புலவரைப் பெயரிட்டழைத்தல் தகாதென்று பிறர் கருதியமை யாலோ, சிறப்புப்பெயரே பெரிதெடுத்து வழங்கப்பட்ட தன் விளைவாக இயற்பெயர் வீழ்ந்துபட்டது.

பெயர்க்காரணம்

"அரிசில்" என்னும் பெயர் பிறந்த காரணத்தை அறிஞர் பெருமக்கள் வெவ்வேறு வகையாக உரைப்பர். காவிரியினின்றும் பிரிந்து செல்லும் ஒரு கிளை அரிசிலாறு என வழங்கப்படுதலைக் காட்டி ஆற்றின் காரணமாகப் பிறந்த பெயரே அரிசில் என்பர். அரியிலூர் (அரியில்) எனச் சோழநாட்டிலும், அரிசிற்கரை (அரிசிக்கரை) என மைசூரிலும் ஊர்கள் இருத்தலைக் காட்டி, ஊரின் காரண மாகப் பிறந்த பெயரே அரிசில் என உரைப்பர். ஆற்றினடி யாகத் தோன்றியதாயினும், ஊரினடியாக வழங்கியதாயி னும், "அரிசில்" புலவர்தம் இயற்பெயரன்று என்பது தெளிவு.

உரிமைப்
பிறந்த கிழார்

பொருளுணர்த்தும் கிழமையின் வழிப்
என்னும் சொல் உரிமையுடையவர் என்

னும் பொருளதாகும்.
வர் அரிசில்கிழார் என

ஆறோ, ஊரோ, அரிசிலுக்குரிய
வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

மரபு

"ஊரும் பேரும்" (மரபியல். எச) என்னும் தொல்காப்பிய நூற்பாவின் உரையிற் காட்டிய பெயர்களால், கிழார் என்பது வேளாளர்க்கே யுரிய சிறப்புப் பெயராகத் தெரிதலின், இப் புலவர்பெருமான் வேளாண்மரபினராக இருந்திருத்தல் வேண்டும் என அறியலாம்.

பாடப்பட்டோர்

"அருங்கல வாழ்க்கை அளிப்பினும் வேண்டேன். துறந்ததால் வாடும் நின் துணைவியொடு பொருந்தி வாழ்" எனப் பெருங்கல்நாடன் பேகனையும் (புறம்: கசசு), "அற

னில் கூற்றமே! வீழ்குடி உழவன் வித்து உண்டதுபோல, வேல்கெழுதானை யிவன் ஆருயிர் உண்டதனால், மிக நனி நீ இழந்தனை" எனக் கூற்றுவனை விளித்துக் கூறுவார்போல்

ஆற்றல் மறவன் அதியமான் நெடுமான் அஞ்சியையும் (புறம்: உ௬௦) சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையையும் அரிசில்கிழார் பாடியுள்ளார்.

பண்புகள்

போரில் வென்ற புரவலனையும், புகழ்நிறுத்தி உயிர் துறந்தவனையும் பாடிய புலவர் இவர் ஒருவரே எனலாம். பொருதவர் இருவரும் போர்க்களத்தில் ஒருசேர மடிந்த போது பாட்டிசைத்த பாவலர் பலருளர். ஆயின் வென்ற வனையும் வீழ்ந்துபட்டவனையும் புகழ்ந்து பாடியவர் அரிசில் கிழார் ஒருவரே யாவர். தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையையும் இவர் போற்றியிருக்கிறார். தகடூர் பொருது வீழ்ந்த அதியமானையும் இவர் பாராட்டியிருக் கிறார். இதனால் இவர் புலனழுக்கற்றவர் என்றும், பொய்யா நாவினர் என்றும், பொன்னையும் பொருளையும் போகத்தையும்விட, அன்பையும் அருளையும் அறத்தை யுமே போற்றினர் என்றும் நாம் அறிகிறோம். செந்நாப் புலவர் அரிசில்கிழாருடைய செய்யுட்களில் சீரிய அற வுணர்வு மிளிர்தலைக் காணலாம். கண்ணகியோடு கூடி வாழ்தலே தாம் வேண்டும் பரிசில் என வையாவிக்கோப்

பெரும்பேகனை வேண்டியது இவ் அறவுணர்வாலேயேயாம். இரும்பொறைக்கும் பிறர்க்கும் பகைமூண்டபொழுது அமைதியை நிலைநாட்டப் பாடுபட்டிருக்கிறார். இரும்பொறையின் பெரும்படைக்கு எதிர்நிற்பார் ஒருவர் இலர் என்பதனை அறிந்திருக்கிறார். சேரார் நாட்டுக்கேயன்றிச் சேரன் நாட்டுக்கும் போரினால் வரவிருக்கும் கேடுகளை உணர்ந்திருக்கிறார். இரும்பொறையின் அறிவையும் ஆண்மையையும் கைவண்மையையும் பகைவர் அறியாமைக்கு இரங்கி, அவர்பால் சென்று, அவனுடைய "வளனும் ஆண்மையும் கைவண்மையும், மாந்தர் அளவிறந்தன" எனப் பன்னாள் உரைத்திருக்கிறார். தாமுரைப்பவும் தெளியாதது கண்டு

பிற சான்றோரை விடுத்துத் தெரிவித்திருக்கிறார். பின்னும் மாற்றார் மாறாமை கண்டு, "ஆங்கும் மதிமருளக் காண்குவல், யாங்குரைப்பேன் என வருந்துவல் யானே" எனச்

சொல்லிக் கலங்குகிறார் (பதிற் ௭௩: ௧௧-௭). பகைவருள் ஒருவனாய அதியமான், களத்திலே பட்டுவீழ்ந்தபோது, அவனது வாளாண்மையைப் போற்றியிருக்கிறார் (புறம்: ௨௩௦). இச்செய்தியெல்லாம் புலவர்தம் அன்புடைமைக்கும், அறம்புரி கொள்கைக்கும், பெரும்புலமைக்கும் அழியாச் சான்றாகின்றன.

பாடிய பாடல்கள்

பாடியன
வாக, எட்டுத்தொகையுள், பதிற்றுப்பத்தில் பத்தும் (எட்டாம் பத்து) புறநானூற்றில் ஏழும் (146, 230, 281, 285, 300, 304, 342) குறுந்தொகையில் ஒன்றும் (193) ஆகப் பதினெட்டுச் செய்யுட்கள் காணப்படுகின்றன. திருவள்ளுவ மாலையில் ஒரு செய்யுளும் (13) இவரால் இயற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது. இவையன்றித் "தகடூர் யாத்திரை"யிலும் இவருடைய பாடல்கள் சில இடம்பெற்றிருந்தன என்பர்.

இவர் காலப் புலவர்கள்

கண்ணகி காரணமாக அரிசில்கிழார் பேகனைப் பாடி-
னர் எனக் கண்டோம். அக் காரணம் பற்றி அவனைப் பாடிய பிற புலவர்களாகிய கபிலரும் பரணரும் பெருங் குன்றூர் கிழாரும் இவர் காலத்தில் வாழ்ந்த புலவர்களாவர். அரசுகட்டில் ஒப்பக் காக்கப்படும் முரசுகட்டிலில், அறியாதேறி உறங்கியும், தவறு செய்யாது, துயில் எழுந் துணையும் கவரிகொண்டு வீசிய பெருஞ்சேரலிரும்பொறையைப் பாடியவர் (புறம்: ருo) ஆகிய மூத்தமிழ் முழுதறிந்த மோசிகீரனாரும் அரிசில்கிழாரது காலத்தவரே. பொன்முடியார் பாடிய புறம் ௩௧௨-இல் 'சிறுகோல் அஞ்சியொடு' எனவரும் தொடர் அதியமானைக் குறிக்கும் எனக்கொண்டும், "தகடூர் யாத்திரை"யில் சில பாட்டுக்களை அவர் பாடி

னர் எனக் கூறப்படுதல் கொண்டும், பொன்முடியாரும் அரிசில்கிழார் காலத்தில் வாழ்ந்தவர் என்பர்.

3. பெருஞ்சேரல் இரும்பொறை

இனி, அரிசில்கிழாரால் பாடப்பட்ட சேரமன்னனைப் பற்றிய செய்திகளைக் காண்போம். இவன் பெருஞ்சேரல் இரும்பொறை என்னும் பெயரினன்; தகடூர்ப் போரில் பெற்ற வெற்றி குறித்துத் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை எனவும் வழங்கப்படுவான்.

தாய் தந்தையர்

கோலத்திரி வமிசம், வஞ்சிவமிசம் என இரு மரபி னர் இக்காலச் சேரவேந்தருள் காணப்படுதல் போலவே, பதிற்றுப்பத்துக் காட்டும் சேரமன்னரும் உதியஞ்சேரல் மரபினரும், அந்துவஞ்சேரலிரும்பொறை மரபினரும் என இரு மரபினராவர். இவ்விரு மரபினருள் அந்துவஞ் சேரல் மரபினரைச் சேர்ந்தவன் பெருஞ்சேரல் இரும் பொறை.

கபிலரால்

இவனுடைய தந்தை, அருந்தமிழ்ப் புலவர் பாடப்பெற்ற ஏழாம்பத்தின் தலைவனாகிய

செல்வக்கடுங்கோ வாழியாதன் ஆவான். தாய், வேளாவிக்கோமான் பதுமன் என்பவனுடைய மகளாவள். இச் செய்தியைப்,

"பொய்யில் செல்வக் கடுங்கோ வுக்கு
வேளாவிக் கோமான் பதுமன் தேவி"
(பதிற்று. எட்டாம் பத்துப் பதிகம்: க-உ)

எனவரும் எட்டாம் பத்துப் பதிகத்தின் அடிகளால் உணரலாம்.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் மனைவியர் இருவருள் ஒருத்தியும் வேளாவிக்கோமான் பதுமனின் மகள் எனத் தெரிகிறது. (ச: க-ந) இதனைப்பற்றிப் பின்னர்க் காண்போம்.

மனைவி-மக்கள்

இரும்பொறையின் கோயிலாளாக இலங்கிய பெருமகள் அந்துவஞ்செள்ளை என்பாள். இவள் மையூர் கிழான் வேண்மானின் அருந்தவ மகள்; மலர்மகளை உருவாலும் திருவாலும் பிறநலங்களாலும் ஒத்தவள். இவளுடைய உருவையும் திருவையும் உயர்தனிப் பண்புகளையும்,

"சாய்அறல் கடுக்கும் தாழ்இரும் கூந்தல்
வேறுபடு திரு..." (பதிற்று, எசு: ௩-சு) என்றும்,

"நலம்பெறு திருமணி கூட்டும் நல்தோள்
ஒடுங்குஈர் ஓதி ஒண்ணுதல்..." (பதிற்று, எசு: கசு-எ) என்றும் அரிசில்கிழார் போற்றுவர்.

சேரன்
பிறந்தவனே
இரும்பொறைக்கும் அந்துவஞ்செள்ளைக்கும்
இளஞ்சேரலிரும்பொறை. இவ் இளஞ்சேரல்

எண்ணும் எழுத்தும் முற்றக் கற்றவன்; இயற்கையறிவும் செயற்கையறிவும் ஒருங்கமையப்பெற்றவன்; நடுவு நிலைமையும் சால்பும் உள்ளிட்ட நற்பண்புகள் எல்லாம் நிறைந்தவன்; நாடாள்வதற்கு வேண்டும் நல்லரசியலறிவு முழுதும் வாய்ந்தவன். கருவிலே திருவுடைய இவ் வரும்பெறற் புதல்வனைக், கொஞ்சி மகிழ்வதற்கு மட்டுமன்றிக் கோலின் கீழ் வாழ்வார்க்கு ஏமம் அளிக்கும் பொருட்டும் பெற்றெடுத்தான். பெருஞ்சேரலிரும்பொறை கொற்றவனின் புதல்வற்பேறு குடிமக்களுக்கு நலம் பயக்கும் என்பது பண்டைத்தமிழ் மக்கள் கொள்கை. பெருஞ்சேரலின் மகப்பேற்றை;

"எண்இயல் முற்றி ஈரறிவு புரிந்து
சால்பும் செம்மையும் உளப்படப் பிறவும்
காவற்கு அமைந்த அரசுதுறை போகிய
வீறுசால் புதல்வன் பெற்றனை இவணர்க்கு
அருங்கடன் இறுத்த செருப்புகல் முன்ப."

(பதிற்று, ௭௪: ௧௮-௨௨) எட்டாம் பத்து

837

என அரிசில்கிழார் சீரிய கூரிய தீஞ்சொற்களால் போற்றுவர்.

பண்புகள்

பழக்க வழக்கங்களாலும் சூழ்நிலைகளாலும் தாம் பண்புகள் வளர்கின்றன; தேய்கின்றன; மாறுகின்றன.

எனினும் இயற்கையிலே பண்பற்ற ஒருவனைச் பண்படுத்தாது. பேய்ச்சுரைக்காயின் காய்,

செயற்கை
உப்பொடு
காயம் பெய்தட்டாலும் கைப்பறுதல் இல்லை. கைப்பு இல்லை என்றால் காயமும் உப்பும் அல்ல, காயின் பண்பே காரணம். நற்பண்புகளும் நாடாளும் திறனும் நிறைந்த மகனைப் பெற்றெடுத்த மாவேந்தனும சான்றாண்மை சான்றவனாக இருந்திருத்தல் வேண்டும். பெருஞ்சேரலிரும் பொறையும் ஆன்ற பண்புகளும் ஆட்சித் திறனும மிக்க வன் என்றே அரிசில்கிழார் காட்டுகிறார்.

உயர்வற உயரிய உயர்நலம்

பெருஞ்சேரல் இருமபொறை உயர்வற உயரிய உயர் நலம் உடையவன். அவனுடைய ஆண்மையும் கைவண்மை யும் செங்கோன்மையும் மக்களின் சிந்தையும் மொழியும் செல்லா அளவினை யுடையன.

“ வளனும் ஆண்மையும் கைவண்மையும்
மாந்தர் அளவிறந்தன.” (பதிற்று, எ௩: க௨-௩)

பிற பண்புகளும் இப்பெற்றியனவே என்பதனை

“ அனைய அளப்பருங் குரையை. ” (பதிற்று, எ௯ : அ)

எனும் அடியிற் குறிப்பர், அரிசில்கிழார். இவ்வாறு அளக்கலாகா அரும் பண்புகளை உடையவனாதலின், அறிவுடையவரை எண்ணினாலும், அஃது இல்லாதவரை எண்ணினாலும், அவனே பிறருக்கு உவமமாக உரைக்கப் படுதற்குரியவன்; அவனுக்குப் பிறர் உவமமாகமாட்டார். அறிவுடைய ஒருவனைக் குறிப்பிடுங்கால் இரும்பொறை போன்ற அறிஞன் என்றும், மடவோன்

ஒருவனைச் சொல்லும்போது பொறையனிடம் போன்று இவனிடம் அறிவில்லை என்றும்தான் இருப்பது
கூறுவர்;
கூறுதல் இயலும். அந்த அளவு, உயர்வற உயரிய உயர்நலமுடையவன், அவன். இதனையே,

> "உரவோர் எண்ணினும் மடவோர் எண்ணினும்
> பிறர்க்கு நீ வாயின் அல்லது நினக்குப்
> பிறர் உவமம் ஆகா ஒருபெரு வேந்தே."
>
> (பதிற்று, எஉ: க-ங)

எனச் சுருங்கச் சொல்லி விளங்கவைப்பர், புலவர் அரிசில் கிழார்.

மயர்வற மாண்ட மதிநலம்

இரும்பொறை உயரிய பண்புகளொடு

மயர்வற மாண்ட மதிநலமும் வாய்ந்தவன். நனந்தலை உலகில் நல் லிசை நிறுவுதற்கேற்ற கல்வி நலம் சிறக்கப்பெற்றவன்.

அவன் கொண்டிருந்த கல்வியறிவு குற்றமற்றது; குறைவடையாதது. இதனைத் "தொலையாக் கற்ப" (பதிற்று, அ௭: களை) எனப் புலவர் விளித்துப் பேசுமாற்றால் அறியலாம்.

அறிவு நலமும் அதற்கேற்ற அருள்நலமும் மிகுந்தவனாக இரும்பொறை திகழ்ந்தான். அறிஞர் பெருமக்களை ஆராய்ந்தெடுத்துத் தழுவிக்கொள்ளுதலும், அறியாராகிய கீழ்மக்களை விலக்குதலும் ஆகியவற்றைக் கடப்பாடாகக் கொண்டான். மதிநலம் சிறந்தோரின் மாண்ட செயல் கண்டு அருளுதலும், மடவோர் செய்யும் புன்செயல் கண்டு ஒறுத்தலும், அரசுமுறையாக்கொண்ட பெறலரும் அறிஞன், பெருஞ்சேரலிரும்பொறை. மன்னனின் மயர்வற மாண்ட மதிநலத்தை,

> " உரவரும் மடவரும் அறிவுதெரிந்து எண்ணி
> அறிந்தனை அருளாய் ஆயின்
> யார் இவண் நெடுந்தகை வாழு மோரே"
> (பதிற்று, எக: உ௯-எ) எட்டாம் பத்து

239

என நெஞ்சையள்ளும் செஞ்சொற்களால் அரிசில்கிழார் போற்றி உரைப்பர்.

வேதமுணர்ந்து வேள்வி செய்தல்

பெருஞ்சேரலிரும்பொறை, அறம் பொருளின்பமும் பயக்கும் கல்வி மட்டுமன்றி வீடு பயக்கும் வேதப்பொருட் கேள்வியும் மிகவுடையன்; அறிவர் உரைப்ப அருமறைப் பொருளைக்கேட்டு, அவர் உரைத்த விரதங்களை அயராது மேற்கொண்டொழுகி, அப் பொருளை நடைமுறையில் தெளிந்து நல்லறிவு கைவரப் பெற்றவன்; ஒழுக்கத்தால் உயர்ந்த சான்றோர் உவகை எய்தும்படி வேள்விகளைச் செய்து முடித்தவன். அரசியலறிவொடு அருமறைப்பொருளுணர்வும் பெற்று, ஆன்றோருவப்ப வேள்வி வேட்ட அருமையைக்,

"கேள்வி கேட்டுப் படிவம் ஒடியாது
வேள்வி வேட்டனை உயர்ந்தோர் உவப்ப."

(பதிற்று, எசு: க-உ)

என அகங்குளிரப் புகழ்வர் அரிசில்கிழார்.

நரைமூதாளனுக்கும் நல்லறிவு கொளுத்தல்

கற்றலும் கேட்டலும் வல்ல காவலன், நிற்றலும் வல்லவன். தன்னுடைய தவவொழுக்கத்தால், இரும்பொறை தன் புரோகிதனுக்கும் அறிவுக்கொடை அளித்தான். புரோகிதனும் சாதாரணமானவன் அல்லன்; அறிவாலும் ஆண்டாலும் மூத்தவன்; உணரத்தகுந்தவற்றை உணர்ந்தவன்; உணர்ந்தவற்றைப் பிறர்க்கெடுத்து உரைப்பவன்; உரையால் பிறரை நன்னெறியில் ஒழுகச் செய்பவன். அத்துணைச் சிறப்பு வாய்ந்த புரோகிதனையும்கூடச் செல்வமும் சிறப்பும் தெய்வமும் கொடைப் பண்பும் குழந்தைப்பேறும் முன்னைத் தவமுடையவர்க்கே உண்டென்று அறியச் செய்தான்; கடுந்தவம் இயற்றக் காடு செல்லப் பணித்தான்; சேரன், அருமறைப்பொருள் குறித்து விரிவுரை நிகழ்த்தினனல்லன்; காவலன் என்ற முறையில்

கானஞ்செல்லக் கட்டளையிட்டானல்லன்; புரையற்ற தன் ஒழுக்கச் சிறப்பால் புரோகிதனே செய்தான். இதனை, அறிந்து செல்லுமாறு

"... ... ... நின்வயின்
முழுதுணர்ந்து ஒழுக்கும் நரைமூ தாளனை
வண்மையும் மாண்பும் வளனும் எச்சமும்
தெய்வமும் யாவதும் தவம் உடையோர்க்கு என

வேறுபடு நனந்தலை பெயரக்
கூறினை பெரும நின் படிமை யானே."
(பதிற்று.

எச: உகூ-அ) எனப் புலவர் கூறுமாற்றால் அறியலாம்.

.

வாய்மை

"பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று." (குறள்
: உகஎ)

என்றார் பொய்யில் புலவர். வாய்மையெனும் ஒன்றனுள் பிற அறக்கூறுகளெல்லாம் அடங்கும் என்பர். பிற அறஞ் செய்யானாயினும் வாய்மை பேசுபவனே பேணுதகவுடைய வன் ஆவன். ஆயினும் பிற அறங்கள் எல்லாமும் எஞ் சாது செய்த பெருஞ்சேரல் இரும்பொறை வாய்மை பிற ழாதவனாயும் இலங்கினன். அவனுடைய நாவு, தான் வழங் கும் மெய்ம்மொழியால் விளக்கம் பெற்றது; யாதொன் றும் தீமை இல்லாத சொல்லுதலால் செம்மையுற்றது; 'வயங்கு செந்நா'வினராய வண்டமிழ்ப் புலவர் அரிசில் கிழாராலேயே "வயங்கு செந்நா" (எகூ: ரு) எனப் பாராட் டப்பெற்றது. வாய்மை நலம் சிறந்த இவ் வானவன் வரை யாது வழங்கும் வள்ளலாகவும் திகழ்ந்தான்.

கொடைப் பண்பு

அரசு கட்டிலில் இருக்கும்பொழுதேயன்றி, முர சொலிக்கப் படைகொண்டு சென்று, பாசறையில் இருக்

கும்பொழுதுகூடப், பாடியும் ஆடியும் இரந்து வருவோர்க்குக் களிறும் குதிரையும் கணக்கின்றிக் கொடுக்கும் பண்பினன், இரும்பொறை.

எட்டாம் பத்து

"இரந்தோர் வாழ நல்கி இரப்போர்க்கு
ஈதல் தண்டா மாசிதறு இருக்கை" (பதிற்று. எசு: எ-அ.)

ஈத்துவக்கும் இன்பத்தை அறிந்தவன்; ஈதலால் இசைபட வாழ்தல் கூடும் என்பதனை உணர்ந்தவன்; எனவே, மன்னன் இரப்போர் நடுவில், ஈயும் செயலில், எதனையும் என்றும் விலக்காத இயல்பினன். வரையாது வழங்கும் இவனது வண்மையைக்,

"கொடை போற்றலையே இரவலர் நடுவண்"
(பதிற்று. எக: உ)

எனக் கூறி மகிழ்வர், அரிசில் கிழார். எட்டாம் பத்தால் தன்னை ஏத்திய இப் புலவர்பெருமானுக்குப் பெருஞ்சேரலிரும்பொறை அரும்பெறல் மரபின் அரசு கட்டிலையே கொடுத்தான் எனப் பதிகம் கூறுதலும் இவன் கொடை போற்றுக் கொள்கையன் என்பதனை வலியுறுத்தும்.

வீரம்

ஈரம் நிறைந்த மனவியல்புடைய சேரன், வீரம் செறிந்தவனாகவும் விளங்கினான். இவனது வீரத்தை, ஏற்ற பல உவமை கூறி விளக்குவர், இப் பத்தின் ஆசிரியர். கொட்டுதல் வல்ல குளவியையும், சிங்கத்தையும், பசி கொண்டே நீங்கும் பேயையும், பனிப்பச் செய்யும் அணங்கையும், பல்லுயிரும் அழியும் ஊழிக்காலத்து மடங்கல் தீயினையும் இம் மாவீரனுக்கு உவமை கூறியுள்ளார், அரிசில் கிழார்.

குளவி சிறுவரிடத்துப் பகையின்றிக் கூட்டில் தன் இனத்தோடு துஞ்சும்; கோமான் இரும்பொறையும் பிறர்பால் பகையின்றி நாடாள்வான். அறியாமையால் குளவிக் கூட்டைக் கலைத்துவிட்ட சிறுவர், அது கொட்டும் என்று அஞ்சி, மூலைக்கொருவராய்த் தறிகெட்டு ஓடுவர்; இரும்பொறையின் வலிமையறியாமல் எதிர்த்துக் கிளம்பிய மன்னரும் ஏற்படவிருக்கும் கேட்டுக்கு அஞ்சி அலமந்து ஓடுவர். குளவி கொட்டியபோது உண்டாகும் துன்பம் மிகுதி;

கொற்றவன்சேரன் சினந்து எழுந்தபோது விளையும் கேடும் மிகுதி.

> “கடும்தேறு உறுகிளை மொசிந்தன துஞ்சும்
> செழுங்கூடு கிளைத்த இளந்துணை மகாரின்

அலந்தனர் பெரும நின் உடற்றியோரே."
(பதிற்று. எக: கூ-அ)

பெரிய புலியையும் கொல்லும் வலிமையுடையது, அரிமா எனும் சிங்கம்; முடியுடை வேந்தரையும் போர் முனையில் புறங்காணச் செய்வான், பொறையன். புலியைக் கொன்றதனாலும் சோர்வடையாது உடனே சென்று பெரிய யானையினைக் கொல்லும் ஆற்றலது, அரிமா; வேந்தரை வீழ்த்தியதனாலும் தளராது வேளிர் முதலாயினாரை வெல்லும் திறமுடையவன், சேரன்.

"இரும்புலி கொன்று பெருங்களிறு அடூஉம்
அரும்பொறி வயமான் அனையை பல்வேல்
பொலம்தார் யானை இயல்தேர்ப் பொறைய."
(பதிற்று. எடு: க-ங)

பேய், பல்லாற்றானும் மனிதனைவிட வலிமை மிகுந்தது. அறிவாலும் ஆற்றலாலும் அரும்பொருளாலும் பெரும்படையாலும் இரும்பொறை பிற மன்னரினும் மேம்பட்டவன். பேயொடு சண்டையிட்டு மனிதன் வெல்லுதல் அரிது; சேரனுடன் பொருது வெல்லுதல் பிறர்க்கு அரிது. தனக்குரிய பலியை மனிதன் தந்துவிட்டால் அவனுயிரைக் கொள்ளாது பேய் செல்லும்; பகைவர் திறை தந்து பணிந்தால் அவருயிர் கொள்ளாது சேரன் செல்வான்.

"பலிகொண்டு பெயரும் பாசம் போலத்
திறைகொண்டு பெயர்தி வாழ்கநின் ஊழி."
(பதிற்று. எக: உங-ச)

மனிதரின் உயர்ந்து விளங்குவது,
னருள் சிறந்து திகழ்பவன் பொறையன்.

அணங்கு ; மன்
தெய்வத்தொடு

மாறுபட்டு வெல்லுதல் மனிதர்க்கு அரிது; சேரனைப் பகைத்து வெல்லுதல் மன்னருக்கு அரிது. அணங்கினை வணங்குதலே மக்களால் இயலும் ஒரே செயல்; பொறையனை வழிபடுதலே புவியாள்வோர் செயற்பாலது.

"பெருங்களிற்று யானையொடு அருங்கலம் தராஅர்
மெய்பனி கூரா அணங்கு எனப் பராவலின்."
(பதிற்று. எக: உஉ-க)

நிலமகளின் சுமை நீங்கும் ஊழிக் காலம் வந்தால் இருள்படர்கிறது; மாற்றாரது "ஆட்சிச் சுமை" நீங்கும் காலம் வரின், பொறையனொடு அவர்கொண்ட பகைமை வளர்கிறது. ஊழிக்காலத்தில், உலகமெல்லாம் தன்னில் மூழ்கி மறையும்படி, வெள்ளம் விரைந்து பரந்து எழு கிறது; பகைவரது படையும் கடுகப் பெருகித் தோன்று கிறது. இறுதிக் காலத்தில் பன்னிரு ஞாயிறுகள் பல்வேறு இடங்களில் தோன்றிச் செறிந்த இருளை நீக்குகின்றன; பொறையனது வெண்கொற்றக்குடையின் தண்ணொளி பகையிருளைத் துரத்துகின்றது. வடவைத்தீ ஊழி வெள் ளத்தை வற்றச் செய்கிறது; வானவன், பகைவரது கடலனைய படையின் மிடலைக்கெடுக்கிறான்.

"துஞ்சல் உறாஉம் பகல்புகு மாலை
நிலம்பொறை ஒராஅ நீர் ஞெமரவந்து ஈண்டி
உரவுத்திரை கடுகிய உருத்து எழு வெள்ளம்
வரையா மாதிரத்து இருள்சேர்பு பரந்து
ஞாயிறு பட்ட அகன்றுவரு கூட்டத்து
அஞ்சாறு புரையும் நின்தொழில் ஒழித்துச்
செஞ்சுடர் நிகழ்வின் பொங்குபிசிர் நுடக்கிய
மடங்கல் தீயின் அனையை
சினங்கெழு குரிசில் நின்
உடற்றிசி னோர்க்கே."
(பதிற்று, எஉ: அ-கசு)

4. ஆட்சியின் மாட்சி

இவ்வாறு சேரனது வீரத்தைத் தெளிவுபடக்

கூறிய செந்தமிழ்ப் புலவர் அரிசில்கிழார்,
அவனது செங்கோல்

பிறழாத ஆட்சிச் சிறப்பையும் பலவாறு புகழ்ந்துள்ளார். ஆயினும் அவர் வரலாற்றாசிரியரல்லர்; வண்டமிழ்ப் புலவர். அவர் பாடல்களில் வரும் ஒருசில தொடர்களைக் கொண்டு அவனது ஆட்சிச் சிறப்பு யாது என்றறிதல் கூடுமே யன்றி, ஆட்சி எவ்வாறு நடைபெற்றது என்று விளக்கமாகக் கூறுதல் இயலாது. அரசியலமைப்பையும் ஆட்சி முறைமையையும், அங்கொன்றும் இங்கொன்றுமாக வரும் தொடர்களைக்கொண்டு நாம் உய்த்துணர்தல் கூடும்.

செங்கோன்மை

பொதுவாகச்
பொறை செங்கோல்
தல் இயலும்.
சேரமான் பெருஞ்சேரல் இரும்
வழுவாமல் ஆண்டான் எனத் துணி

"தம்மின் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாம் தலை."
(திருக். ௪௪௪)

என வள்ளுவர் வகுத்த அரசியலை நன்கு உணர்ந்தாளு தலின், இவன் பெரியோரைப் பேணிக்கொண்டான். சிறியோரை அளித்தோம்பலும் செங்கோன்மை ஆதலை உணர்ந்து, சிறியோர்க்கு அருள்செய்து அவரைப் பாதுகாததான.

"பெரியோர்ப் பேணிச் சிறியோரை அளித்தி."

(பதிற்று, எக: ங)

எனப் புலவர் விளித்துப் பேசுதலால் அவன் தல் பெறப்படும்.

செங்கோலனு அமைச்சர்

அவனது ஆட்சி
பெற்றுச் சிறந்தது.

அரசுக்குரிய உறுப்புகள் ஆறும்
அறமே காணும் உள்ளத்தினராய

அமைச்சர் பலர், அவன் முன்னோர் காலத்தில் ஆட்சிக்குத் துணைபுரிந்தது போன்றே அவன் காலத்தும் பாதுகாப்பாயிருந்தனர்; மன்பதை காக்கும் வழிமுறைகளை மன்ன

னுக்கு அறிவுறுத்தினர்.
சூழ்ச்சிவன்மை முதலிய
காவலனும் அவரைப் போன்றே தான்.
இயல்பெல்லாம் பெற்றுத் திகழ்ந்
"நாடுநின்

முன்திணை முதல்வர்க்கு ஓம்பினர் உறைந்து
மன்பதை காப்ப அறிவு வலியுறுத்து
நன்றுஅறி உள்ளத்துச் சான்றோர் அன்னநின்
பண்பு." (பதிற்று,

எஉ: ச-எ) என்பதனல் இதனை உணரலாம்.

படை

அரசுக்குரிய மற்றோர் இன்றியமையாத உறுப்புப் படையாகும். நாடு காத்தற்கும் பெருக்கற்கும், வலிமை மிகுந்த படை இன்றியமையாதது என்பது யாவரும் அறிந்த செய்தியாகும். பெருஞ்சேரல் பெற்ற பெருவெற்றிகளைக் காணின், அவன் அளப்பரும் தானை உடையவனாயிருந்திருத்தல்வேண்டும் என்பது புலனாகும். அன்றியும் நால்வகைப் படையும் அவனிடம் நனிமிக்கிருந்தன என்பதனைப் புலவர் நயம்பட ஒரு பாடலில் கூறுவர். "வழிச் செல்லும் புதியவர்களே! பொறையனின் படை எத்துணைப் பெரிது என்று கேட்பீராயின் கூறுவேன்; கேளுங்கள். வேலைப்பாடமைந்த தேர்களும், விரைந்து செல்லும் குதிரைகளும், வீரர்களும் எண்ணமுடியாத அளவில் இருத்தலால் எண்ணினேனலலேன். கட்டுத்தறியோடு பிணிக்க இடம் தாராது, குத்துக்கோல் பலவற்றைச் சிதைத்து, வானத்தில் வட்டமிடும் பருந்தின் வையத்து நிழல்மீது சினந்து பாய்வனவும், கொங்கருடைய பசுக்கள் கூட்டங்கூட்டமாகச் செல்வதுபோன்ற செலவினையுடையனவுமாகிய யானைகள் பலவற்றை அவன் தானையில் காண்கின்றேன்" எனப் படையின் பேரளவைக் கூறாமல் கூறி விளக்குகிறார், அரிசில்கிழார் (எஎ).

இரும்பொறையின் படைத்தேர்கள், எதிர்ப்படை வீரர் அழிந்து ஓடவும், இகலிய அரசர் இறந்து வீழவும்,

இவ்வாறு எதிர்த்தோரைக் கொன்று
துணங்கையாடிப், பின் இப்போரில் ஒழிந்த
முன்னர்த்
பகைவர்

பிணத்தின்மீது உருண்டோடியும் வாய்தேயாத
கவேள யுடையன ; விரைந்து செல்லுதற்கேற்ற
பாடமைந்தவை.
சக்கரங்
வேலைப்

"மன்பதை பெயர அரசு களத்து ஒழியக்
கொன்றுதோள் ஓச்சிய வென்றுஆடு
துணங்கை
மீபிணத்து உருண்ட தேயா ஆழியின்

பண்ணமை தேரும்."
(பதிற்று, ரு-சு)

"வேழமுடைத்து மலைநாடு" என்பதற்கேற்ப, வெந்திறல் பொறையனின் படை, எண்ணற்ற களிறுகளைத் தன்னகத்தே கொண்டிருந்தது. அக் களிறுகள் கட்டுத் தறியில் பிணித்தற்கு அடங்காது, தறியையே முறித் தழிக்கும் ; உடலில்படும் குத்துக்கோலை, ஊடுருவும் வலிமையின்றிச் சிதைந்துபோகச் செய்யும் உடல் வலிமை யுடையன ; பகையல்லாத பருந்தின் நிழலையும் பகையாகக் கருதிச் சினந்து பாய்தற்கேற்ற மதக்களிப்புடையன.

"கந்துகோள் ஈயாது காழ்பல முருக்கி
உகக்கும் பருந்தின் நிலத்துநிழல் சாடிச

சேண்பரல் முரம்பின் ஈர்ம்படைக்
கொங்கர்
ஆ பரந்தன்ன பல்செலவின்
யானை.”

(பதிற்று, எஎ: கூ-கஉ)

அத்துணை ஆற்றலுடையனவேனும் போரில் புண்பட்டு விட்டால், அவற்றை மீண்டும் பயன்படுத்துதல் இல்லை. புண்களைப் போக்கி இரப்போர்க்குக் கொடுத்துவிட்டுப் புதுப்புதுக் களிறுகளைப் போர்க்களத்தில் பயன்படுத்தி வந்தனர்.

“புண் ஒரீஇப்
பெருங்கைத் தொழுதியின் வல்துயர்
கழிப்பி
இரந்தோர் வாழ நல்கி.”

(பதிற்று, எக:ங-எ)

குதிரைகளோ கொங்கர் நாட்டிலுள்ள ஆடுகளைப் போல எண்ண இயலாத அளவுடையன. “தம் நாட்டு

யாடு பரந்தன்னமா” (எஅ: கஉ-ந) எனப் புலவர் கூறுதல் காண்க.

காலாட்களோ 'புகழெனின் உயிரும் கொடுக்குவர்; பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்;' மறம் சிறந்தவராயினும், அருளே இல்லாதவரல்லர். பணிந்த பகைவர்க்கு அருள் வழங்கும் பண்பினர். காமூர்ப் போரில் கழுவுள் அடைமதில்பட்டுக் கிடப்ப, அவன்கீழ் வாழ்ந்த இடையர்கள் சேரன் வீரரைப் பணிந்தனர். பசுக்கள் தரும் பாலின் பயன்கொண்டு உயிர்வாழும் பான்மையரேனும், அவற்றைக் கொடுத்தாயினும் சேரன் அருளைப் பெறவேண்டும் என்றெண்ணிப் பசுக்களோடு கன்றுகளையும் தந்தனர். கண்ட சேரன் மறவர், கருணை மீக்கூர, ஏற்கனவே கைப்பற்றிய ஆனிரைகளையும் அவர்களுக்கு வழங்கினர்.

"ஏறொடு
கன்றுடை ஆயம் தரீஇப் புகல் சிறந்து
புலவுவில் இளையர் அங்கை விடுப்ப."
(பதிற்று. எக :கரு-கு)

இச் செய்தி பொறையனின் படைஞர்
அன்பும் அருளும் அறமும் பெருகவுடையர்
தெளிவாக விளக்குகின்றது.

மறமேயன்றி
என்பதனைத்

பொறையனின் நால்வகைப் படையும் போருக்கு எழுந்தாலே பகைவர் நடுங்கினர் ; முயன்று தாம் தேடிய செல்வமும், முன்னோர் ஈட்டி வைத்த பெரும் பொருளும் கெட்டனவென்று புலம்பினர். வளமேயன்றி வாழ்க்கையும் பாழ்பட்டதென்றெண்ணி வருந்தினர்; உள்ளமும் உடலும் ஒருங்கே நடுங்கினர்.

"விருந்தின் வாழ்க்கையொடு பெருந்திரு அற்றென...
மெய்பனி கூரா." (பதிற்று. எக : கக-உக)

சிந்தையில் பகைமை மிஞ்ச, அறிவு ஒழியச், சினத்திற்கு ஆளாகி, விளைவையும்

செயற்படாது
பயனையும் சீர் 248 பதிற்றுப்பத்துச்
சொற்பொழிவுகள்

தூக்கிப் பாராதவர் தாம் சேரனைப் பகைப்பர். சிந்தித்திருந்
தால் அவர்கள் தமது சிறுமையும் சேரனது பெருமையும்
நன்கு தெளிந்திருப்பர் ; சேரவிருக்கும் துன்பத்துக்கும் பழிக்கும் அஞ்சியிருப்பர். பகைவர் பலராய்த் தம்முள் கூடிநின்று பாதுகாத்தாலும் தம் நாட்டைக் காத்தல்

இயலாது; சேரனையும் ஒரு சிறுபொழுதும் நிற்றல் முடியாது.

எதிர்த்து

"இகல் பெருமையின் படைகோள் அஞ்சார்
சூழாது துணிதல் அல்லது வறிதுடன்
காவல் எதிரார் கறுத்தோர்." (பதிற்று. எஉ : க-ந)

வேந்தராயினும் வேளிராயினும் வேறு பிறராயினும்

சேரனைப் பணிந்து
செல்வம் மிக்க அவர்

அவன் ஏவல்வழி ஒழுகாராயின்,
தம் ஊர்கள் கெட்டழியச, செந்நெல்
சோறு பெறாது வருந்துவர்; நாட்டை நன்
இயலாதவர் ஆவர்.

முறையில் ஆள

"வேந்தரும் வேளிரும் பிறரும் கீழ்ப்பணிந்து
நின்வழிப் படாஅர் ஆயின்......
செந்நெல் வல்சி அறியார்; தத்தம்
பாடல் சான்ற வைப்பின்
நாடுடன் ஆள்தல் யாவணது அவர்க்கே."
(பதிற்று. எரு : ௬-ரு; கஉ-௬)

இவ்வாறு படையின் பெருமையினையன்றிப் பகைவர்

துயரையும் விரித்துரைத்தல் வழியாகச் சேரனது படைச்
சிறப்பைப் போற்றுவர், அரிசில் கிழார்.

போர் முறை

புறத்திணை இயல் கூறும் முறையே காலத்துப் போர் நடைபெற்றது எனலாம்.

பொறையன் தம்
போர் வீரர் யும்

அகன்ற மார்பினைச் சந்தனமும் அடையாளப் அணி செய்யும்; ஆற்றல் மிகுந்த தோளில்

பூ மாலை
அழகுப்
பதக்கங்களென விழுப்புண்கள் மிளிரும்; முன் கையில் தொடி ஒளி விடும்; அடி பின்னிடாத ஆன்ற கொள்கை உள்ளத்தே நின்று நிலவும். இதனைச்,

"சாந்து புலர்ந்த வியன் மார்பின்
தொடி சுடர்வரும் வலிமுன்கைப்
புண்ணுடை எறுழ்த்தோள் புடையல்அம் கழல்கால்
பிறக்குஅடி ஒதுங்காப் பூட்கை." (பதிற்று. அ0: ௫-அ)

எனச் சேரனின் பகைப்படையோர் குறித்துப் பாவலர் கூறுமாற்றால் உணரலாம்.

இரு படைகளும் எதிர் நின்ற பொழுது, வானவன் படையினர் எதிர்ப்படை வீரரை நோக்கி, 'எங்கள் பெருஞ் சேரலிரும்பொறைக்கு உங்கள் திறையினைச் செலுத்திப், பணிந்து நின்று பாதுகாப்படையுங்கள்' என அவன் தலைமைப் பண்புகளைப் புகழ்ந்து கூறுவர். பகைவர் படைப் பரப்பு முழுதும் தம் சொல் பரவுதல் வேண்டி இரு மருங்கும் உலவிச் சென்றுரைப்பர்.

"ஒள்வாள்
ஒடிவுஇல் தெவ்வர் எதிர்நின்று உரைஇ
இடுக திறையே புரவி எதிர்ந்தோர்க்கு என
அம்புடை வலத்தர் உயர்ந்தோர் பரவ."

(பதிற்று. அ0 : அ-கக)

போர் தொடங்கும் வரையும், பகைவர் தம் தவறுணர்ந்து திருந்த வாய்ப்பு நல்கினர், பொறையனின் மறவர். தோற்றபின்னரும் பகைவர் பணிந்து திறை தந்தனராயின், பகைமையை மறந்து அருளியிருக்கின்றனர். கழுவுளின் கீழ் வாழ்ந்த ஆயரிடம் கருணை காட்டிய நிகழ்ச்சி இதற்குச் சான்றாகும்.

இவ்வாறு காவலனைப் பணிந்து அவன் கட்டளை கேளாத கறுத்தவர் நாட்டு நிலம் கருதரிய பாழாம்; களிறு

பூட்டி உழுத இடத்தைக் கழுதை கட்டி உழுவர் ; கன்ன லொடு செந்நெல் மாறி வெள்வரகு விளையும்; கழனியெனத் திகழ்ந்தவெலாம் கரம்பை நிலமாகும்.

"நின்வழிப் படாஅர் ஆயின் நெல்மிக்கு
அறையுறு கரும்பின் தீஞ்சேற்று யாணர்

வருநர் வரையா வளம்வீங்கு இருக்கை
வன்புலம் தழீஇய மென்பால் தோறும்
மருபுல வினைஞர் புலவிகல் படுத்துக்
கள்ளுடை நியமத்து ஒள்விலை கொடுக்கும்
வெள்வரகு உழுத கொள்ளுடைக் கரம்பை."
(பதிற்று. ௭௫ : ௫-௧௧)

இணையற்ற இம் முறையில்தான் இரும்பொறை போர் விளைத்தான். மறங்கிளரப் பொருவுழியும் அறம் வளர்த்த மாண்பை, மதி சிறந்த அரிசில் கிழார் உணர்த்த உணர் தோறும் மனமினிக்கும்; வாயுரைப்ப மொழியுந்தான் இனிக்கும்.

அறமுறையில் பொருதமையாலோ, அரசியலறிவுத் திறமையாலோ, இரும்பொறை பெற்ற வெற்றிகள் நிலைத்தனவாக விளங்கின. பெரும்பாலும் பண்டைக்கால மன்னர் பகைவரை வெல்லுதலோடு கடமை தீர்ந்ததென இருந்தனர்; பெற்ற வெற்றியை அழியாததாக ஆக்கிக் கொண்டனரல்லர். மன்னனொருவன் வென்ற நாட்டை அவன் மரபில் வரும் பின்னோனும் மீண்டும் வெல்ல வேண்டியதாய் இருந்த நிலைமை, வரலாறு காணாத ஒன் றன்று. ஆயின் பெருஞ் சேரலிரும்பொறை தன் பகைவர் மீண்டும் தலையெடுக்க ஒட்டாமல் செய்தான். இவனால் சேர்த்துக்கொள்ளப்பட்ட - வெல்லப்பட்ட - நாடுகள் குறித்துப் போர் செய்யவேண்டிய தொல்லை, இவன் பின் வந்த இளஞ் சேரலிரும்பொறைக்கு இருந்ததில்லை என்பது இக் கருத்துக்கு அரண் செய்கிறது. பசியைப் பெற்று நீங்கும் பாசம் போலத் திறையைப் பெற்று நீங்குபவன் எனப் பெருஞ்சேரல் பாராட்டப்படுகிறானெனினும், அவனால் அழிக்கப்பட்டவர் மீண்டும் எழுந்தனரல்லர். இவ்வுண்மை, சொல் கடந்த அவனது ஆற்றலையும், அரசியல் சூழ்ச்சித் திறத்தையும் புலப்படுத்துகிறது.

5. போர்கள்

ஆற்றல் மறவர் படையும், அரசியல் சூழ்ச்சித்திறனும் மிகவுடையவன் பெருஞ் சேரலிரும்பொறை எனக்

கண்டோம். அவனுடைய வெற்றிகள் அழியாப் பண்பின என்றும் பார்த்தோம். இனி அவன் காலத்தில் நிகழ்ந்த போர்களைப்பற்றிக் கருதுவோம்.

பொறையன் காலத்தில் போர்கள் பல நடைபெற் றிருத்தல் வேண்டுமென்பது எட்டாம் பத்தினை நோக்கின் புலனாகும். கொடையினையும் நடையினையும் விட அவனது படையும் ஆண்மையுமே பல விடங்களிலும் கூறப் பட்டுள்ளன. பெருஞ்சேரல் புகார்மீதும் பூழி நாட்டின் மீதும் கூடப் போர் தொடுத்து வென்றிருத்தல் வேண்டும் என்பது,

> "காவிரி மண்டிய சேய்விரி வனப்பின்
> புகாஅர்ச் செல்வ பூழியர் மெய்ம்மறை."
>
> (பதிற்று. எங : அ-க)

என்னும் புலவர் கூற்றால் புலனாகும். அன்றி இவன் தந்தை செல்வக் கடுங்கோ வாழியாதனாலோ, முன்னோருள் ஒருவனாலோ இந்நாடுகள் வெல்லப்பட்டிருந்து, முன்னோர் வெற்றியைத் தம் வெற்றியாகக்கூறும் முன்னை மரபொட்டி, இவன் இவற்றை வென்றவனாகக் கூறப்பட்டிருத்தலும் கூடும். எவ்வாறாயினும் இவன் காலத்தில் நாற்பெரும் போர்கள் நடைபெற்றன என்பது மட்டில் உறுதி. பத்தும் பதிகமும் ஒத்துக் கூறும் காமூர்ப் போரும், கொல்லிப் போரும், தகடூர்ப் போரும், கொங்குப் போரும் இவன் காலத்தனவாகும்.

காமூர்ப் போர்

ஆயர் குலமக்கள் கழுவுள் என்பவனின் தலைமையின் கீழ் வாழ்ந்து வந்த நகரமே காமூராம். காமூர் மன்னனாகிய கழுவுள் பிற மன்னரொடு பெரும்பகை கொண்டிருந்தவன். "பொருமுரண் எய்திய கழுவுள்" (88 : 7) என்னும் பெருங்குன்றூர் கிழார் கூற்று இதனைத் தெளிவாக்குகிறது. குறிப்பாக இவன் இரும்பொறையொடு பெரும்பகை கொண்டவன். தொடக்கத்தில் சேரனுக்குப் பணிந்தொழுகிய சிற்ற

ரசனுக இருந்தான் எனவும், பின்னர்த்தான் தன் கீழ் வாழ்ந்த அண்டர் (ஆயர்)களேயும் தார்வேந்தர் சிலரையும் துணையாகக் கொண்டு இரும்பொறையை எதிர்த்துப் போர் செய்யத் துணிந்தான் என்றும் கூறுவர்.[1]

இரும்பொறையின் படை வீரர் காமூரிலே புகுந்து ஆனிரை கவர்ந்து வந்தனர்; வெம்போர் தொடங்கியது. வானவனின் பெரும்படை காமூரை வளேத்து முற்றுகை யிட்டது. ஆயர்கள் முதற்கண் ஆண்மை தோன்றப் பொருதனர். வில்லேந்தி அம்புதொடுத்த அவர் கைகள், வேற்றுப் படையினர் பலரைக் கொன்றதனுல் குருதி தோயப் பெற்றுப் புலவு நாறின. ஆயர்கள் பலர் ஆவி துறந்தனர்; அமரிலோ வெற்றி அவர்களுக்குக் கிடைக்க வில்லே. இழப்பு அதிகமாயிற்று; வெற்றியோ எட்டாத பழமாயிற்று. இந்நிலே கண்டும் கழுவுள் எதுவும் செய்தா னல்லன். மதில் விட்டு வெளிவந்து, மறப்போர் மிக விளேத்து, வெற்றி எய்தாவிட்டாலும் வீரமரணம் எய்தக் கழுவுள் துணிந்தானல்லன். அடைத்த கதவு திறந்து வந்து, ஆற்றல் சேர் இரும்பொறையின் அடிபணிந்து, அருளும் அமைதியும் வேண்டவும் கருதினுனல்லன். ஏற் பட்ட பேரிழப்பையும், இனியும் எதிர்ப்பதால் விளேயக் கூடிய கேட்டையும் எண்ணிப்பார்த்த இடையர்கள் வாளா விருத்தல் தீதென்று கருதினர். பசுப் பயன் கொண்டு உயிர்வாழும் பான்மையரேனும், பசுக்களேக் கொடுத்தாயி

னும் பொறையனின் பசு நிழல் வாழ்தல் வேண்டுமெனத் துணிந்தனர். ஆக்களோடு கன்றுகளையும் தாமே கொண்டு வந்து கொடுத்து, அவனருள் வேண்டி நின்றனர். கண்டார், சேரனும் மறவரும். கருணை பிறந்தது. அவர் கொடுத்த ஆனிரையொடு தாம் முன் கைப்பற்றியவற்றையும் அவர்க்கு அருளால் வழங்கினர்.

ஆனிரை தந்து அருள் பெற்ற ஆயர் செயலறிந்த கழுவுள், காமூர்க் காவலனாக இருந்தும் கடமையில் தவறிய

---

1. திரு. ஔவை. சு. துரைசாமிப்பிள்ளையவர்கள் : “பதிற்றுப்பத்து” (1950) உரை : பக்கம்: 430.

தெண்ணிக் கலங்கினான் ; பொறையனிடம் சென்று புகலடைதலே பழிதீர்க்கும் மருந்தென உணர்ந்தான் ; பணியில் தப்பிய காரணத்தால் பகலில் வெளிவர நாணினான் ; காரிருளில் வந்தால் காவலர் கொல்வரென்று அஞ்சினான் ; வழிச் செல்வோர் வடிவம் ஓரளவு புலப்படும் வைகறைப் பொழுதில் வெளிவந்து, வானவனைப் பணிந்து தலை வணங்கி நின்றான் . மதிகெட்டு, மானமிழந்து, அவன் வணங்கியது கண்ட அளவில், மனத்தில் கொண்ட பகைமை நீக்கி, மன்னித்து அவனுக்கு அருள் செய்து, மறப்போர்ப் பொறையன் மற்ற நாடுகள் நினைந்து செல்வானாயினன்.

“ ஏறொடு

கன்றுடை ஆயம் தரீஇப் புகல் சிறந்து

புலவுவில் இளையர் அங்கை விடுப்ப
மத்துக்கயிறு ஆடா வைகல்பொழுது நினையூஉ
ஆன்பயம் வாழ்நர் கழுவுள் தலைமடங்கப்
பதி பாழாக வேறுபுலம் படர்ந்து" (எ: கந-ந)

இதுவே பதிற்றுப்பத்துக் காட்டும் காமூர்ப்போர்க் காட்சியாகும். அகநானூற்றிலும் காமூர்ப்போர் ஒன்று குறிக்கப்பட்டுள்ளது வேளிர் பதினல்வர் காமூரை எறிந்தனர் என்பதே அக்குறிப்பாம். வேளிரால் வீழ்த்தப்பட்டவனும் கழுவுளே.

"அடுபோர்
வீயா விழுப்புகழ் விண்தோய் வியன்குடை
ஈரெழு வேளிர் இயைந்து ஒருங்கு எறிந்த
கழுவுள் காமூர் போல"
(அகம்: கருஙு. ௧0-௧௧; பரணர்)

கழுவுளைப்பற்றியும் காமூரைப்பற்றியும் பதிற்றுப்பத்துக் குறிக்கும் இடங்கள் இரண்டேயாகும். பாடல் 71-இல், அரிசில் கிழார், பெருஞ்சேரலிரும்பொறை கழுவுளை யடக்கியதாகக் குறிப்பிடுகிறார். பாடல் 88-இல் பெருங்குன்றூர்கிழார், இளஞ்சேரலிரும் பொறையின் முன்னோன் "பொருமுரண் எய்திய கழுவுள"ப்புறம் பெற்

றனன் எனக் கூறுகின்றார். இவ்விரிடமன்றி வேறெங்கும் இச்செய்தி காணப்படவில்லை. இவற்றாற் கழுவுள் பெருஞ் சேரலின் காலத்தவன் என்பதில் கடுகளவும் ஐயமின்றாம்.

கழுவுள் தலைமடங்கக் கண்டான் பெருஞ்சேரல் எனப் பதிற்றுப்பத்துப் பகர்கிறது. விண்தோய் வியன்குடைக்

கழுவுள த
எறிந்தனர்

காமூரை வேளிர் பதினால்வர் இயைந்தொருங்கு
என அகநானூறு அறைகிறது. இவற்றால்

வேளிர் கழுவுளை வென்ற காலமும்
மாதல் வேண்டுமென்பது தெளிவு.

பெருஞ்சேரலின் கால

வேளிர், பொறையன் போரிடும் முன்னரோ, பின்னரோ, கழுவுளை வென்றிருத்தல் கூடும்; இன்றேல் பொறையனுக்குத் துணையாக வந்து பொருந்தாக் கழுவுளைப் புறம்பெற்றிருத்தல் வேண்டும். வேளிரும் பொறையனும் வேறுவேறு பொருதனரா, உடனாகப் பொருதனரா என்பது ஆராயத்தக்கது.

வீணே நிகழ்ச்சிகளையும் பெயர்களையும் இரட்டித்துப் பெருக்குதல் விரும்பத் தக்கதன்று. அன்றியும் வேளிர் எனப்படுவார் சேரவேந்தர்க்குப் பெண்கொடுத்த மரபினர் ஆவர். இருவரிடையும் நல்லுறவே நிலைத்திருந்தது.

"வேந்தரும் வேளிரும் பிறரும் கீழ்ப்பணிந்து
நின்வழிப் படாஅர் ஆயின்...
நாடுடன் ஆள்தல் யாவணது அவர்க்கே"
(பதிற்று. எ௫:

௪-௫; க௪)

"வேந்தரும் வேளிரும் பின்வந்து பணியக்
கொற்றம் எய்திய பெரியோர் மருக"
(பதிற்று. அஅ:

க௩-௪)

என்பன போன்றவற்றால் வேளிர் சேரவேந்தரைச் சேர்ந் தொழுகியமை பெறப்படும். பொறையன் போர்தொடுக் கும் முன்னர் வேளிர் கழுவுளொடு பொருதனர் எனின், வேளிரால் வீழ்த்தப்பட்ட பின்னரும் சேரனொடு பொரும் அளவு கழுவுள் ஆற்றல் பெற்றிருந்தான் ஆவன். இது

வேளிர் வீரத்துக்கு இழுக்காம். பரணரோ வேளிரால் காமூர் அழிக்கப்பட்டது என்றே குறிப்பிடுகிறார். "எறிந்த" என்பது காண்க.

இவ்வாறே பொறையனால் தோற்கடிக்கப்பட்ட பின்னரும் வேளிரொடு போர்செய்யுமளவு கழுவுள் வலியுடையவனாயிருந்தானெனின் அது வானவன் வில்லினாற்றற்கு மாசாகும். இன்னோரன்ன காரணங்களால் வேளிர் பொறையனுக்குத் துணையாகப் போரிட்டிருத்தல் வேண்டும் என்றுரைத்தலே பொருத்தமாகும். அறிஞர்பெருமக்கள் ஆராய்வாராக.

கொல்லிப் போர்

இனிப் பெருஞ்சேரலிரும்பொறை காலத்து நிகழ்ந்த மற்றொரு பெரும்போராகிய கொல்லிப் போர்பற்றிக் காண்போம். கொல்லி, சேரநாட்டெல்லையில் அமைந்திருந்த மலையாகும். கொல்லியை ஆண்டவன், கொடைவன்மையும் கொடுவில் ஆண்மையும் உடைய ஓரியாவன். இதனைப்,

"பிறங்குமிசைக்
கொல்லி ஆண்ட வல்வில் ஓரியும்" (புறம். கடுஅ: ௬-௫) என்னும் பெருஞ்சித்திரனார் கூற்றாலும்,

"ஓரி
பல்பழப் பலவின் பயங்கெழு கொல்லி"
என்னும் பரணர் மொழியாலும்,

(அகம். ௨0அ: ௨௧-௨)

“ வல்வில் ஓரி கொல்லிக் குடவரை ” (குறுந். க00: ௫) என்னும் கபிலர் சொல்லாலும் தெளியலாம்.

எல்லைக் கல் என்பதனாலும், எழிலும் வளமும் உடையது என்பதனாலும், கொல்லியைச் சேரநாட்டோடு இணைக்கப் பொறையன் முயன்றான். பெருஞ்சேரல், நேரிடையாக ஓரியொடு போரிட்டுக் கொல்லியைக் கொண்டானல்லன்; கொல்வித்துக் கொண்டான். ஓரியைக் கொன்று,

கொல்லியைச் சேரனுக்குக் கொடுத்தவன் மலையமான் திருமுடிக் காரியாவன்.

“செவ்வேல்-
முள்ளூர் மன்னன் கழல் தொடிக் காரி
செல்லா நல்லிசை நிறுத்த வல்வில்
ஓரிக் கொன்று சேரலர்க்கு ஈத்த
செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லி” (அகம். உ0௯: கக-௫, கல்லாடனார்)

காரி, ஓரியைக் கொல்வதற்குரிய காரணம்பற்றிக் கருத்து வேறுபாடுள்ளது. "தகடூர் அஞ்சி திருக்கோவலூர்க் காரியைப் போர்க்களத்தில் முறியடித்துப் பின்னர் அவனை முற்றுகை செய்தான். காரி பகைவனை எதிர்த்து நிற்கமாட்டாமல் கொல்லிமலையைக் கொள்ள ஆவல்கொண்டிருந்த சேரன் பாதுகாப்பை வேண்டினன். காரி தான் விருப்புடன் சேவை செய்வதாக முன்வந்து ஒரு படையின் தலைமையில் சென்று ஓரியைத் தோற்கடித்துக் கொன்று கொல்லிமலையைச் சேரனுக்குச் சேர்ப்பித்தான்" என்பாரும்[1], "அதனல் அவர்கள் (சேரமன்னர்) முள்ளூர் மன்னனாகிய காரி என்பானுக்கும் இந்த வல்வில் ஓரிக்கும் பகைமை தோற்றுவித்து, அதுவே வழியாக அக்கொல்லியைக் காரியென்பான் கைப்பற்றித் தமக்கு அளித்துவிட வேண்டும் என ஏற்பாடு செய்து கொண்டனர்" என்பாரும்[2], உளர். காரணம் யாதாயினும் காரிவழியாகவே கொல்லியைச் சேரன் கைப்பற்றினன் என்பது மட்டில் உறுதியாகும்.

காரி வழியாகக் கொல்லிகொண்ட கொற்றவன் பெருஞ்சேரலிரும்பொறையே எனக் கருதுதற்குரிய காரணங்கள் பல. பதிற்றுப்பத்துள் கொல்லிமலை இரண்டே

---

1. டாக்டர். எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் அவர்கள்: "சேரன் வஞ்சி" (1946): பக்கம்: 151

2. திரு. ஔவை. சு. துரைசாமிப்பிள்ளையவர்கள்: "புறநானூறு" (1952): உரை: பக்கம்: 319.

பாடல்களில் (73, 89) தான் குறிக்கப்படுகிறது. இவ்விரு பாடல்களும் அந்துவஞ்சேரலிரும்பொறை வழிவந்த அரசர்களைப் பற்றியனவே. உதியஞ்சேரல் மரபினருள் ஒருவரைப் பற்றிய பாடல் ஒன்றிலேனும் கொல்லிச் செய்தியின்மை குறிப்பிடத்தகுந்தது. இதனால் கொல்லிகொண்டவன் இரும்பொறை மரபினனே என்பது புலனாகும்.

கொல்லி பற்றிய குறிப்புக்கொண்ட பாடல் இரண்டனுள் முதலாவது பெருஞ்சேரலிரும்பொறை பற்றியது. இப் பாடலில் அரிசில்கிழார், பொறையனைக் "கொல்லிப் பொருந" (73) என அழைத்துப் பேசுகிறார். போரிடுவோன் பொருநன் எனக் கூறப்படுவான் என்பது யாவரும் அறிந்த ஒன்றாகும். இரண்டாவது குறிப்பு இளஞ்சேரலிரும்பொறை பற்றிய பாடலொன்றில் வருகிறது. கொல்லி மலைவாழும் குறிஞ்சிநில மக்களின் சிறப்பும், அம்மலைத் தோன்றிய அழகுமலர்களை அரசியாரின் ஆயமகளிர் விரும்பிச் சூடிக்கொண்ட அருமையும் தாம் அப் பாடலில் கூறப்பட்டுள்ளன.

" முழவின் அமைந்த பெரும்பழம் மிசைந்து
சாறுஅயர்ந் தன்ன கார்அணி யாணர்த்
தூம்பு அகம் பழுனிய தீம்பிழி மாந்திக்
காந்தளங் கண்ணிச் செழுங்குடிச் செல்வர்
கலிமகிழ் மேவலர் இரவலர்க்கு ஈயும்
சுரும்பார் சோலைப் பெரும்பெயர்க் கொல்லிப்
பெருவாய் மலரொடு பசும்பிடி மகிழ்ந்து

மின்உமிழ்ந் தன்ன சுடரிழை ஆயத்து”

(பதிற்று. ௮௧: ௧௯-௨௬)

இவ்வாறு இவ்விரும்பொறையர் இருவருள்ளும் பெருஞ்சேரலே கொல்லிப்பொருநன் எனப்பட்டவனாதலின், கொல்லிப் போரோடு தொடர்புடையவனாவன்.

அன்றியும் அகநானூற்றுள், “வென்வேழ தானைப் பொறையன் கொல்லி” (62 : 12 - 13) எனப் பரணர் கூறுதலும் இக் கொள்கைக்கு அரண் செய்கிறது. பொறையன்

என்பது சேரர் பொதுப்பெயர் எனச் சிலர் வழக்காடுதல் கூடும். சேரர், சேரலர், குடவர், வானவர் எனும் பெயர்கள் இருமரபினரையும் குறிப்பனவாகத் தொகை நூல்களுள் வழங்கப்பட்டிருக்கின்றன. பொறையன் என்பதோ அந்துவஞ்சேரல் மரபினர்க்கே உரிய பெயராகத்தான் கையாளப்பட்டுள்ளது. பதிற்றுப்பத்தே இதற்குச் சான்று பகரும். அன்றியும் மேற்குறித்த அகப்பாடலில் பொறையன் என்பது பொதுப்பெயரோ மரபுப்பெயரோ அன்று, மன்னனொருவன்பெயரே என்பதனை அப்பரணரே, “பெரும்பூண் பொறையன் பேஎம்முதிர் கொல்லி” (89 : 4) எனக் குறுந்தொகையுள் கூறுமாற்றால் உணரலாம்.

மேற்குறித்த காரணங்களால், காரி வழியாகக் கொல்லி மலையும், சார்ந்த நாடும் கொண்ட கோமான் எட்டாம்

பத்தின் தலைவனாகிய பெருஞ்சேரலிரும்பொறையே எனத் துணிதலே பொருத்தமென்று காணலாம்.

யாவன்

தகடூர்ப்போர்

இனிப் பெருஞ்சேரல் இரும்பொறை நிகழ்த்திய போர்களுள் பெருஞ்சிறப்பு வாய்ந்த தகடூர்ப்போர் குறித்த செய்திகளைக் காண்போம்.

தகடூர் என்பது இக்காலச் சேலம் மாவட்டத்தி லுள்ள தர்மபுரி எனும் ஊராகும். இதனையொட்டி அதியமான் கோட்டை அமைந்திருந்த பகுதி இக்காலத்து அதமன் கோட்டை என்னும் ஊராகத் திகழ்கின்றது.

தகடூரைத் தலைநகராகக் கொண்டு அதியமான் மரபினர் ஆண்டனர். அதியமான் என்னும் பெயர் பிறந்த காரணம்பற்றி அறிஞர் பலர் பலபடக் கூறுவர். "அதியமான் என்பது அதிகமான் என்றும் அதிகைமான் என்றும் சில ஏடுகளில் காணப்படுவதுபற்றி, அதியர் என்பது அதிகையர் என்பதன் திரிபு என்றும், ஒரு காலத்தில் இவர் அதிகை என்னும் ஊரில் வாழ்ந்திருந்து பின்னர்ச்

சேரநாட்டில் குடியேறியிருத்தல் வேண்டுமென்றும், இதனால் அதிகையராகிய இவர் அதியர் எனப்படுவார் ஆயினர் என்றும்" [1]சிலர் கூறுகின்றனர். வேறு சிலர், "அதிகமான், அதிகன், அதிகைமான், அதியன்: இவ்வைந்தும் சேர வம்சத்தைச் சேர்ந்த, ஓரரசனைக் குறிக்கும் ஒருபொருட் பலபெயரென்று தோன்றுகின்றன,"[2] என்பர். மற்றுஞ் சிலர், "சேரர் கிளையினருள், அதியர் அதிகமான்கள் என்பவரும் ஒருவர்"[3] என்பர். அதியர் குடியினனாகிய நெடுமானஞ்சிக்குப் பனந்தார் கூறப்பட்டிருத்தலாலும் (புறம்: 99: 5), பனந்தார் கூறப்பட்டதன் காரணத்தை விளக்கவந்த பழைய உரைகாரர், "இவனுக்குப் பனந்தார் கூறியது, உதிய வேந்தாதலின்', (99: 5; உரை: பாடபேதம்) என்றனராதலாலும் இவன் சேரருள் உதியர் மரபினன் என்றும் உதியரிற் பிரிந்த இவரே அதியர் எனப்பட்டனர் என்றும் சிலர் கருதுகின்றனர். எவ்வாறாயினும் சேரர்க்கு உறவினராய அதியர் குடியினர் தகடூரைத் தலைநகராகக்கொண்டு மழநாட்டை ஆண்டனர் என்பது மட்டில் உறுதி.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்துக் காவிரியின் வட கரைப் பகுதி மழநாடாகும்[4] என்பர். வடநாட்டவரை வடவர் என்பது போலக், குடநாட்டவரைக் குடவர் என் பதுபோல மழநாட்டவரை மழவர் எனக் குறிப்பர். மழவர் கோமகனுகப், பெருஞ்சேரலிரும்பொறை காலத்தில் அதியர்குடிப் பிறந்த அதியமான் நெடுமானஞ்சி திகழ்ந் தான். இவனே தகடூர்ப் போரில் தோற்றிறந்தவனுவன் இக் காரணம்பற்றி இவன் அதியமான் தகடூர்பொருது

---

1. திரு. ஔவை சு. துரைசாமிப் பிள்ளையவர்கள்: "புற நானூறுI" (1952): உரை: பக்கம்: 208.

2. ராவ்பகதூர் வி. வெங்கையரவர்கள்: (டாக்டர் உ. வே. சு பதிப்பு: 1935) பக்கம்: 637.

"புறநானூறு"

3. திரு. மு. இராகவையங்கார் அவர்கள்: "சேரன் குட்டுவென்" (1933) பக்கம்: 19.

செங்

4. திரு. ஔவை. சு. துரைசாமிப்பிள்ளையவர்கள்: பத்து" (1950) பக்கம்; 275.

வீழ்ந்த எழினி எனவும் வழங்கப்படுவான். இவ் வஞ்சியும் இவ் வெழினியும் வேறென்பாரும் உளர். ஒருவரேயாதலை ஈண்டு விரிப்பின் பெருகும்; வேறோரிடத்துக் காண்போம்.

பெருஞ்சேரலிரும்பொறைக்கும் நெடுமானஞ்சிக்கும் போர் விளையக் காரணம் யாதென்பது புலப்படவில்லை. எல்லைப்புறத்தில் இருந்துகொண்டு தொல்லை விளைத்த நாட்டினரை வெல்ல
நெடுமானஞ்சியோடு

எண்ணிய சேரன் அவருள் ஒருவனுடைய
அமர்விளைத்தான் என்பர் சிலர். சேர
ரால் வெல்லப்பட்ட மழநாட்டில், அவரால் ஏற்படுத்தப் பட்ட ஆட்சியாளனாகத் தொடக்கத்தில் விளங்கிய அதிய மான், பிற்காலத்தில் அவரை எதிர்த்துக் கிளம்பியதால் பகை மூண்டது என்பர் வேறு சிலர். அஞ்சி கோவலூரைத் தாக்கி யழிக்கக், காரி சேரன் துணைவிரும்பி, ஓரியின் கொல்லியை வென்று சேரனுக்குக் காணிக்கை தந்தான் என்றும், சேரன் காரிபொருட்டாக அதியமானொடு பொரு தான் என்றும் கூறுவாரும் உளர்.

இப்போர் நடந்தேறிய முறையை இரு கட்டங்களாகப் பிரித்தல் கூடும். கொல்லிக் கூற்றத்தில் அதியமானோடு இருபெரு வேந்தரையும் சேரன் வென்றது முதற் கட்டம். தகடூர் அழிக்கப்பட்டது இரண்டாம் கட்டம்.

நெடுமானஞ்சிக்குத் துணைவந்த இருபெரு வேந்தரையும் கொல்லிமலை சார்ந்த நாட்டுப் பகுதியாகிய கொல்லிக் கூற்றத்தில் பெருஞ் சேரலிரும்பொறை வென்றான் (பதிகம் VIII) என்றும், நெடுமானஞ்சி தகடூரில் அரணகத்தே சில காலம் அடைபட்டுக்கிடந்தான் என்றும் காண்கிறோம். எனவே முடிமன்னர் இருவரின் துணையைப் பெறும் முன்னரோ பெற்றிழந்த பின்னரோதான் அவ்வாறு இருந்திருத்தல் கூடும். துணைவேண்டியும், வந்து சேராத நிலைமையில், தகடூர் மதிலுட்பட்டு இருந்தான் எனின், வந்தடைந்த போது வெளிப்பட்டுக் கொல்லிக்கூற்றத்தில் சேரனை எதிர்த்தான் எனல் பொருந்தாது. ஏனெனில் முற்றுகை முடிவில் தகடூர் அழிக்கப்பட்டது. இதனைத் "தகடூர்

நூறி" (78:9) என அரிசில்கிழார் கூறுதலால் அறியலாம். அன்றியும் அடைபட்டுக் கிடந்தவன் மதிலின் வெளிவந்து போருடற்றி உயிர் துறந்தது "தகடூர் யாத்திரை" யால் விளங்கும் என்பர்.[1] இவற்றால் கொல்லிக்கூற்றத்தில் அதியமான், பெருவேந்தர் இருவர் துணையுடன், பெருஞ்சேரலிரும்பொறையை எதிர்த்தான் எனவும் வேந்தர் சேரனிடம் தோற்றமை கண்டு, தகடூர் சென்று அரணகத்தே அடைபட்டுக் கிடந்தான் எனவும், பின்னர் இரும்பொறை தகடூரை முற்றுகையிட்டு அழித்துப், போருடற்றிய அஞ்சியையும் கொன்றான் எனவும் கொள்ளுதலே பொருந்துமெனத் தோன்றுகின்றது.

அதியமான், பகைவர் வேலை மார்பில் தாங்கிப் பட்டு வீழ்ந்தமை கண்டு, அரிசில்கிழாரும் ஒளவையாரும் இரங்கிப்பாடிய பாடல்களைப் புறநானூற்றுள் காணலாம். சேரனது இவ் வெற்றியைச் சிறப்பிக்க எழுந்த நூலே "தகடூர் யாத்திரை" என்பர்.

கொங்குப்போர்

காரியால் கொல்லிமலைநாடும், தகடூர்ப் போரால் மழ
நாடும் பொறையனுக்குக் கிட்டின. எஞ்சிய எல்லைப்புற நாடு கொங்கு ஒன்றே. அதியமானைக் கொன்று அவன் நாட்டைப்படுத்திய உடனேயே கொங்குநாட்டின்மீது பெருஞ்சேரல் படை யெடுத்துச் சென்றான்(78).

" இரும்புலி கொன்று பெருங்களிறு அடூஉம்
அரும்பொறி வயமான் அனையை" (பதிற்று.

எகு: க-உ)

எனப் புலவர் போற்றியது, இடையீடின்றிப்
இவ்வாற்றல் உடைமை பற்றியன்றோ?

போர்புரியும்

கொங்குநாட்டுப் படையினர் பார்ப்பவர்க்கு அச்சத்தை உண்டுபண்ணும் பார்வையினையுடையவர்; பகைவரை நேரே நோக்காது, எடுத்தும் படுத்தும் வளைத்தும் பார்க்

1. திரு. ஔவை. சு. துரைசாமிப்பிள்ளையவர்கள்: "புறநானூறுI" (1952)உரை: பக்கம்: 203.

கும் இயல்பினர். நேரே நோக்கினால் பகைப் படையிலுள்ளோரில் பலர், விரும்பப்படுபவராயும் நெருங்கிய உறவினராயும் காணப்படுதல் கூடும்; அப்பொழுது அவர்மாட்டு அருள் தோன்றுமாயின், வீரம் வீழ்ந்துபடும். இவற்றைக் கருதியே எடுத்தும் படுத்தும் வளைத்தும் நோக்குதல் கொங்க மறவரின் இயல்பாயிற்று. அப் பிறழ்ச்சி நோக்கிற்குத் துணைசெய்யும் இயங்கள் பலவற்றையும் அவர்கள் பெற்றிருந்தனர்.

சேரன் படையிலோ கொங்குநாட்டு ஆடுகளைப்போல எண்ணற்ற குதிரைகளும், அந்நாட்டுப் பசுக்களைப்போல எண்ணிலடங்கா யானைகளும் இருந்தன.

கொடியபோர் நடைபெற்றது. முடிவில் கொங்கர் பொறையனடி பணிந்தனர்.

“ தகரேர் நாறிப்
பேஎம் அமன்ற பிறழநோக்கு இயவர்

ஓடுறு கடுமுரண் துமியச் சென்று
வெம்முனை தபுத்த காலைத் தம்நாட்டு
யாடு பரந்தன்ன மாவின்
ஆயரந் தன்ன யானையோன்..." (பதிற்று.
எஅ: கூ-கச)

இவ்வாறாகப் பெருஞ்சேரலிரும்பொறை நிகழ்த்திய போர்களால் அவனுக்குப் பெயரும் புகழும் கிடைத்தன. நாடும் நலம் பெற்றது. எல்லைப்புறத்திலிருந்த கொல்லி, கொங்கு, மழநாடுகள் அடக்கப்பட்டமையான் ஆட்சி வலிவும் பொலிவும் பெற்றது. ஆற்றல் தோன்ற அமர்பல கடந்து கொற்றத்தை நிலைநாட்டிய இப் பெருமன்னனை "அருந்திறல் ஒள்இசைப் பெருஞ்சேரல் இரும்பொறை" எனப் பதிகம் (VIII) போற்றுகிறது.

6. ஆட்சிக்காலம்

பழங்கால
ஆண்டு முதல்

மன்னர் பலருடைய ஆட்சிக் காலம் இன்ன
இன்ன ஆண்டு முடிய எனவரையறுத்துக்

கூறுதற்கேற்ற சான்றுகள் இதுகாறும்
கிடைத்தில.

பெருஞ்சேரலிரும்பொறையின் ஆட்சிக் காலமும் அத்தகையதே யாயினும் ஏனைய பேரரசரோடு ஒப்பு நோக்கி, எக் காலத்தை ஒட்டியது என்றேனும் கூறுதல் கூடும்.

பொதுவாகப் பதிற்றுப்பத்துக் காலமுறைப்படி தொகுக்கப்பட்டது என்னும் கருத்தினர் பலர் இன்றும் இருக்கின்றனர். இவர் கருத்துப்படி முதல்பத்துத் தொடங்கிப் பத்தாம்பத்து முடியப் பாடப்பட்ட சேர

மன்னர் பதின்மரும் முறையே ஒருவர்பின் ஒருவராக ஆண்டவர் ஆவர். இவ்வாறு கொண்டால் நகைப்புக்குரிய பல முடிவுகளை நாம் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

பதிகங்களின்படி சேரமன்னர் அரசுவீற்றிருந்த காலத்தைக் கீழே காணலாம்.

பத்து	மன்னன்	ஆண்டுகள்
2.	இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்	58
3.	பல்யானைச் செல்கெழு குட்டுவன்	25
4.	களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்	25
5.	கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன்	55
6.	ஆடு கோட்பாட்டுச் சேரலாதன்	38

7. செல்வக்கடுங்கோ வாழியாதன்

25

8. பெருஞ்சேரலிரும்பொறை

17

9. இளஞ்சேரலிரும்பொறை

16

இம் மன்னருள் செங்குட்டுவனைப் பரணரும், செல்வக் கடுங்கோவாழியாதனைக் கபிலரும், பெருஞ்சேரலிரும் பொறையை அரிசில் கிழாரும், இளஞ்சேரலிரும் பொறையைப் பெருங்குன்றூர்கிழாரும் பாடியுள்ளனர். இந் நால்வரும் வையாவிக் கோப்பெரும் பேகனைக் கண்ணகி காரணமாகப் பாடினராதலின் ஒரே காலத்தவர் ஆவர் என முன்னரே கண்டோம்.

இவருள் பரணர் செங்குட்டுவனின் வடநாட்டு வெற்றியைத் தம் பாடல்களிற் குறிப்பிட்டனரல்லர். ஆதலின் அவன் வடநாடு செல்லுமுன் அவர் அவனைப் பாடியிருத்தல்

வேண்டும். செங்குட்டுவன் சேரநாட்டை யகன்று முப்பத்திரண்டு திங்கள் வடநாட்டில் தங்கினன் என்றும், அங்கிருந்து திரும்பிவந்தபொழுது ஐம்பதாண்டுப் பருவத்தினன் என்றும் "சிலம்பு" ஒலிக்கும். எனவே வடநாட்டுப் போர்ச் செலவை மேற்கொண்டபொழுது அவன் 47 வயதினனுவன்.[1] இருபதாவது வயதில் ஆட்சிப் பொறுப்பேற்றனன் எனின் அவனது இருபத்தேழாவது ஆட்சியாண்டின் துவக்கத்தில் வடநாடு சென்றவனவன். எனவே, குறைந்தது, அவனுடைய இருபத்தாறும் ஆட்சியாண்டில் அவனைப் பரணர் பாடியிருப்பர்.

பதிற்றுப் பத்துச் சேரர் ஒருவர்பின் ஒருவராய் ஆண்டனர் என்பதை உண்மையெனக் கொள்ளின், கபிலர் வாழியாதனின் முதலாவது ஆட்சி ஆண்டில் அவனைப் பாடினரேனும், பரணர் செங்குட்டுவனைப் பாடியபின் 67 ஆண்டுகள் கழிந்திருக்கும்! அவ்வாறே அரிசில்கிழார் பெருஞ்சேரலைப் பாடியபொழுது பரணர் பாடி 92 ஆண்டுகளும், பெருங்குன்றூர் கிழார் பாடியபோது 109 ஆண்டுகளும் கழிந்திருக்கும்! ஆயினும் புலவர் நால்வரும் ஒரே காலத்தவர்! இவ்வாண்டுக் குழப்பம் நீங்கவேண்டுமாயின், சேரமன்னர் அனைவரும் இல்லாவிட்டாலும் ஒரு சிலராவது ஒரே காலத்தில் ஆண்டனர் என்று கொள்ளுதலே சிறந்தது.

மற்றோர் அழியாச் சான்றும் இக்கொள்கைக்குத் துணை செய்கிறது. செல்வக்கடுங்கோவின் கோயிலாளின்

பெயரும் நெடுஞ்சேரலாதனின் மனைவியின் பெயரும் வேளாவிக்கோமான் பதுமன் தேவி என்றே காணப்படுதலை முன்னரும் கண்டோம். இவ்வேந்தரிருவரும் ஒருத்தியையே மணந்தனர் என்பது தமிழ் மரபுணராதார் கூற்றாய் முடியுமாதலின், பதுமன் மகள் ஒருத்தியைச் செல்வக் கடுங்கோவும், மற்றொருத்தியை நெடுஞ்சேரலாதனும் மணந்தனர் என்றே கொள்ளுதல் வேண்டும்.[2] அவ்வாறாயின் இவ்வேந்தரிருவரும் ஒரேகாலத்து வாழ்ந்தவராவர்.

1, 2. திரு. மு. இராகவையங்கார் அவர்கள்: "சேரன் செங்குட்டுவன்" (1933) பக்கம்: 16, 26, 103.

இம் முடிபு ஏற்புடைத்தாயின் சேரருள், அந்துவஞ் சேரலிரும்பொறை மரபினர் பொறைநாட்டையும், உதியஞ்சேரல் மரபினர் குடநாடு, குட்டநாடுகளையும் ஒரே காலத்தில் ஆண்டிருத்தல் வேண்டும் என்பது தவறாகாது.

செல்வக்கடுங்கோவும் நெடுஞ்சேரலாதனும் ஒரே காலத்தவர் எனக் கண்டோம். நீண்ட ஆட்சிக் காலத்தை நோக்க, நெடுஞ்சேரலாதன் பதினெட்டாம் வயதிலேயே பட்டமெய்தினன் என்றும், அவனது பன்னிரண்டாம்

ஆட்சியாண்டில
னின் மற்றொரு

வாழியாதன் வேளாவிக்கோமான் பதும
மகளை மணந்து பொறைநாட்டுப் பொறுப்

பேற்றான் என்றும் வைத்துக்கொள்வோம். வாழியாதன்
மணந்தது முதல் செங்குட்டுவனின் வடநாட்டுச் செலவு
தொடங்கிய காலம் வரை,

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்	46
பல்யானைச் செல்கெழு குட்டுவன்	25
களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல்	25
கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன்	26

ஆக உதியஞ்சேரல் மரபினர் 122
ருப்பர். வாழியாதன் மணந்த காலம்

ஆண்டுகள் ஆண்டி
தொடங்கி, இளஞ்
சேரல் காலம் முடிய,

செல்வக்கடுங்கோ வாழியாதன்	25
பெருஞ்சேரலிரும்பொறை	17
இளஞ்சேரலிரும்பொறை	16

ஆக அந்துவஞ்சேரல் இரும்பொறை மரபினர் 58 ஆண்டுக் காலம் அரசாண்டிருப்பர். அஃதாவது இளஞ்சேரலிரும் பொறையின் ஆட்சிக்காலம் பல்யானைச்செல்கெழுகுட்டு வன் ஆட்சிக்காலத்தின் பன்னிரண்டாம் ஆட்சியாண் டோடு முடிவுற்றிருக்கும், உதியஞ்சேரல் மரபினர் ஒரு வர்பின் ஒருவராய் அரசு வீற்றிருந்தனர் எனின். ஆயின் இளஞ்சேரலிரும்பொறையைப் பாடிய பெருங்குன்றூர் கிழார் அவன் மரபினர் செய்திகளாக இமயவரம்பன் காலத்தும், பல்யானைச் செல்கெழுகுட்டுவன் காலத்தும்,

நார்முடிச் சேரல் காலத்தும், செங்குட்டுவன்
நடைபெற்ற போர்நிகழ்ச்சிகளைக் கூறியுள்ளார்

காலத்தும்

உதியஞ்சேரல் மரபினர் ஒருவர்பின் ஒருவராய் அர சாண்டனர் என்னும் கொள்கையைக் கைவிடாமல், இளஞ் சேரலிரும் பொறையைச் செங்குட்டுவன் காலத்தவனா கவோ, அவனுக்குப் பிற்பட்டவனாகவோ கொண்டால், செல்வக்கடுங்கோவின் வாழ்க்கை பல்யானைச் செல்கெழு

குட்டுவன் காலத்திற்றான் தொடங்கும்! ஆயின் இமய வரம்பனும் செல்வக்கடுங்கோவும் 'சகலர்' முறையினர் எனப் பதிகம் உணர்த்துகிறது!

இவற்றையெல்லாம் நோக்கி, இயல்பாக நாம் கொள்ளத்தக்க முடிவு ஒன்றேயாகும். அந்துவஞ்சேரல் இரும்பொறை மரபினர் ஒருவர்பின் ஒருவராய் ஆண்டிருத்தல் கூடும்; ஆயின் உதியஞ்சேரல் மரபினர், ஒரே காலத்தில் வெவ்வேறு ஊர்களைத் தலைநகர்களாகக்கொண்டு சேர நாட்டின் வெவ்வேறு பகுதிகளை யாண்டிருத்தல்வேண்டும். இம்முடிவே அறிவொடு முரணாதது ஆகும்.

"முதியரை மதியுறழ் மரபின் தழீஇ, மண் வகுத்து ஈத்து எனக் கூட்டித், தன்குலத்தில் தனக்கு முதியாரை மதியோடொத்த தன் தண்ணளியால் தழீஇக்கொண்டு, அவர்க்குத் தன் நாட்டைப் பகுத்துக்கொடுத்து என உரைக்க" என வரும் மூன்றாம் பதிகத்தின் பழைய உரைக் குறிப்பும், "துளங்கு குடி திருத்திய" எனவரும் நான்காம் பதிகத்தொடரும் இம்முடிவை வலிவுறச் செய்கின்றன.

எல்லாவற்றினும் மேலாகச் செங்குட்டுவனைப் பதிற்றுப்பத்தில் பாடிய பரணரே, அகநானூற்றிலும் குறுந்தொகையிலும் பொறையனது கொல்லியைக் குறிப்பிட்டுள்ளார்.

"வென்வேல், களிறுகெழு தானைப் பொறையன் கொல்லி."
(அகம். ௬௨ : ௧௨-௩)

"பெரும்பூண் பொறையன் பேஎம் முதிர் கொல்லி."

(குறுந். அக : ௨)

அவரே அகநானூற்றில் கழுவுளேயும் காமூரையும் திருக்கிறார்.)

"அடுபோர்
குறித்
வீயா விழுப்புகழ் விண்தோய் வியன்குடை
ஈரெழு வேளிர் இயைந்தொருங்கு எறிந்த
கழுவுள் காமூர் போல." (கஙடு
: க௦-க)

காமூரை யாண்ட கழுவுள் பெருஞ்சேரலிரும்பொறை காலத்தவன் என்பது மறுக்க வியலா உண்மை. பெருஞ்சேரலிரும்பொறை காலநிகழ்ச்சியைக் குறிப்பிட்ட பரணரே செங்குட்டுவனையும் பாடியுள்ளார். எனவே பெருஞ்சேரலிரும்பொறை செங்குட்டுவன் காலத்தவனாதல் வேண்டும்; உதியஞ்சேரல் மரபினராய பிற வேந்தர் சிலரும் இக்காலப் பகுதியைச் சேர்ந்தவரே யாவர். சேரன் செங்குட்டுவனின் காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டெனின் பெருஞ்சேரலிரும்பொறையும் அந்நூற்றாண்டைச் சேர்ந்தவனே யாவன்.

ஒன்பதாம் பத்து

[மேரி மாசிலாமணி அம்மையார், எம். ஏ.]

1, முகவுரை

உலகில் எந்நாட்டு இலக்கிய வளர்ச்சியை ஆராய்ந்து பார்த்தாலும், அந்நாட்டின் பண்டையிலக்கியங்கள் கூறுவன போருங் காதலுமே. பண்டைத் தமிழ்ப் புலவர்களும், போரையும் காதலையுமே தங்கள் பாடல்களின் முக்கியப் பொருளாகக் கொண்டனர். அக்காலத்தில் புலவர்கள் பெரும்பாலும் அரசர் தலைவரின் போர் வலியையும் காதல் நிகழ்ச்சிகளையும் பாராட்டிப் பாடல் புனைந்தனர். இது பற்றியே தமிழில் அகம், புறம் என்ற பாகுபாடு எழுந்தது. பதிற்றுப்பத்து, புறப்பொருளைக் கொண்டு, பல்வேறு சேர அரசரது புகழை விரித்துக் கூறும் நூல்.

பதிற்றுப்பத்தைப் பாடிய புலவர்களும், அரசர், சிற்றரசர் வள்ளல்கள், போர்வீரர் முதலியோரும் வாழ்க்கை நடத்தின உலகம் மிகவும் சிறிய உலகம். தமிழ் நாடும், அதையடுத்த சில நாடுகளுமே அவர்கள் அறிந்த உலகம். அக்கால மக்களது வாழ்க்கையின் வாய்ப்புக்கள், அபிலாயங்கள், நோக்கங்கள், பொழுது போக்குக்கள், தொடர்புகள் என்ற இவைகளை நோக்குமிடத்தும் அவர்கள் உலகம் சிறிய உலகமே. ஆகையால், அரசியல், போர், படை, பாசறை, பாணர், பரிசில், இயற்கைநலம், மனை என்ற இத்தகைய சில பொருள்கள்மீதே புலவர்கள் தங்கள் பாடலைப் பாடிவைத்தனர். ஆங்கிலத்திலும் பண்டைய இலக்கியங்களில் இதையே காண்கிறோம். ஆங்கில இலக்கியத்தில், ஆங்கில - சாக்ஸானிய நடையில்

எழுதப்பெற்ற முதல் காப்பியம் பியோ உல்ஃ என்னும் நூல். இது மூவாயிரம் அடிகளைக் கொண்டது. பியோ உல்ஃ என்பானின் வீரதீரச் செயல்களை எடுத்துரைப்பதே இதன் நோக்கம்.

சங்க நூலாகிய பதிற்றுப்பத்திலும்

இதைத்தான்
காண்கிறோம். எனினும் அச் சிறிய உலகிலும், அன்புக்கும், அருளுக்கும், கொடைக்கும், அறத்திற்கும், இக்காலத்தைப் போலவே இடமிருந்தது. வாழ்க்கைச் சாதனங்களும் வாய்ப்புக்களும், பேறுகளும் அருகியிருந்த அவ் வுலகில், மும் எழிலு மூட்டும் காட்சிகளையும், என்றும்

இன்ப
மாறுத
மனித இயல்புகளையும், பண்புகளையும், புலவர்கள், பாடல் சித்திரங்களாகச் சித்திரித்துத் தந்தனர். அன்பு, அளி,
தியாகம், வீரம் முதலிய
விளங்க, அழகிய நடையில்

அருங்குணங்கள் ஒளிவிட்டு
பாடல் புனைந்த புலவர் கூட்டத்

தில், பதிற்றுப்பத்துப் புலவர்களையும்
வேண்டும். இந்நூலில், இக்காலத்தில்

சேர்த்துக் கூறுதல்
வழங்காத சில அரிய

பதங்களும் சொற்றொடர்களும் இருப்பதால் நடை கருகலாய்த் தோன்றுகிறது. எனினும் தமிழின்

சிறிது
பொற்

காலமாகிய சங்ககாலத்தைச் சேர்ந்த இந்நூல், நுணுகி ஆராய்வாருக்கு அரிய விருந்தாம்.

பதிற்றுப்பத்து, தமிழ்நாட்டுப் பழைய வரலாற்று நூல்களுள் ஒன்று. பத்துப் பத்துப் பாடல் தொகுதிகளாலான நூறு பாடல்களைக் கொண்டது. முதல் பத்தும் கடைப்பத்தும் நமக்கு இதுவரை கிடைக்காததால் ஏனைய எட்டுப் பத்துக்களே இந்நூலில் அடங்குவன. அவற்றுள்,

ஒன்பதாம் பத்து, இளஞ்சேரல் இரும்பொறையைப் பெருங்குன்றூர் கிழார் பாடியது. புலவர் பெருமான் அரசனைப் பாடியக்கால், அவன் ஆட்சியில் நிகழ்ந்த அரசியல் நிகழ்ச்சிகளை யேனும், போர் நிகழ்ச்சிகளை யேனும், காலமுறை பிறழாது எடுத்துக் கூற முன் வரவில்லை. இக்கால வரலாற்றாசிரியர், வரலாறுகளை எழுதுங்கால் கால முறை பிறழாது நிகழ்ச்சிகளைக் கூறிக்கொண்டு போவர். ஆனல் பண்டைத் தமிழ்ப் புலவர்கள், அரசரைப் பாடுங்கால், பெரும்பாலும்

அவர்களைப் புகழ்ந்து பாடி வாழ்த்தவேண்டுமென்பதையே குறிக்கோளாகக் கொண்டனர். இங்கு நாம் எடுத்துக் கொண்ட ஒன்பதாம் பத்திலிருந்து, இளஞ் சேரலிரும் பொறையின் அரசியல் வரலாற்றுச் செய்திகளுள் சில வற்றை நாம் அறிந்து கொள்ள முடிந்த போதிலும், இப் பாடல்களை அரசனைப் புகழ்ந்து பாடிய பாடல்களாகவே கருதவேண்டும். சேர அரசனை வெவ்வேறு வகையாகப் புகழ்தலே ஒன்பதாம்பத்துப் பாடல்களின் நோக்க மாகும். அங்ஙனம் செய்யுங்கால், போரில் வல்லனை அவனது போர்ச் சிறப்பையும், படைச் சிறப்பையும், பகை வர் இயல்பையும், போர்ப் பாசறையையும், பாசறையிலிருக் கும் போர்வீரர் செயல்களையும், போர்ப் பாசறை செல்லு முன் விட்டுவந்த துணைவியையும் பாடி, இவற்றின் வாயி லாக அரசன் புகழையும் பெருமையையும் புலவர் புலப் படுத்துகிறார். அரசனின் ஆட்சிமுறைகளையும், அவன் எவ்வெப்பகைவரை எவ்வெவ்வாறு வென்றான் என்ற செய்திகளையும், வரலாற்றுமுறையில் இப் பாடல்களி லிருந்து அறிதற்கில்லை. மக்கள் வாழ்க்கை முறை, அவர் களின் பழக்க வழக்கங்கள், இயல்புகள் இவைகளைப்பற்றிய சில குறிப்புக்கள், பாடல்களில் ஆங்காங்கே வெளியா கின்றன. சேரனது வெற்றிச் சிறப்பு, அருட் சிறப்பு, கொடைச் சிறப்பு, காமச் சிறப்பு, நாடுகாவற் சிறப்பு என்ற இச் சிறப்புக்களுள் ஒன்றையேனும் ஒவ்வொரு பாடலும் கூறுகிறது.

2. பாடினோர்

ஒன்பதாம் பத்திலுள்ள பாடல்களை இயற்றிய புலவர், பெருங்குன்றூர் கிழார். இவருக்கு வழங்கும் பெயரிலிருந்தே, இவர் பெருங்குன்றூர் என்ற ஊரில் பிறந்தவர் என்பதும், கிழார் என்னும் வேளாண் குடியைச் சேர்ந்தவர் என்பதும் புலனாம். எட்டுத் தொகையுள், இவர் பாடியனவாய்க் கூறப்படுவன இருபத்தொரு பாடல்கள். அவை யாவன பதிற்றுப்பத்தில் பத்து; நற்றிணையில் நாலு; குறுந்தொகையில் ஒன்று; அகநானூற்றில் ஒன்று; புறநா

னூற்றில் ஐந்து ; ஆகவே, இப் புலவர், அகம் புறம் என்ற இருபகுப்புக்களையும் நன்கறிந்து பாடலியற்றவல்லார் என்பது அறியக் கிடைக்கின்றது. இவர், தமிழ் ஆராய்ந்த நாற்பத் தொன்பது புலவருள் ஒருவராகக் கூறப்பட்டுள்ளார். புறநானூற்றுப் பாடல்களில் வையாவிக் கோப்பெரும் பேகனால் துறக்கப்பட்ட அவன் மனைவி கண்ணகியை, மீண்டும் அவன் தன்னுடன் சேர்த்துக் கொள்ள வேண்மென்று கூறும் இவரது பாடல் (147) நம் மனத்தை உருக்குகிறது. மேலும், இவர், உருவப் பஃறேர் இளஞ்சேட்சென்னியைப் பாடி அச் சோழனைத் தம் வறுமையைத் தீர்க்குமாறு வேண்டின புறப்பாடலொன்றுளது (266). சோழனிடம் பரிசில் பெற்ற, சிலகாலமாய் வறுமைத் துன்பமற்றிருந்தார் ஆனால் மீண்டும் வறுமை வந்துடற்றிய போது, சேர வேந்தனான இளஞ் சேரலிரும்பொறையை நாடிச் சென்றார். சேரனிடத்துச் சென்ற புலவர் அவன் கொடைப்பெருமையையும், குணச்சிறப்பையும், வீரச் செயல்களையும் புகழ்ந்து, பத்துப்பாடல்கள் புனைந்து, அவன் பரிசிலை நோக்கிக் காத்திருந்தார் போலும். பன்னாள் காத்திருந்தும் சேரன் பரிசில் கொடாது அனுப்பி விடவே, புலவர் மனமுடைந்து,

> " நும்ம னோருமற் றினைய ராயின்
> எம்ம னோரிவண் பிறவலர் மாதோ
> ....
> விடுத்தேன் வாழியர் குரிசில் உதுக்காண்
> அவல நெஞ்சமொடு செல்வல்."

(புறம், உ௧0: ௩-௪; ௧௨-௩.)

என்று கூறிச் சென்றனர் என்று, இரு புறப்பாட்டுக்களால் தெரிய வருகிறது. ஆனால், ஒன்பதாம் பத்தின் பதிகத்தில், 'முப்பத்திராயிரம் பொற்காசும், அவரறியாமை, ஊரும் மனையும் வளமிகப் படைத்து - காப்பு மறம்தான் விட்டான் அக்கோ' என்று கூறியிருப்பதிலிருந்து, புலவாறியாதவாறு, இளஞ்சேரலிரும்பொறை, அவர் ஊரில் மாடமாளிகைக ளமைத்து, அவற்றிற்குக் காவல் வீரரையும் (காப்புமறம்) விட்டான் எனத் தெரிய வருகிறது.

இனி இப் புலவர் பெருமான், வையாவிக் கோப்பெரும் பேகனிடத்துச்சென்று, "பெரும, நீ தமியளாய் விடப்பட்ட கண்ணகி மகிழ்கொள்ளுமாறு அவள்பால் என்னுடன் வருவாயேயாகில், அதுவே நீ எனக்குத் தந்த பரிசிலாகும்; வேறொரு பரிசிலும் வேண்டேன்," என்று கூறியதிலிருந்து, தன் ஆக்கத்தைக் காட்டிலும், பிறர் துன்பங் கண்டு உருகி அதனைக் களைவதையே பெருந்தொண்டாகக் கொண்ட சான்றோர் இவர் என்றறிகிறோம். பொதுவாகப் புலவர், வேறு புலவரிடத்துப் பொறாமை மிகுந்தவர் எனச் சிலர் கூறுவர். ஆனால், பெருங்குன்றூர் கிழார் போன்ற சங்கப் புலவரிடத்துப் புலவரைப் போற்றும் பெருந்தகைமையைக் காணலாம். கபிலரைக் குறித்து,

> "மறம்புரி கொள்கை வயங்கு செந்நாவின்
> உவலை கூராக் கவலையில் நெஞ்சின்
> நனவில் பாடிய நல்லிசைக்
> கபிலன்." (பதிற்று, அ௫:

கo-இ)

என்று பாடிக் கபிலரின் அருங்குணங்கள் நம்மை அவர் பால் ஈர்க்குமாறு செய்கிறார். ஆகவே எளிய வாழ்க்கையும், உயரிய நோக்கமும் கொண்டவர் பெருங்குன்றூர் கிழார் என்பது தெற்றென விளங்கும்.

3. பாட்டுடைத் தலைவன்

ஒன்பதாம் பத்தால் பாடப்பெற்றவன் குட்டுவன் இளஞ்சேரல் இரும்பொறை யென்னும் சேர அரசன். சேரநாட்டில் அக்காலத்தில் இரு சேரக்குடியினர் ஆட்சி புரிந்து வந்தனர். காலத்தால முற்பட்டுத் தோன்றிய பெருங்குடி உதியஞ்சேரல் குடியே. இக் குடியைச் சேர்ந்த சேர அரசர் வஞ்சியிலிருந்து அரசாண்டு வந்தனர். மற்ற வர், அந்துவன் குடியில் வந்தவா. தொண்டியில் அரசு புரிந்த இரும்பொறை வழியினர் இவர். இளஞ்சேரல் இரும் பொறை, அந்துவன் குடியில் வந்தவன். பதிற்றுப்பத்துள் தொடர்பாகக் கூறப்பட்டுள்ள இரும்பொறை அரசர் மூவ

ருள் இவன் கடையவன் . இவன் தந்தை, எட்டாம்பத்தில் அரிசில்கிழாரால் பாடப்பெற்றவனும், தகடூர் எறிந்தவனு மான பெருஞ்சேரல் இரும்பொறை என்பதும், இவன்

தாய,
வேண்மாள அந்துவஞ் செள்ளை என்பதும் பதிகத்தினின்று அறியக்கிடகக்கும் குறிப்புகளாம். பெருஞ்சேரல் இரும்பொறையின் தந்தை, கபிலரால் ஏழாமபத்தில் பாடப்பெற்ற செல்வக் கடுங்கோவாழியாதன் என்னும் சேரனே.

4. பதிகம்

பதிற்றுப்பத்துப் பதிகங்கள் யாவும் எளிய நடையிலமைந்துள்ளன. பதிகங்களின் சொற்போக்கும் நடையும் பதிற்றுப்பத்துப் பாடல்களுக்குப் பிந்தியனவாகத் தோன்றுகின்றன. உரையின்றிக் கிடைத்த பதிற்றுப் பத்துப் பிரதிகளிலெல்லாம், துறை, வண்ணம், தூக்கு, பாட்டின் பெயர் ஆகிய இவைகள் காணப்படுகின்றனவென்றும், பதிகங்கள் மாத்திரமே காணப்படவில்லையென்றும் தெரிய வருகிறது. இப் பதிகங்கள் பத்துப் பத்துப்

பாடல்
களின் முடிவில் காணப்படுகின்றன. சொற்போக்கைக் கவனிக்குமிடத்துப் பிற்காலத்தில், இராசராசசோழன் ஆட்சியில், சாசனங்களின் முற்பகுதியில் தோன்றிய மெய்க் கீர்த்திகளை, இப் பதிகங்கள் நினைவூட்டுகின்றன. பிற்காலத் தெழுந்த புலவர் ஒருவர் இப் பதிகங்களை எழுதி, ஒவ் வொரு பத்துக்கும் ஈற்றிலே வைத்தனரோ என்று நினைத் தற்கு இடமுண்டு. பதிகத்தின் முற்பகுதி செய்யுள் வடி வாகவும், பிற்பகுதி வசன வடிவாயுமுளது. பதிகங்கள் கூறும் குறிப்புக்கள் வரலாற்று வகையில் மிகவும் பயன்படு கின்றன. நச்சினார்க்கினியர், அடியார்க்கு நல்லார் என்ற உரையாசிரியர்களால், இப் பதிகங்கள் எடுத்தாளப்படுவ தால், அவர்கள் காலத்திற்கு முந்தியவை அவை என்பது வெளிப்படை,

மேலும், பதிகங்கள் பாடல்களின் தொகுத்துத் தருகின்றன, குறுந்தொகைப்

பெயர்களைத்
பாடல்களுள்

சிலவற்றை இயற்றிய புலவர்களுடைய

இயற்பெயர்மறைந்து போனவிடத்தும், அப் புலவர்கள் இயற்றிய பாடல்களில்
பயின்ற அழகிய சொற்றொடர்களே அப் புலவர்களுக்குப் பிற்பாடு பெயர்களாயமைந்தன. அதுபோல பதிற்றுப் பத்துப் பாடல்களில் பயின்றுள்ள அழகிய தொடர்களாலேயே பாடல்கள் பெயர் பெறுகின்றன. இவ் வரிய தொடர்
கள், தம்மளவில் சொல்லும் பொருளும் நிறைந்த அழகுச் சித்திரங்களாய் விளங்குவதுடன், ஒவ்வொரு தொடரும், பாடலின் பொருளை இரத்தினச் சுருக்கமாய்க் காட்டுவது போல் அமைந்துள்ளது.

ஒன்பதாம் பத்தின் பதிகத்தின் வாயிலாக, பாடப் பட்ட சேர அரசனுடைய தந்தை

தாய்பெயர்களும், அரசனுடைய பல்வேறு செயல்களும், பாடிய புலவர் பெய
ரும, பத்துப்பாடல்களின் பெயரும, பாடிப்பெற்ற பரிசிலும், சேரன் ஆட்சி புரிந்த ஆண்டுகளின் தொகையும் தெரியவருகின்றன. இச்சேரன், சோழ பாண்டியராகிய இரு மன்னரையும், விச்சியென்னும் குறுநில மன்னனையும் வீழ்த்தியதையும், கல்லகமென்னுமிடத்தில், ஐந்தெயில் எறிந்ததையும், தன் அமைச்சனாகிய மையூர்கிழானைப் புரோகிதனிலும் அறநெறி அறிவானாகப் பண்ணினதையும், பதினாறு ஆண்டு புகழ்பெற்று அரசாட்சிசெய்து வீற்றிருந்ததையும், பதிகம் நமக்கு அறிவிக்கிறது. இங்குக் கூறப்பட்ட யாவற்றையும் சரித்திர வரலாற்றுக் குறிப்புக்களாகவே கொள்ளமுடியுமாவென ஓர் ஐயம் பிறக்கிறது. பதிகத்தில் கூறப்பட்ட செய்திகள் சில, பாடல்களில் இடம் பெறவில்லை. எனினும் நாம் அறிய விரும்பும் அநேக செய்திகளைப் பதிகம் நமக்கு எடுத்துக் கூறுகிறது.

பெருங்குன்றூர் கிழார் போன்ற புலவர்கள், பாடிப் பெற்றனவாகப் பதிகங்களில் கூறப்படும பரிசில்கள், கற்பித்துக் கூறியனவோவெனச் சிலர் ஐயுறுவர். ஆனால் செப்பேடுகள் மூலமாகவும், கல்வெட்டுக்கள் மூலமாகவும் அவை உண்மைச்செய்திகளே எனத் தெரியவருகிறது. சேரநாட்டிலுள்ளனவாய்க் கூறப்பட்டுள்ள பாணன்

கானம், கண்ணன் காடு, காக்கையூர் ஆகிய ஊர்கள் பதிற்றுப்பத்தைப் பாடியுள்ள பரணர், குமட்டூர் கண்ணனார், காக்கை பாடினியார் நச்செள்ளையார் என்ற புலவருக்கும், சேரநாட்டுக்குமிருந்த தொடர்பை விளக்கிக் காட்டுகின்றன.

இனி, ஒன்பதாம் பத்துள் காணப்படும்
தனித்தனியே பிரித்துக் காண்போம்.

சிறப்புக்களைத்

5. இயற்கைவளம்

மேல்நாட்டுப் புலவர்கள்,
இயற்கைவளங்களின் தனி அழகை விரித்துக்கூறித் தனிப்பாடல்கள் புனைந்து
வைத்தனர். பண்டைத் தமிழ்ப்புலவர்களோ, இயற்கையைப் பற்றிய வருணனைகளைத் தாங்கள் கூறவந்த கருத்துக்களுக்கு உதவியாய்த் தகுந்த இடங்களில் அமைத்து வைத்

தனர். மக்கள்வாழ்க்கையில், இயற்கைக்கு ஓரிடத்தையளித்தனரேயன்றி, மக்கள்வாழ்க்கையினின்று பிரிந்த

தோர் தனியிடத்தை இயற்கைக்கு வழங்கவில்லை.
பத்திலும் இவ்வுண்மையை நன்கு காண்கிறோம்.

‘நிழல் விடுகட்டி” (அக) எனும் பாடலில் வந்துள்ள மழை மேகங்களின் வருணனை படித்து இன்புறுதற்குரியது.

“ உலகம் புரக்கும் உருகெழு சிறப்பின்
வண்ணக் கருவிய வளங்கெழு கமஞ்சூல்
அகலிரு விசும்பின் அதிர்சினஞ் சிறந்து
கடுஞ்சிலை கழறி விசும்படையூ நிவந்து
காலை யிசைக்கும் பொழுது.” (பதிற்று,

அக: கடு) என்பது அவ் வருணனை.

உயிர்களைப் பாதுகாத்தலையும், மக்களுக்கு அச்சத்தைத் தருதலையும், கரிய நிறத்துடன் பற்பல படலங்களாய்ச் செறிந்து நிற்றலையும்கொண்டு, வானத்தின்கண் எல்லாப் பொருளும் அதிரும்படி மின்னிக்குமுறி, மிக்க முழக்கத்தோடு இடித்து வானம் முழுவதும் பரந்து கார்

காலத்தைத் தெரிவிக்கும் பருவம் என்பது இவ் வடிகளின் பொருள்.

இவ்வடிகளில், கார்காலத்தில் வானமெல்லாம் இருளும் படி செய்துவிட்டு, உலகை வளமாக்க வரும் மழைமேகத்
தின் ஆர்ப்பாட்டங்களையும், மின்னலையும், இடியையும், அவற்றின் வேகத்தையும் ஒருங்கே நம் மனக் கண்ணால் காணும்படி செய்கிறார் புலவர். ஒரு சில அடிகளால் இவற்றை உணரவைத்த இவரது கட்டுரைப் புலமை சிறந்தது. இவ்வடிகள் திருமுருகாற்றுப் படையில் காணப்படுகின்ற,

‘கார்கோள் முகந்த கமஞ்சூல் மாமழை
வாள்போழ் விசும்பில் வள்ளுறை சிதறித்
தலைப்பெயல்’
(திருமுருகு: எ-௧0)

என்னும் அடிகளை நினைவூட்டுகின்றன.
பெருமான் ஷெல்லி என்பார், ‘முகில்’
மீது புனைந்துள்ள கவியில்,

ஆங்கிலப் புலவர்
என்ற பொருள்

‘எனது இருப்பாம் எழில்விசும்பில்
என்னை நடத்தும் மின்னல் உளன்;
இடியும் இடித்து முழங்கிடவே
அதிரும் பாதாள உலகமெலாம்;
மண்ணும் கடலும் சென்றிடுவேன்
மலையும் ஆறும் கண்டிடுவேன்

பொழியும் மழையாய்ப் பெருகிடுவேன்'
என்று மேகத்தின் கூற்றாக வைத்துக் கூறியு
நினைவூட்டுகின்றன.

அடிகளையும்

'துவராக் கூந்தல்' (௬௯) என்னும் பாடலில் தீட்டியுள்ள இயற்கைச் சித்திரத்தைக் காண்போம்.

உரிய காலத்தில் தப்பாது மழை பெய்கிறது; காட்டிடத்திலே, மான் முதலிய உயிரினங்கள் தத்தம் துணையுடன் ஒன்றுகூடி மகிழ்ந்து குலாவித் திரிகின்றன. மரக்

கிளைகளிலிருந்துகொண்டு பறவையினங்களும் வண்டினங்களும் ஓயாத சத்தமிட்டு ஆரவாரித்து ஒலிக்கின்றன. பழவகைகளும், கிழங்கு வகைகளும் மக்கள் உண்ணுதலால் சிறிதும் குறைவுபடாமல், பெருகிக்கிடக்கின்றன. பசுக்கூட்டங்கள் நல்ல புல்லை அருந்தி மகிழ்ச்சியுற்றுக் குதித்துத் திரிகின்றன. புதிய வருவாய்களாகத் தானியங்களும் பருப்புவகைகளும் உண்டாகின்றன. இதையே,

‘வானம் பொழுதொடு சுரப்பக், கானம்
தோடுறு மடமான் ஏறுபுணர்ந் தியலப்
புள்ளும் மிஞிறும் மாச்சினை ஆர்ப்பப்
பழனுங் கிழங்கும் மிசையற வறியாது
பல்லான் நன்னிரை புல்லருந் துகளப்
பயங்கடை யறியா வளங்கெழு சிறப்பில்
பெரும்பல் யாணர்க் கூலம் கெழும’ (பதிற்று, ௮௧: ௧-௭)

எனும் அடிகள் கூறுகின்றன. கானகத்தில் ஒரு வானுலகம் தோன்றினாற்போல் புலவர் தீட்டுகிறார் இச் சித்திரத்தை. அரசனது நடுவுநிலை வழுவாச் செங்கோன்மையாட்சி, பல வகை இயற்கை நலன்களுடன் பொலிவு பெற்று விளங்கும் என்பதை இப்பாடல் நன்கு எடுத்துக்காட்டுகிறது. மேலும் அரசனது ஆட்சியின் செம்மைக்கும், இயற்கை நலங்கட்கும் மிக்க இயைபு உண்டு என்பதையே இவ்வடிகள் காட்டுகின்றன.

மற்றொரு காட்சி. நல்ல மழை பெய்து ஆற்றில் புது வெள்ளம் பெருகிவருகிறது. ஆற்றுநீர் வேகமாய்க்குதித்துக் குதித்துச் செல்கையில், சந்தனக்கட்டைகளையும், அகிற் கட்டைகளையும் அடித்துக்கொண்டு செல்கிறது. ஆற்று வெள்ளம் இருகரையிலும் மோதிக்கொண்டு ஓடுதலால், வெண்மையான நுரை பொங்கிக்கொண்டு வருகிறது. புதிதாகப் பெய்த மழையாகையால், மண்ணுடன் சேர்ந்து செந்நிறம் பெற்றுத் தண்ணீர் கடலை நோக்கி
இவ்வழகிய காட்சியை,

ஓடுகிறது.

'சந்தம் பூழிலொடு பொங்குநுரை சுமந்து
தெண்கடல் முன்னிய வெண்டலைச் செம்புனல்'
(பதிற்று, அஎ: உ-௩)

ஒன்பதாம் பத்து

279

என்று இரண்டே அடிகளில் தீட்டி வைத்து நம்மை மகிழ்விக்கிறார் பெருங்குன்றூர் கிழார் இப்படிப்பட்ட ஆற்றைக் கடக்க உதவி செய்யும் வேழக் கரும்பைக்காட்டிலும், சேரன் உனக்கு அளிசெய்தலில் வல்லவன் என்று விறலியிடம் கூறி முடிக்கிறது போல், பாடல் பாடப்பட்டது. வேறு எத்தனையோ இடங்களில், இயற்கையழகில் வயப்பட்டுப் புலவர் பாடியிருக்கிறாரெனினும், எடுத்துக் காட்டாக இரண்டொரு இடங்களே சான்றாய் அமையும்.

6. உவமைநயம்

சங்கத் தமிழ்ப் பாடல்களில் காணப்படும் உவமைகள் பெரும்பாலும தன்மை நவிற்சிகளாகக் காணப்படுகின்றன. பதிற்றுப்பத்திலும் இவ் வுண்மையைக் காணலாம். புலவர்கள் தாங்கள் தினசரி வாழ்க்கையில் கண்ட பொருள்களிலும் கருத்துக்களிலுமிருந்தே உவமைகளைத் தெரிந்தெடுத்து விளக்கினர். ஆகையால் அவர்கள் உவமைகளில் எளிமை தொனிக்கிறது. இல்பொருள் உவமைகளைக் கூறியோ, உயர்வுநவிற்சிகளைக் கூறியோ, படிப்போர் மனத்தை ஈர்க்கும் முறையைக் கைக்கொள்ளாது, உள்ளதைக்கொண்டு, நல்லதைச் செய்யும் உயர் கோட்பாடு கொண்டவர் சங்கப் புலவர்.

ஒன்பதாம் பத்தில் காணப்படும் உவமைகள் யாவற்றையும் எடுத்துக் கூறுதல் இவண் நம் நோக்கமன்று. சங்கப் புலவர் பலரால் கையாளப்படும் பொதுவான உவமைகள் ஒன்பதாம் பத்தில் பல இடங்களிலும் பயின்று வந்துள்ளன. அவைகளையெல்லாம் எடுத்துக் கூறுவதும் நம் கருத்தன்று. ஆனல் பெருங்குன்றூர் கிழாரது மனக்கிணற்றில் ஊறி வெளியே ததும்பும் அழகிய உவமைகளுள் சிலவற்றை மாத்திரம் தெரிந்து கூறுதல் பொருந்தும். இயற்கையில் காணும் நிகழ்ச்சியொன்றை உவமையாகக் கொண்டு, அரசன் பகைவர்மீது செல்லும் செலவை விளக்குகிறுர் புலவர். கரிய மழை மேகங்களுக்கு முன்னே வெண்ணிறக் கொக்குகள் வரிசை குலைந்து எழுந்து நீள்ப்

பறக்கும் தோற்றத்தைக், கரிய பெரிய போர் யானைக்
கூட்டங்களோடு நெருங்கி
தேரின் உயரத்தில் கட்டிய
வருதலை ஒப்பிடுகிறார்;
வரும் கிடுகுப் படையுடன்
வெண்கொடி காற்றிலசைந்து

'கார்மழை முன்பிற் கைபரிந் தெழுதரும்
வான்பறைக் குருகின் நெடுவரி பொற்பக்
கொல்களிறு மிடைந்த பஃறோற் றொழுதியொடு
நெடுந்தேர் நுடங்குகொடி யவிர்வரப் பொலிந்து'

(பதிற்று, அ௫: க - ௪)

என்னும் இவ்வடிகளில் இவ்வுவமையைக் காண்கிறோம்.

உவமையில் காணும் இயற்கை வளத்தை விரித்துக் கூறு . தல் நலம். கார்காலத்து வானம்; கறுத்துப் படர்ந்த மேகங்
கள் ; வெண்ணிறக் கொக்குகள்
சமயத்தில், வானத்தின் கரிய
எதிரே பறந்து செல்கின்றன.

சிறகை விரித்து, ஒரே
மேகக் கூட்டத்திற்கு
கொக்குகளின் நீண்ட
வரிசை ஒரு சிறிது குலைந்து காணப்படுகிறது. ஆனால் அவைகள் வரிபோல் செல்லும் நேரிய தோற்றம் நம் மனத்தின்கண் உள்ள எழில் உணர்ச்சியைத் தூண்டுகிறது.

'தொழில் நவில்யானை' என்னும் பாடலில் பயின்று
வந்த உவமை ஒன்றைக் காண்போம். மதம் பிடித்த நிலையில் ஓர் யானை வருகிறது. அதன் எதிரே அதன் காலில் அகப்பட்ட இளைய மூங்கில் முளை, மீண்டும் உயிர் பெறாத வாறு, நசிந்து அழிந்து போகிறது. அவ்வாறே சேரனுடன் பகைத்து அவனை எதிர்த்து வந்தவர், உயிர் பிழையாதவாறு, அவனால் அழிக்கப்பெறுவர் என்பதை,

'வார்முகின் முழக்கின் மழகளிறு மிகீஇத்தன்
காண்முளை மூங்கிற் கவர்கிளை போல
உய்தல் யாவதுநின் னுடற்றி யோரே'

(பதிற்று,

அச: கக-ந)

என்னும் அடிகள் கூறுகின்றன. மூங்கிலை, முளை என்பதில் ஒரு நயம் தொனிக்கிறது. எத்தகைய

மூங்கில்
பகைவ
ராயினும், அவர், சேரனுக்கு முளைமூங்கில் போன்றவர்.

நன்கு காழ்த்த மூங்கில் குத்தினால், யானையின் காலுக்கு நோயுண்டாகலாம், இச் சேரனுக்கோ பகைவர் யாவரும் முளை மூங்கில் போன்றவரே; இவ்வுவமை, புறப்பாட்டில் (73) நலங்கிள்ளியின் கூற்றிலமைந்துள்ள 'கழைதின் யானைக் காலகப் பட்ட, வன்றிணி நீண் முளை போலச், சென்றவண் வருந்தப் பொரேஎ னாயின்' என்னும் வஞ்சினக் காஞ்சிப் பாடலின் அடிகளை நினைவூட்டுகின்றது.

'கல்காண் கவணை' என்னும் பாடலில், மலை போன்ற மார்பையுடையவன் என்று புலவர் பலரும் கூறும் உவமையையே கூறிய போதிலும், கரிய மலையின் அழகைக் கூறுமாற்றால், மார்பினைச் சிறப்பித்தலில், புலவரது உவமை நயத்தைக் காண்கிறோம்; மலையுச்சியில் இந்திர வில்லும் மின்னுத் தொகுதியும் கொண்ட மழைமுகில் தவழ, பக்கத்தே வேங்கைமரங்கள் பூத்துநிற்க, அவற்றினிடையே மலையுச்சியினின்று, அருவிகள் வீழும் காட்சியைக் காட்டி இவ்வியல்பைக் கொண்ட மலை போலும் மார்பை உடையான் என்பதை "அருவி யருவரை யன்ன மார்பின்" என்கிறார். சந்தனப் பூச்சும், முத்து மாலையும், அணிகலன்களும் சேரன் மார்பின்கண் கண்டு, திருவில்லும், மின்னலும் கொண்ட மழை மேகத்தை உவமம் கூறி, முத்துமாலையை யருவியாகவும், சந்தனப் பூச்சை பூத்த வேங்கையாகவும், கருதிக்கூறுவது பொருத்தமாயிருக்கிறது.

"திருவில் குலைஇத் திருமணி புரையும்
உருகெழு கருவிய பெருமழை சேர்ந்து

வேங்கை விரிந்து விசும்புறு சேட்சிமை
அருவி யருவரை யன்ன மார்பு" (பதிற்று. அ௮:
௧௨-௫) இவ்வடிகள் புலவருடைய கற்பனைத்திறனை
கின்றன.

7. படைச்சிறப்பு

எடுத்துரைக்

இச்சேர அரசன் களிறு, மா, தேர், வயவர் என்ற நால்
வகைப் படையையும் உடையவன் என்று பாடல்களினின்
றும் அறியக் கிடக்கின்றது. எல்லாப் படைகட்கும்

மாபெருந்தலைவனாயிருந்து போரை நடத்தியவன் அரசனே. போரைப் பெறாத நாற்படைகளும், போரையே எதிர் பார்த்து அங்குமிங்கும் சுற்றித் திரிந்தன வென்பதை,

'களிறுபாய்ந் தியலக் கடுமா தாங்க
ஒளிறுகொடி நுடங்கத் தேர்திரிந்து
கொட்ப
அரசுபுறத் திறுப்பினும் அதிர்விலர் திரிந்து
வாயில் கொள்ளா மைந்தினர் வயவர்'
(பதிற்று. ௮௧: ௬-௯)

என்னும் அடிகள் கூறுகின்றன.

நால்வகைப் படைகளுள், அக்காலத்தரசர்கள், யானைப் படையையே தலைசிறந்ததாய்க் கொண்டனர். பல்வகைப் படைகளுள் ஏற்றமும் தோற்றமுமுடையது யானைப் படையே. பதிற்றுப்பத்துப் போன்ற பண்டைத் தமிழ் இலக்கியங்களில், யானையைப் பற்றிய வருணனைகள் மலிந்து கிடக்கின்றன. யானையை வாளா கூறிவிடக் கூடிய இடங் களிலும், மிகுதியான அடைமொழிகளால் யானையின் இயல்புகளையும் செயல்களையும் வருணித்துக்கூறும் பண் டைப் புலவர்மரபை நோக்குமிடத்து, யானைப்படைக்கு அவர் தனியிடம் வகுத்தது தெரியவருகிறது. 'வேழ முடைத்து மலைநாடு' என்று ஔவையார் கூறியதிலிருந்து சேர அரசனுக்கு யானைப்படை சிறந்ததாயிருந்தது எனத் தெளியலாம்.

பாடல்களில் காணப்படும் அழகிய சொற்றொடர்களால் பதிற்றுப்பத்துப் பாடல்கள் பெயர்பெறுகின்றன என்று முன்னரே அறிந்துள்ளோம். அத்தகைய பத்துப் பெயர் களுள், 'வினைநவில் யானை,' 'தொழில் நவில் யானை' என்ற இவ்விரு பாடல்களும் யானையால் பெயர் பெறுதலைக் காணு மிடத்தும் யானைப் படையின் மேன்மை தெரிய வருகிறது.

பகையரசர் தம் நகர்ப்புறத்தே முற்றுகையிட்டுத் தங் கினும் சேரனது போர்வீரர் சிறிதும் பயமில்லாமல் தாம் காவல் காக்கவேண்டிய இடத்தையும் விட்டுவிட்டு அஞ்சா நெஞ்சமுடையராய், பெரிய இருள் நிறைந்த இரவுக்காலத்

சேரனுடைய பாசறையில், பகைவருடைய அரிய மதில்களைச் சிர்குலைக்கும் கற்களை எறியும் கவணைப்பொறியிருந்ததாகக் கூறப்படுகிறது (8 : 18). பண்டைக் காலத்தில், கிரேக்கரும் ரோமரும் கல்லை எறிதற்காகப் பிரயோகித்த பொறி போன்று, சேரரிடத்துமிருந்ததுபோலும்! கல்லைப் பொறியில் வைத்து, அவைகளைப் பகைவர் மதில் மீது வீசியெறிந்து மதிலை யழிக்கும் வழக்கமிருந்தது, என்பது, இதனால் தெரியவருகிறது. அக்காலத்தில், சேரநாட்டில் வழங்கிவந்த பலவகைப் பொறிகளுள், கல்கால் கவணை தலையாய் விளங்கியதால், அஃதொன்றையே புலவர் விதந்து கூறினர். மற்றும் அநேக பொறிகள் இருந்தன என்பது வெளிப்படை. சிலப்பதிகாரத்தில், அடைக்கலக் காதையில், 'மிளையும் கிடங்கும் வளைவில் பொறியும், கருவிரலூகமும், கல்லுமிழ் கவணும்' என்று கூறித், தொடர்ந்து கூறிக்கொண்டு செல்லும் பொறிகள் யாவுமிருக்கப்பெற்றது மதுரை மதில்வாயில் என்பது இங்கு நினைவுக்குக் கொண்டுவரவேண்டும். அங்கும் ' கல்கால் கவணை ' கூறப்பட்டுள்ளது. இத்தகைய பொறிகள் பண்டைத் தமிழ் நாட்டு நாகரிகத்தை நன்கு எடுத்துக்கூறுகின்ற சின்னங்களாய் விளங்குகின்றன.

9. சமயம்

இப்பாடல்களிலிருந்து அக்காலச் சமயக்கோட்பாடுகளை நன்கு அறிந்துகொள்ளவியலாவிடினும், பாடல்களிலும், பதிகத்திலும் வந்துள்ள சில குறிப்புக்களைக்கொண்டு ஒன்றிரண்டு கூறலாம். பதிகத்தில்,

"மந்திர மரபின் தெய்வம் பேணி

மெய்யூர் அமைச்சியல் மையூர் கிழானைப் புரையறு
கேள்விப் புரோசு மயக்கி
அருந்திறன் மரபில் பெருஞ்சதுக் கமர்ந்த வெந்திறல்
பூதரைத் தந்திவண் நிறீஇ
ஆய்ந்த மரபில் சாந்தி வேட்டு”

(ஒன்பதாம்பத்து, பதிகம்: ௧0-௫.)

என்று கூறியிருத்தலால், தெய்வத்தைப் பேணுதற்கு மந்திரம் உதவினின்றது என்றும்; மையூர்கிழான் என்ற அமைச்சனைச், சேரன், புரோகிதனைக்காட்டிலும் அற நெறி அறிவானாகப் பண்ணினான் என்றும், வெந்திறல் பூதரைக் கொண்டுவந்து சாந்திவேட்டு மன்னுயிரைச் சேரன் ஆண்டுவந்தான் என்றும் அறியக்கிடக்கின்றது. இக்குறிப்புக்கள், வடநாட்டுச் சமயக்கொள்கைகள், இதற்குள் தமிழ்நாட்டில் புக ஆரம்பித்துவிட்டன என்பதை எடுத்துக்காட்டுகின்றன. 'வடநாட்டில் நிகழ்ந்த அரசியல் குழப்பங்கள் காரணமாய் வடமொழி, பாலி, பிராக்ரித் முதலிய மொழிகளை ஆராய்ந்த அறிவாளர் தென்னிந்தியாவிற்குச் செல்லும்படியாயிற்று. இந்தியா முழுவதற்கும் பொதுவான அறிவு ஆய்வுக்களமாய் காஞ்சிபுரம் விளங்கியது. இப்படிப்பட்ட ஒரு மாறுதல் நிகழ ஆரம்பித்ததைப் பதிற்றுப்பத்திலேயே நாம் காணலாம்' என்று திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரம் கூறியது ஆராய்தற்குரியது.

போர்செய்யத் துவங்குகையில், பகைவர் தம்மைக் காட்டிலும் படைப்பெருக்குடையராயிருப்பின், தமக்குப் பாதுகாவலாயிருக்கும்படி தெய்வத்தை வழிபடுவர் என்பது 'பகை பெருமையில் தெய்வம் செப்ப' (2: 1) என்பதிலிருந்து அறியக்கிடக்கிறது.

அறமாகிய நன்னெறியைச் செய்து விளங்குவதும், அதற்கு இடையூறு நேருங்கால், அதைப் போக்குதற்கு வீரமாகிய மறச்செயலை மேற்கொள்ளும் கோட்பாட்டைத் தலைவரும் வீரரும் ஆதரித்தனர் என்பதும், 'அறம்புரிந்து வயங்கிய மறம்புரி கொள்கை' (5: 9-10) என்றதனால் தெரியவருகிறது. அறத்திற்கு இடையூறு நேர்ந்தவழி, வீரச்செயல்கள் செய்து அறத்தையே நாட்டவேண்டும்

என்றதனுல், அக்காலம் அஹிம்ஸா தர்மத்தைக் கடைப் பிடிக்காத காலம் என்றும், வீரத்திற்கே முதலிடத்தை யளித்த காலம் என்றும் கூறலாம்.

கடம்பர், தங்கள் காவல் மரமாகிய கடம்பு, தெய்வத் தன்மை பொருந்தியதாகக்கொண்டு, அதைப் பேணி வந்த

னர் என்பது, 'அணங்குடைக் கடம்பு' (8: 6) என்றதனுல் பெறப்படும். அரசர்கள் தத்தமக்கென்றிருந்த காவல் மரங்களைத் தெய்வம்போல் பேணி வழிபட்டனர் என்றும், பகையரசர், தமது வெற்றிக்கு அறிகுறியாய், அம் மரங் களை வேரொடு தகர்த்தழிக்க முனைந்து நின்றனர் என்றும் அறிகிறோம்.

தமிழ்வீரர் வணங்கிய தெய்வம் கொற்றவை.

தரும் தாயே கொற்றவை எனப்

வெற்றி மலைத்தொடரிலுள்ள அயிரை

பெயர் பெற்ருள். ஆனை
என்னும் குன்றின்மீது
கொற்றவையின் கோயில் ஒன்று முற்காலததிலிருந்தது. மன்னரும் மறவரும் அங்குக் குருதிப் பலிகொடுத்து வழிபாடு செய்தனர். நாளடைவில் அயிரைமலை ஐவர் மலையாய் மருவிற்று. பஞ்சபாண்டவராகிய ஐவருக்கும் உரியது அம் மலை என்றும் கதை எழுந்தது. அதற்கியைய அங்கிருந்த கொற்றவையே, ஐவர்க்கும தேவியாய பாஞ்சாலி
என்றழைக்கப்பட்டாள் என்று தோன்றுகிறது. இக்கொற்றவையைப் பற்றிய செய்தியைப் பாடல்களில் பல விடங்களில் காணலாம்,

'உருகெழு மரபின் அயிரை பரவியும்' (பதிற்று. ௯௦: ௧௧) என்றதால் கொற்றவை
அச்சத்தைத்தருபவள் என்பதும், அயிரை மலையிருப்பவள் என்பதும் தெரிகிறது.

"குருதி விதிர்த்த குவவுச்சோற்றுக் குன்ருேடு
உருகெழு மரபின் அயிரை பரைஇ" (பதிற்று. ௮௮: ௧௧-௨) என்றதனுல், பகைவரைக்கொன்று, அவர் குருதி தெளித்
துப் பிசைந்த சோற்றுக்குவியலை, அச்சத்தைத் தரத்தக்க கொற்றவைக்குப் படைத்து, அவளை வழிபடும் வழக்க

மிருந்தது என்று அறிகிருேம். பதிற்றுப்பத்தின், 79-ஆம் பாடலிலும் கொற்றவையைக் குறித்த குறிப்பு காணப்படு

கிறது.

போர்வீரர், போரிடத்து முயன்று போர்செய்து, புண்பட்டு அழிந்தாலும், யாக்கை நிலையாமை, உலகம்

நிலையாமை இவற்றையறிந்து, என்றும் நிற்கும் புகழையே மனத்தில் கொண்டனர் என்பது புலனும். 'காஞ்சி சான்ற வயவர் பெரும!' (10: 39) என்பது இக்குறிப்பை உட்கொண்டது.

10. தேவியின் குணநலன்கள்

ஏனைய நாட்டுப் பண்டையிலக்கியங்கள் போலவே, பண்டைத்தமிழ் இலக்கியங்களும், தலைவனது சிறந்த போர்ச்செயலுடன், சிறிது காதலையும் பிணைத்துவைத்

தன. பதிற்றுப்பத்திலும் இதைக் காண்கிறோம். இச் சேரன், காதல் இன்பத்தைக்காட்டிலும் போரையே மிகுதி யாக விரும்பியவன். ஒவ்வொரு நாளையும் போர்ப்பாசறை யிலேயே கழிக்கிறான். அவன் கற்புக்குரிய தேவியோ பிரிவுத்துன்பத்தைப் பொறுத்துக்கொண்டு இல்லிலிருக் கிறாள். அவளது கூந்தல் பூவிழந்திருக்கிறது. நெற்றி ஒளியிழந்து காண்கிறது. வேறணிகலன்களையெலலாம் அகற்றிவிட்டு மங்கல நாண் ஒன்றையே அணிந்துளாள். அவளைச்சுற்றி ஆயமகளிர் இருக்கின்றனர். இத்தகைய கற்புத்தேவியை ஒருநாளாவது போய்க் காணவேண்டு மென்று சேரனைப்பார்த்துப் புலவர் கூறுவனபோல் பாடப் பட்ட அடிகள் இவை:

'மாணிழை யரிவை காணிய ஒருநாள்
பூண்க மாளநின் புரவி நெடுந்தேர்' (பதிற்று. அக : நக-உ)

தேவியின் குணநலன்கள் பாராட்டுக்குரியன. அவ ளது பெருமைக்கு ஏற்றவாறு அமைந்த மெல்லிய சொற் களைக்கொண்டே அவள், அவனைக் காண்பதற்குப் பொறு மையுடன் காத்திருந்தாள். அவள் குணநலனை,

"பெருந்தகைக் கமர்ந்த மென்சொல் திருமுகம்"
(பதிற்று. அக : ந0)

என்னும் அடி கூறும்.

பின்

மேலும், சேரனிடத்து அன்பால் ஒடுங்கிய அத்தேவி மனம், அவன் பிரிந்திருந்தபோதிலும், அவனிடம்

ஒன்பதாம் பத்து

289

யாது காரணம் பற்றியும் புலத்தலில்லாது, போதிலும், கனவில் பிரியாதிருத்தலால, நனவிற் பிரிந்த அதையே நன வில் பிரியாததுபோல் கொண்டு, மனையிலிருந்து நல்லறம் புரியும் தன்மையைக் கொண்டது என்பதை,

'நின்மாட்(டு)
அடங்கிய நெஞ்சம் புகர்படுபு அறியாது
கனவினும் பிரியா உறையுளொடு'— (பதிற்று, அக : கஅ-டு)

என்னும் அடிகளால் பெற வைக்கிறார். மேலும் கற்பில் சிறந்தவளாகிய அத்தேவி, கற்புத்தெய்வமாகிய அருந்ததி யுடன் ஒப்பிட்டுக்கூறத் தகுதி வாய்ந்தவள் என்பதை,

'மீனொடு புரையுங் கற்பின்' (பதிற்று, அக கக.)

என்றார்.

' வளப்பம் பொருந்திய காவிரியாற்றல்

படைக்கப்பட்ட
நல்ல நாடுபோல் தோன்றியவளாகிய அவள், அடக்கத்தைப் பொருளாகக்கொண்டு கணவன்மீது கோபம் கொள்ளுதற்குரிய காரணமிருந்த பொழுதும், இனிய சொல்லும், பணிந்த நடையும கொண்டு, அறக் கற்புடன் கூடி, யாவரும் வணங்குதற்குரிய தன்மையுடன் தோன்றினாள் என்பதை,

'காவிரிப் படப்பை நன்னா டன்ன
வளங்கெழு குடைசூ லடங்கிய கொள்கை
ஆறிய கற்பில் தேறிய நல்லிசை
வண்டார் கூந்தல் ஒண்டொடி' (பதிற்று, ௯௦:௪௭-௫௦)

என்றும்,

"அடங்கிய நெஞ்சம் புகர்படு பறியாது"
(பதிற்று, அ௯: ௧௪)

என்றும் கூறினார்.

பெண்களின் சிறப்பை எடுத்தோதும்போது, அவர்களை, வளம்பொருந்திய நாடு ஊர் இவற்றுடன் ஒப்பிட்டுக் கூறுதல் பண்டை இலக்கிய மரபு. அதுபற்றியே, இங்குத்

ப. சொ.—19

தேவியைக் காவிரிப்படப்பை நன்னாட்டுடன் கூறினார்.

ஒப்பிட்டுக்

பெருங்குன்றூர் கிழார், இக்குத் தேவியின் குணநலன்களாகக் கூறுவன, பொதுவாக அரசகுல மகளிர் யாவருக்கும், பண்டைய இலக்கிய இலக்கண ஆசிரியரால் கூறப்படுவனவான நலன்களே. (பாடல்களில் கூறப்படுபவரான ஆடவர் பெண்டிருடைய குணநலன்களை நன்கு உரையிட்டு, நல்லதும் தீயதுமான அவர் இயல்புகளை நுணுகி ஆராய்ந்து பாடல்கள் வாயிலாய் வெளியிடும் இலக்கிய முறை, பிற்காலத்தெழுந்த கம்பராமாயணம் போன்ற நூல்களிலேயே காணப்படுகின்றன) ஆங்கிலத்திலும் இத்தகைய முறையை இலக்கிய வளர்ச்சியின் பிற்பகுதியிலேயே காண்கிறோம். தலைவன் தலைவி முதலிய பெருந்தகையாளருக்கு இலக்கண வாசிரியர் கூறிப்போந்த கட்டளைப்படியே புலவர்கள் பாடல்களை இயற்றிய அக்காலத்தில், தனித்தனி ஆடவர் பெண்டிர்க்குரியனவான குணநலன்களை விதந்தோதும்முறை கையாளப்படவில்லை போலும்! இது காரணமாகவே, சங்க நூல்களும், சங்கம் களும் மிகுதியான வேறுபாடுகளில்லாமல்,

மருவிய நூல்
மீண்டும் மீண்

டும் வரையறையுள்ள சில பொருள்கள் மீதே பாடப்பெற்றன. எனினும் அப்புலவர்கள், உள்ளதைக்கொண்டு, நல்லதைச் செய்த சான்றோர்களாகையால், அவர்கள் பாடல்கள் அழகுச் சித்திரங்களாய் விளங்குகின்றன.

11. அரசனின் இயல்புகள்

சேரமானது இயல்புகளைப் புலவர் பல படியாக எடுத்துக் கூறுகிறார். அரசனது வெற்றியும், வீரமும், அளியும், அஞ்சாமையும், கொடையும், ஆட்சிநலனும் இப் பாடல்களில் கூறப்படுகின்றன.

1. வென்றி

'நீ ஒவ்வொரு பகைவர் அஞ்சிக்

காணும் பாசறையிலிருப்பதால் உன் கண்ணுறங்காதிருக்கின்றனர். ஒரு

பகையரசன் நாட்டைக் கொள்ளைகொண்டபோது, சேரன் கைப்பற்றிய பொற்கலன்களை உருக்கி, அதனினின்றும்
கிடைத்த பொற்கட்டிகளை வீரருக்குப் பகிர்ந்துகொடுத்தான். இங்ஙனம் கொடுப்பது, ஆட்சிமுறையாகவே கருதப்பட்டது வீரருக்கு இன்ன தகுதிக்கேற்ப, இன்னவாறு பகிர்ந்து வழங்கவேண்டும் என்று அரசனுடைய சான்றோர் கூறிக்கொண்டு நிற்பர்.

" அழல்வினை யமைந்த நிழல்விடு கட்டி

கட்டளை வலிப்ப நின் தானை யுதவி"

(பதிற்று, அக: கசு-எ.)

என்றார். இதனாலேயே இப் பாடல் 'நிழல்விடு கட்டி' என்று பெயர்பெற்றது. நிழல் என்பது ஒளி.

இச் சேரன், பகையரசன் நாட்டையழித்தற்குப் பல் வகை முறைகளைக் கையாண்டனன். சென்ற உலகப் போரில், ஒரு நாட்டார், பகைவர் தமது நாட்டைக் கைப்பற்றி நாட்டின்கண் ணுள்ள வளப்பங்களை உரிமையாக்கித்
தம் ஆக்கங்களைப் பெருக்கிக்கொள்ளுமுன், தம் நாட்டின் வளப்பத்தையெல்லாம் அழித்துப் பொசுக்கினர் என்று கேள்வியுறுகிறோம். இச் சேரன், பகைவர்
நாட்டைக் கைப்
பற்றி எரியிட்டும்,
தோடு, அங்குள்ள

சூறையாடியும், அந் நாட்டை அழித்த
உயரிய பொற்கலன்களைக் கவர்ந்து வந்
தனன் என்று தெரிகிறது.

மேலும் மரங்கள் நெருங்கிய பல நாடுகளையும்

தந்து, அந்நாடுகளுக்குரியவனான சோழனையும் பிணித்துக்கொண்டு வாருங்கள் என்று கூறிய சேரன் வார்த்தையைக் கேட்ட அளவில், சோழ வீரர் சேரனுக்கு அஞ்சி, தங்கள் கையிலிருந்த வேற் படையைக் கீழே எறிந்து, தங்கள் தோல்வியைக் காட்டினர் என்றும், அவ்வாறு
எறியப்பட்ட வேற்
படைகள் கணக்கற்றவையென்றும்,
சேரன் செல்வக்கடுங்கோ வாழியாதன்,

முன்னொருகால்
தன்னைப் பத்துப்

பாடல்களால் (ஏழாம் பத்துப்) பாடிய கபிலனுக்கு நன்றா எனும் குன்றேறி நின்று, தன் கண்ணிற் கண்ட ஊரெல்

லாம் காட்டிக் கொடுத்தானன்றோ ? அந்த ஊர்களைக் காட்டிலும், சோழ வீரர் எறிந்த வேற்படைகள் மிகப்பல என்றும் கூறுகிறார்.

இதிலிருந்து, சேரனுக்கும் சோழனுக்கும் பகை மூண்டிருந்ததென்றும், சோழநாடு மரங்கள் செறிந்த வளநாடாகவிருந்ததென்றும் தெரியவருகிறோம். கபிலன், கடுங்

கோவிடமிருந்து பற்பல ஊர்கள் பரிசிலாகப்பெற்றான் என்பதிலிருந்து, அரசர் புலவருக்குப் பரிசிலாக ஊர்களை அளித்து அவர்களைப் பாராட்டினர் என்றும் தெரிய வருகிறது.

13. முன்னோர்

இனி, இச் சேரனைப் புகழவிரும்பிய புலவர், இவன் முன்னோர் புகழையும் எடுத்துக் கூறுகிறார்.

"கடலிருப்ப வேலிட்டும்
உடலுநர் மிடல்சாய்த்தும்
மலையவும் நிலத்தவும் அருப்பம் வெளவிப்
பெற்ற பெரும்பெயர் பலர்கை இரீஇய
கொற்றத் திருவின் உரவோர் உம்பல்;"
(பதிற்று, ௯0: உ0-௪.)

'இத்தகைய முன்னோர் வழியில் வந்தவனே' என விளித்து அரசனைப் புகழுகிறார் புலவர். இங்கு, 'கடலிருப்ப வேலிட்டவன்' கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன்; உடலுநர் மிடல்சாய்த்து அருப்பம வெளவியவன் பல்யானைச் செல்கெழு குட்டுவன். முன்னோர் பெயரையுங் கூறாது, செயலை மாத்திரம் கூறியதனால், இத்தகைய அரிய செயல்களைச் செய்த மரபில் வந்தவனை இச் சேரனைப் புகழுதற்கே அச் செயல்கள் சுட்டப்பட்டன எனத் தோன்றுகிறது.

"நற்காண்ட,
விறல்மாந்தரன் விறல்மருக" (பதிற்று, ௯0: கஉ-௩.)

என்றதனல், நன்கு ஆட்சி புரிந்த மாந்தரன் என்னும் வழியில் தோன்றியவனே என்பதில் சேரனுக்கு முன்னிருந்து ஆண்டவன் மாந்தரன் என்று விளங்கவைத்தார்.

“துளங்கிருங் குட்டம் துளங்க வேலிட்டு
அணங்குடைக் கடம்பின் முழுமுதல் தடிந்து.”
(பதிற்று,

அஅ: ரு-சு.)

என்னும் அடிகள்,
நெடுஞ்சேரலாதன்

கடலிடத்தே சென்று இமயவரம்பன்
என்பான் தன் வேற்படையை ஏவிக்
கடம்பர் என்பாருடன் போர் தொடுத்ததையும்,
அவர்கள் காவல்மரமாகிய கடம்புமரத்தை
அழித்ததையும் கூறுகிறது.

‘பொருமுரண் எய்திய கழுவுள் புறம்பெற்று
நாம மன்னர் துணிய நூறி
கால்வல் புரவி அண்டர் ஓட்டி
சுடர்வீ வாகை நன்னன் தேய்த்து’
(பதிற்று. அஅ: எ - கഠ)

என்னுமடிகள், இளஞ் சேரலிரும்பொறையின் தந்தையாகிய பெருஞ்சேரல் இரும்பொறையுடன், கழுவுள் என்னும் சிற்றரசன் பகைமை கொண்டு, தனக்கு உதவியாகச் சிற்றரசர்களையும், குதிரைகளைக் கொண்ட இடையர்களாகிய அண்டர்களையும் கொண்டுவர, அவர்கள் யாவரையும் தோற்றோடும்படி செய்தான் என்றும் தெரிய வருகிறது. கழுவுள், அண்டர்களுக்குத் தலைவன் என்பது 'ஆன்பயம் வாழ்நர் கழுவுள் தலைமடங்க' என்று அரிசில்கிழார் கூறியிருப்பதிலிருந்து தெளிவுறும். நன்னன் என்பான், களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரல் வாழ்ந்த காலத்தில், அவனை எதிர்த்துவர, நார்முடிச் சேரல் அவனை வென்று அவன் காவல்மரமாகிய வாகையையும் அழித்தான் என்று தெரியவரும்.

'உருகெழு மரபின் அயிரை பரைஇ

வேந்தரும் வேளிரும் பின்வந்து பணிய'
(பதிற்று. அ௮ : க௨ - ௩)

என்னுமடிகள் இளஞ்சேரலிரும் பொறையின் முன்னோனை பல் யானைச் செல்கெழு குட்டுவன் அயிரைக் கடவுளாகிய கொற்றவையைப் பரவியதையும், இச் சேரனுக்கு முன்னோராகிய வலிமை பொருந்திய சேரரிடத்துப் பெருநில மன்னராகிய சோழபாண்டியரும் ஏனைய குறுநில மன்னரும் அடிபணிந்து வணங்கியதையும் சுட்டும்.

கடம்பரைக் குறித்துப் பதிற்றுப்பத்துப் பாடல் களில் கூறப்படுகின்றது. கடம்பர் என்பார் கடலிடத் தைச் சேர்ந்த கப்பல் கொள்ளைக்காரர்போலும் என்

கிறார் டாக்டர் திரு. எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார். இதுவே பதிற்றுப்பத்தில் கூறப்பட்ட குறிப்புக்களுடன் பொருந்திப் போகிறது. கடம்பர் மைசூரின் மேற்குப் பாகத்தையும் இரு கன்னர மாகாணங்களையும் கொண்ட நாட்டையுடையவர் எனக் கூறப்படுகிறது. மற்றொரு சாரார், கடம்பர், துவக்கத்தில் அந்தணர் குலத்தைச் சார்ந்தவர் என்று கூறுகின்றனர். இவர்கள் கடம்பு மரத்தைத் தங்கள் வீட்டுக்கெதிரே நட்டுப் பாதுகாத்து வந்ததனால் இப்பெயர் பெற்றனர். இவர்களுடைய பண்டைய

தலைநகர் வானவாசி, டாலமி என்ற கிரேக்க ஆசிரியர் கூறும் வைஜயந்தியே இந்நகர். புராணக் கதைகள், கடம்பருடைய ஆதித் தலைவன் திரிலோசனக் கடம்பன் என்று கூறுகின்றன. தால்குண்டாச் செப்பேடுகள் இவர்களைப்

கின்றன.

பற்றிய செய்திகளை நன்கு எடுத்துக்கூறு
கடம்ப அரசர்களுள் மாயூர வர்மன் என்பான்

பெயர் பெற்றவன் என்றும், அவன் காஞ்சியிலிருந்த
அரசனுடன் மாறுபட்டுக் காஞ்சியினின்று வெளியேறியதி

லிருந்து பல்லவருக்கும் கடம்பருக்கும்
கொண்டிருந்ததென்றும் தெரிய வருகிறது.

பகையிருந்து

14. சேரனும் அவன் பெயர்களும்

இச் சேரன் ஆட்சி செய்த நாடுகளின் பெயர்களை வைத்து, இவனை விளிக்கும் முறை இப் பாடல்களில் பல் வேறு இடங்களில் காணப்படுகிறது. பூழியர் கோ, பூழியர் மெய்ம்மறை என்று இவனைப் புலவர் விளிக்கிறார். பூழி

நாடு என்பது பண்டைத் தமிழ் நாட்டுப்பிரிவுகளுள் ஒன்று. இது அரபிக்கடற்கரையிலிருந்தது. இது சேரருக்குரிய நாடு. பூழிநாடு என்பது மணல் நாடு என்று பொருள் படும். இது பாண்டி நாட்டிற்கும் சேரநாட்டிற்கும் இடைப் பட்டது. இவ்விரு அரசருக்கும் இந்நாடு மாறி மாறிச் சென்றதால் இவ்விரு பெருவேந்தரும் 'பூழியர்கோ' எனப் பட்டார். கொங்கர்கோ என்றது சேரனுக்கு மற்றொரு பெயர். கொங்குநாடு என்பது கோயமுத்தூரும், சேலத் தின் தென் பகுதியும்கொண்ட நாடாகும். முதன்முதலில் கொங்குநாடு, சேரருக்குச் சேராமல் தனி நாடாயிருந்தது; பின் சேரநாட்டுடன் சேர்ந்த ஒரு பிரிவாயிருந்தது. இதற் குப் பின் கொங்குநாடே சேரநாடெனக் கருதப்பட்ட தென்றும், கேரளநாடு தனிநாடா யிருந்ததென்றும் தெரிகிறது. குட்டுவர்கோ என்பதும் ஒரு பெயர். குட்ட நாட்டுக்குத் தலைவன் என்பது பொருள். குட்டநாடு, நீர் நிலைகளைக் கொண்ட நாடு என்று பொருள்படும். சேரர் ஆண்டுவந்த இத் தமிழ்நாடு அரபிக் கடலை அடுத்திருந்தது.

'தொண்டியோர் பொருந' என்று மற்றொரு முறை விளிக்கிறார் புலவர். தொண்டி, மேலைக் கடற்கரையிலுள்ள தும், சேரர்க்குரியதுமாகிய பேரூர். இங்கிருந்தே இச்சேரக் குடியினர் ஆட்சி புரிந்து வந்தனர். ஆகவே தொண்டி நகரி லிருந்து ஆட்சி புரிபவனே! என்பது இதன்பொருள். [1]'மாந்தையோர் பொருந' என்றும் விளிக்கிறார். மாந்தை, மேலைக் கடற்கரையில் சேரர்க்குரித்தாயதோர் நகரம். 'இரங்குநீர்ப் பரப்பின் மாந்தை என்பதனால் இது விளங் கும். இது 'குட்டுவன் மாந்தை' என்றழைக்கப்பட்டதால், குட்டுவன் என்ற அரசனால் நிறுவப்பெற்றதுபோலும்.

ஆகவே, இப்பாடல்களில் காணப்படும் வரலாற்றுக் குறிப்புக்கள், பண்டை அரசர்களைப் பற்றிய உண்மைச் செய்திகள். ஆனால் அவ்வரசர்கள் எப்பொழுது அரசாண்டார்கள், எவ்வாறு ஆட்சிசெய்தனர் என்பதைக்

1. இதனை மரந்தை என்றும் வழங்குவர்.

குறித்த செய்திகள் அருகியே வந்துள்ளன. பொதுவாக, சேரவேந்தரின் கல்வித்திறம், மனத்திண்மை, புகழ் நோக்கு, ஈகைத்திறம் முதலிய பண்புகளும், படை வன்மை, போர்த்திறம் முதலிய ஆட்சித்திறனும் அறியக் கிடக்கின்றன.

15. பாடல்நயம்

1. நிழல் விடுகட்டி

இரும்பொறை பாசறையிலிருக்க, அவன் அரிவை, கற்பே அணிகலனாய் இல்லிருந்தலைக் கூறியதால், இப்பாடலின் துறை முல்லையாயிற்று. அரசன் கொள்ளைகொண்ட பல்வேறு பொற்கலன்களை ஓரினமாக்குதற்குப் பொடித்து உருக்கிப் பொற்கட்டிகளாக மாற்றினமை தோன்ற 'அழல் வினை அமைந்த நிழல்விடு கட்டி' என்றார். இதனாலே இப் பாடல் 'நிழல்விடு கட்டி' என்ற பெயர்பெற்றது.

இரவு நேரத்தில் போர் நிகழுதல் இல்லை யெனினும் வீரவளைகளைத் தோளில் அணிந்து எப்பொழுதும் போர்வினை வாகவே பாசறையில் வீரர் நேரத்தைக் கழிக்கின்றனர் என்பதைச் சிறப்பிக்க 'மாயிருங் கங்குலும் விழுத்தொடி சுடர்வர' என்றார் வீரர் குளிரால் தோளைப் பிணித்துக் கொள்வதால் 'தோள்பிணி மீகையர்' என்றார். முல்லைப்

பாட்டில் ஆய்மகளைக்

கையள்' என்பதற்கு

குறித்து 'நடுங்குசுவல் அசைத்த

நச்சினார்க்கினியர் 'இடைமகள் குளி

ரால் நடுங்குகின்ற தோளின் மேலே

நின்று' என்று பொருள் கூறுவர்.

கட்டின கையளாய்

பண்டைத் தமிழ்ப்

புலவர் தமிழ்நாட்டில் கூதிர்காலத்தில் இயற்கையாய் நிகழும் இக்காட்சியைத் தன்மைநவிற்சியாய்க் கூறியதில் இலக்கிய இன்பம் தொனிக்கிறது.

'இடா ஆ வேணி' (ஏணி) என்பது எல்லையைக் காட்டிற்று. பாயாவேங்கை என்பது, வேங்கை மரத்தைச் சுட்டியதுபோல். கொல்லி மலையிலுள்ள செல்வர் காந்தள் கண்ணி சூடியும், முழவைப் போன்ற பலாப்பழம் உண்டும், இனிய

கள்ளை
விழாக்
மூங்கிற் குழாயினிடத்தே பெய்து அருந்தியும்,
காலத்தைப்போல் நாட்களைக் கழித்தனர் என்று

கூறி, அதையடுத்து உன் தேவியைச் சுற்றியுள்ள ஆயமகளிர்
கொல்லி மலையின் இருவாட்சி மலரை யணிந்து மின்னலை

யொத்த ஒளி திகழும் அணிகளை அணிந்துள்ளார் என்றும்
கூறி, யாவரும் இன்பம் அனுபவிக்க உன் தேவியோ துன்
பத்தினால் வருந்தி உன்னையே நினைந்து கொண்டிருக்கிறாள்.
அவள் கூந்தலில் பூச்சூடிக் கொள்ளவும், ஆபரணங்கள்
அணிநதுகொள்ளவும அவளைக் காண உன் தேரில் ஏறி
ஒருநாள் போய்வா; அப்படிப்போவதனால் உன் துணைவிக்கு
இன்பம் தருவதுமல்லாமல் உன் பகையரசர் பயமில்லாமல்

ஓர் இரவு துயில்
கிறார். ஆகவே

கொள்ளுதற்கும் உதவியாயிருக்கும் என்
'ஏனையோர் விரும்பும் காம இன்பத்தைக்
காட்டிலும் போரிடை உண்டாகும் வெற்றி
இன்பமே உனக்குப் பெரிது' என்று கூறி அரசனது
போர்ச்செயலைப் புலவர் வியக்கிறார்.

ஒவ்வொரு பாடலுக்கும் உயர்நிலையடிகள் சிலவுள. இப்பாடற்கு,

'மாணிழை அரிவை காணிய ஒருநாள்
பூண்க மாளநின் புரவி நெடுந்தேர்'
(பதிற்று. ௪௧: ௩௧-௨)

என்பன அவ்வடிகள்.

2. வினை நவில் யானை

இரும்பொறை ஒவ்வொரு நாளையும் பாசறையிற் கழித்துவருதலினால் அவனைக் காணும்படி புலவன் பாசறை வந்ததாகப் பாடப்பட்ட இப்பாடல், காட்சி வாழ்த்து எனும் துறையாயிற்று. பகைவரது போரையறிந்து தாக்கி வெற்றி கொண்ட யானை யாகையால் இப்பாடல் 'வினைநவில் யானை' என்று பெயர்பெற்றது. வீரர், குளிர்காலத்தில் பாசறையில் இருப்பதால் காட்டிலுள்ள விறகையெல்லாம் முறித்துக் குளிர் காய்கிறார்கள் என்பதை 'காடுகை காய்த்திய' என்

னும் தொடர்விளக்கும். புலவர் உள்ளதையுள்ளவாறு எடுத்துக்கூறும் இடங்களில் இஃதொன்று.

' பாடுநர், கொளக்கொளக் குறையாச்
கொலக்கொலக் குறையாத் தானை '

செல்வத்துச் செற்றோர்
(பதிற்று, அஉ: கஉ-ரு)

என்னும் அடிகளில், கொளக் கொளக் குறையா என்றும் கொலக் கொலக் குறையா என்றும் ஒருவகைச் சந்தம் தொனிப்பதால், அடிகளைப் படிப்பதில் ஓர் இன்பம் பிறக்கிறது.

அரசனுடைய உயரிய குணங்களைச் சான்றோர் வதாகக் கூறும் பின்வரும் அடிகளே பாடலுக்கு

புகழ்
உயிர்

நிலையடிகள்.

' வண்மையு செம்மையுஞ் சால்பும்
மறனும்
புகன்றுபுகழ்ந் தசையா நல்லிசை! '
(பதிற்று, அஉ: கச-இ)

3. பஃறோற் றொழுதி

பகைவருடன் அதிரப்பொருவதால் உண்டாகும் போராரவாரத்தைக் கூறுதலால் தும்பையரவம் என்ற துறையாயிற்று. போர் யானைகளோடு கட்டிவரும் இடுகுப் படையின் தோற்றத்தைக் கூறுதலால் பல்தோல் தொழுதி என்று பெயர்பெற்றது கார் காலத்து வானத்தில் கறுத் துப்படர்ந்த மேகப் புடலங்கள்; வெண்ணிறக் கொக்குகள் சிறகை விரித்து ஒரே சமயத்தில் வானத்தின் கரிய மேகக் கூட்டத்திற்கு முன்னே பறந்து செல்கின்றன. கொக்கு களின் நீண்ட வரிசை, ஒரு சிறிது குலைந்தாலும், அவைகள் வரிபோல் செல்லும் தோற்றம், நம் மனத்தின் கண் உள்ள எழில் உணர்ச்சியைத் தூண்டுகிறது.

நீ, பகைவர் மேல் செல்லும் செலவு எமக்கு இனிமை

ை பத் தரும். பகைவருக்கோ துன்பத்தைத் தரும்:—

' செலவு பெரிதினிது நிற்காணு மோர்க்கே

இன்னுதம்ம......மாறுகொள் வேந்தர் பாசறையோர்க்கே'

(பதிற்று, அங: ௫-௬)

எனும் இவ்வடிகளே உயிர்நிலையடிகள்.

ஒன்பதாம் பத்து 303

4. தொழில்நவில் யானை

இப்பாடல், அரசனது வெற்றிச்சிறப்பைக் கூறியதால், வாகையாயிற்று. தனது போர்த்தொழிலை நன்கறிந்து, மழை முழக்கத்தைக் கேட்டவுடன், முரசு முழக்கம் என நினைத்து, முன்னிருந்த பாசறையின் இடத்தை நோக்கிச் செல்லும் யானையைச் சிறப்பிக்க 'தொழில்நவில் யானை' என்றார்.

மழைமுழக்கத்தைக்கேட்டு, இவ்வாறு சென்ற யானை, உண்மையில் போர்முரசு கேட்கும்போது என்னதான் செய்யாது? முழங்கிக்கொண்டு செல்லும் யானையின் காலுக்கு எதிரே, இளைய மூங்கில்முளை அகப்பட்டால், இருந்த இடமில்லாமல அழியும. மூங்கில், யானைக்காலுக் கெதிரே அகப்படுவது அதன் அறிவீனமே. அதுபோலவே பகைவரும் சேரனுடைய வலிமையை அறிந்திருந்தும், இப்பொழுது அறிவிழந்து அவனை எதிர்த்து அவனால் தோல்வியுற்றுக் கிளையொடும் அழிவர்.

“ கழைதின் யானைக் காலகப் பட்ட
வன்றிணி நீண்முளை போலச்
சென்றவண் வருந்தப் பொரேஎ னாயின் ”

என்று புறப்பாட்டிலும் (73) கூறப்பட்டுள்ளது.

மழையை உரியகாலத்தில் பெய்து உழவுத் தொழில் நிகழும்படி செய்து மலையுச்சியை யடைந்த மழைமுகில், நெடுங்காலம் பெய்யாதிருந்த பின் மிகுதியான மழையைப் பெய்தலால், பலவகைச் சத்தங்களைச் செய்யும் பறவைகள் மிகவும் ஆரவாரிப்பதுபோல், அநேக காலமாய்ப் போரின்றி இப்பொழுது போர்புரிந்து வெற்றிபெறுதலால் வரும் ஆரவாரத்தைக் கொண்டனர் என்று உவமை முகத்தால், வீரர் போர்மீது கொண்ட விருப்பத்தை விளக்கினர்.

'உன்னுடன் உடன்றவர் அழிவர்' என்று அரசனது வெற்றிச் சிறப்பைப் பாடியதால்,

'வார்முகில் முழக்கின் மழகளிறு மிகீஇத்தன்
கான்முளை மூங்கிற் கவர்கிளை போல
உய்தல் யாவது நின்னுடற்றி யோரே'

(பதிற்று, ௮௪: ௧௧-௩)

என்னும் அடிகள் இப்பாடலுக்கு
உயிர்நிலையடிகளாயின.

5. நாடுகாண் நெடுவரை

சேரனின் கொடையாகிய

கூறுதலால், இப்பாடல் பாடாண்

ஒழுகலாற்றை எடுத்துக்

துறையாயிற்று. சுற்றிலுமுள்ள ஊர்களையெல்லாம் உயர்ந்த மலையுச்சியிலிருந்து நன்கு கண்டதைக் கூறுதலால், 'நாடுகாண் நெடுவரை' என்னும் பெயர்பெற்றது.

'மரங்கள் செறிந்த பல ஊர்களையும், அவ்வூர்களுக்குத் தலைவனான சோழனையும் என் முன்னே கொண்டுவந்து தாருங்கள்' என்று சொன்னதைக் கேட்டவுடன் சோழனுடைய வீரர் தோல்விக்குக் குறியாகத் தங்கள் வேல்களைக் கீழே எறிந்தனர் என்பதில், ஒருவகை நயம் தோன்றுகிறது.

செல்வக் கடுங்கோ வாழியாதன் தன் முன்
போல் அறநெறி கடைப்பிடித்து
னோரைப் யால், அவனை 'முன்திணை முதல்வர்

ஆட்சி புரிந்தவனைப்
போல்' என்று புலவர்
பாராட்டினர்.

கபிலர் சங்ககாலப் புலவருள் தலை சிறந்தவர். குறிஞ்சிப்பாட்டு, குறிஞ்சிக் கலி முதலிய குறிஞ்சித் திணைப் பாட்டுப் பாடுதலில் வல்லுநர். அந்தண குலத்தவர். தமது காலத்தில் மிக்க செல்வராய் விளங்கினவர். பல

ஊர்களை உரிமையாய்க் கொண்டவர். தமிழ்நாடு முழுவதும் அவருக்குச் செல்வாக்கிருந்தது என்பதைச் சங்க காலச் செய்யுட்கள் பறை சாற்றும். முடியுடை மன்னர், குறுநில மன்னர், வள்ளல் முதலியோர் யாவரும் அவருடன் நட்புரிமை கொண்டவர்கள். அவர், பரிசிலாகப் பெற்ற ஊர்களைக் காட்டிலும், சோழவீரர்கள் சேரனுடன்.

பொருதலால் வரும் தோல்விக்குப் பயந்து எறிந்து விட்ட வேற்படைகள் அதிகம் என்பதிலிருந்து அவர் செல்வாக்கு விளங்குகிறது. எனினும் புலவனின் உண்மைச்சிறப்பு, அவன் குணச்சிறப்பே என்பதைக் காட்ட,

'வயங்கு செந்நாவின்
உவலை கூராக் கவலையில் நெஞ்சின்
நனவில் பாடிய நல்லிசைக்
கபிலன் பெற்ற ஊர்' (பதிற்று. அ:

க0 - ந) என்று, கபிலனின் உயர்வைப் பாடி வைத்தார் புலவர்.

தன்னைப் போன்ற புலவன் ஒருவனது உண்மைச் சிறப்பறிந்து அழுக்காறெனும் பாவிக்கு இடம் கொடாது பாடிய இவ்வடிகளே இப்பாடலுக்கு உயிர்நிலையடிகள். முத்தை—இம்மொழி முந்தை என்பதன் விகாரம். முன்னே என்பது பொருள்.

6. வெந்திறல் தடக்கை

துப்

சேரனது வீரத்தையும் அளியையும் ஒருங்கே சேர்த் பாடுதலால், பாடாண் பாட்டாயிற்று. சேரன்,

போரில் பகைவரைக் கொல்லுதற்குரிய திறமை வாய்ந்த கைகளைக் கொண்டவனாதலால், இப்பாடல் வெந்திறல் தடக்கை எனப்பெயர் பெற்றது.

'சேரனைக் குறித்து, அவன் வெந்திறல் தடக்கையான் என்று யாவரும் கூற, யானும் அவனைக் குறித்து, அஞ்சு தற்கே உரியன் என்று நினைத்தேன். இப்பொழுதோ அவன், வறுமையாளர் வறுமையையறிந்து, அதை நீக்கு மளவு கொடுப்பவன் என்றும், அறநெறிகளை ஆராய்ந் தறிதற்குரிய அன்புடைய நெஞ்சைக் கொண்டவன் என்றும், தன்னைப் பாடிப் பரிசில் பெற விரும்பி வருவாரை ஆதரிப்பவன் என்றும் காண்கிறேன். வானியாற்று நீரைக் காட்டிலும் தெளிவும் தண்மையும் மென்மையும் கொண்டவன் அவன் என்று தெரிய வருகிறது' என்கிறார் புலவர். அரசனிடத்துக் குடி கொண்டுள்ள வேறுபாடான இருவகைக் குணங்களைக் கண்டு இறும்பூதெய்துகிறார்.

ப. சொ.—20

செத்தனென்—நினைத்தேன் என்பது இதன் பொருள்.

இக்காலத்து வழக்கற்றுப் போயிற்று இச்சொல்.

சேரனது அரும்பெருங் குணங்களைக் கூறுவனவான

‘ இல்லோர் புன்கண் தீர நல்கும்
நாடல் சான்ற நயனுடை நெஞ்சின்
பாடுநர் புரவலன்’
....
நீரினும் தீந்தண் சாயலன்’ (பதிற்று.

அசு: கூ - கந)

இவ்வடிகளே பாடலுக்கு உயிர்நிலையடிகள்.

7. வெண்டலைச் செம்புனல்

விறலியை இளஞ்சேர லிரும்பொறையிடத்துச்

செல்லும்படி ஆற்றுப்படுத்தியதுபோல் பாடிச் சேரனைப்

புகழ்ந்தபடியால் இப்பாடல் விறலியாற்றுப் படையாயிற்று.

வெளுத்த அலையுடன் கூடிவரும் புது வெள்ளநீர்

செம்மை நிறத்தையுடையதால் ‘ வெண்டலைச் செம்புனல்’
எனப் பாடல் பெயர் பெற்றது.

போரில் வீரனாகத் திகழும் சேரனை, பெண்ணாகிய விறலி தேடிச் செல்வாளேயாகில், அவள் மனக்குறிப்பும், மென்மையும் அறிந்து, அவளுக்கு விருப்பத்தையளிக்கும் அணிகலன்களை அளிப்பான் என்று கூறி நயம்பட வைத் தார். புதுப்புனல்
புணையாய வேழக்

பெருகிய ஆற்றின் நீரைக் கடத்தற்குப்
கரும்பைக் காட்டிலும், சேரன் அளி

செய்தலில் வல்லன் என்றார். வேழக் கரும்பு, ஆற்றின் அக் கரை மாத்திரம் சேர்க்கும், சேரனோ வறுமைக் கடலைக்

கடக்க உதவுவதுமல்லாமல், அக்கடலில் அவன் மீண்டும் விழாதபடி காப்பான். ஆகவே, கரும்பைக் காட்டிலும் அளியன் என்றார்.

சந்தனம் (சந்தம்) அகில் (பூழில்) கரும்பு என்றிப் படிப்பட்ட இனிய பெயர்களைக் கூறி, மென்மை பொருந் திய விறலியை ஆற்றுப்படுத்தும் நயம் பாராட்டற்குரியது.

புனல் கலங்கிச் சிவந்த நிறமாயிருந்த போதிலும் தெளிந்த கடலை நோக்கிச் சென்று தானும் தெளிவு

பெறும். அதுபோல், விறலியும் வறுமையினால் கலங்கித் தவித்தாலும், கடல் போன்ற கொடைத் தன்மையுடைய சேரனிடத்துச் சென்று வறுமை நீங்கப் பெறுவாள் என்பது குறிப்பு.

'கரும்பினும்,
பல்வேல் பொறையன் வல்லனால் அளியே.'

என்னும் அடிகள் உயிர்நிலையடிகள்.
(பதிற்று. அ: ச-ஞ)

8. கல்கால் கவணை

இப்பாடல் சேரனது முன்னோர் செயலையும், அவன் செயலையும் பாடிப் புகழ்ந்ததால் பாடாண்பாட்டாயிற்று. அக்காலத்தில், பகைவரை அழிப்பதற்கென விருந்த பொறிகளுள் தலையாய்க் கருதப்பட்டதும், தானே கல்லை வெளியே சிந்தக்கூடியதுமான பொறி, கல்கால் கவணை என்று வழங்கப்பட்டதால், அப்பெயரே பாடலுக்கு வழங்கலாயிற்று.

'கொளக் கொளக் குறையாது தலைத்தலைச் சிறப்ப
ஓவத் தன்ன வுருகெழு நெடுநகர்ப்
பாவை யன்ன மகளிர் நாப்பண்
....
ஞாயிறு போல விளங்குதி பன்னாள்'

(பதிற்று. அஅ: உஎ, கூஅ)

என்றவிடத்து, கொளக் கொள என்றும், தலைத்தலை யென்றும் அடுக்குத்தொடரின் சந்தம் அழகுடன் தோன்ற, ஓவத்தன்ன, பாவையன்ன, ஞாயிறு போலவென, மூன்று அழகிய உவமைகள் வந்து பாடலுக்கு அழகு தருகின்றன. ஓவியத் தெழுதினாற் போன்ற அழகிய அரண்மனையும், கொல்லிப்பாவை போன்ற மகளிரும், சூரியன் போன்ற சேரனும் என்று உவமைகளைப் பொருத்தமாய் அமைத்தார்.

'நீ நீடு வாழிய பெரும' (பதிற்று. அஅ: உஉ)

'ஞாயிறு போல விளங்குதி பன்னாள்
ஈங்குக் காண்கு வந்தனென் யானே.'
(பதிற்று. அஅ: கூஅ-க)

என்னும் அடிகள் இப்பாடலுக்கு உயிர்நிலையடிகள்.

9. துவாராக் கூந்தல்

(இப்பாடலில் சேரனது நாட்டின் காவல் சிறப்புக் கூறி வாழ்த்தியதால், துறை, காவல் முல்லையாயிற்று. தேவியின் நெய்ப்புப் புலராத கூந்தலைப் பாராட்டித் 'துவராக் கூந்தல்' என்றதால், அதுவே பாடலுக்குப் பெயராயிற்று.)

இப் பாடல் அரசனது செங்கோல் சிறப்புக் கூறியது. அரசன், நடுவுநிலையில் வழுவாமல் ஆட்சிசெய்தலால், மக்கள் இன்ப வாழ்வு நடத்தி அரசனைப் புகழ்கின்றனர்.

'நாளின் நாளின் நாடுதொழு தேத்த.' (பதிற்று, அக: ௧0)

என்று கூறிப், பின்னும்

'உயர் நிலையுலகத்து உயர்ந்தோர் பரவ.'(,, ,, ௧௧) என்றும் கூறினார்.

ஏனெனில், நாட்டு மக்கள் யாவரும், செங்கோன்மையின் பயனைக் கண்டு அரசனை வாழ்த்தித் தொழ, ஒழுக்கத்தால் உயர்ந்த சான்றோர், ஒழுக்கத்திற்கு வழிகாட்டும் அரசனை வாழ்த்துகிறார்கள் என்றார்.

'நல்பல் ஊழி நடுவு நின்று ஒழுக'—இது, நல்ல பல ஆண்டுகள் நடுவு நிலையாகிய செம்மையினின்று வழுவாது வாழ்வாயாக என்றும், பலவாகிய ஊழிகாலமாகக் குறைவின்றி நிலைநின்று வாழ்வாயாக என்றும் பொருள்படும்.

மழை ஏற்ற காலத்தில் பெய்கிறது; வளம் பெருகிய நாட்டில் இன்ப வாழ்வு நடத்திய மக்கள் அரசனை வாழ்த்த, இவ்வாறிருந்தது சேரனது அரசியல். சேரன்மாட்டு அன்பு பூண்ட தேவி, அவனிடம் அன்பால் ஒடுங்கிய மனம் களங்க முறாது, கனவிலும் அவனைப் பிரியாது, நெய்ப்புப் புலராக் கூந்தலையும், அருந்ததி போன்ற கற்பையும், ஒளி பொருந்திய நெற்றியையும் உடையவள். அப்படிப்பட்டவளுடன் சேர்ந்து அரசியல் பிழையாது, நோயின்றி வாழ்வானாக என்று அரசனை வாழ்த்துகிறார் புலவர்.

"அரசியல் பிழையாது செருமேந் தோன்றி
நோயிலை யாகியர் நீயே
மீனொடு புரையுங் கற்பின்
வாணுதல் அரிவை யொடு." (பதிற்று. அசு:
கஉ-உ0) என்னும் அடிகளே பாடலுக்கு உயிர்நிலை
யடிகள்.

10. வலிகெழு தடக்கை

'உனது தண்ணளியும், பெருமையும்,
சுற்றமும் காண வந்தேன், நீ வரம்பின்றி

கொடையும்,
வாழ்வாயாக'
என்றதால் காட்சி வாழ்த்தாயிற்று.

விற்போர் செய்யுமிடத்துக் கைகளே,

மிக்க வலி

யுடையனவாயிருத்தலால், 'வலிகெழு தடக்கை' என்று பாடலுக்குப் பெயர் வந்தது. சேரனின் குணங்களைக் கூறுமிடத்து நீ நீரை யொத்திருக்கிறாய்; விசும்பைப் போன்றிருக்கிறாய்; கடலை ஒத்திருக்கிறாய்; திங்களை யொத்திருக்கிறாய் என்று கூறியதன் நயம் பாராட்டுதற்குரியது. நீரும், விசும்பும், கடலும், திங்களும், எழிலும், வன்மையும் பெற்று அளவிட முடியாத தன்மையைக் கொண்டன. சேரனின் குணங்களும் அளவிடக் கூடாதன என்கிறார்.

'பூத்த சுற்றமொடு பொலிந்து தோன்றலை'—இவ்வடி, சந்தத்துடனும் பொருளுடனும் கூடி நிறைந்து நின்றது.

பூத்த எனும் சொல், எல்லா நலங்களாலும் விளங்குகின்ற என்று பொருள்படும்,

நிறைந்து

சேரனை, உரவோர் உம்பல், கொங்கர் கோவே, குட்டுவர் ஏறே, பூழியர் மெய்ம்மறை, மாந்தையோர் பொருந; என்று அடுத்தடுத்து வெவ்வேறு சொற்றொடர்களால் விளித்த நயம் பன்முறை படித்துப் படித்துச் சுவைத்தற் குரித்தாம்.

காவிரிப் படப்பையின் மக்களது இனிய வாழ்க்கைச் சித்திரம், நம் உணர்ச்சிக்கு இனிமை யூட்டுகிறது:—

கழனியில் தொழில் புரியும் உழவர்

தண்ணுமையை முழக்கினல், வயல்களில் வாழும் மயில்கள் மேகத்தின்

முழக்க மென்று நினைத்து ஆடும். நீர்விளையாட்டு ஆடுவோர், நீரில் மூழ்கும்போது செய்யும் ஆரவாரத்துடன், வீரர் போர்செய்வதற்கு முழங்கும் தடாரிப்பறையின் இனிய ஓசை, கலந்து தொனிக்கும். செல்வம் மிகுந்த மனைகளில் ஆனேறுகள் ஒன்றுடன் ஒன்று மாறுபட்டு முழங்கும். இப்படிப்பட்ட முழக்கங்கள் ஒருசேர முழங்கும் ஊர்களைக் கொண்ட காவிரிப் படப்பை போல், சிலம் பணிந்து, அடக்கமாகிய அணியுடனும், அறக்கற்புடனும் நல்ல புகழைக் கொண்ட சேரன் துணைவி என்றார். வளமான இடத்துடன் ஒரு பெண்ணை ஒப்பிட்டுக் கூறுதல் பண்டைய இலக்கிய மரபு. நீண்ட காலமாய் உலகில் விளங்கி வாழ்வாயாக என்று வாழ்த்த விரும்பிய புலவர், சேரனுடைய நாட்களைக் கணிப்பதற்கு ஒரு உபாயம் காண்கிறார். 'ஒருமாத காலம், உனக்கு ஒரு நாளாயிருப்பதாக; ஓராண்டுக் காலம், உனக்கு ஒரு மாதமாயிருப்பதாக; ஊழி காலம் உனக்கு ஓராண்டாயிருப்பதாக; வெள்ளமெனும் அளவு உனக்கு ஊழியாயிருப்பதாக' என்கிறார். சேரன் பல்லாண்டு வாழவேண்டு மெனும் ஆசையை இத்தகைய எண்ணங்களால் வெளியிடுகிறார். இவ் வாழ்த்து நம் உணர்ச்சியையும் மனத்தையும் ஒருங்கே பிணித்து, இவண் கண்ட சொல்லிலும் பொருளிலும் நாம் ஈடுபடச் செய்கிறது. 'வாழ்த்து' என்பதன் பொருளுக்கு இது சிறந்த எடுத்துக்காட்டு.

'நின்னாள், திங்க ளனைய வாக; திங்கள்
யாண்டோ ரனைய வாக; யாண்டே
ஊழி யனைய வாக; ஊழி
வெள்ள வரம்பின வாகென வுள்ளிக்
காண்கு வந்திசின் யானே.' (பதிற்று. ௯0: ௫௧-௫)

என்பன வாழ்த்துக்குரிய அடிகள். இவ்வடிகளே, பாடலுக்கு உயிர்நிலையடிகள்.

மலிவுப் பதிப்பு ரூ. 3 8 கலிக்கா ரூ. 4 8

கலித்தொகைச் சொற்பொழிவுகள் :

பண்டித திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கலித்தொகை மாநாட்டில் நிகழ்த்தப்பெற்ற ஐவர் சொற்பொழிவுகள் அடங்கியுள்ளன.

மலிவுப் பதிப்பு ரூ. 2 0

கலிக்கா ரூ. 2 8

குறுந்தொகைச் சொற்பொழிவுகள் :

பண்டிதமணி திரு. மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற குறுந்தொகை மாநாட்டில் நிகழ்த்தப்பெற்ற ஐவர் சொறபொழிவுகள் அடங்கியுள்ளன.

மலிவுப் பதிப்பு ரூ. 2 4 கலிக்கா ரூ. 3 0

நற்றிணைச் சொற்பொழிவுகள் :

பன்மொழிப் புலவர் திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற நற்றிணை மாநாட்டில் நிகழ்த்தப்பெற்ற ஐவர் சொற்பொழிவுகள் அடங்கியுள்ளன.

மலிவுப் பதிப்பு ரூ. 2 4 கலிக்கா ரூ. 3 0

பத்துப்பாட்டுச் சொற்பொழிவுகள் :

டாக்டர் திரு. மு. வரதராசனுர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற பத்துப்பாட்டு மாநாட்டில் நிகழ்த்தப் பெற்ற பதின்மர் சொற்பொழிவுகள் அடங்கியுள்ளன.

மலிவுப் பதிப்பு ரூ. 4 8 „ கலிக்கா

ரூ. 5 அரசியலறிவு (சொற்பொழிவுகள்):

பிளேடோ, வள்ளுவர், ரூசோ, பர்க், மார்க்ஸ் ஆகிய ஐவரைப்பற்றி ஆற்றிய பேராசிரியர் ஐவர் சொற்பொழிவுகள் அடங்கியுள்ளன.

மலிவுப் பதிப்பு ரூ. 2 4 கலிக்கா

ரூ. 3 தமிழக வரலாறு (சொற்பொழிவுகள்):

சங்க காலம், பல்லவர் காலம், சோழர் காலம், பாண்டியர் காலம், நாயக்கர் காலம், ஆங்கிலேயர் காலம் ஆகியவற்றைப் பற்றிப் பேராசிரியர் அறுவர் ஆற்றிய சொற்பொழிவுகள் அடங்கியுள்ளன. பன்மொழிப் புலவர் திரு. கா. அப்பாத்துரை அவர்கள் முன்னுரையும் இணைக்கப்பட்டுள்ளது.

மலிவுப் பதிப்பு ரூ. 4 0 கலிக்கா ரூ. 5

பரிபாடல் சொற்பொழிவுகள் :

இதன்கண் திருமால், சேவ்வேள், வையை, மதுரை ஆகிய தலைப்புக்களின் கீழ் பேராசிரியர் நால்வர் ஆற்றிய அரிய சொற்பொழிவுகளும், இராவ்சாகிபு, திரு: கு: அருணாசலக் கவுண்டர் அவர்கள் தலைமையுரையும் அடங்கியுள்ளன.

மலிவுப் பதிப்பு ரூ. 2 4 கலிக்கா ரூ. 3

ஐங்குறுநூற்றுச் சொற்பொழிவுகள் :

இதில் மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை ஆகிய ஐந்திணை ஒழுகலாறுகளையும்பற்றி பேராசிரியர் ஐவர் ஆற்றிய சொற்பொழிவுகளும், பேராசிரியர், செஞ்சொற் புலவர், திரு. ஆ. கார்மேகக்கோனார் அவர்களின் தலைமையுரையும் அடங்கியுள்ளன.

மலிவுப் பதிப்பு ரூ. 3 0 கலிக்கா ரூ. 3